9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981, ஏப்ரல் 24.

சித்திரை 12, துன்மதி—திருவள்ளுவர்-2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக்கல்வியையே விரும்புவர்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் கொலை செய்யப்பட்ட ஆதி திராவிட ஆசிரியர்.

*வினா எண். 852—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்குடி தாலுக்கா ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் சப்பானி என்கிற அரிசன நல ஆசிரியர் 29–7–1980-ல் கொலை செய்யப்பட்டது பற்றி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இறந்த சப்பானி என்கிற ஆசிரியரின் மனைவி திருமதி தனலட்சுமி கொடுத்த புகாரின் மீது ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் வழக்கொன்று உடனடியாக பதிவு செய்யப்பட்டு, புலன்

விசாரணையும் ரசாயன பரிசோதனையும் செய்யப்பட்டது. ஆசிரியரின் சாவு எந்தவித சந்தேகத்திற்கான காரணத்தாலும் ஏற்பட்டதல்ல எனத் தெரியவருகிறது.

காவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறும் குற்றச்சாட்டு சரியானவையல்ல.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலுகாவில் சப்பானி என்ற அரிசன ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டு ஒன்பது மாதத்திற்கு மேலாகிறது. இதுசம்பந்தமாக ஒரு பெண் புகார் கொடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது யார்? சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த அரிசன ஆசிரியரின் மனைவியார் திருமதி தனலட்சுமி ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் 23–7–1980 அன்று இரவு 7 மணிக்கு புகார் செய்தார். சந்தேகத்திற்கிடமான சாவு என்று பதிவு செய்து கொள்ளப்பட்டு, உடன் புலன் விசாரணையும் நடத்தப்பட்டது. ஆசிரியர் 22–7–1980 அன்று இரவு இறந்துள்ளார். வினாவில் குறிப்பிட்டிருப்பது போல் 29–7–1980 அன்று ஏற்பட்ட சாவு அல்ல. பிரேத பரிசோதனை 24-7-1980 அன்று மதியம் 10-30 மணிக்குச் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையில் தெரிந்த விவரம் தலையின் பின்பாகத்தில் வலது காதிலிருந்து 4 அங்குல தூரத்தில் ஓர் ஆழமான காயமும் அதைச் சுற்றிலும் வீக்கமும் காணப்பட்டது. இறந்து போன நபரின் உடல் உறுப்புகளில் ஐந்தினை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதில் ஒன்றில் கூட விஷம் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. இறந்து போன ஆசிரியர் சப்பானி என்பவர் தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்திருக்க வேண்டும் என்று பிரேத பரிசோதனையில் தெரிகிறது. இறந்தவர் தலையில் ஏற்பட்ட காயம் குளத்தின் படிக்கட்டில் வழுக்கி விழுந்ததால் ஏற்பட்டது என்று புலன் விசாரணையில் தெரிகிறது. ஆகவே ரசாயன பரிசோதனை முடிவின்பாற்பட்ட மருத்துவர் கருத்தினாலும், புலன் விசாரணையில் தெரிய வந்த தகவல்களாலும் இந்த வழக்கு மேற்கொண்டு கொலை வழக்காக கொள்ளப்படவில்லை. ஆகவே இந்த அளவிலே அது முடிக்கப்பட்டிருக்கிறது.

1981 ஏப்ரல் 24]

STUDENT LEADER OF WESLEY HIGH SCHOOL IN ROYAPETTAH

*Q. No. 853—THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state.

(a) Whether the police have received allegation about the assualt of a student leader of Wesley High School, Royapettah, Madras on or about the 4th September, 1980; and

(b) If so' the details of the investigations made to spot the culprits?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 1-9-1980 அன்று பகல் 1 மணிக்கு சென்னை வெஸ்லி உயர்நிலைப்பள்ளியின் மாணவர் தலைவரான திரு. மோகன் என்பவர் தாம் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்களால் அன்று தாக்கப்பட்டதாகவும், அன்று சில கோரிக்கைகளை முன்வைத்து பள்ளியில் ஒரு போராட்டம் நடத்தவிருந்ததாகவும் இராயப் பேட்டை காவல்நிலையத்தில் புகார் செய்தார். இ-2, இராயப் பேட்டை காவல் நிலையத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்கள் நியமனத்தில் நிர்வாகிகளின் போக்கில் குறைகண்ட ஆசிரியர்களின் ஒரு பகுதியினரின் தூண்டுதலின் பேரில்தான் மாணவர்கள் நிர்வாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று விசாரணையின் மூலம் தெரியவந்தது. தாக்கியவர்கள் யாரையும் திரு. மோகனால் அடையாளம் காட்ட இயலாததால், விசாரணை அதிகாரிகள் ஒன்றும் செய்ய இயலவில்லை. சட்டம் மற்றும் ஒழுங்கினை பராமரிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் ஏற்கனவே தங்களுக்குக் கிடைக்கவேண்டிய சில சலுகைகளை கேட்பதற்கு முயற்சிக்கின்ற போது ஊழல் புரிகின்ற ஆசிரியர்கள் இந்த மாணவர்கள்மீது தாக்குதல் நடத்தி அதை முறியடிப்பதற்கு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது, போதுமான அளவில் அதிலே புலன் விசாரணை நடத்தப்படவில்லை. மாணவர்கள் குறைகளை வைப்பதற்குப் போதுமான வேறு வழிகள் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. இதைப்பற்றி அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் புலனாய்வு செய்வதற்கு உத்திரவிட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிரச்சினைகள் மாணவர்களுடைய கோரிக்கைகள் பற்றியது அல்ல. அவர்களது சலுகைகள் பற்றியோ அல்லது

கோரிக்கைகள் பற்றியதோ அல்ல. ஒரு வருட காலமாகத் தலைமை யாசிரியராக இருக்கிறார்; தனக்குத் தலைமை ஆசிரியர் பதவி தரப்பட வேண்டுமென்று திரு. பி. இருதயராஜ் என்கிற மூத்த தமிழ் வித்துவான், ஒரு முறை யீட்டை பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கொடுத்ததாகத் தெரியவருகிறது. திரு. இருதயராஜும் அவருடன் சேர்ந்த சில ஆசிரியர்களும் செய்த தூண்டுதலினால் மோகனும் மற்ற மாணவர்களும் பள்ளி நிர்வாக சீர்கேட்டை எதிர்த்து துண்டு பிரசுரங்களை வெளியிட்டதாகவும் தெரிய வருகிறது. ஆகவே இது மாணவர்கள் பற்றிய பிரச்சினையல்ல. 11–9–1980 அன்று சுமார் 11–15 மணிக்கு மோகன், ஏ.ஜே. டேனியல் மற்றும் இருபது மாணவர்கள் தலைமை ஆசிரியரின் அறைக்குள் புகுந்து அங்கிருந்த மேஜை, நாற்காலி, தகவல் பலகை மற்றும் நாட் காட்டிகள் அனைத்தையும் கீழே தள்ளி உடைத்து நாசம் விளை வித்தனர். அப்போது தலைமையாசிரியர் அறையில் இல்லை. பிறகு மோகனும் மற்ற மாணவர்களும் இராயப்பேட்டை இ-2 காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தனர். பள்ளி யின் தாளாளர் வந்து விசாரணை செய்த பின் மாணவர்கள் தம் செய்கைக்கு மன்னிப்புக் கோரினர். பிறகு அன்று மாலை ஆட்டோ ரிக்ஷாவில் மோகனும் சந்திரராகும், டேனியல் வீட் டிற்குச் சென்று விட்டு பள்ளிக்குத் திரும்பும்பொழுது மோகன் மயக்கமுற்று விழுந்தார். அதற்கு பிறகு மோகனை இரண்டு பேர்கள் அடித்தார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் செய் யப்பட்டது. அடித்தவர்கள் யார் என்று அவரால் அடையாளம் காட்ட இயலவில்லை.

வழக்குப் பதிவு செய்து எவ்வளவோ முயற்சி செய்தும் அடை யாளம் காட்டப்படாத காரணத்தால் அந்த வழக்கைப்பற்றி ஒன் றும் செய்ய இயலவில்லை. அந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் சுமுகமான சூழ்நிலை நிலவிவருகிறது.

திரு. கோவைத் தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் சமுதாய விரோதிகள் ஒரு சிலர் இப்படிப்பட்ட காரியங்களை கடந்த ஒரு ஆண்டுக்காலமாக செய்து வருகிறார்கள் என்ற காரணத்தால் பரவலாக மாணவர் களைப் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சமூக விரோதிகளிடமிருந்து ஆசிரியர்கள், மாணவர்களைக் காப் பாற்றுகின்ற வகையில் சமூக விரோதச் செயல்களைச் செய்கின்ற குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து—நடந்திருக்கின்ற இப்படிப்பட்ட ஒரு சில சம்பவங்களை வைத்து நாட்டு மக்களிடத் திலே பீதியைக் கிளப்பிவிடுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத் தினால்—இந்த சம்பவங்களை வைத்து அப்படிப்பட்ட செயல் களை முன்னின்று தடுக்க அரசு முன் வருமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பொதுப்படையானது. பொதுவான துணை வினாவைத்தான் கேட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலேயும் உள்ள பள்ளியிலும் கல்லூரியிலும் ஒவ்வொரு விதமான கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கூடுமானவரையில் ஆங்காங்கிருக்கின்ற தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் அதிலே ஈடுபட்டு குறைபாடுகள், கலவரங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள். அதற்காகத் தான் ஒவ்வொரு ஊரிலும் கல்லூரிகள், பள்ளிகள் பொறுத்த வரைக்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பிரதி நிதிகள் அடங்கிய சங்கங்களை வைத்து அவற்றின் மூலமாக அவற்றைத் தீர்ப்பதற்கு பொதுவான முறைதான் இருந்து வருகிறது. இந்த இரண்டு ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியராக வருவதிலே போட்டி ஏற்பட்டு அவர்களே நேரடியாகத் தலையிடாமல் மாணவர்களை ஈடுபடுத்தி விட்டார்கள். இருதயராஜ் என்ற தமிழ் வித்துவான் 23—2—1976 முதல் 14—4—1976 வரையில் அவர் மிசா கைதியாக இருந்தார் என்றும் தெரியவருகிறது. ஆகவே ஆசிரியர்களுக்குள்ளே ஏற்பட்ட தகராறுதானே தவிர வேறு எந்தவிதமான தகராறும் இல்லை.

முத்துக் குளிக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டம்

*வினா எண். 854—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துக்குளி தொழிலாளி முத்து எடுக்கும் போது இறந்து விட்டால் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கு குளி தொழிலாளி சங்கு எடுக்கும்போது இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு ரூபாய் 5,000 உதவித் தொகை அளிப்பது போல முத்துக் குளி தொழிலாளி முத்துக் குளிக்கும் போது இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கும் 1978 ஆம் ஆண்டு தமிழ் நாடு மீனவர் நலம் மற்றும் துயர் துடைப்பு நிதி விதிகளின்படி ரூபாய் 5,000 உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கும் தொழிலாளர்கள் முத்துக் குளிக்கும்போது, ஜாஸ் என்ற ஆங்கிலப் படத்திலே வருவதைப் போன்ற திமிங்கலங்களும் ரோஜர் மீன் போன்றவைகளும் தாக்குகின்றன. அப்போது அவர்கள் அவைகளால் பிடித்துக் தின்னப்பட்டாலோ

அல்லது உடல் ஊனமுற்றாலோ அவர்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு இல்லை. எனவே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமா ? அப்படி இறக்கின்றவர்களைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் அரசிடம் வந்து சேரவில்லை. முத்துக் குளிப்பே 1961-க்கு பிறகு நடைபெறவே இல்லை.

(முற்பகல் 9-10)

இருபதாண்டு காலமாக முத்துக் குளிப்பது என்பதே நடைபெறவில்லை. இனிமேல்தான் நடைபெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்ற அப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டால் அப்படிப்பட்ட ஆபத்து வராமல் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கும் தொழிலாளிகள் முத்துக்களை எடுத்துக் கொண்டு வரும்பொழுது அதில் பெரும்பகுதி முத்துக்களைக் கழிவு என்று சொல்லிக் கழித்துக் கட்டிவிடுகிறார்கள். அப்படிக் கழித்துக் கட்டிய முத்துகளை மீண்டும் அவ்வதிகாரிகள் வேறு வியாபாரிகளுக்கு விற்றுப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். பொருளாதார ரீதியாகப் பார்த்தால் முத்துக் குளிக்கின்றவர்கள் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ? இது சம்பந்தமாக ஒரு பெட்டிஷனை திரு. திருமாறன் அவர்கள் அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் அந்தப் பகுதியிலுள்ள காவல்துறையினரும் கண்காணித்து வருகிறார்கள். குறிப்பாக முத்துக் குளிக்கும் சமயத்தில் இப்படிப்பட்ட கண்காணிப்பு மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குறைபாடுகள் இருக்குமேயானால் அந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, முத்துக் குளிப்பது கடந்த இருபதாண்டுகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

1981 ஏப்ரல் 24]

அதற்கு என்ன காரணம்? முத்துக் கிடைக்கவில்லையா? பாண்டிய நாட்டில் முத்துக் குளிப்பது என்பது நீண்டகாலமாக, தொன்றுதொட்டு இருக்கும் பழக்கம். அதை மீண்டும் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும், புதிதாக முத்துக்களை வளப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் முத்துக் குளிக்கும் நிலைமைகள் ஏற்படக்கூடும். மெச்சூர் ஆகவில்லை என்று சொல்கிறார்கள். மெச்சூர் ஆன காலம் வந்த பிறகுதான் முத்துக் குளிக்கும் நிலைமைகள் ஏற்படும் என்று சொல்கிறார்கள். கடலிலே முத்துக்களை விளைவிக்கின்ற முயற்சிகளும் நடைபெறுகின்றன. செயற்கை முத்துக்களை உருவாக்குவதற்காக, முத்துச் சிப்பிகளை சேகரித்து சினையாக்கி மறுபடியும் விட்டு முத்துக் குளிக்கின்ற ஆராய்ச்சியும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் இதுபற்றிய விவரங்களை யெல்லாம் அளிக்கலாம்.

லெவி மூலம் அரசு வசூலித்த நெல், அரிசியின் அளவு.

*வினா எண். 855— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இதுவரை அரசு வசூலித்த லெவி நெல் அரிசியின் அளவு எவ்வளவு?

(ஆ) லெவி முறை நீடிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 21—3—1981 வரை அரசு வசூலித்த லெவியின் அளவு

நெல் 57,680 மெட்ரிக் டன்கள்.

அரிசி 17,450 மெட்ரிக் டன்கள்.

(ஆ) ஆம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவி முறையினால் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. ஆகவே, அரசே நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, லெவி முறையில் விவசாயிகளிடத்திலேயிருந்து பெறுவதில்லை. விவசாயிகள் அவர்கள் விற்க வேண்டிய நெல்லை விற்கலாம். ஆனால் லெவி யாருக்குப் போடுகிறோம் என்றால் மொத்த வியாபாரி ஒருவர் மற்றொரு மொத்த வியாபாரிக்கு விற்கின்ற நேரத்தில்தான் 40 சதவீதம் ஒரு கட்டத்திலே தர வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறோம். விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவதில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் இதுவரையில் 57,680 டன்கள் நெல்லும், 17,450 மெட்ரிக் டன்கள் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். நம்முடைய தேவை எவ்வளவு என்பதை அரசு நிர்ணயித்திருக்கிறதா ? அத்துடன் வெளி மாநிலங்களிலிருந்து லெவி கொள்முதலைத் தாராளமாகச் செய்ய முடிந்தால், தினசரி இங்கே உயர்ந்து கொண்டு வரும் அரிசியின் விலை குறையக் கூடிய வாய்ப்பு இருக்கும். இப்பொழுதே ஐந்தாறு ரூபாய் என்று விற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, வெளி மாநிலங்களில் இருந்து கொள் முதல் செய்யப்படுமா ? தற்போது ரேஷன் கடைகளில் வழங்கப்படும் புழுங்கல் அரிசி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டுக் கொண்டிருந்தால் அதை அனுமதிக்க இயலாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலே போட்டிருக்கின்ற லெவிகூட, தமிழகத்தில் உள்ள மொத்த வியாபாரிகள் மற்ற மொத்த வியாபாரிகளுக்கு விற்கும்பொழுது தான் போடப்பட்டிருக்கின்றது. தங்களது சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டு வரும் நெல்லுக்கு லெவி கிடையாது. சில்லறை வியாபாரிகள் விற்பதற்கும் லெவி கிடையாது. சில நேரங்களில் ஆந்திராவிலிருந்து வரும் நெல்லுக்கு, இங்கே வந்து நுழைந்த பிறகு, இங்கேயுள்ள மொத்த வியாபாரி இன்னொரு மொத்த வியாபாரிக்கு விற்கும்பொழுது லெவி என்று வைத்திருந்தோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்று ஆந்திராவிலுள்ள நெல் அல்லது அரிசி போன்றவை தாராளமாக இங்கே வரவிடுவது நல்லது என்ற முறையில் ஆந்திராவிலிருந்து கொண்டுவரப்படும் நெல்லுக்கோ அல்லது அரிசிக்கோ லெவி தேவையில்லை என்று செய்துவிட்டோம். இப்பொழுது அவர்கள் தாராளமாகக் கொண்டு வரலாம். ஆனால் தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுகின்ற நிலமை ஏற்பட்டால் அப்பொழுது 40 சதவீதம் லெவி தர வேண்டுமென்று

1981 ஏப்ரல் 24]

சொல்லப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட ஏற்கெனவே ஒரு மாதத்திற்கு 11,000 டன் நியாய விலைக் கடைகளின் மூலம் பங்கீடு செய்யும் முறையில் கிட்டத்தட்ட 80 காசு, 85 காசு ஒரு கிலோவிற்கு என்று குறைத்துக் கொடுக்கும் அளவிற்குக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கி வருகின்றோம்.

அந்த இருப்பு 11,000 டன் செலவழித்த இடத்தில், இந்த வறட்சி நிலைமை வந்தபிறகு, வெளி மார்க்கெட்டிலே ஓரளவுக்கு விலை உயர்ந்ததற்குப் பிறகு, நியாய விலைக் கடைகளிலே ஓரளவுக்கு வாங்க வேண்டுமென்ற எண்ணம் வந்ததனால், கிட்டத்தட்ட 40,000 டன் தேவைப்படுகிறது. இந்த செப்டம்பர் திங்கள் வரையிலே நாம் ஓட்டினால்தான் அதற்குப் பிறகு அறுவடை ஆகின்றபொழுது ஓரளவுக்கு எதிர்பார்க்கலாம். அந்த அளவிலே 4-லிருந்து, 4½ இலட்சம் டன் நமக்கு வேண்டும். ஆகவேதான் லெவி முறையிலும் பெறுகிறோம். அதே நேரத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நாமே போய் ஆந்திராவிலேயிருந்து கொள்முதல் செய்கின்ற பணியும் நடக்கிறது. தனிப்பட்ட நபர்களும் செய்கிறார்கள். மத்திய அரசும் தன்னுடைய இருப்பிலிருந்து நமக்கு உதவி செய்ய வேண்டுமென்று மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து லெவி மூலமாக நமக்குக் கிடைத்திருக்கிற நெல்லோ, அரிசியோ குறைந்த அளவுக்குத்தான் என்று தெரிய வருகிறது. நம்முடைய தேவையோ 5½ இலட்சம் டன்னை எட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இன்று தமிழகத்தில் வறட்சியிருக்கிற சூழ்நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதும், மத்திய அரசிடமிருந்து நாம் பெறவேண்டிய உணவுப் பொருளைப் பெற முயற்சி செய்வதும் என்ற கொள்கையை வைத்துக்கொண்டு, இன்று வியாபாரிகளிடத்திலிருந்து நாம் வாங்குகிற லெவிக்கு, குவிண்டாலுக்கு ரூ. 160, ரூ. 170 விற்கின்றபொழுது, நாம் ரூ. 105-க்கு 40 சதவீதம் அவர்களிடத்திலே பெறவேண்டுமென்று முயற்சிக்கும் போது, அரிசியினுடைய விலையை இயற்கையாகவே வியாபாரிகள் உயர்த்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இல்லாவிட்டால், அவர்கள் கொள்முதலை நிறுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நான் கேட்பது, இந்த லெவியினுடைய சதவீதத்தைக் குறைத்து, 40 சதவீதம் என்பதை 20 சதவீதமாகக் குறைத்து, ஓரள்வுக்கு நம்முடைய இருப்பை உயர்த்திக் கொள்வதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த லெவியினுடைய அளவைக் குறைப்பதன் காரணமாக, நமக்குக் கிடைக்கிற வரவுதான் குறையுமே

தவிர, அதனால் அதிகமான அரிசி கிடைக்கிற நிலைமை ஏற்பட்டு விடாது. ஆனால் 40 சதவீதம் கொடுத்தபிறகு, அதிலே ஏற்படுகிற கூடுதல் செலவை, ஓரளவுக்கு வெளி மார்க்கெட்டிலே, 60 சதவீதத்திலேதான் சரிக்கட்டுவார்கள். குடும்ப அட்டையில், நாம் யார், யாருக்கு உத்தரவாதம் தந்திருக்கிறோமோ, அவர்களுக்குக் குறைந்த விலையில் கட்டாயம் அரிசி கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தை அரசு வைத்திருக்கிற காரணத்தால், அதற்குமேல் தேவைப்படுகிறவர்கள்தான் வெளி மார்க்கெட்டில் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கூடுமானவரையில், வெளி மாநிலத்திலிருந்து வருபவைகளுக்கு லெவி இல்லையென்று சொல்லியிருக்கிறோம். தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்து எவ்வளவுக்கெவ்வளவு கொண்டு வரமுடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு கொண்டு வருகிறோம். இப்பொழுதே ஆந்திராவிலே அரிசிக்கு, நெல்லுக்கு, 50 சதவீதம் லெவி வைத்திருக்கிறார்கள். அந்த லெவியை மீறித்தான் நாம் வாங்கி வரவேண்டிய நிலைமையிருக்கிறது. நாம் 40 சதவீதம் லெவி வைத்திருக்கிறோம். உபரி மாநிலமாக இருக்கிற ஆந்திராவிலே 50 சதவீதம் லெவி வைத்திருக்கிறார்கள். லெவி கட்டாயம் வைக்கவேண்டுமென்றுதான் மத்திய அரசு நம்மை வற்புறுத்தி வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லெவியின் மூலமாக மொத்தமாகக் கிடைத்தது 57,000 மெட்ரிக் டன்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆரம்ப காலத்திலே, நெல் விளைகிற காலத்திலே தஞ்சாவூரிலே 57 கிலோ கொண்ட மூட்டை ரூ. 60, ரூ. 59-க்கு விற்றது. அப்பொழுதுநாம் முழுமையாக கொள்முதல் செய்யநடவடிக்கை எடுக்காததன் காரணமாக, இன்றைக்கு ரூ. 85 ஆகியிருக்கிறது. ரூ. 85-க்கு மூட்டை விற்கும்போது, லெவி என்ற பெயரால், ரூ. 55-க்கு கேட்டால் அதைக் கொடுத்துவிட்டு, அந்த வியாபாரிகள் இந்த விலையை பூராவும் மற்றவற்றில் அதிகமான விலை வைத்து விற்கிறார்கள். ஆகவே, விளைகிற காலத்திலேயே, மார்க்கெட்டுக்கு வருகிற நெல்லை முழுமையாக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கொள்முதல் செய்ய வேண்டிய அந்தக் கொள்கையை, ஒரு நடவடிக்கையை அரசு கடைபிடிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற வாய்ப்பிருந்து கொள்முதல் செய்திருந்தால், அந்தக் கஷ்டம் இருந்திருக்காது. ஆனால், ரூ. 105 சாதாரண ரகத்திற்குக் குவிண்டால் ஒன்றுக்கு என்றும், ரூ. 109 சன்ன ரகத்திற்கு என்றும் மத்திய அரசு வைத்து, அதோடு நிற்காமல் மேற்கொண்டு கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு சொல்லிய நேரத்திலும், நாம் சாதாரண ரகத்திற்கு மேற்கொண்டு ரூ. 10 வைத்து, ரூ. 115 ஒரு குவிண்டாலுக்கு என்றும், சன்ன ரகத்திற்கு

ரூ. 119 என்று வைத்தும் வெளி மார்க்கெட்டிலே அதைவிட அதிகம் கொடுத்து வியாபாரிகள் வாங்குவதால், நமக்குக் கொள் முதலே கிடைக்கவில்லை. அந்தக் கொள்முதல் கிடைக்காத நிலை வந்தபிறகுதான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, குறுவையிலே விட்டுவிட்டோம். அதற்குப் பிறகு, லெவி போட வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டதன் காரணமாக, கொள் முதலில் லெவியைக் கட்டாயப்படுத்துகிறோம்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபொழுது, மொத்த வியாபாரிகளிடம்தான் 40 சத வீதம் கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அதிகாரிகள் ஏழை விவசாயிகள் 10 மூட்டை கொண்டு வருகிறவர்களும், அங்கே அவர்கள் செலவிற் காக விற்க வருகின்றபொழுது, அந்த நெல்லையும் கொள்முதல் ரேட்டுக்கு எடுக்காது பறிமுதல் செய்திருக்கிறார்கள். அந்த ஏழை விவசாயிகள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20].

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நெல் விநியோகத்திற்கு என்று வருகின்றபோது அந்த அதிகாரிகள் இடத்திலே அவர்கள் சொந்த உபயோகத்திற்காகத் தான் எடுத்துச் செல்லுகிறோம் என்று சர்டிபிகேட் வாங்கி அதை எடுத்து வந்தால் அதிகாரிகள் பிடிக்கமாட்டார்கள். அவர்கள் சர்டிபிகேட் வாங்காமல் அந்த சான்றிதழ் காட்டாமல் கொண்டு வருகிறார்கள் என்றால், யாரோ வியாபாரிகளிடம் சேர்ப்பதற் காக இதைக் கொண்டு செல்லுகிறார்கள் என்று பொருள்படும். அப்படிப்பட்ட நிலையில் பிடிப்பதற்கு அவசியம் இருக்கிறது. அதற்கான சர்டிபிகேட்டைக் காண்பித்தால் அவர்கள் பிடிக்க மாட்டார்கள். அப்படி சான்றிதழைக் காண்பித்த பிறகும் அவர் கள் பிடித்தார்கள் என்றால், அது பற்றி தகவல் தந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜமாபந்தி முறையை ரத்து செய்யும் திட்டம்.

* வினா எண். 856—திரு. இரா. சுப்பையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) வருவாய்த் துறையில் நடைமுறையில் இருக்கும் 'ஜமா பந்தி' முறையை ரத்து செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட் டுள்ளதா ?

(ஆ) எப்பொழுது இது ரத்து செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜமாபந்தி முறை ஒழிக்கப்பட்டதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இந்த ஜமாபந்தியானது நடைமுறையில் இன்றைக்கும் தாலுகா அலுவலகங்களில் ஒவ்வொரு தாலுகா தலைநகரத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு ஜமாபந்தி போட்டு கிராம கணக்குகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் கொண்டு வந்து அதிகாரிகள் அனைவரும் வந்து பரிசோதிக்கும் அந்த முறை இருக்கின்றது. இந்த நடைமுறையை மாற்றுவதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போது மிகவும் விளக்கமாக 'ஜமாபந்தி ஒழிக்கப்பட்டதா' என்ற கேள்விக்கு 'இல்லை' என்று பதில் சொல்லி இருக்கிறேன். நான் இல்லை என்று சொல்லிய பிறகு இந்தக் கேள்விக்கு நான் எப்படி பதில் சொல்வது என்று தெரியவில்லை.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதத்தில்தான் ஜமாபந்தி எப்போதும் நடத்தப்படும். இப்போது வில்லேஜ் ஆபிசர்களை எல்லாம் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தினாலே, இந்தக் கணக்கு வழக்குகளை யாரிடமிருந்து கலெக்டர்கள் வாங்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அப்படியே கணக்குகள் கொடுத்தாலும் அவைகள் சரியான கணக்குகளாக இருக்குமா என்றும் தெரியவில்லை. இந்தக்காரணத்தினாலேயே ஜமாபந்தியை இந்த ஆண்டு அரசாங்கம் நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் எல்லாம் தற்காலிகமாக நீக்கப்பட்டார்கள் என்று ஒரு தவறானகருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். கிராம அதிகாரிகள் தற்காலிகமாக நீக்கப்படவில்லை. நிரந்தரமாக நீக்கப்பட்டார்கள் என்பதை பலமுறை சொல்லி இருக்கிறோம்.

அடுத்தபடியாக கணக்குகள் சரியாக இருக்குமா என்று கேட்டார்கள். அனைத்து கணக்குகளும் சரியாகத்தான் இருக்கின்றன. அவைகள் சரியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு ரெவின்யு இன்ஸ்பெக்டர்களைப் போட்டு

1981 ஏப்ரல் 24]

அவர்கள் கணக்குகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கணக்குகளை இன்னும் நன்றாக எழுத வேண்டும் என்பதற்காகத்தான் சில தினங்களுக்கு முன்பாக மாநிலம் பூராவும் 2,000-க்கும் மேற்பட்ட எழுத்தர்கள் நியமிக்கப்பட்டு, கணக்குகள் எழுதப்பட்டு வருகின்றன. எந்த ஊர் கணக்கு வேண்டும் என்றாலும் அந்த ஊர் கணக்கைத் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஜமாபந்தி ஒழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே ஜமாபந்தியை ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக ஆடிட் முறையை புகுத்த யோசிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. வருவாய் வாரியத்தை ஒழித்து புரட்சி செய்து விட்டோம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜமாபந்தி முறை மிகவும் பழைய கால முறை என்பதால் அதனால் பொதுமக்களுக்குப் பலன் இல்லை. எனவே அதை ஒழித்துவிட்டு, ஆடிட் முறையைப் புகுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே முன்பிருந்த அரசு ஒரு முறை இந்த ஜமாபந்தியை ஒழித்து உத்தரவு போட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டிரண்டு வட்டாரங்கள் பரீட்சார்த்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவைகள் எடுத்துக்கொளப்பட்ட பிறகு அது சரியாக நடைபெறவில்லை என்று முன்பிருந்த அரசு அந்த உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டது. வருவாய் வாரியத்தை ஒழித்துவிட்டோம் என்றும், ஒரு புரட்சிகரமாக செய்துவிட்டோம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கவேயில்லை. அது வருவாய் வாரியம் ஒழித்ததனால் தீங்கு இருக்கிறதா இல்லையா என்று பொதுமக்கள் கருதவேண்டுமே ஒழிய, புரட்சி புரட்சி என்று இங்கே சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்பதையும், நான் அப்படிச் சொல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறையை நவீனப்படுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற்கெனவே வருவாய்த் துறை வாரியம் ஒழிக்கப்பட்டு இருக்கிறது. அந்த முறையிலே, இப்போது அடங்கலைப் பொறுத்தவரையில் 1 முதல் 29 அடங்கல் இருக்கிறது. அதைச் சுருக்கி நவீனப்படுத்தி, எளிதாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இந்த பழைய முறையிலே இருக்கும் ஜமாபந்தி அவசியம்தானா என்பதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனப்படுத்தவேண்டும், அதை முற்போக்காகக் கொண்டு வரவேண்டும் என்பதிலே எந்தவித மான மாறுபட்ட கருத்தும் இல்லை. அதைப் பற்றி அரசு யோசிக்கும். ஜமாபந்தி முறையில் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் எல்லா கிராமக் கணக்குகளும் முடிக்க வேண்டும் என்கிற நிலைமை இருப்பதால், கட்டாயமாக அதிகாரி கள் அதை அந்தத் தேதிக்குள் செய்ய வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், அந்த முறையை வைத்துக்கொண்டு இருக்கிறோம். மேலும், கிராம மக்கள் தங்களுடைய குறைகளை அதிகாரி களிடத்தில் வந்து கூறுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் இதன் மூலம் உருவாக்கப்படுகிறது. ஆகவே, இந்த முறை மாற்றப்பெற வேண்டும் என்று சொன்னால், இந்த ஜமாபந்தியை விட வேறு முறை இருக்கிறது என்று அங்கத்தினர்கள் சொன்னால், அதை யோசித்து, மாற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஜமா பந்தி முறை முகலாயர் காலத்தில் துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதை வெள்ளைக்காரர்கள் இந்தியர்களிடையே ஒரு அடிமைத்தனத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத் தோடு, அந்த முறையைக் கையாண்டு வந்தனர். நாம் சுதந்திரம் பெற்று இப்போது ஜனநாயக அமைப்பு முறையில் இருக்கிறோம். ஆகவே, மக்களுக்கு மேலும் ஜனநாயக உணர்வுகளை ஏற்படுத்து கின்ற முறையிலே, இந்த அடிமை எண்ணத்தை ஏற்படுத்துகின்ற இந்த ஜமாபந்தி முறையை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, யார் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது என்பது அல்ல. அந்த முறையிலே இருக்கின்ற நன்மை தீமைகளை ஆராய வேண்டும். அதிலே அடிமைத்தனமா, சர்வாதிகாரமா, யார் காலத்தில் ஏற்பட்டது என்கிற ஆராய்ச்சியை விட அது நமக்கு எந்த விதத்தில் பயனுள்ளதாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நாம் இப்போது ஆடைகளை அணிந்து கொண்டு இருக்கிறோம். இந்த ஆடைகளை யார் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டது என்று ஆராய்ந்து, அது நமக்குப் பிடிக்காதவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் அதற்காக ஆடைகளைக் களைந்து விடமுடியுமா இப்போது என்று கேட்கவிரும்புகிறேன். ஆகவே, இது முகலாயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது, ஆங்கிலேயர் காலத்தில் தொடரப்பட்டது. இப்போதும் இருக்கவேண்டுமா என்று கேட்பதற்குப்பதிலாக அதிலே இருக்கின்ற நன்மை தீமைகளை அறிந்து, அதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவைகளை மாற்றலாம். ஆகவே, அந்த அடிப்படையில் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[981 ஏப்ரல் 24]

கோவிலாங்குளம் கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து காணாமல் போன நகைகள்.

*வினா எண் 857. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை பக்கத்திலுள்ள கோவிலாங்குளம் கிராமத்திலுள்ள கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து ரூபாய் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள நகைகள் காணாமல் போய் விட்டதென்பது உண்மையா*

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சங்கத்தில் 3,365.900 கிராம் எடையுள்ள ரூ. 2,18,785 பெறுமான நகைகள் காணாமல் போய்விட்டன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகைகள் காணாமல் போய்விட்டது உண்மை என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளைக் கண்டுபிடிப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அந்த நகைகளைத் திரும்பப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ? அது பற்றிய எல்லா விவரங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலாங்குளம் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக 1976 ஆம் ஆண்டுக்கு முன் இருந்த திரு. வி. பால்ராஜ் நாயுடு என்பவர் ரூ. 2,18,785 பெறுமான நகைகளை ஆங்கு இருந்த சௌடயன் என்ற காரியதரிசியின் உதவியோடு எடுத்து விட்டார் என்று தகவலின் அடிப்படையில் கிரிமினல் வழக்குப் போடப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது கிரிமினல் வழக்கு நடந்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த நகைகள் காணாமல் போய்விட்டன என்பதைவிட திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது என்கிற அடிப்படையில் அந்தச் சங்கத்தின் தலைவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொடர்ந்து இப்படி பல மோசடிகளை அந்தத்தலைவர் அங்கே செய்து வந்து இருக்கிறார் என்று அறிகிறேன். அவர் மீது கிரிமினல் வழக்குப்போடப்பட்டு இருந்தாலும், அந்த நகைகளைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா ? அவர் மீது வேறு எந்த வகையில்

[1981 ஏப்ரல் 24

நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? அவர் மீண்டும் பதவியில் தொடர்ந்து இருந்து வருகிறாரா அல்லது பதவியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ரூ. 2,18,785 பெறுமான நகைகள் திருடப்பட்டு இருக்கிறது என்கிற காரணத்திற்காக திரு.பால்ராஜ் நாயுடு என்கிற சங்கத் தலைவர் மீது-தற்போது அவர் தலைவராக இல்லை, அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்—கிரிமினல் வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. அவர் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவரை டிஸ்குவாலிபை செய்யும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து கிரிமினல் வழக்கும் நடந்து வருகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே கோவிலாங்குளம் சங்கத்தில் இப்படி அடிக்கடி நடந்து வருவதால், * * * என்று பெயர் பெற்று இருக்கிறது. அந்தச் சங்கத்தில் இப்படிப்பட்ட முறையில், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட நகைகள் கையாடல் செய்யப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்ததோடு இருக்காமல், அந்த நகைகளைத் திரும்பப் பெற இதுவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறியவிரும்புகிறேன். ஏன் இவ்வளவு காலதாமதம்? உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதைப் பூரணமாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்ற வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கோவிலாங்குளம் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முன்னாள் தலைவர் பால்ராஜ் நாயுடு 1977-க்கு முன்னால் இதைப்போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கிறார் என்று விசாரணையின் போது தெரியவந்ததால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பணத்தை வசூல் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1977-ல் தகவல் தெரிந்து, நடவடிக்கை எடுத்து, 1978-ல் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது வழக்கு நிலுவையில் இருக்கிறது.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வி. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அந்த நகைகளின் உரிமையாளர்கள் பணம் கட்டி, நகைகளைத் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறார்கள். நகைகள் கோர்ட்டில் இருக்கின்றன. ஆகவே, பணத்தைக் கட்டிவிட்டால், வட்டி இல்லாமல் நகைகளைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, Now the trial is pending. The jewels are the subject matter of the enquiry. எனவே, நீதிமன்ற வழக்கு முடிந்ததும் தரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கு முடிந்ததும் திருப்பித் தரப்படும்.

மணப்பாறையிலுள்ள மாவட்ட நடுவர் நீதிமன்றம்.

*வினா எண் 858—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பறையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது பற்றி கோரிக்கை எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கையின் மீது முடிவான அறிக்கை உயர்நீதிமன்றத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, மணப்பாறை தாலுக்காவிலுள்ள துவரங்குறிச்சியிலிருந்து ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தூரத்தில் குளித்தலை இருக்கிறது. இவ்வளவு தூரத்தில் போய் வழக்காடும் கஷ்டத்தைப் போக்க மணப்பாறையில் வெகுவிரைவில் ஒரு கோர்ட் திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசகுமார் அவர்களும் மற்ற மணப்பாறை வழக்கறிஞர்களும் கொடுத்த மனுவின் பெயரில் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பரிந்துரை வந்தபிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மே. அ. இராசகுமார்: தலைவரவர்களே, அதுவரையில் தற்சமயம் குளித்தலையில் இருக்கிற இரண்டு கோர்ட்டுகளில் ஒன்றை மணப்பாறையில் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அதுகுறித்த செயற்குறிப்பு இல்லை. அது குறித்தும் உயர் நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து, அவர்களுடைய பரிந்துரையைப் பெற்றுத்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனு தந்தால் பரிசீலிக்கப்படும்.

சோளிங்கர் நகரிலுள்ள மாவட்ட நடுவர் நீதிமன்றம்.

* வினா எண் 859—திரு சி. கோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் உள்ள டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டிற்கு கிரிமினல் வழக்குகளும் நடைபெற First Class Magistrate power கொடுக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்போது இல்லை.

திரு. சி. கோபால் : தலைவரவர்களே, தற்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கிற சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட்டுகளில் அழகான, வசதியுடைய சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட் சோளிங்கர் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட். அங்கே பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் பெற்று, கிரிமினல் வழக்குகள் நடத்தவும் போதுமான வசதி இருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கலாம் என்று வடாற்காடு மாவட்டம், வேலூரிலிருந்து மாவட்ட நீதிபதியிடமிருந்தும் உயர்நீதி மன்றத்திலிருந்தும் அரசுக்கு கோரிக்கை எதுவும் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நீதிமன்றக் கட்டிடம் அழகாக இருக்கலாம். ஆனால் உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வரவில்லை ; பரிந்துரை வந்தால் அரசு பரிசீலிக்கும். அதைவிட 'இன்டகிரேஷன் ஆஃப் ஜுடிஷியரி' முறையை நடைமுறைப்படுத்தும்போது பல டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் அளிக்கப்பட்டு,

they will be called District Munsif-cum-Sub-Divisinal Magistrate Courts என்ற நிலை வரும். அந்த நிலை வரும்போது சோளிங்கர் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, சிவில்-கம்—கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படுவதை வரவேற்கிறேன். ஏற்கனவே இருந்துவருகிற சிவில்-கம்-கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்திலிருந்து வேறு—இடத்திற்கு மாற்றப்படுவதாக ஒரு பீதி கிளப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சர் இல்லையென்று சொல்லியிருக்கிறார். மீண்டும் அந்த பீதி வந்திருக்கிறது. அது குறித்த விவரம் என்ன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவரவர்களே, ஆனால் அத்தகைய செய்திக் குறிப்பு ஏதும் இல்லை, அத்தகைய ஒரு கருத்தினை உயர்நீதிமன்றம் கூட அரசுக்குச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொள்ளாச்சியிலுள்ள கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண் 660—திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியிலுள்ள அடிசனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வாரத்தில் 3 நாள் கிரிமினல் வழக்கும், 3 நாள் சிவில் வழக்குகளும் நடத்தப்படுகிறத :

(ஆ) ஆம் எனில் அதனால் சிவில் வழக்குகள் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா ?

(இ) தாமதத்தைத் தவிர்க்க அங்கு தனியாக முன்சீப் கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) பொள்ளாச்சியில் கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம் ஏதும் இல்லை. ஆனால் அங்குள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட குற்ற

வியல் நீதிமன்றத்தில் வாரத்தில் 3 நாட்களுக்கு குற்றவியல் வழக்குகளும் 3 நாட்களுக்கு சிவில் வழக்குகளும் நடைபெறுகின்றன.

(ஆ) ஆம்.

(இ) நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குழு பரிவுரை செய்தவாறு தற்போது பொள்ளாச்சியிலுள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்து குற்றவியல் வழக்குகளுக்கு தனியாக ஒரு உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பை விரைவில் அனுப்புவதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திரு. எம். வி. இரத்தினம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சியில் உட்கோட்ட வழக்கு மன்றம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். மேற்படி வழக்கு மன்றம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை வந்திருக்கின்றது. அரசு அதை ஆய்ந்து வருகின்றது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பொள்ளாச்சியில் அடிஷனல் பர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்டரேட் கோர்ட்டில் ஏராளமான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதால் அங்கே சிவில் கோர்ட்டு அமைப்பதற்கான செயற்குறிப்பு குறித்து விரைவில் நடவடிக்கை எடுத்து அதனைச் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் துணைக் கேள்வி கேட்ட உறுப்பினர் அவர்களும் இதைத்தான் கேட்டார்கள். சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் அங்கே அதிகமாக இருப்பதால் சிவில் வழக்குகளுக்கும், கிரிமினல் வழக்குகளுக்கும் தனித்தனியே ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பற்றி உயர் நீதிமன்றம்கூட பரிந்துரை செய்திருக்கின்றது. அதைச் செயலாக்க இருக்கிறோம். இருந்தாலும் கால தாமதம் ஆவதற்குக் காரணம் இன்டக்ரேஷன் ஆஃப் ஜுடிசியரி என்ற நோக்கமே ஆங்காங்கு சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை ஒருங்கிணைந்து நடத்தக்கூடிய ஒரு அமைப்பு வரவேண்டும் என்பதுதான். அந்த ஒரு முடிவு இருந்து அதனை நடைமுறைப்படுத்த இருப்பதால்தான் இவ்வாறு தாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும் இந்த நீதிமன்றம் பற்றி அங்கு அதிகமான வழக்குகள்

1981 ஏப்ரல் 24]

இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழுதடைந்த குடி தண்ணீர்க் குழாய்களை சீர் செய்தல்.

* வினா எண் 861-திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த குடிதண்ணீர் குழாய்களைச் சீர்செய்வதில் தாமதம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) தாமதத்தை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தெரியும்.

(ஆ) தாமதத்தை தவிர்க்க வேண்டி, கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் பராமரிப்புக்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர் செய்ய நியமிக்கப்பட்டுள்ள பொருத்துனர்களைத் தவிர, இளநிலைப் பொறியாளர் மற்றும் அலுவலர்களைக் கொண்ட நடமாடும் பராமரிப்புக் குழு (Mobile Team) அமைக்கப்பட்டு, ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பழுது பார்ப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இதில் கவனம் செலுத்தப்படுகிறது.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவற்றை வாரியம் பராமரித்து வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக மெக்கானிக் நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களால் பெரிய ரிப்பேர்களைச் செய்ய முடியவில்லை. காரணம், அவர்களிடம் அதற்கேற்ற சாதனங்கள் இல்லை என்று சொல்லப்

படுகிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் வாரியம் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பொறுப்பை மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சீரிய ஆலோசனையை ஆழமாகப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40.]

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 45 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு பொறியாளர் எந்த வேலையைக் கவனிப்பார்? மேலும் தற்போது பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியங்களிலே குடிநீர் பஞ்சம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே அருமை நண்பர் திரு. அன்பழகன் அவர்கள் சொன்னது போன்று இந்தப் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுக்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா? குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஆழமான உத்தரவை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

(1) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியாக ஒரு பொறுப்பினரும்;

(2) ஆயிரம் பம்புகளுக்கு ஒரு பராமரிப்புக் குழு என்பதற்கு பதிலாக, 500 பம்புகளுக்கு ஒரு பராமரிப்புக் குழு எனவும்;

(3) மேலும் 4 புதிய பராமரிப்பு குழுவை அமைக்க வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது எனவும்;

(4) தற்போது அளித்துள்ள அனுமதியின்படி ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு உதவி பொறியாளரும், 3 மின் இணைப்பாளர்களும், மற்றும் ஒரு ஜீப்புடன் கூட ஒட்டுநரும் கொண்ட 15 பராமரிப்புக் குழுக்கள் பணிகளை உடனுக்குடன் பார்த்து, பழுதுகளை சரி செய்யும் என்வும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதிலும் திருப்தி இல்லை என்று சொன்னால், உள்ளாட்சித் துறை தேர்தல் வந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன ஆலோசனைகளை பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் சொந்தமான மேல்நிலைத் தொட்டிகளில் உள்ள நீர் பலவிதமான கலர்களில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது குடிதண்ணீர் பிரச்னையைத்தீர்ப்பதற்கு பலவிதமான நடவடிக்கைகள் எடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம். இருந்தாலும் கூட என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதியிலே மாத்திரம் கிட்டத்தட்ட 37 போரிங் பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஓவர் ஹெட்டாங்குகள் கட்டப்பட்டு, தண்ணீர் நிரப்பப்பட்டு, மோட்டார்கள் போட்டு அவைகளுக்கு மின் இணைப்புக் கூட கொடுத்தாகிவிட்டாலும் கூட, அவைகள்திறந்தபாடாக இல்லை. என்ன காரணம் என்று கேட்டால், சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட என்ஜினியர்களுக்குத் தொலைபேசி மூலமாகவாவது ஆணைகள் இட்டு உடனடியாக இந்தப் பிரச்னையை போக்குவதற்கு வழிவகை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர் வடிகால் வாரியம் வார்புட்டிங்கில் இப்பொழுது சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். என்னிடத்திலே கூட சிலர் நேரிடையாகப் பாராட்டி இருக்கிறார்கள். (கூச்சல்) ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து, எங்கெங்கே எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தகவலுக்கு முரணாக இருக்கிறது என்று எடுத்துச் சொன்னால் உடனடியாக அதையும் வார்புட்டிங்கில் கவனிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுடைய குடிநீர் பிரச்னைகளெல்லாம், பெரும்பாலும் பூர்த்தி செய்யக்கூடிய குழாய்கள் எல்லாம் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டவை, அவைகள் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பழுதடைந்த குழாய்களை மாற்றி, புதிய குழாய்களைப் போடுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல உடனடியாக எங்கெங்கு என்னென்ன கவனிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் நினைக்கிறார்களோ, அவைகளையெல்லாம், கேள்வி நேரம் முடிந்தவுடனே குறிப்பு எடுத்து கொடுப்பார்களேயானால், தொலைபேசி மூலம் சொல்லி ஆவன செய்ய அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரிய அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் அந்த குடிநீர் வடிகால் வாரியத்திலே, எத்தனை ஆழ்கிணறுகளிலே எத்தனை நீர் மூழ்கி மோட்டார் பம்புகள் வெளியே எடுக்கப்படாமல் மூழ்கிக் கிடக்கின்றன என்பதை அறிவாரா, அதை அவைக்கு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதற்கான தகுந்த பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேட்சுந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்கிணறுகள் போடுகிறபோது, எவ்வளவு ஆழம் போடுகிறார்களோ, அந்த அளவுக்கு பம்பிங் ராடுகள் போடுவது இல்லை. அந்த அளவுக்கு பம்பிங் ராடுகளைப் போட்டால், குழாய்கள் போடுவதைக் கூட எண்ணிக்கையில் குறைத்து சிக்கனப்படுத்தலாம். அரசுக்கு செலவும் குறையும். ஆகவே எவ்வளவு ஆழம் கிணறு தோண்டுகிறார்களோ, அந்த அளவுக்கு பம்பிங் ராடுகள் போடுவதற்கான ஆணை இடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற ஆலோசனையைப் பற்றி என்னிடத்திலே எழுத்து மூலமாகக் கொடுப்பார்களேயானால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி ஆவன செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

1981 ஏப்ரல் 24]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மேற்கொள்ளுகிற பணிகளை வாரியம் மேற்கொண்டாலும், பராமரிப்பு பொறுப்பினையாவது ஊராட்சி ஒன்றியங்களிடம் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் தான் பராமரித்து வருகின்றன. ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய ஊரக குடிதண்ணீர் வசதி திட்டத்தில் செய்யக் கூடியவைகளைத்தான் இந்த வடிகால் வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிறது. என்ன இருந்தாலும் எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு மறு பரிசீலனை தேவை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் பலருடைய பொதுவான கருத்தாக இருப்பதினால், தேர்தல் முடிந்த பிறகு, நாம் அந்த வேலைகளில் ஈடுபட்டு, எல்லோரும் ஆர அமர உட்கார்ந்து, அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

இடையன்குளம் பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலை.

*வினா எண் 862—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி இடையன்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சாகுபடி நிலங்கள் பாதிக்கப்படுகின்றனவா -

(ஆ) ஆம் எனில், மேற்படி கழிவு நீரை அப்புறப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மேற்படி தொழிற்சாலை கழிவு நீரால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன என்பதை நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். இது என் தொகுதியில் வருகிறது. அதிகாரிகள் தவறான குறிப்புகளை அமைச்சர் அவர்களுக்கு தந்திருக்கின்றார்கள். ஆகவே, தவறான குறிப்புக்களை கொடுத்துள்ள அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப் படுமா ? அந்த நிலங்களில் விவசாயம் நடக்காததால், உணவு தானியங்கள் சரியான முறையில் விளைவிக்கமுடியாததால், உணவுப் பற்றாக்குறை அந்தப் பகுதியில் அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ? அந்தத் தொழிற்சாலை அதிபர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இராமநாதபுரம் மாவட்டம் இடையான்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையை திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரும் மற்றும் சுகாதார ஆய்வாளரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு இத்தொழிற்சாலைக்கு அடுத்துள்ள மற்றும் அருகாமையிலுள்ள விளைச்சல் நிலங்களில் சாகுபடி எதுவும் பாதிக்கப்படவில்லையென்றும் மேலும் அந்த நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், கரும்பு பயிர்கள் ஏனைய இடங்களிலுள்ள நிலங்களில் விளையும் பயிர்களைப்போல் நன்றாக உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். தொழிற்சாலையை ஒட்டி மேற்கேயுள்ள இரு நிலங்களின் சாகுபாளர்களும் வடக்கு பக்கமுள்ள ஒரு நிலத்தின் சாகுபடியாளரும் வயலின் மகசூல் எதுவும் பாதிக்கப்படவில்லை என்று வாக்குமூலம் தந்துள்ளனர். எனவே தவறான தகவலை கொடுத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு தகவல் தருவார்களேயானால் தவறான தகவல் கொடுத்த அதிகாரி மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தண்டராம்பட்டு தொகுதியில் போடப்பட்ட கைப்பம்புகள்.

*வினா எண் 863—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள கிராமங்களில் 1980 ஜூலை முடிய போடப்பட்ட கைப் பம்புகள் எத்தனை ?

1981 ஏப்ரல் 24]

(ஆ) அவற்றில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருப்பவை எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 122.

(ஆ) 113.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 122 கை பம்புகள் போடப்பட்டு அவற்றில் 113 நல்ல முறையில் செயல்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள். தண்டராம்பட்டில் பாக்கியுள்ள கிராமங்களுக்கும், தற்போது கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், உடனடியாக கைப்பம்புகள் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி, இருக்கும் கைப் பம்புகள் பற்றியது. அதில் சீர் செய்யவேண்டியவை விரைவில் சீர் செய்யப்பட ஏற்பாடு செய்யப்படும். மேலும் போடவேண்டுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்துதான் சொல்ல முடியும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பழுதடைந்திருக்கின்ற பம்புகளை ரிப்பேர் செய்வதுபற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிகாரிகளைக் கேட்கிறபோது—அங்கே தண்டராம்பட்டு தொகுதியில் பழுதுபட்டிருப்பதைப்போல் வட ஆற்காடு மாவட்டத்தில் பல தொகுதிகளில் பழுதடைந்திருக்கின்றன. அந்த பம்புகளை பழுதுபார்க்கிறபோது, சில பம்புகளை அங்குள்ள மெக்கானிக்குகளே பழுது பார்த்து விடுகிறார்கள். சிலவற்றைப் பழுது பார்க்க மெஷின்ஸ் தேவைப்படுகின்றது என்று சொல்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பம்புகளை ரிப்பேர் செய்ய மெஷின்ஸ் போதுமான அளவில் இல்லாததால் பல பம்புகள் பழுதடைந்து இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த பம்புகளை பழுதுபார்க்க தேவையான நிதி அளித்து தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வறட்சி நிவாரணப்பணியில் குடிநீருக்காக நிரம்பப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைத்த தகவல் பழைய தகவல் என கருதுகிறேன். லேட்டஸ்ட்டாக மிகமிகச் சிறப்பான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லோரும் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்குக் கிடைத்த தகவல் சரி என்று தெரிந்தால் குறுகிய கால வினா போட்டால்கூட நான் அதற்கு அனுமதி தருகிறேன். அதற்கான பதிலைத் சேகரித்துத் தருகின்றேன். உறுப்பினர் அவர்கள்கொடுக்கக்கூடிய தகவல் லேட்டஸ்ட் தகவலாக இருக்க வேண்டும்.

[1981 ஏப்ரல் 24

ஒன்றியத்துக்கு ஒரு கை பம்பு பொருத்துநரை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 864—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இரு ஒன்றியங்களுக்கு சேர்த்து கை பம்பு பழுது பார்க்க ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஒரு ஒன்றியத்திற்கு ஒருவரை நியமனம் செய்யும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தெரியும்.

(ஆ) ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பொருத்துநரை நியமனம் செய்யுமாறு அரசு, வாரியத்திற்கு அரசு ஆணை எண் 380, ஊ. வ. உ. துறை, 11—3—1981 நாளிட்ட ஆணையில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு எலக்ட்டிரீஷியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கைப் பம்புகள், மற்றும் மேல்நிலை நீர்த் தொட்டிகள் சரிவர வேலை செய்வதற்கு ஒரு எலக்ட்ரீஷியன்தான் இருக்கிறார். அது போதாது. மேலும் இரண்டு பிட்டர்களும், ஒரு எலக்ட்ரீஷியனும் கொடுத்தால், அந்தக் கிராமத்திலுள்ள கைப் பம்புகளை சரிவர பராமரிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா எண் 861-க்குப் பதில் சொல்லும்போது-இந்த நான்கு கேள்விகளும் குடி தண்ணீரைப்பற்றியது-விளக்கமாக இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் விடுமுறை காலத்தில் அங்கு சென்று வந்து சொன்னால், மேலும் இவைகளைச் செய்ய வேண்டுமென்று ஏதாவது தகவல் கொடுத்தால், அரசு உடனடியாக மிக வேகமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுமுறைக் காலங்களில் உறுப்பினர்கள் தொகுதிக்குச் சென்று பார்க்கவேண்டும் என்று சொல்கிறார். ஆனால், நாங்கள் அதற்கு முன்பாகவே தொகுதிக்குச்

சென்று பார்த்திருக்கிறோம். பல இடங்களில் போர் செய்யப் பட்டு, ஹாண்ட் பம்புகள் போடப்படாமல் அதனால் தண்ணீர் இல்லாமல், மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள், கால்நடைகள் சில இறந்திருக்கின்றன, சில கால்நடைகள் வெளியே சென்றிருக்கின்றன. இந்த நிலைமைகள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளுகின்ற அளவிற்கு நிலைமைகள் அங்கே இருப்பதாகச் சொல்லுகிறார். இது மிகவும் அவசரமான பிரச்சினை, குடிதண்ணீர்ப் பிரச்னை தொகுதியிலே நிலைமையை அறிய அமைச்சர் அவர்கள் வந்தால், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஹாண்ட் பம்புகள் சரிவர வேலை செய்யவில்லை. அவைகளை சரிசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ் குடிநீர் வடிகால் வாரியம்—இன்னும் சொல்லிக் கொள்வேன்—மிகத்திறமையாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் இப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். பொதுவாகச் சொல்லக்கூடாது. கேள்வி நேரம் முடிந்து 10½ மணிக்குப் பிறகு நாம் 'ப்ரீ'யாக இருப்போம். (குறுக்கீடு) நான் நின்று கொண்டிருக்கிறேன். இப்படி ஒருவருக்கொருவர் குற்றச் சாட்டுச் சொல்வது சரியல்ல. மக்களுக்கு தண்ணீர் பிரச்னையிலே பரிகாரம் தேடுவதற்காக வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் அதன் பெயரைச் சொல்லி, இப்படி இருக்கிறது என்று 10½ மணிக்குச் சொன்னால், நான் உடனடியாக எஸ்.ஈ.ஐக் கூப்பிட்டு, 12 மணிக்குள் அதைப்பற்றி கவனிக்க முடியுமா? அதைச் செய்ய முடியுமா என்பது பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன். இந்தப் பிரச்னையில் நாம் 'ப்ரேக்னெக்ஸ்பீடில்' போய்க் கொண்டிருக்கிறோம் என்று மீண்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டம் வெள்ளோளைப் பகுதியில் பாசனத்திற்கு வாய்க்கால் வெட்டும் பணி.

*வினா எண் 865—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளோளை என்ற இடத்தில் ஏரி கட்டப்

பட்டும் பாசனத்திற்காக வாய்க்கால் வெட்டும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) எப்போது வெட்ட ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மேற்படி ஏரியும், வாய்க்கால் 50 ஏக்கர் நிலம் பாசனம் வரை வெட்டப்படும் பணியும் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ளது. தற்பொழுது பாசன நிலம் 25 ஏக்கர் வரை வாய்க்கால் வெட்டலாம் என்ற அரசு ஆணைப்படி, மேற்படி கால்வாய் மேலும் 25 ஏக்கர் பாசனம் வரை வெட்டப்படும் என்றும் அதற்கான ஆரம்ப ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன என்றும் சிறு பாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

தம்பிக்கோட்டையில் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 866—திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டையில் பர்மா தமிழர்களுக்கும் ஏழை மக்களுக்கும் பட்டா கொடுக்கப் பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) : இதுபற்றிய கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு புனரமைப்பு இயக்குநரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஒப்புதல் கிடைத்தவுடன் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

1981 ஏப்ரல் 24]

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்மா தமிழர்களுக்கும், மற்ற ஏழைகளுக்கும் பட்டுக்கோட்டையில் பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கேட்டிருக்கிறார்கள். இதைப்போல மற்ற இடங்களில் எங்காவது கேட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற குறிப்பின் படி தம்பிக்கோட்டையில் இருக்கிற பர்மா தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிலங்களுக்கு பாசனவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொள்கை அளவிலே பாசனத்துறை கொடுக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறது. அதற்கான ஒரு திட்டத்தைக் கூட தயாரித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்தவுடனே அங்கே அதை செய்யவிருக்கிறோம். இதுபோல் வேறு பகுதிகளில் அவர்களுக்கு அது தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏனாதி, தேளி கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டம்.

* வினா எண் 867—திரு. க. பரமலை : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் ஏனாதி, தேளி போன்ற கிராமங்களுக்கு வைகை நீர்ப்பாசன வசதி கிடைக்காததால் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : உலக வங்கி தீர்வாங்க அறிக்கையின்படி (World Bank Appraisal report) பெரியாறு-வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டத்தில் விரிவாக்கப் பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட பகுதியில், ஏனாதி மற்றும் தேளி கிராமங்கள் இல்லை.

திரு. க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த கேள்வி போட்டதற்குப் பின்னாலே, ஒரு துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்

சொல்லுகிறபோது இதுபற்றிபரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் ஒரு விண்ணப்பம் கொடுத்ததின் பேரில் அங்கு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் 'பீசிபிளிட்டி' இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்த பின்னால் அதையும் சேர்த்து அமுல்படுத்த மைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த வேண்டுகோளின் மீது பதினைந்து நாட்களுக்குள்ளாக அறிக்கை வேண்டுமென்று கேட்டு, அந்த அறிக்கையினைப் பெற்று, புதிதாக உலக வங்கி மற்றும் இந்திய அரசு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்து ஒரு செயற்குறிப்பை அரசு தயாரித்துள்ளது. அதை உலக வங்கி ஏற்றுக்கொண்ட பிறகு ஏனாதி கிராமம் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள்ளே கொண்டு வரப்பட்டு மூன்று கண்மாய்கள் அதற்கு கீழே 269.87 ஏக்கர் பயன் அடைவதற்கான வாய்ப்பை தயார் செய்திருக்கிறது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நீர்ப்பாசனத்தில் விடப்பட்டிருக்கிற ஆயக்கட்டு பகுதிகளிலே, ஆர்.எஸ். மங்கலம் போன்ற இடங்களை இந்த திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கு உலக வங்கியுடன் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் மாம்பழத்து அணை கட்டும் திட்டம்

* வினா எண் 868—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் வில்லுக்குறிக்கு வடக்கே உள்ள மலைப்பகுதியில் மாம்பழத்து அணை என்ற புதிய நீர்த்தேக்கம் ஒன்று கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில், மாம்பழத்துறை ஆற்றில் அணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. எனினும், மாம்பழத்துறையாற்றின் உபரிநீரை திருப்பிவிட்டு, பத்மநாபபுரம்-புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டு களின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. திருப்பிவிடுவதற்கான உபரிநீரின் அளவு மிகவும் குறைவு என்றும், எதிர்பார்க்கப்படும் பயன்களும் அதிகம் இல்லை என்றும், எனவே இத்திட்டத்தை கைவிடலாமெனவும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்த கருத்தை ஏற்று அரசு இத்திட்டத்தை கைவிட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீர்த்தேக்கம் கட்டப் பெற்றால் அதிகப்படியான நிலங்கள் பாசனவசதி பெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை புனர் பரிசீலனை செய்து நீர்த்தேக்கம் கட்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறித்து ஏற்கெனவே மறு ஆய்வு செய்யப்பட்டுதான் இந்தக் கருத்து வந்திருக்கிறது. உபரி நீர் மிகக் குறைவாக இருக்கிறதாலே, பாசனத்திற்குத் தேவை யான நீரை வழங்க முடியாது என்று தெரிகிறது. இரண்டு முறை பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே மறு ஆய்வு செய்யத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாம்பழத்துறை அணைத் திட்டம் தேவையில்லை என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்கிறதெல்லாம் வில்லுக்குறிக்கு வடக்கே இருக்கிற மலை யிலே ஒரு சிறிய நீர்த்தேக்கம் அமைத்தாலே கூட 500 ஏக்கரா நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே ஒரு சிறிய நீர்த்தேக்கத்தை அமைக்க அரசு முன்வருமா ? அவ்வாறு செய்வதன் மூலமாக வில்லுக்குறி பகுதிக்கு அருகாமையிலிருக்கும் சுமார் 500 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கும், ஆகவே அதைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பயன் விகித திட்டங்களின் அடிப்படைகளில் நாம் இப்போது மாறுதல் செய்து இருக்கிறோம். ஒரு டன் உணவு உற்பத்தி கூடுதலாக அல்லது புதிதாக உற்பத்தி செய்ய முடியும் என்றால்

3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்பதை இப்போது 15,000 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். அவ்வாறு செய்திருப்பதன் மூலமாக நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் அரசு முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை பரிசீலிக்கிற முறையிலே திரும்பவும் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே வேண்டுமானால் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது குறித்து அவர்கள் அரசுக்கு தனியாக எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா-விடை நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பேச்சிப்பாறை, சிற்றாறு அணைகளில் தேங்கி நிற்கும் நீரை சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் திட்டம்.

* வினா எண் 869—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, சிற்றாறு போன்ற அணைகளில் நீர்ப்பாசனத்திற்கு பாயும் மட்டத்தின் கீழே தேங்கி நிற்கும் 30 அடி தண்ணீரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி செய்ய முடியும் என அரசுக்குத் தெரியுமா?

(ஆ) பருவமழை தவறும் காலங்களில் இந்த தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்த ராட்சச இயந்திரங்களைக் கொண்ட Pumping Scheme திட்டத்தை கொண்டுவர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ): பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் வாய்க்கால் மதகு மட்டத்திற்குக் கீழே 950 மி.க. அடி நீர் (Dead Storage) உள்ளது. சித்தாறு நீர்த்தேக்கத்தில், தண்ணீர் பாயும் மட்டத்திற்குக் கீழே உள்ள நீர் மிகக் குறைவானது. இந்த நீரை இயந்திரங்களைக் கொண்டு மேலேற்றுவது சாத்தியமில்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையிலே சித்தாறிலே மதகுக்கு கீழே உள்ள தண்ணீரைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1954ஆம் ஆண்டிற்கு முன்னாலே அது திருவிதாங்கூர் ராஜ்யத்தினுடைய பகுதியாக இருந்த காலத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த, அமைச்சராக இருந்த

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 24]

திரு. சிதம்பரம் நாடார் காலத்திலே பேச்சிப்பாறையிலே இருக்கின்ற தண்ணீரை ராட்சச இயந்திரங்களை வைத்து எடுத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்குப் பயன்பட்டது என்பது பிரச்சினை. சித்தாறு-இரண்டிலே உள்ள தண்ணீரை அதனுடைய மதகைத் திறந்துவிட்டாலே அதன் வழியாக திற்பரப்பு அணைக்கு வந்து, அதன்மூலம் தண்ணீரை விட்டால் சிதறால் கால்வாயை வெட்டி அந்தத் தண்ணீரைப் பெற்றுக் கொடுக்கமுடியும். அதனால் சிதறால் பகுதி விவசாயிகள் பயனடைவர். ஆகவே சித்தாறு-இரண்டிலே உள்ள மதகுக்குக் கீழே இருக்கும் சுமார் 40 அடித் தண்ணீர் வீணாகத்தான் இருக்கிறது; அதை ஏற்கெனவே சொன்ன முறையிலே பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இயந்திரங்களை வைத்து கீழ்மட்டத்திலே இருக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்துகின்ற முயற்சியை 1952–53-இல் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பணம்தான் விரயமானதே தவிர எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. வாய்க்காலிலே அரை அடி தண்ணீர்கூட செல்லமுடியாத சூழ்நிலை இருந்ததாக நமக்குத் தகவல் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு அதை மேற்கொள்ளவேண்டுமானால் 1,000 குதிரை சக்திக்கு மேற்பட்ட சக்தியும், தனியாக 1,200 கே.வி. மின்சக்தியும் தேவைப்படுகிறது. அவ்வாறு செலவு செய்து தண்ணீரை அங்கிருந்து நிரந்தரமாகப் பெற முடியாது என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இரண்டாவது அந்தத் தண்ணீரை சுழற்சிமுறையில் எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறோம். அதைப்பற்றி தகவல் வந்தபிறகு அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இயந்திரங்களை எந்த எந்த வகையிலே எல்லாம் பயன்படுத்தித் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளைச் செய்துவருவதாகத் தெரிவித்ததற்காக அவர்களைப் பாராட்டி—இதற்கு முன்னாலேயே இயந்திரங்களை வைத்து அந்தத் தண்ணீரை இறைத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்—நானே அறிவேன், சிதம்பரநாதன் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலே தண்ணீரை இறைத்து அதைப் பயன்படுத்தி தாளடி போன்ற பயிர்களை வைத்து விளைச்சலும் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை நானே நேரிலே கண்டிருக்கிறேன் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதன் மூலமாக மீண்டும் அதிகாரிகள் தந்தக் குறிப்பை மறுபரிசீலனை செய்வார்களா?

[1981 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தண்ணீர் கொடுத்தது வரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தும் அதிகாரிகள் கொடுத்த கருத்தும் ஒன்றாகத் தான் இருக்கிறது. இயந்திரங்களை வைத்து தண்ணீர் இறைத்து தற்காலிகமாக ஏற்பாடு செய்தார்கள். அந்தத் தண்ணீரை வைத்து எந்த அளவுக்கு நாம் பாசனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தோமோ அந்த அளவுக்கு அந்தக் கால்வாயில் தண்ணீர் போகவில்லை. கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்கப்பட முடியாத நிலைமை—தண்ணீர் போனது கால்வாயில்—ஆனால் ஒரு அடிக்குள்ளே தான் தண்ணீர் போயிருக்கிறது. ஆனால் அதற்காகச் செய்யப்படக்கூடிய செலவும் பணமும் பொருளாதார ரீதியும் கட்டுப்படியாகவில்லை என்று தெரிகிறது. இரண்டாவது, 1952லே தனியாக 1,200கே.வி. மின்சக்தி பயன்படுத்தக்கூடிய அளவிற்கு அன்றைக்கு பிரச்னைகள் இல்லமால் கூட இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை போன்ற சில பிரச்னைகள் இருக்கின்ற காரணத்தினாலே அதையும் கவனத்திலே கொள்ளுகின்றபொழுது தான் இவ்வளவு பெரிய இமாலய முயற்சி ஒரு சிறு பிரச்சினைகாகத் தேவைதானா என்பதுதானே தவிர, விஞ்ஞான ரீதியாக சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, இல்லையென்று சொல்லவில்லை இப்பொழுது புதிதாக நாம் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய 15,000 ரூபாய் வரை ஒரு டன் உற்பத்திக்கு செலவு செய்யலாம் என்று வைத்திருக்கிறோமே இந்த அளவிற்குள் அது அடங்குமேயானால் திரும்பக்கூட பரிசீலனை செய்வதிலே நமக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலப்புமணம் புரிந்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கும் திட்டம்.

*வினா எண் 870—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புமணம் புரிந்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு அரசுப் பணிகள் அளிப்பதில் முன் சலுகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : கலப்பு மணம் புரிந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை தந்தையின் சாதி மதக் கோட்பாடு அல்லது தாயின் சாதி மதக் கோட்பாடு ஆகியவற்றில் எதனைப் பின்பற்றி அக் குழந்தை வளர்க்கப்படுவதாக பெற்றோரால் உறுதிமொழி தரப்படுகிறதோ அதன் அடிப்படையில்

குழந்தையின் சாதி நிர்ணயம் செய்யப்படும் என்றும் மேலும் ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி மற்ற எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும் என்றும் ஆணை உள்ளது. எனவே கலப்பு மணம் புரிந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எந்த சாதி என உறுதி அளிக்கப்பட்டதோ (பிற்பட்ட வகுப்பு/ தாழ்த் தப்பட்ட வகுப்பு/முற்பட்ட வகுப்பு) அதன் அடிப்படையில் கலப் புத் திருமணத் தம்பதிகளில் தாழ்த்தப்பட்ட அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கும் மற்றும் அவர்களது குழந்தைகள் தாழ்த்தப்பட்ட/பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டால் வேலை வாய்ப்பளிப்பதில் பிற்பட்ட/தாழ்த் தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள விழுக்காட்டில் வேலை வாய்ப்பில் கருதப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் பிள்ளைகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்றுதான் கேட் டிருக்கிறேன். ஆனால் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர் களுக்குப் பிறக்கும் குழந்தை பெற்றோரில் யாருடைய சாதிமதக் கோட்பாட்டைப் பின்பற்றிவளர்க்கப்படுகிறது என்று பெற்றோர் சொல்லவேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்பொழுது சமீபகாலமாக ஜாதிக் கலவரங்கள் அதிகமாக நடக்கின்றன. எனவே, கலப்புத் திருமணம் செய்துகொண்ட வர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்ற கருத்தில்தான் இந்தக் கேள்வியை நான் கேட் டிருந்தேன். அப்படிப்பட்ட சலுகை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். உயர்ந்த ஜாதியிலிருக்கின்றவர்களை ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொண்டு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எம்ப்ளாய் மெண்ட் எக்சேஞ்சில் தனியாகப் பதிவு செய்து கொள்ளும் முறை யைப் புகுத்தி அரசுப் பணிகளில் சலுகை அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்துக்கொண்டவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு என்று தனியாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்கின்ற ஒரு வாய்ப்பை அளிக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச்சொன்னதைப் போன்று இந்தத் தம்பதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் அரசு நிச்சயமாக முன்னுரிமை அளிக்கும் ; அதற்கான முயற்சி களிலே தற்போது ஈடுபட்டிருக்கிறது.

[1981 ஏப்ரல் 24

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நான் முன்னால் சொன்னதைப்போல, ஜாதிக் கலவரங்கள் அடிக்கடி நடந்து வரும் நேரமாக இருக்கிறது. எனவே, தனிச் சலுகை அளித்தால்தான் எல்லோரும் கலப்புத் திருமணம் செய்து கொள்வதற்கான வாய்ப்பும், ஊக்கமும் அளிப்பதாக இருக்கும். எனவே, அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்ஜாதிப் பெண்களைத் தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்த ஆண் திருமணம் செய்துகொண்டால், அந்தப் பெண் வீட்டுக்காரர்கள் அவர்களைக் கொடுமைப்படுத்தி, பயமுறுத்துவது போன்ற நிலைமைகளில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலிருந்து காப்பாற்ற அரசு முன்வருமா? உயர்ந்த ஜாதிப் பெண்களை மணக்கின்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஆண்களைப் பயமுறுத்துகின்ற நிலைமை நீக்கப்படுமா? அந்த நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று சிலயிடங்களிலே துன்புறுத்தப் பட்டால், அரசுக்கு அதுகுறித்து எடுத்துச் சொல்லப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்; தக்க பாதுகாப்பையும் அரசு வழங்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அரசுத்துறையிலே வேலை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்டு பல ஆண்டுகளாகியும் அவர்களுக்கு அரசு கொடுக்கக்கூடிய உதவித்தொகை இன்னும் கிடைக்காமல் பல மாவட்டங்களில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் உள்ள நிலைமையைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலேயே மனுக்கொடுத்து இருக்கிறேன். கலப்புத் திருமணம் செய்து 6 வருடகாலமாகியும் இன்னும் அவர்களுக்கு உதவி கிடைக்காமல் இருக்கிறதே, அமைச்சரிடத்தில் நேரில் மனுக் கொடுத்தும் காலதாமதம் ஆகிறதே அதற்கு என்ன காரணம்?

[முற்பகல் 10—10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபோன்ற சலுகைகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் நிதியினை ஒதுக்குகின்றது. ரூ. 2·30 இலட்சமாக இருந்ததை தற்பொழுது உயர்த்தி, மேலும் ரூ. 3 இலட்சத்தினை அளித்து, ரூ. 5·30 இலட்சம் அளவிலே, இந்தச் சலுகைகளை வழங்குவதற்காக, அரசு நிதியினை ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைக் கருத்

1981 ஏப்ரல் 24]

திலே கொண்டு, நிதிநிலைமையினை ஆராய்ந்துதான் அதற்கான நடவடிக்கையை எடுக்கமுடியும். அதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே இன்றைய சமுதாயத்திலே ஏற்படுகிற பல தகராறுகளுக்கு ஜாதி அமைப்புகள் காரணமாக இருக்கின்றன என்பதாலே, ஜாதிமத பேதமற்ற சமுதாயம் அமைவதற்கு கலப்புத் திருமணம் என்பது முன்னோடி நடவடிக்கை என்பதை அங்கீகரித்து, இந்த நடவடிக்கைகளை மேன்மேலும் ஊக்குவிக்கும் முறையிலும், அவர்களுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்கும் வகையிலும், கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளித்து, விசேஷமான சலுகை அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்பவர்கள் சிலபேர் அரசாங்கச் சலுகைகளைப் பெற்றுவிட்டு, அரிசனப் பெண்களைக் கைவிட்டு விடுகிறார்கள். பெண் பாவம் பொல்லாத பாவம் என்று சொல்கிறார்கள். அப்படி அரசு சலுகைகளை, ரூபாய்களை வாங்கி இருந்தால், அந்த ரூபாய்களை வசூல் செய்யவும் அப்படிப்பட்ட துரோகிகளுக்குத் தூக்குத் தண்டனை போன்ற கடுமையான தண்டனை கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப் போன்ற குறைபாடுகள் இதுவரையில் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் அமைச்சரவையிலே யாராவது இருக்கிறார்களா ? இந்தச் சட்டமன்றத்திலே எத்தனை பேர் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் என்ற விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், அதுகுறித்து விசாரித்து விரிவான பதிலை அவைக்கு அளிக்கலாம்.

ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம்.

*வினா எண் 871.—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம் சேலத்தில் செயல்பட்டு வருவதன் காரணம் யாது?

(ஆ) எப்போது அந்த அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப் படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஓமலூரில் தக்கதொரு கட்டிட இடவசதி கிடைக்காத காரணத்தால் ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப்படாமல் சேலத்தில் இயங்கி வந்தது.

(ஆ) ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம், ஓமலூருக்கு மாற்றப்பட்டு 16—1—1981-ந் தேதியிலிருந்து ஓமலூர் தாலுக்கா அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பஸ் தொழிலாளர்களுக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட மோதலிலே, விருத்தாசலத்திலே துப்பாக்கிச்சூடு நடைபெற்று, அங்கே 144.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் காலை 8 மணிக்கே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், ஐயா அவர்கள், இப்பொழுதுதான் வந்திருக்கிறார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் ஸ்டிரைக் பற்றிஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் ஏற்கனவே பேசியாகிவிட்டது என்று மறுத்து விட்டார்கள்.

1981 ஏப்ரல் 24] [திரு. ப. பொன்னுரங்கம்]

பட்ஜெட் பற்றிக்கூட வருடாவருடம் பேசுகிறோம், டிமாண்ட்ஸ் மீதும் வருடாவருடம் பேசுகிறோம். அதனாலே, அடுத்த வருடம் எடுத்துக் கொள்ளக் கூடாதா? பாவம், ஆதி ஆந்திரர் சமுதாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய டிமாண்ட் முடிந்து போயிற்று. அதிலே பேசியிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) அதிலே பேசவில்லையென்றால், வேறு ஏதாவது விதியிலே எடுத்துக் கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

மைய சட்ட அமைச்சரிடமிருந்து நீதிபதிகள் மாற்றம் குறித்து வந்துள்ள கடிதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா ஆகியோர் அடிஷனல் உயர்நீதி மன்ற நீதிபதிகளிடம் மாநிலம்விட்டு மாநிலம் மாற்றினால் எந்த மூன்று இடங்களுக்கு என்று விருப்பம் கேட்டும் புதிதாக நியமனம் செய்ய பரிசீலனையில் இருக்கும் நீதிபதிகளிடமும் மேற்சொன்ன இடமாற்றப் பெயர்களை கேட்டும் சேகரித்து அனுப்ப வேண்டும் என்று தமிழக அரசு, மைய சட்ட அமைச்சரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதால் நமது மாநில அரசு அதிகாரம் பாதிக்கப்படும் ஐயப்பாட்டினால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி, கேட்டு, அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நமது முதலமைச்சருக்கு மைய அரசாங்கத்தின் சட்ட அமைச்சர் இடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அது உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாற்றல் சம்பந்தமாக இருந்தாலும் அது நீதித் துறையில் மாநில அரசின் அதிகாரத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது உயர்நீதி மன்றத்தில் நமது பிரஜைகளுக்குக் கிடைக்கவேண்டிய நீதியைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அக்கடிதப்படி நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டு பணிகளைச் செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறார். அதில் ஒன்று, புதிய நீதிபதிகளாக நியமனம் செய்யப்படுவதற்கான பெயர்கள் மாநில அரசின் பரிசீலனையில் இருந்தால், அவர்களிடம் மாநிலம் விட்டு மாநிலம் மாற்றப்படுவதற்கு அவர்கள் எழுத்து மூலமாக சம்மதத்தை பெற்றுக் கொண்டு, அதை மைய அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.

இது நம் அதிகாரத்தைப் பாதிக்கிறது என்ற பிரச்சினையாக இருப்பதால் இதை விவாதிக்க வேண்டிய சீரியஸ் பிரச்சினை இருக்கிறது. புதிய நீதிபதிகளை நியமிக்க அரசியல் சட்டம் 217 விதியில் கவர்னரைக் கலக்க வேண்டும் என்றிருக்கிறது. கவர்னர் என்கிறபோது, நம்முடைய கன்ஸ்டிடூஷன்லே மாநில அரசு என்றுதான் பொருள். அப்படி இருக்கிறபோது சிறந்த நீதிபதிகளாக இருக்கத் தகுதி படைத்தவர்கள் என் மாநில அரசும், பிரதம நீதிபதியும் கருதக் கூடியவர்கள், மைய அரசின் இந்த சுற்றறிக்கையைக்கொண்டு, அவர்களை அஸ்ஸாம் நாகாலாந்து போன்ற இடங்களுக்கு அனுப்புவார்களோ என்று பயந்து பின் வாங்கக் கூடும்.

ஏற்கெனவே நம்முடைய முன்னாள் பிரதம நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்கள் இப்படி மாற்றலுக்கு ஆளாகி, நீதித் துறை ஒரு நல்ல நீதிபதியை இழந்த அனுபவம் இன்னும் நமக்கு இருக்கிறது. இப்படி வந்தால் மற்றவர்களும் இப்படி பயப்படக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படித் திறமை மிக்க நீதிபதிகள் நமக்குக் கிடைக்காமல்போக நீதிபதி பதவி கிடைத்தால் போதும் என்று மட்டும் நினைப்பவர்கள், ஆனால் தகுதி குறைந்தவர்கள் நமக்கு நீதிபதிகளாக கிடைப்பார்கள் என்ற நிலைமைதான் ஏற்படும். சுதந்திரத்தை இழந்து, மைய அரசுக்குப் பயந்து நடப்பவர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படக்கூடும் என்ற ஒரு ஆபத்து இருக்கிறது. இந்த முறையினால் இப்படி நமது மாநில நியமன அதிகாரத்திற்குமே வேட்டு வைக்கக் கூடிய அந்த சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்கு முன்னரே மைய அரசு, மாநில அரசை கலந்து கொண்டிருக்கிறார்களா என்று கட்டாயமாக இந்த அவை அறிய விரும்புகிறது. அல்லது மைய அரசின் சர்வாதிகார பாணியிலே உள்ள அந்த சுற்றறிக்கை ஸ்டீம் ரோல் பாணியிலே திணிக்கப்பட்டிருக்கிறதா, என்னதான் உண்மை என்பது அரசாங்கத்திடம் இருந்து தெரியவேண்டிய விஷயமாகும் நியமனத்திற்கு முன் இப்படி எழுதிவாங்க வேண்டும் என்று எந்த விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கான்ஸ்டிடூஷனில் எங்கேனும் இப்படி ஒரு அன்டர்டேக்கிங் fo eh nd வாங்க வேண்டும் என்றும் கிடையாது. ஆகவே இது illegal unconstitutional and most humiliating to would be Judges or sitting Judges. அது சட்டவிரோதமானது அரசியல் சட்டத்துக்குப்புறம்பானது. நீதிபதியாக வரக்கூடியவர்கள் இப்போது இருக்கக்கூடியவர்கள் அவர்களை எல்லாம் அவமானப்படுத்தக்கூடிய விளைவை உண்டாக்கக்கூடிய விஷயம். இதுவரை முதலாளிதான் தொழிலாளர்களிடத்தில் எழுதி வாங்குவது வழக்கம். இப்போது மைய அரசு நீதிபதிகளிடத்திலே அதைப் புகுத்தி இருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் 'Master-servant' Employers-Employees) என்ற இம்ப்ளிகேஷன் இதிலே வரக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதேபோல இன்னும் ஒரு பணியையும் பணித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு, இப்போது கூடுதல் நீதிபதிகளாகச் செயல்படக் கூடிய ஹைகோர்ட்டு நீதிபதிகள் இருந்தால்,

அவர்கள் நிரந்தரமாக்கப் படவேண்டியவர்களானால், அவர்களை நிரந்தரமாக்குவதற்கு முன் மாநிலம் விட்டு மாநிலம் செல்ல எழுத்து மூலம் சம்மதம் அவர்களிடம் இருந்து பெற்றுத் தர வேண்டும் என்பது முதலமைச்சர் அவர்களுக்குப் டணிக்கப்பட்டிருக்கின்ற இரண்டாவது கட்டளை. அது தற்போது செயல்பட்டு வரும் கூடுதல் நீதிபதிகளைஅச்சுறுத்துவதாக ஆகாதா? அவர்கள் சம்மதம் கொடுத்தால் கூட, மாநிலம் விட்டு டிரான்ஸ்பர் ஆகாமல் இருப்பதற்கு இந்த நீதிபதிகள் மைய அரசின் முழு தயவில் வைக்கப்படக்கூடிய ஒரு நிலைமை உருவாகாதா? நீதிபதிகள் இன்று அனுபவித்து வரும் சிறிதளவு சுதந்திரத்தைக் கூட இது பறிப்பதாகாதா? பல கேஸ்கள்' மாநில அரசின் சரியான நிலைக்கு எதிராக தீர்ப்பு எழுதுவதற்கு ஒரு நிர்ப்பந்தம் என்ற முறை இதிலிருந்து ஏற்படாதா? இதிலே ஒரு வாதம் என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால் சட்டத்திலே இருப்பதைத்தான் எழுதி வாங்குகிறார்கள் என்று. சட்டத்திலே இருக்கிறது என்று சொன்னால் அப்புறம் எதற்காக எழுதி வாங்க வேண்டும். t is there in the Constitution. It will t ke its own course. சட்டத்திலே இருக்கிறது என்று சொல்கிறபோது எழுதி வாங்க வேண்டிய அவசியம் இல்லையே.

[முற்பகல் 10·20]

தலைவர் அவர்களே, நீங்கள் தயவு செய்து சிந்தித்துப்பார்க்க வண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாதியின் கையில் நீதிபதியை மாற்றம் செய்யும் அதிகாரம் இருந்தால் அப்புறம் தீர்ப்பு எப்படி இருக்கும் என்று நீங்களே யோசியுங்கள். அல்லது பிரதிவாதியின் கையில் நீதிபதியை மாற்றம் செய்கிற அதிகாரம் இருந்தால் தீர்ப்பு எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். சமீபத்தில் ஒரு ஆய்வின்படி பார்த்தால், கோர்ட்டில் இன்று இருக்கும் பெண்டிங் கேஸ்களில் 60 சதவிகிதம் சென்டிரல் கவர்ன்மென்ட் லிடிகேன்ட்டாக இருக்கிறது. மத்திய சர்க்கார் கேஸ்கள் தான் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது, இது அனுமதிக்கப்பட்டால் படிப்படியாக நாம் பிரகடனப்படுத்தாத அவசர நிலைக்கு இழுத்துக்கொண்டு செல்லப் படுகிறோமோ என்கிற ஐயப்பாடு எழுகிறது.

ஆகவே, நான் அறிய விரும்புவது, அந்தச் சுற்றறிக்கை மீது நம்முடைய மாநில அரசு தெரிவித்துள்ள வாதம் என்ன? ஏதாவது ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? நம்முடைய

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 24

முதலமைச்சரோ அல்லது மாநில அரசோ மத்திய அரசுக்கு எழுதியுள்ள கருத்து என்ன? எப்போது எழுதப்பட்டது? மத்திய அரசாங்கம் அது குறித்து மேலும் தெரிவித்துள்ள கருத்து உண்டா? சுற்றறிக்கையின் அடிப்படையில் நீதிபதிகளிடமிருந்து சம்மதம் பெறப்பெற்றுள்ளதா? இங்கேயிருக்கும் நீதிபதிகள் அதற்கு ஏதேனும் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்துள்ளனரா? சமீபத்தில் இரண்டு புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களே, அவர்களிடமிருந்து நம்முடைய மாநில அரசு சம்மதம் பெற்று இருக்கிறார்களா? இந்த மாதிரியான முக்கியமான விஷயங்களைக் குறித்து விவாதித்து முடிவு எடுக்கவேண்டியிருப்பதால், பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதித் துறையின் சுதந்திரத்தையும், சுயேச்சைத் தன்மையையும் பாதிப்பதாக உள்ளதோடு மட்டுமல்லாமல், மாநில அரசாங்கத்தின் சுயேச்சைத் தன்மையையும் குறைக்கக் கூடிய வகையில் மத்திய அரசில் இருந்து ஒரு தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது. அது என்னவென்றால், மாநில முதலமைச்சர்கள் மாநிலத்தில் பணியாற்றுகின்ற நீதிபதிகளிடத்தில் இருந்து மாற்றுதலுக்கான விருப்பச்சான்று—ஒப்புதல் கடிதம் பெற்று மைய அரசுக்கு அனுப்பவேண்டுமென்பதாகும். இது மாநில அரசாங்கங்கள் சுயேச்சையாக செயல்படுகின்ற அதிகாரத்தில் குறுக்கிடும் தன்மையில் அமைந்து இருக்கிறது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீதிபதிகள் மாற்றம் சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியைக் கலந்து கொண்டு மாற்றம் செய்யவேண்டும் என்று இந்திய அரசியல் சட்டத்தின் 262-வது பிரிவில் இருக்கிறது. இருப்பினும், அந்த மாதிரியான நடவடிக்கைகளைப் புறக்கணித்து விட்டு இன்றைய தினம் நீதித் துறையின் சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதித் துறை என்பது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதாக, யாருடைய விருப்பு வெறுப்புக்கும் ஆட்படாமல் நடைபெற வேண்டும். அந்த வகையில் நீதித் துறை செயல்படுகிறது என்கிற உணர்வும் மக்கள் மத்தியில் இருக்கவேண்டும். இந்த முறை நீடித்தால், அது ஒரு கட்டுப்பட்ட துறையாக மாறிவிடும். அந்த மாதிரி நிலையில் அந்த உத்தரவுகள் இருக்கின்றன. அதன் விளைவாக நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களும் அந்தநீதிபதிகளிடத்தில் சென்று கையெழுத்து வாங்கி அனுப்பவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள வழக்கறிஞர்களும், பொது மக்களும் இதன் விளைவாக ஒரு அச்ச நிலைக்கு ஆட்பட்டு, அதன்காரணமாக அவர்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலை எழுந்துள்ளது. ஆகவே, இதன் விளைவாக ஏற்படக் கூடிய சூழ்நிலையை முழுமையாக விவாதித்து, முடிவு எடுக்க

981 ஏப்ரல் 24] [திரு. இரா. கருப்பையா]

வேண்டியிருப்பதால், இந்தப் பொருள் குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 18—3—1981 ஆம் நாள் மைய சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. சிவசங்கர் அவர்களிடமிருந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு நேர்முகக் கடிதம் வந்தது. அதிலே கூடுதல் நீதிபதிகளாக தற்போது இருக்கின்ற நீதிபதிகளிடமிருந்தும் நீதிபதிகளாக நியமிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறவர்களிடமிருந்தும் பாரதத்தின் எந்த ஒரு மாநிலத்திலும் எந்த ஒரு பகுதியிலேயும் சென்று அவர்கள் பணியாற்ற வேண்டுமென்ற இசைவினைப் பெற வேண்டுமென்றும், அப்படி அவர்கள் விருப்பம் தெரிவிக்கின்ற மூன்று மாநிலங்கள் என்ன என்பதை வரிசைப்படி கூற வேண்டும் என்றும், அப்படி இசைவு தெரிவிக்கின்ற மூன்று மாநிலங்களிலேதான் அவர்கள் இறுதியிலே நியமனம் செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதம் மைய அரசால் இறுதியில் தரப்படமாட்டாது என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துவிட வேண்டுமென்றும் அரசுக்கு, முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியிருந்தார்கள்.

அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5—4—1981-ம் நாளன்று எழுதிய கடிதத்தில் தமிழக அரசினுடைய கொள்கையை, நிலையை மைய அரசுக்குத் தெளிவுப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே ஒன்றாவதாகத் தெரிவித்திருப்பது, மாநில அரசு ஒன்று தனது உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை நியமிப்பது தொடர்பாக மட்டுமே பரிந்துரைகள் செய்ய இயலும்; எந்த மாநில அரசும் வெளி மாநில அரசின் பரிந்துரைகளின் பேரில் அந்த மாநிலத்திலிருந்து நீதிபதி ஒருவரை முதன் முதலாக நியமித்துக்கொள்ள ஒப்புக் கொள்ளாது; இதனை மைய அரசு அறியும் என்றும்; இரண்டாவதாக உயர்நீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட உள்ளவர்களிடமிருந்து இசைவுக் கடிதம் பெற்று அனுப்பப்பட்டாலும் முன்னர் கூறிய காரணங்களைக் கொண்டு மற்றொரு உயர்நீதி மன்றத்தில் முதன் முதலாக நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு அக்கடிதத்தினை சட்ட ரீதியாகக்கூட பயன்படுத்த இயலாது என்றும்; முதலில் நியமனம் செய்யப்பட்ட பின்னர் மாற்றம் செய்வதற்கு அத்தகைய இசைவுக் கடிதம் தேவையில்லை என்றும்; அதற்குக் காரணம் மாற்றம் செய்வது என்றால் அது ஆர்ட்டிக்கிள் 222 அரசியல் சட்டப் பிரிவினுடைய அடிப்படையிலே மாற்றம் செய்வதற்கு ஏற்கெனவே மைய அரசுக்கு, பாரத ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும்; அடுத்தபடியாக முதன்முதலாக நீதிபதியாக நியமனம் செய்யப்படுவதற்கு அத்தகைய கடிதம் வேண்டுமென்று கேட்டால் அதுவே தகுதி வாய்ந்த சிறந்த வழக்குரைஞர்களும் பணியிலுள்ள திறன் பெற்ற அதிகாரிகளும் நீதிபதிகளாக வருவதற்கு அவர்களிடையே ஊக்க

மின்மையைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடும் என்றும்; தங்கள் மாநிலத்தைவிட்டு வெளியே சென்று நீதிபதிகளாகப் பணியாற்றிட இயலாமைக்கு அவர்களுக்குத் தக்க காரணங்கள் இருக்கலாம் என்றும்; இதன் விளைவாக பல்வேறு உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஆயங்களுக்கு நியமிக்கப்படுகின்ற நீதிபதிகள் தரம் கூட பாதித்துவிடும் என்றும் எனவே மைய அரசு தன்னுடைய இந்த கொள்கையை மறு ஆய்வு செய்து கைவிட்டுவிட வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5—4—1981-ல் மைய அரசுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இந்த விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) வடாற்காடு, பர்வதமலைப் பிராந்தியத்தில் நடமாடும் கொள்ளைக்கூட்டம் களவாடுவது

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, "வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியில் பர்வதமலைப் பகுதியில் ஒரு கொள்ளைக் கூட்டம் இரவு நேரங்களில் சுற்றுப்புறக் கிராமங்களில் களவாடுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கலசப்பாக்கம்தொகுதியில், பர்வதமலைப்பகுதியில் கொள்ளைக் கூட்டத்தினர் மறைந்திருக்கவில்லை. அப்பகுதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் நிகழ்ந்ததாக புகார் கூறப்பட்டு கடலாடி காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன:—

(1) சிநன்தல் கிராமத்தில் இரவில் வீடு உடைத்து (மொத்தம் ரூ. 1,500 மதிப்புள்ள) பணம் மற்றும் சாமான்கள் திருடப்பட்டதாக வழக்கு ஒன்று கடலாடி காவல் நிலையத்தில் குற்ற எண் 339/80-ல் பதிவு செய்யப்பட்டு, பின்னர் அது கண்டுபிடிக்க முடியாத குற்றம் என முடிக்கப்பட்டது.

1981 ஏப்ரல் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(2) மேலச்சோளன் குப்பம் கிராமத்தில் ரூ. 500 மதிப்புள்ள எலக்ட்ரிக் ஸ்டார்ட்டர் களவாடப்பட்டதாக கடலாடி காவல் நிலையத்தில் குற்ற எண். 389/80-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிக்கு நீதிமன்றத்தில் மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(3) ரூ. 400 மதிப்புள்ள ரேடியோ திருடப்பட்டதாக கடலாடி காவல் நிலையத்தில் குற்ற எண். 4/81-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளி மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

(4) சூளைமேடு கிராமத்தில் ரூ. 140 மதிப்புள்ள பாத்திரங்கள், நெல் முதலியன திருடப்பட்டதாககுற்ற எண். 15/81-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளி மீதான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

(5) அரிதாரிமங்கலம் கிராமத்தில் ரூ. 10,000 மதிப்புள்ள தங்க நகைகள் களவாடப்பட்டு கடலாடி காவல் நிலையத்தில் குற்ற எண். 37/81-ல் குற்றவாளி சீனிவாசன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு மேலும் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

பதட்ட நிலை எதுவும் அப் பகுதியில் இல்லை.

[முற்பகல் 10-30]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே 5 கிராமங்களிலே இவ்வாறு திருடு போவது சம்பந்தப்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அறிக்கையிலே படித்தார்கள். மேலும் திருடு போவது என்றோ ஒரு நாள் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாக இருந்த சூழ்நிலை மாறி இன்றையதினம் அன்றாடம் ஏதாவது ஒரு கிராமத்திலே இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலே ஒரு பக்கத்திலே பருவதமலையும் இன்னொரு பக்கத்திலே ஜவ்வாது மலையும் அமைந்திருக்கின்றது ஆகவே தினசரி இரவு நேரங்களில் பொதுமக்கள் நிம்மதி இழந்து தவிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஏராளமான வழக்குகள் பதிவு செய்வதற்காக காவல்நிலையத்திற்குச் சென்றாலும் கூட அங்கிருக்கின்ற அதிகாரிகள் அந்த வழக்குகளைப் பதிவு செய்வதில்லை. சில வழக்குகளைத்தான் பதிவு செய்கிறார்கள். நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்ததற்குப் பிறகு கூட ஆதமங்கலம் என்ற ஒரு கிராமத்திலே இப்படிப்பட்ட திருட்டு நடைபெற்று அது குறித்து காவல்நிலையத்திற்கு புகார் செய்யப்பட்டிருக்கின்றது. இதுபோன்று பரவலாக வட ஆற்காடு மாவட்டத்திலே

பல்வேறு புகார்கள் பல்வேறு காவல் நிலையங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலை இருந்து வருகின்றது. குறிப்பாக விவசாயிகளின் மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் ஸ்டார்ட்டர், வொயர் போன்றவை களவு போகின்றன. இது பற்றி பல்வேறு விவசாயிகள் முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய தனியாக ஒரு காவல் துறையினரை அனுப்ப மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாக ஒரு கொள்ளைக்கூட்டம் இருந்துகொண்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகின்றது என்ற சூழ்நிலை ஏற்படவில்லை. தனிப்பட்டவர்கள் ஆங்காங்கே இப்படிப்பட்ட திருட்டுக்களைச் செய்து வருகிறார்கள். மேலும் நான் குறிப்பிட்ட 5 வழக்குகள் பற்றிய குற்றங்களும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரை பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு இடங்களில் பல்வேறு விதங்களில் நடைபெற்று இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில குற்றச்சாட்டுகள் பற்றி காவல் நிலையங்களில் புகார் கொடுக்கப்பட்டாலும் அவை பதிவு செய்யப்படுவதில்லை என்றும் அப்படிப் பதிவு செய்யப்பட்டாலும் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி மேலதிகாரிக்கு அவர்கள் தெரிவிக்கலாம். இல்லை என்றால் கொடுக்கப்பட்ட புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யும். ஆனால் அந்தந்த பகுதிகளின் தன்மையைப் பொறுத்து குற்றங்களை காவல்துறையினர் கட்டுப்படுத்துகின்ற வகையில் ஓரளவுக்கு செய்யப்பட்டு வருகின்றது. அது போதவில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டால் அதற்குத் தக்க நடவடிக்கையை காவல் துறையினர் மேற்கொள்வார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியது போன்று உதாரணமாக காந்தபாளையம் என்ற கிராமத்திலே பெருமாள் கோனார் என்பவரும் அதேபோன்று சினந்தல் கிராமத்திலே கோபால் கவுண்டர் என்பவரும் புகார்கள் கொடுத்துள்ளனர். இதுமட்டுமல்லாமல் இப்படிப் பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே தங்கி இருக்கின்ற கூட்டத்தினர் இரவுநேரங்களில் அவர்களிடம் வந்து 'நீங்கள் எப்படிக் காவல் நிலையத்திற்குப் புகார் கொடுக்கலாம்' என்று அடித்து இருக்கிறார்கள். பயமுறுத்தி இருக்கிறார்கள். இதுபற்றிய ஒரு புகார் எனக்கு மட்டும் அனுப்ப

வில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். இந்தப் புகார் குறித்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான விவசாயிகள் கையெழுத்திட்டு அரசாங்கத்திற்கும் அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் புகாரின் நகல் கூட என்னிடத்திலே இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட குற்றங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன. நான் முதலிலே கூறியதுபோன்று அந்தத் திருட்டுக் கும்பலிடம் வெடி குண்டு இருப்பதாக அந்தப் பகுதிகளுக்கு மாடு மேய்க்கச் சென்ற சில விவசாயிகள் அதனைப் பார்த்ததாகக் கூட புகார்கள் எல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். இதனால் அந்தப் பகுதியிலே ஒரு பீதியே ஏற்பட்டிருக்கிறது. இவைகளைப்போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டேன். அவைகளை எல்லாம், சட்டம் ஒழுங்கு விதிகளின் கீழ், திருட்டுக் குற்றங்களை கண்டு பிடித்து தண்டனை வழங்கவும் மேற்கொண்டு திருட்டுக் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கும் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள சில பல புகார்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், சில பல புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது இருந்து அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் அப்படி எடுக்கப் படாமல் இருந்தால், எடுக்க வேண்டிய முயற்சிகளை அரசு மூலமாக எடுத்துக் கொள்ளப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேந்தமங்கலம்—கதிரா நல்லூரில் ஏற்பட்ட தீவிபத்து.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கதிராநல்லூர் பஞ்சாயத்து, நத்தமேடு கிராமத்தில் 9—4—1981 ஆம் தேதி அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 57 வீடுகள் பாதிக்கப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், கதிராநல்லூர் கிராமத்திலுள்ள நத்தமேடு என்ற இடத்தில் 9—4—1981 அன்று மாலை சுமார் 5 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. விபத்தில் உயிர்ச் சேதமோ, கால் நடைச் சேதமோ இல்லை. மொத்தச் சேத மதிப்பு சுமார் ரூபாய் ஒரு இலட்சம். 43 குடியிருப்புகள் முழுவதுமாகவும், 11 குடியிருப்புகள் பகுதியாகவும் சேதமடைந்தன. முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குத் தலா ரூ. 200 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குத் தலா ரூ. 50 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் அரிசி, மண்ணெண்ணெய் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டது. வேட்டி, புடவை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வட்டம், கதிராநல்லூர் கிராமத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட அந்த 57 குடும்பங்களில் வசிப்பவர்கள் தேவேந்திரன் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சுமார் 300 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். மிகவும் வறுமையால் வாடும் மக்கள் அவர்கள். இந்த விபத்தினால் அந்த மக்களுடைய துணி மணிகள், பாத்திரம், பண்டங்கள், பணம் பத்திரங்கள் ஆகியவை சுமார் $1\frac{1}{4}$ இலட்சம் ரூபாய் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்த நத்தமேடு பகுதியும் புறம்போக்கு பகுதியாக இருப்பதினால் அந்த இடத்தை அவர்களுக்கே வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்க அரசு ஆவண செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே தீ விபத்திற்கும், வீட்டு மனைப் பட்டாக் கொடுப்பதற்கும் சம்பந்தம் இல்லை, என்றாலும் அந்த மக்கள் ஏழை எளிய மக்கள் என்பதைக் கணக்கில் கொண்டு அவர்கள் அதற்கான மனுக்களை கொடுப்பார்களேயானால், தனியாக விசாரித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக, 2,000 ரூபாய்

மானியத்துடன் கூடிய, 5,000 ரூபாய் கடனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த 2,000 ரூபாயை அந்த மக்களுக்கு அவர்கள் ஆதி திராவிடர்களாக இருந்தால், வட்டி இல்லாத கடனாக கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையிலே, 7-வது சட்டமன்றப் பேரவையின் முதல் அறிக்கையினை, தீயணைப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகள் குறித்து, மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது அறிக்கையினை, அவைமுன் வைக்கிறேன்.

6. அறிவிப்பு.

பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன், அதாவது 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டம்—கல்வி மானியத்தின் மீது விவாதத்தை தொடர்வதற்கு முன்பு, நான் ஒன்றைத் தெளிவு படுத்திக்கொள்ள விரும்புகிறேன். நிறைய உறுப்பினர்கள் கல்வி மானியத்தின் மீது பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார். நாளைக்கு உணவு மானியம் எடுக்க இருக்கிறது. விருத்தாசலத்தில் துப்பாக்கிச் சம்பவம் குறித்தும் பேச வேண்டும் என்றும் அவையில் எடுக்க வேண்டும் என்றும் நிறைய உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகையினால் இன்றைக்குள் முடிக்க வேண்டும் என்பதைக் கருதி மாலையிலும் அவையை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அவையின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

சரி, எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என நினைக்கிறேன் பேரவை மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை கூடும் என்று அறிவிக்கிறேன்.

[1981 ஏப்ரல் 24

(முற்பகல் 10·40)

7. வரவு–செலவுத் திட்டம் 1981–82 வாக்கெடுப்பு

கோரிக்கை எண்: 17—கல்வி. (தொடர்ச்சி.)

* திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் ''

என்ற வள்ளுவர் பெருந்தகை கருத்திற்கிணங்க, கல்வித் துறையை திறமை மிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் அளித்தமைக்காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981–82 ஆம் ஆண்டின் மொத்தச் செலவில் 22 சதவீதத்தை அதாவது ரூ. 249 கோடியை கல்விக்கென ஒதுக்கியுள்ள இந்தத் தமிழக அரசு, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும் சாதித்து விட முடியாத அளவிற்கு ப்ளஸ் 2 கல்வியைப் புகுத்தி இதுவரை 58,000 மாணவர்களை தொழிற் கல்வி பயில வைத்து, கல்வியை வாழ்க்கையோடு இணைத்ததை, நாட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்ட எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஏதோ அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அள்ளிக் கொடுத்ததாக சிலர் அலறி அடித்துக் கொள்கிறார்கள். ஆனால் மாதம் வெறுமனே ரூ. 60 மட்டுமே பெற்று எந்த ஊதிய உயர்வும் இன்றி வாழ்ந்து வந்த பகுதிநேரத் தொழிலாசிரியர்களெல்லாம் அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை.

இத்தகைய அடித்தள ஆசிரியர்களை அடுத்த ஆண்டிற்குள் முழு நேர ஆசிரியர்களாக மாற்ற முடிவு செய்த அரசு இந்த அண்ணாவின் அரசுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நிரந்தரக் கட்டடம் இல்லாத பள்ளிகளே இருக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசின் நோக்கம். அந்த அடிப்படையில் என்னுடைய பேராவூரணி தொகுதியில் அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் நிரந்தரக் கட்டடங்கள் கட்டி முடியும் தருவாயில் உள்ளன. அதே நேரத்தில் என் தொகுதியில் உள்ள ஆவணம், அம்மையாண்டி, பைங்கால் உடையநாடு, இடையாத்தி, பெருமகளூர்காலகம் ஆகிய உயர்நிலைப் பள்ளிகளுக்கும், இராஜாமடம், பள்ளத்தூர் ஆகிய மேல்நிலைப் பள்ளிளுக்கும், உடனடிக்யாக நிரந்தரக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு எம். ஆர். கோவேந்தன்]

கிராமங்களில் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் கல்வித் தரம் மிகவும் குறைந்துள்ளது. நகரங்களில் உள்ள மாணவர் களோடு அவர்கள் போட்டியிட முடியவில்லை. நகரங்களில் உள்ள எல். கே. ஜி., யூ. கே. ஜி. போன்ற வாய்ப்புகள் கிராமங் களில் உள்ள மாணவர்களுக்கும் அளிக்க வேண்டுகிறேன்.

அதே நேரத்தில் கிராமங்களில் நர்சரி பள்ளிகள் என்ற பெயரில் பல தவறுகள் நடக்கின்றன. இதையெல்லாம் ஒழுங்கு படுத்த, அனைத்துப் பள்ளிகளையும் அரசே மேற்கொள்ள வேண்டுகிறேன். கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் நடத்தும் பள்ளி கள், ஆங்கிலோ இந்திய பள்ளிகள் போன்ற மைனாரிட்டி பள்ளி கள், ஏனைய தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் பெரும்பாலான பள்ளிகளில் நன்கொடை என்ற பெயரில் தவறுகள் நடக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களிலும் பலர், வியாபாரம் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டு ஓய்வு எடுக்கவே பள்ளிக்கு வருகின்றனர். இதனால் கல்வியின் தரம் குறைந்துவிட ஏதுவாகிறது. இந்நிலையைப் போக்க மைனாரிட்டி பள்ளிகளை மாநில அரசுகள் ஏற்று நடத்தும் வகையில் மத்திய அரசு சட்டம் இயற்ற மாநில அரசுகள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இதற்கு தமிழக அரசு எப்போதும்போல முன்னோடியாக இருக்கும் என நம்புகிறேன்.

மதிய உணவுத் திட்டத்தில் பல தவறுகள் நடப்பதாக புகார் கள் வருகின்றன. இதைப் போக்க, தனி அலுவலர்களை மதிய உணவுத் திட்டத்திற்கென்றே நியமித்து அனைத்துப் பள்ளிகளிலும் அடிக்கடி தணிக்கை செய்ய வேண்டுகிறேன்.

எதையும் பொருத்தமாகச் செய்யும் இந்த அண்ணாவின் அரசு தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1974—லிலும், 1975—ம் தஞ்சையில் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி மையம் செயல்பட்டு வந்தது. என்ன காரணத் தினாலோ, அவை பிறகு நிறுத்தப்பட்டு விட்டன. ஆனால், பிறகு புதிதாக தர்மபுரியிலும், நாகர்கோயிலிலும் மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, தஞ்சையில் மீண்டும் இந்தப்பயிற்சி வகுப்பைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பதவி உயர்வு அளிக்கும்போது, அடித்தள ஆசிரியர்களில் தகுதியுள்ள இடைநிலை, தொழில் ஆசிரியர்கட்கு வாய்ப்பே கிடைப்பதில்லை. எனவே, இவர்களும் வாய்ப்புப் பெறும் வகையில், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நிய மனத்தில இவர்களுக்கென தனி விகிதம் அளிக்க வேண்டுகிறேன். கல்லூரிகளில் பருவமுறைத் தேர்வு முறையில் ஆசிரியர்-மாணவர்

உறவு கெடுவதாக புகார்கள் வருகின்றன. எனவே, பருவமுறைத் தேர்வு தேவைதானா என்பதை ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி, பல்கலைக் கழகங்களில் மாணவர் யூனியன் தலைவர்–செயலர் போன்ற தேர்தல்கள் நடத்துவதால், மாணவர்களிடையே அரசியல் புகுந்து கோஷ்டி மனப்பான்மை உண்டாகி, அவர்கள் கல்வியையும் கெடுத்து இறுதியில் கொலை போன்ற கொடுஞ் செயல்களும் நடைபெறுகின்றன. இது கல்வித் தரத்தை மிகவும் கேவலமாக்கி விடுகிறது.

எனவே, இது போன்ற தேர்தல் நடத்துவதை ரத்து செய்து ஒவ்வொரு கல்லூரி, பல்கலைக் கழகங்களிலும் அதிக மதிப் பெண்கள் பெற்று வரும், மாணவர்களையே அடுத்தடுத்து தலைவர்–செயலராக நியமிக்க அந்தக் கல்லூரி, பல்கலைக் கழக முதல்வர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் இந்த மானியத்திலே எனது கருத்தைச் சொல்வதற்கு அனுமதி தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி சம்பந்தமாக மானியக் கோரிக்கை எண் 17-ம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுக்கான திட்டத்தில் ஏறத்தாழ 249 கோடி ரூபாயும், மருத்துவம் வேளாண்மை, கால்நடை போன்ற மற்றக் கல்விகளுக்கும் சேர்த்து மொத்தம் 332 கோடி ரூபாய் கோரியிருக்கிறார்கள். இது நமது மொத்த மானியக் கோரிக்கைத் தொகையில் 22 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருக்கிறது. தமிழகத்தில் கல்வியை வளர்ப்பதற்காக இன்னும் அதிகமாகக்கூட ஒதுக்கீட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டிருக்க வேண்டும். காரணம், ஆங்கிலேய ஏகாதிபத்திய காலத்தில் கல்வித் தரம் எழுத்தர்களை உற்பத்தி செய்வதற்காக மட்டுமே கொடுக்கப்பட்டது. அந்தக் கல்வித் தரத்தை மாற்றிய மைத்து விஞ்ஞான ரீதியிலே படிக்கின்ற மாணவர்கள் திறமை கொண்டவர்களா இருக்கவேண்டுமென்ற அளவில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இன்னும் அதிகமாகக் கூட மானியம் ஒதுக்கீடு செய்யலாம் என்ற எனது கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இந்த மானியக் கோரிக்கையில் கல்வி வளர்ச்சி என்ற பெயரால் சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆன பின்னரும், இன்னும் அதிகமான விழுக்காடு படிக்காதவர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தை தமிழக அரசு கொடுத்திருக்கிறது. இந்தியாவிலே, குறிப்பாக தமிழகத்

திலே பிறந்த அத்தனை பேர்களும் கல்வி அறிவு பெற வேண்டும். அவர்களுக்கு அத்தனை வாய்ப்புகளும் கொடுக்க வேண்டும் என்ற வகையில் கல்வித் திட்டத்தை மாற்றி யமைக்க வேண்டும். ஆனால், இந்த அரசு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், டைரக்டர் ஆப் டெக்னி கல் எஜுகேஷன் என்ற ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி அதன் மூலம் தொழிற் கல்வியை மாணவர்களுக்கு நல்ல, முறையில் செய்ததோடு, டைரக்டர் ஆப் ஸ்போர்ட்ஸ் என்ற ஒரு தனி டைரக்டரேட்டையும், அதேபோன்ற கல்வியை இன்னும் விரிவுபடுத்துவதற்காக விவசாயக் கல்லூரி என்ற ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, அதற்குத் தனி பல்கலைக்கழகம் ஏற்படுத்தி, மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை அளித்து வருகின்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக் கிறது. ஆகவே, அதையெல்லாம் பாராட்டுகிறேன். ஆனால் நமது கல்வி முறையிலே தொல் பொருள் ஆராய்ச்சி என்ற ஒரு பிரிவின் மூலமாக இப்போது நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார் கள். இதற்கு முன்னால், தமிழ் இலக்கியத்தைப் பற்றி மட்டும் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. தொல்பொருள் ஆராய்ச்சி மூலமாக நமது தமிழகத்தினுடைய பழம் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதற்கு, அதையும் சேர்த்துக் கொள்கின்ற அளவில் தொல்பொருள் ஆராய்ச்சியை இன்னும் விரிவுபடுத்த வேண்டும்.

அதோடு, நமது 1981—82 ஆம் ஆண்டு மானியக் கோரிக் கையிலே, 6 முதல் 14 வயதுள்ள மாணவர்களுக்கு நல்லமுறை யில் கல்வி கொடுப்பதற்காக 1,000 இடைநிலை ஆசிரியர் பதவிகளும், 250 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும், நடுநிலை பள்ளிகளுக்கு 500 தமிழாசிரியர் பதவிகளும், மற்றும் 200 பி.எட் தலைமை ஆசிரியர் பதவிகளும், பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 250 முழு நேரப் பதவி ஆசிரியர்களாகவும் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற அளவிற்கு இந்த அரசு திட்டம் நிறைவேற்றியிருக்கிறது. இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-50]

தற்போது கல்வித் துறையிலே ஹையர் செகண்டரி என்று ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் மிக நல்ல திட்டம். இருந்தாலும் அந்தத் திட்டத்தை இப் போது பள்ளிக்கூடங்களிலே சேர்த்திருக்கிறார்கள். ஹையர் செகண்டரி வகுப்பில் படிக்கிற மாணவர்கள் 14 முதல் 17 வரை வயதுள்ளவர்களாக இருக்கிறவர்களை பள்ளிக்கூடங்களில் வைப்பதன் மூலம் போராட்டங்கள் போன்ற செயல்களில் ஈடுபடுவதுடன், சாதாரண சிறுவர்களையும் தயார் செய் கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. கல்லூரியில்

இருக்க வேண்டிய மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் இருக்கிற தாலே தான் போராட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த பிளஸ் 2 என்று இருக்கிற அந்த மாணவர்களுக்குத் தனியாக ஜூனியர் கல்லூரி என்று அதை மாற்றி அந்த மாணவர்களைத் தனியாகப் பயிற்சி கொடுப்பதின் மூலம் பள்ளிக்கூடங்களில் இருக்கிற மாணவர்கள் போராட்டம்போன்ற வன்முறைச் செயல் களிலே ஈடுபடாத அளவிற்குப்படிப்பில் கவனம் செலுத்த நல்ல வாய்ப்பாக இருக்கும்.

அங்குள்ள பிளஸ் 2 மாணவர்களுக்கு எம்.எஸ்ஸி., எம்.ஏ பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் செய்கிறபோது, இந்த கல்வித் தகுதியினை பெற்றிருக்கிற கீழே இருக்கிற ஆசிரி யர்கள் அவர்களே நேரடியாக பிளஸ் 2 வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக மாற்றப்பட வேண்டுமென்று போராட்டங் கள் எழுந்திருக்கின்றன. அவர்களுக்கு கொடுப்பது சரிதான் என்று சொன்னாலும் கூட நேரடியாக படித்து பட்டம் பெற்றவர்கள் இப்போது வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார் கள் வேலையில்லாத் திண்டாட்டத்திலே அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிற நிலை யிலே, பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கிற பி.எட், படித்த ஆசிரியர்கள் வேலை பார்க்கிற வாய்ப்பு இருக்கிறது; அவர்கள் சம்பளம் பெறுகிற வாய்ப்பும் இருக்கிறது. புதிதாக எம். எட்., படித்து வருகிற மாணவர்கள் வேலை வாய்ப் பின்றி நான்கு ஆண்டுகளுக்கு மேல் இருப்பார்களானால், அரசு குறித்திருக்கிற வயது வரம்பைத் தாண்டிவிடுவார்கள். ஆகவே அதிகமான வாய்ப்பு நேரடியாகப் பட்டம் பெற்றவர்களுக்கே கொடுக்க வேண்டும். 10 சதவீதம், 5 சதவீதம் வேண்டுமா னால் பள்ளிகளிலே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு ஒதுக்கலாம். அவர்கள் மாலை நேர வகுப்புகளிலும், அஞ்சல் கல்வி மூலமாகவும் படித்து அனைவரும் பட்டம் பெற்று விடுகிறார்கள். அவர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்கப்படு மானால் நேரடியாக படித்து வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே, நேரடியாக படித்தவர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று திட்டங்களை வகுப்பதற்கு இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல 6 முதல் 11 வயது வரை மாணவர்கள் 1973-74-ல் பள்ளிக்கூடங்களில் சேர்ந்தவர்களில் 51 சதவீதம் பாதியிலே படிப்பை நிறுத்தி விட்டார்கள் என்று இந்த குறிப் பிலே இருக்கிறது. அது இப்போது 1979-80-ல் 33 சதவீத மாக குறைந்திருக்கிறது என்றும் சொல்லி இருக்கிறார்கள். 1973-74ல் 51 சதவீதமாக இருந்தது இப்போது இந்த ஆண்டு 33 வீதமாக இருக்கிறது என்பதை நாங்கள் செய்திருக்கிறோம் என்று சாதனையாக சொல்லியிருக்கிறார்கள். மிக வேதனை

யான விஷயம். 5 வயதிலிருந்து 11 வயது வரையில் அவர்கள் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பு படிக்க வேண்டும். 33 சதவீதம் படிக்காமல் இருக்கிறார்கள் என்றால் அதற்குஎன்ன காரணம். உடல் ஊனம் ஆனவர்கள், மற்றும் மருத்துவக் காரணங்களால் அவர்கள் படிக்க முடியாத நிலையென்றால் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் 33 விழுக்காடு இந்த மண்ணில் பிறந்தவர்கள், ஜனநாயக நாட்டிலே பிறந்தவர்கள் படிக்கமுடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. 5 முதல் 11 வரை குறைந்தது 5-வது வகுப்பு வரையிலாவது படிக்கவேண்டியவர்கள், 33 விழுக்காடு குறைந்துவிடுகிறார்கள். பாதியிலே படிப்பை நிறுத்தி விடுகிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அதை நிவர்த்திக்க அரசு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 51 சதவீதமாக இருந்தது 33 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது என்று பெருமையாக பாராட்டுவதைவிட இயற்கையின் காரணமாகத்தான் வராத நிலையில் உள்ளார்கள், மற்றவர்கள் எல்லாம் வந்து தொடர்ந்து படிக்கிறார்கள் என்று சொல்லுகின்ற நிலைமை வந்தால்தான் அது பாராட்டுக்குரியதாகும்.

1-வது வகுப்பிலிருந்து 3-வது வகுப்புவரை படிக்கின்ற மாணவர்களுக்கு தேர்வு இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு செய்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1, 2, 3 வகுப்புகளில் தேர்வு இல்லை என்பது பாராட்டுக்குரியது. ஆனால் அதைப் பயன்படுத்திக்கொண்டு ஆசிரியர்கள் எதையும் சொல்லித்தருவது இல்லை, எப்படியும் பாஸ் செய்யப்போகிறார்கள் என்பதால் மாணவர்களும் எப்படியும் தாங்கள் வெற்றிபெறப்போகிறோம், ஆகவே படிக்கவேண்டியதில்லை என்ற நிலைமையிலே ஒரு உணர்வு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட உணர்வுகள் இளைஞர்களுக்கு ஆரம்பக் காலத்திலேயே ஏற்படுவது நல்லதல்ல. அதைத் தவிர்க்கவேண்டும். மேல் அதிகாரிகள் பள்ளிகளுக்கு வந்துபார்க்கிறபோது எத்தனை பேர்கள் பாஸ் செய்திருக்கிறார்கள். எத்தனை பேர்கள் பெயில் ஆகியிருக்கிறார்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் ஆசிரியர்கள் இப்போது பதில் சொல்லத் தேவையில்லை என்ற காரணத்தினாலே தவறுகள் ஆரம்பக்காலத்திலேயே ஏற்பட்டுவிடுகின்றன. பெயில் ஆகக்கூடாது என்று இருக்கவேண்டும் பரிட்சைகள் இருக்கவேண்டும், மாதாந்திரப் பரிட்சைகள் இருக்க வேண்டும், மார்க் அட்டைகளைத் தாய்தந்தையருக்கு அனுப்பவேண்டுமென்ற முறையிலே நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து மிட்டே மீல்ஸ் பற்றி ரொம்ப விளக்கங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. 5.55 லட்சம் மாணவர்கள் இதனால் பயனடைகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த

மதிய உணவு நடத்துவதிலே அரசு 10 காசும், உள்ளாட்சி மன்றம் 5 காசும் கொடுக்கிறது. இதைத்தவிர கேர் நிறுவனத்திலிருந்து தானியம் கொடுக்கப்படுகிறது. 200 நாட்களுக்கு கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கேர் நிறுவனத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற தானியங்கள் பள்ளிகளுக்குப் போய்ச் சேருகின்றதா என்று பார்த்தால் இல்லையென்ற அளவுக்குத்தான் இருக்கிறது. அதை அவர்கள் எடுத்து விற்று விடுகிறார்கள். அந்த அளவுக்குத் தவறு நடைபெறுகிறது. 5 காசுகள் கொடுக்காத ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அரசு கொடுக்கின்ற 10 காசுகூட பல கிராமங்களிலே உள்ள பள்ளிகளிலே சரியாக மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. வாரத்திற்கு ஒரு நாளைக்கு உணவைக் கொடுத்துவிட்டு 5 நாட்களுக்கு வருகின்ற காசை அவர்களே பிரித்து எடுத்துக் கொள்கிறார்கள். செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் 97 இடங்களிலே சமைத்து பல இடங்களுக்கு அனுப்புவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி ஒரே இடத்தில் செய்வதன் மூலமாக அதை அதிகாரிகள் நல்ல முறையிலே மேற்பார்வை செய்வதற்கும் பொட்டலங்களிலே தவறு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். இராமநாதபுரம் மாவட்டத்திலே 5 இடங்களிலே அப்படி ஏற்படுத்துவதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். அத்தனை ஏழை மாணவர்களுக்கும் உணவு கிடைக்கக்கூடிய முறையிலே காரியங்கள் செய்யப்படவேண்டும். பள்ளிகளிலே உணவு கொடுக்கப்படுவதால்தான் அதிகமாக வராமல் இருப்பது குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே எல்லா மாணவர்களுக்கும் இந்த திட்டத்தை விரிவுபடுத்தி அதிகமான மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வந்து கற்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்தவேண்டும்.

இலவசமாகப் புத்தகமும், நோட்டுப் புத்தகமும், பலகையும் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நல்ல திட்டம், ஆனால் அவையெல்லாம் அங்கே எப்போது போய்ச் சேர்கிறது என்று கேட்டால் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களிலேதான் ஏழைமாணவர்களுக்குப் போய்ச் சேருகிற நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11-00)

நமது அரசு அச்சிட்டு இந்த மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்கள் புத்தகக் கடைகளிலே கிடைக்கின்றன. அப்படியென்றால் அந்தப் புத்தகங்களை விநியோகிக்கின்ற பொறுப்பிலே உள்ளவர்கள் அவற்றை விற்று விடுகிறார்கள் என்றுதானே பொருள்படுகிறது. எனவே, மாணவர்களுக்கு எந்த அளவிற்குப் புத்தகங்கள் போய்ச் சேர வேண்டுமோ அந்த அளவிற்குப் போய்ச் சேருவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்று கேட்

டால், ஆரம்பத்திலே நாங்கள் மனுச்செய்கிறோம், ஆனால் பாதியிலே போய்விட்ட மாணவர்களின் புத்தகங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இதை மேலதிகாரிகள் கவனித்துப் பார்க்க வேண்டும். எத்தனை மாணவர்கள் பள்ளியிலே இருக்கிறார்கள், எத்தனை புத்தகங்கள் கொடுக்கப்பட்டன என்பதைப் பற்றி மறுபடியும் அரசுக்கு கணக்குச் சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. விழுக்காடு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அந்த விழுக்காடு விழுவதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பார்க்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் இன்னும் பள்ளியை விட்டே போகவில்லை. அதற்குள் மணியடித்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது?

33 சதவீதம் என்ற விழுக்காட்டைச் சொல்கிறார்களே அது சம்பந்தமாக இன்னொரு தவறு இருக்கிறது. ஆசிரியர்—மாணவர் விகிதத்தை நாம குறிப்பிட்டிருப்பது, அந்த மாணவர் விகிதம் குறைந்தால் ஆசிரியரின் பதவி போய்விடும் என்ற காரணத்தினால் தவறான கணக்கைக் கொடுக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் பாதியிலே இருக்கின்ற விழுக்காட்டைக் காட்டுவதை ஆரம்பத்திலேயே காட்டினால் பல ஆசிரியர்கள் ரிட்ரென்ச்மென்ட் என்று போய்விடுவார்கள் என்பதால் தவறான மாணவர்கள் பட்டியலை வைத்திருக்கிறார்கள். இதையும் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் வகுப்பு, ஏழாம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் வைத்திருக்கின்ற பாடத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். முதல் வகுப்பு மாணவர்களுக்கு மிக எளிமையான முறையில் பாடம் அமைய வேண்டும்; ஆனால் கடுமையான வார்த்தைகளில் வாசகங்கள் இருக்கின்றன, ஆங்கிலத்தை பொறுத்தவரையில் ஒரு ஆண்டுக்குப் படங்களைப் போட்டு, அதைப் பார்த்தவுடன் சொல்லுகின்ற திட்டம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழாவது, எட்டாவது வகுப்புக்களைப் பொறுத்தவரையிலே, கணக்கு, சயன்ஸ் ஆகிய பாடங்களுக்கு, பி.எஸ்.ஸி. வகுப்பிலே இருக்கின்ற அந்த அறிவியல் பாடத்தை அப்படியே தமிழில் மொழி பெயர்த்துப் போட்டு இருக்கிறார்கள். மிகக் கடுமையான முறையில், பி. எஸ், ஸி., மாணவர்கள் படிக்கின்ற அந்தப் பாடத் திட்டத்தை அப்படியே மொழிபெயர்த்துப் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் எளிமைப்படுத்தி, மாணவர்களுக்குப் படிப்படியாக அந்த அறிவியல் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமே தவிர திடீரென்று இப்படி ஏழாவது, எட்டாவது வகுப்புக்களுக்குச் சொல்லிக் கொடுப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எயிடெட் ஸ்கூல்ஸ் இருக்கின்றன. அரசே மானியம் கொடுத்தும், அவர்களிடம் அங்கேயுள்ள ஆசிரியர்கள் படும்பாட்டை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்காவிட்டால் அவர்கள் மீது சார்ஜ் அல்லது குற்றச்சாட்டைச் சுமத்துகிறார்கள்; கிரிமினல் வழக்கையேகூடப் போடுகிறார்கள். எய்டெட் ஸ்கூல்களுக்கு அரசே பணம் கொடுக்கிறது. அரசே செக் கொடுத்து, இங்கிருந்து நேரடியாகப் பள்ளி, கல்லூரியில் உள்ள மற்ற ஆசிரியர்களுக்குச் செய்வது போன்று இவர்களுக்கும் செய்துவிட்டால் இந்தக் குறையை நீக்கிவிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக ஆக்கியதைப் போன்று மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களையும் அரசு ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டுமென்று நினைத்தால்கூட மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மணியடித்துக் கொண்டேயிருப்பதால் சுருக்கமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கூறாமல் இருக்க முடியாது. இந்த மன்றத்திலேயே பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்; பேசியிருக்கிறோம். அரசு ஏற்றுக் கொண்டபடி ஆசிரியர்களுக்குச் சம்பள விகிதம் அங்குள்ள ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. சர்வாதிகாரப் போக்கில் அங்கேயுள்ளவர்கள் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அங்கே இணைவேந்தராக இருக்கின்ற வகையில், மற்றப் பல்கலைக் கழகங்களில் இருப்பதைப்போன்று செய்வதற்கு சட்டத் திருத்தங்களைச் செய்தாக வேண்டும். அது பரம்பரைச் சொத்தாகக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் ஓய்வுபெறும் போது 10,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து 5 ரூபாய் என்ற விகிதத்தில் பிடித்துக் கொண்டு அவர்கள் ஓய்வு பெறும்போது, 10,000 ரூபாய் கொடுத்தால் நல்லது. அதனால் அரசுக்கும் இழப்பு இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில் சமீப காலமாக நடந்து வரும் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம். மதுரை எஞ்சினியரிங் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; மேலூர் கல்லூரியில் நடந்த மாணவர்களுகிடையேயான மோதலில் ஒரு மாணவரின் கண் போயிருக்கிறது இப்படித் தமிழகம் முழுவதும் கல்லூரிகளில் மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தைத் தவிர்ப்

பதற்கு அவர்களுக்குத் தேர்தல் வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். கல்லூரிகளிலே இந்தப் போராட்டத்திற்குக் காரணம் என்னவென்றால், அங்கே நடக்கிற மாணவர் பேரவைத் தேர்தல் என்று சொல்கிறார்கள். அந்தத் தேர்தலையே நடத்தாமல்கூட வேறு வகையில் அந்த மாணவர்களை நியமித்தால்கூட நல்லது. அல்லது, அங்கிருக்கிற பேராசிரியர்களே, அந்த மன்றங்களுக்குத் தலைவராக இருந்து, ஜனநாயக மரபுகளை அங்கே காப்பாற்ற முடியும். ஆகவே, போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு தேர்தல் நடத்தாமலிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இவ்வளவு நேரம் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவருக்கு நன்றி செலுத்தி முடிப்பதற்கு முன்னால், ஒரே ஒரு, கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

அட்டானமஸ் காலேஜ் என்று ஸ்டேட்டஸ் கொடுத்திருக்கின்ற கல்லூரிகளிலே அவர்கள் நினைத்த அளவுக்கு மார்க்குகளைப் போடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, நன்றாகப் படித்த மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. 70 மார்க்கு வாங்கினாலும், 100-க்கு 100 போட்டாலும் யாரும் கேட்கக் கூடாது என்று இருப்பதன் காரணமாக, மெடிக்கல், இன்ஜினியரிங் போன்ற கல்லூரிகளிலே சேருவதற்கு உண்மையாகப் படித்தவர்களுக்கு வாய்ப்பில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்திலே, ஆசிரியர்கள் 35 மார்க்குகளை, 85 ஆகத் திருத்தினார்கள் என்று பார்த்தோம். இப்படித் திருத்த ஆரம்பித்தால், உண்மையாகப் படித்தவர்களுக்கு இன்ஜினியரிங், மெடிக்கல் காலேஜீக்கு வர முடியுமா என்பதை இந்த அரசு பார்த்து அப்படி அட்டானமஸ் ஸ்டேட்டஸ் கொடுப்பதன் மூலம் தவறு ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981—82-க்கான மானியக் கோரிக்கையில், இந்தத் தமிழகத்தில் மொத்தம் 1,650 ஆசிரியர்களை நியமித்து, அதிலே தமிழ் ஆசிரியர்கள் 500 பேர்களை நியமிக்கின்ற அளவுக்கு, தமிழுக்குத் தனிச் சிறப்பு கொடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்கிய புரட்சித் தலைவர் அவர்களையும் கல்வி அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னால், ஏரல் பகுதியில் அரசு பெண்கள் உயர் நிலைப் பள்ளியின் கட்டிட வாடகை பாக்கியை அரசு கொடுத்ததை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். ஆனால், அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு உடனடியாக நிரந்தரக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல், ஏர்வாடி பகுதியிலுள்ள அரசு பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் கட்டிடம் பழுதடைந்திருந்ததைச் சுட்டிகாட்டி, அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, கிட்டத்தட்ட ரூ. 85,000 எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். ஆனால், பழைய

கட்டிடங்களைப் பழுது பார்ப்பதுடன்கூட, புதிதாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களின் அடிப்படையில் அனைத்து கிராமப் பள்ளிகளுக்கும் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தாலும், நான் என்னுடைய தொகுதியிலே இரண்டு பள்ளிகள் வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறேன். நான்குநேரி ஊராட்சி ஒன்றியத்திலே தெற்கு முதலைக் குளம் என்ற ஊரில் தென் பகுதியில் குழந்தைகள் செல்ல முடியாத அள வில் குளமும், வட பகுதியிலே மணிமுத்தாறு வாய்க்காலும் இருப் பதால், மாணவச் செல்வங்கள் போக முடியாத அளவுக்கு இருக் கிறது. அந்த ஊரில் 73 மாணவச் செல்வங்கள் இருக்கிறார்கள். அங்கே 750 ஜனத் தொகையிருக்கிறது. அப்படிப்பட்ட ஊர் களுக்கு, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தனிப் பள்ளிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, வள்ளியூர் பகுதியில் நேஷனல் ஹைவேஸ ரோட்டின் மேலாக இருக்கிறது நம்பியார் விளை என்ற ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே உள்ள குழந்தைகள் அங்கே போக்குவரத்து அதிகமாக உள்ள ரோட்டிலே வர பயப்படுகிற காரணத்தால், கல்வி பெற முடியாத சூழ்நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நம்பியார்விளையில்—வள்ளியூர் ஊராட்சி ஒன்றி யப் பகுதியிலே ஒரு பள்ளி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தாமரை குளத்தில் 'தென்கரை மகாராஜா' என்ற ஆரம்பப்பள்ளி அந்த கிராமத்திலுள்ள அரிசன கமிட்டியால் நடை பெற்று வந்தது. சமீபகாலத்திற்கு முன்னால், அந்த கமிட்டி நடத்தி வந்த பள்ளி யின் அங்கீகாரம் அரசால் ரத்து செய்யப்பட்டு, இப்பொழுது அந்த கமிட்டியே தன் கையிலேயிருந்து சம்பளத்தைக் கொடுத்து நடத்தி வருகிறது. பலமுறை புகார் கொடுத்தும், இந் நிலை யிருக்கிறது. அதே நேரத்தில், அரசும் நடத்த முடியாத சூழ் நிலையிருக்கிறது. சி. இ. ஓவைப் பொறுத்தவரையில், தன் னால் நடத்த முடியாது என்று தெரிவித்திருக்கிறார். பி. டி. ஓ வைப் பொறுத்த வரையில் அவரும் தன்னால் நடத்த முடியா என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே, அவர்களால் என்டோ மெண்ட் தொகையாக ரூ. 25,000 கட்ட முடியாத சூழ் நிலை யிருக்கிறது. அங்கே கிராமத்திலுள்ள அரிசனங்கள் பணம் கட்ட முடியாத சூழ்நிலையிருக்கிறது. அதே நேரத்தில், அவர்கள் குழந்தைகள் படிக்க வசதியற்ற நிலைமையில் இருக்கின்ற காரணத்தால், அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு உடனடியாக என டோவ்மென்ட் கட்ட வேண்டாமென்ற சூழ்நிலையை உருவாக்கி அரிசன மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு அந்த மந்திரிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அங்கே வந்து சென்ற காலத்தில், நியமன அனுமதியை நாங்கள் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், கொடுக்கவில்லை. ஆகையால் ரத்து செய்த அனுமதியை அவர்கள் மீண்டும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் மைனாரிட்டி பள்ளி என்ற அடிப்படையில் ஆள்வார்நேரியில் சி. எம். எஸ். பள்ளி என்று ஒன்றிருக்கிறது. அப்பள்ளிக்கு ஒரு தலைமையாசிரியரை டி. இ. ஓ. வுடைய அனுமதியுடன் நியமனம் செய்திருக்கிறார்கள். காலஞ்சென்ற தலைமையாசிரியருடைய கால் இடத்தில் ஜூரிஸ்மேரி எப்சிபா, பி.எஸ்.சி., பி. எட்., என்ற ஆசிரியை நியமிக்கப்பட்டிருக்கிறார். அரசு ஆணைப்படி, ஒரு தலைமை ஆசிரியர் மரணம் அடைந்தாலோ, அல்லது தலைமை ஆசிரியர் அந்தப் பதவியிலே இல்லையானாலோ அந்த இடத்திற்கு பி. டி. ஆசிரியரை நியமனம் செய்யலாம் என்றிருக்கிறது.

[முற்பகல் 11-10].

அந்த அடிப்படையில் நாங்குநேரி ஊராட்சி ஒன்றிய சி.எம்.எஸ். மிடில் ஸ்கூல் தலைமை ஆசிரியை செல்வி ஐசின் எலிசபெத் மேரியின் நியமனத்தை அரசு அங்கீகாரம் அளித்து ஆசிரியர் பணியில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து மரணமடைந்த ஓர் ஆசிரியரின் குடும்பத்தைப் பாதுகாக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து மைனாரிட்டி அடிப்படையில் திசையன்விளை செயிண்ட் ஜோசப் ஹைஸ்கூலுக்கு 6 முதல் 8 வகுப்புக்கு அரசு உதவி வழங்க ஆர். டிஸ். 51702/ஜி.3/81, தேதி 4-3-1981-ன் படி அனுமதித்து அதன் அடிப்படையில் 9-வது ஸ்டாண்டர்டுக்கும், தலைமை ஆசிரியரின் சம்பளத்திற்கும் அனுமதி அளிக்கவில்லை. அதனை உடனடியாக அளிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மைனாரிட்டி நிர்வாகத்தை ஊக்குவித்து, பாதுகாக்கவும் வேண்டுகிறேன்.

குமரி மாவட்டம் தக்கலை கல்வி மாவட்டம் காரங்காடு செயின்ட் அலாய்சியஸ் உயர்நிலைப் பள்ளிக்கு கடந்த 3 ஆண்டுகளாக அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை. கல்வி இயக்குநர் அவர்கள் தனது உத்தரவில் ஆர். டிஸ். எண். 229197/ஜி.8/80, தேதி 19-1-1981 கூறி இருக்கிறார்கள்.

Minorities have a right to start schools. But they cannot compel recognision or aid.

ஆகையினாலே புரட்சித் தலைவர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் மைனாரிட்டி கிறிஸ்தவ பள்ளிகளுக்கு பாதுகாப்பும் ஆதரவும் கொடுத்தும் அதிகாரிகள் புறக்கணிக்கின்றார்கள்.

அடுத்து ஈரோடு சி.எஸ்.ஐ. கல்வி நிறுவனத்தின் கீழ் ஒரே காம்பவுண்டுக்குள் 12 நிர்வாகங்கள் இயங்கி வருகின்றன. ஒரே காம்பவுண்டுக்குள் சர்ச், ஆஸ்பத்திரி, செவிலியர் பள்ளி, செவிலியர் விடுதி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் ஆரம்பப் பள்ளி, பெண்கள் நர்சரிப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி, தங்கும் விடுதி, ஆசிரியர் பயிற்சிப் பற்றி ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் விடுதி போன்ற நிர்வாகங்கள் இருக்கின்றன. $2\frac{1}{2}$ வயது முதல் 25 வயது வரை சுமார் 5,000 மாணவ மாணவிகள் குழந்தைப் பள்ளி முதல் ஆசிரியர் பயிற்சி வரை படிக்கின்றனர். மத்தியில் விளையாடும் திடல் உள்ளது. ஆனால் ஹைவேஸ் டிப்பார்ட்மென்டில் இருந்து பள்ளியின் குறுக்கே ரோடு போட திட்டமிட்டு சர்வே செய்துள்ளதாக அறிகிறேன். அங்கே ரோடு போட்டால், அங்கே இருக்கின்ற கிணறும் வேலைக்காரர் விடுதி, விளையாட்டு அரங்கம் போன்றவைகளும் பாதிக்கப்படும். ஒரு பெரிய சிலுவையும் இடிக்கவேண்டிவரும். எனவே அந்த ரோடு போடுவதை நிறுத்தி விட்டு, வேறு வழியில் ரோடு போட வசதி இருப்பதால் மாற்றுப் பாதை அமைக்க உத்தரவை பிறப்பித்து மைனாரிட்டி கிருஸ்தவ நிர்வாகத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நெல்லை மாவட்டத்தில் அரசு ஆணை எண். 1664, கல்வி நாள் 4—9—1978 அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை நிர்வாகம் வேலை நீக்கம் செய்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அளிக்கும் மேல் முறையீட்டு மனுக்களை விசாரணை செய்யும் அரசு அப்பலேட் அதிகாரிகள், மீண்டும் அவர்களைப் பணியில் சேர்க்க ஆணையிட்டும், அதனை மறுக்கும் பட்சத்தில் 15 நாட்கள் பொறுத்திருந்து அரசுப் பள்ளிகளில் காலியான இடங்களில் மேற்கண்டவர்களை வேலைக்கு அமர்த்தலாம் என்று உள்ளது. இந்த ஆணையின் அடிப்படையில் என் தொகுதியில் உள்ள கள்ளக்காடு கோமதி அருள்நெறி நடுநிலைப் பள்ளியில் பணிபுரிந்த ராமகிருஷ்ணன் என்பவர் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுத்து நீக்கியுள்ளது. ஆனால் அதிகாரிகள் அவரை அதே நிர்வாகத்தில் உள்ள கள்ளிக்குளம் சத்திரம் நடுநிலைப் பள்ளிக்கு மாற்ற அல்லது வேறு அரசு பள்ளியில் நியமிக்கலாம் என்று உத்தரவிடலாம். அதைவிட்டுவிட்டு 18 ஆசிரியர்களையும் வேறு பள்ளிக்கு மாற்ற வேண்டும் என்றும், பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டும் என்றும் நெல்லை சி.இ.ஓ. கூறுவது வருந்தத்தக்கதாகும். அந்தப் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அந்த 18 ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பும் கொடுத்து, அந்த பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அங்கே கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தை ரத்து செய்வோமானால் இந்து மக்கள் மத்தியில் பிரச்சினை உருவாகும். காரணம் குன்றக்குடி அடிகளார் அவர்களால் நடத்தப்படுகின்ற பள்ளி இது. எனவே இந்த ராமகிருஷ்

ணன் வேறு பள்ளியில் மாற்றப்பட்டு வேலை கொடுக்கவேண்டும். அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டாம் என்றும் கேட்டுகொள்கிறேன்.

அடுத்து தென் சென்னையில் தி. நகர் மேல்நிலைப் பள்ளியில் பி.டி. அரசு என்ற ஆசிரியரை நிர்வாகம் நீக்கியது, அவர் மீது உள்ள குற்றச்சாட்டுகளால். ஆனால் அவர் வெளியே உள்ள ஆசிரியர்களைச் சேர்த்துக்கொண்டு 8 ஆசிரியர்களை லீவு போட வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு கோஷங்களைப் போட்டார். அந்த 8 ஆசிரியர்களுக்கும் மெமோ கொடுத்தார்கள். அங்கே வந்த தென் சென்னை டி.இ.ஓ. அவர்கள் அந்த ஆசிரியர்களை அழைத்துப் போராட்டத்தைத் தூண்டி விடுகின்ற நிலைமை இருக்கின்றது. இதுபோன்ற தனியார் கல்வி நிறுவனங்களில் நிர்வாகம் நல்லமுறையில் கொண்டு வருவதற்கு பதிலாக போராட்டங்களை ஊக்குவிக்கும் இந்த தென் சென்னை டி.இ.ஓ. அவர்களை கண்டித்து அரசு அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மைனாரிட்டி அடிப்படையில் ஹோலி கிராஸ் பள்ளி தென் நெல்லை மாவட்டத்தில் உள்ளது. வள்ளியூரில் உள்ள அந்தப் பள்ளியில் 434 மாணவர்கள் படிக்கிறார்கள். 13 ஆசிரியைகள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பள்ளி மற்ற பள்ளிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அப்படிப்பட்ட பள்ளிக்கு 13 ஆசிரியர்கள் இருக்கின்ற அந்த பள்ளியில் உள்ள 6 ஆசிரியர்களுக்கு மட்டும் அரசு சம்பளம் கொடுக்கின்றது. மற்றும் உள்ள 7 பேர்களுக்கு நிர்வாகம் சம்பளம் கொடுக்கின்றது. எனவே அந்த 13 பேர்களுக்கும் அரசே சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹையர் செகன்டரி அடிப்படையில் சில பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 3 பள்ளிகளுக்குக் கொடுக்கவில்லை. அவைகள் நல்ல பள்ளிகள். இவைகளுக்கு அங்கீகாரம் கொடுக்காத காரணத்தால் இந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் வேறு பள்ளிகளுக்குச் சென்று படிக்கவேண்டியிருக்கிறது, ஆகவே, என் தொகுதியில் உள்ள — பாத்திமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, வள்ளியூர், கான்கார்டியா உயர்நிலைப் பள்ளி, மோதி அருள்மேரி மகளிர் உயர்நிலைப் பள்ளி, களக்காடு ஆகியவற்றிற்கு வருகின்ற கல்வியாண்டில் அங்கீகாரம் கொடுத்து, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹில் அலவன்சு (Hill Allowance) கல்வி இலாகாவில் கொடுக்கப்படுகிறது. ஆனால் நெல்லை மாவட்டத்தில் உள்ள சிங்கம்பட்டி பகுதியில் உள்ள மாஞ்சோலை, காக்காச்சி, நாலு முக்கு ஊத்து ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் பணிபுரிகின்றவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. காரணம் கேட்டால், குறிப்பிட்ட அளவு உயரம் இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அங்கே பணிபுரிகின்றவர்கள் மிகவும் மோசமான நிலையில் குளிர்பிரதேச வியாதியால் பாதிக்கப்பட்டு அந்த மலைப்பகுதியில் வசிக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கும் ஹில் அலவன்சு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உடற்பயிற்சி ஆசிரியர்கள் முன்னாள் கல்வித் துறையில் ஏ பிரிவில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியேற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. ஆண்டு ஊதிய உயர்வும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மற்ற மாவட்டங்களில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களுக்கும் பணிவரன்முறை இதுவரை சரியாக நிறைவு செய்யவில்லை. விரைவில் செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசு சிறந்த முறையில் ஸ்போர்ட்ஸ்ஸை ஊக்குவித்து வருகிறது. சமீபத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் எந்தவிதமான கல்வித் தகுதியும் பெறாத ஆனால் சிறந்த விளையாட்டு வீரரை 6 ஆம் வகுப்பு வரை படித்தவர் மில்காசிங் என்பவர் விளையாட்டுத் துறைக்கு டைரக்டராகப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த விளையாட்டு வீரர் என்ற அடிப்படையில் தான் போட்டு இருக்கிறார்கள். அதைப்போலவே தமிழகத்திலும் இப்படிப்பட்ட விளையாட்டு சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு — ஆய்வாளர்கள், டைரக்டர்கள், கோச்சுகள் — நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் கல்வித் தகுதி இல்லாவிட்டாலும் விளையாட்டு வீரர் என்ற அடிப்படையில் இந்த வாய்ப்பை இந்தவேலைகளைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அதனை நிறைவேற்ற கல்வி அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் முயற்சிகளை மேற்கொண்டு, கணிசமான தொகை கொடுத்தும் அங்கேயுள்ள அதிகாரிகள் சரிவர செயல்படாததால், குறிப்பிட்ட நேரத்தில் செலவு செய்து, பயிற்சி கொடுக்காமலும், குறிப்பிட்ட தொகை சேர வேண்டிய விளையாட்டு வீரர்களுக்குச் சேராமலும் இருப்பதால்,

விளையாட்டு வீரர்களின் திறமை குன்றிவிடுகிறது. ஆகையால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில், நெல்லையில் ஒவ்வொரு விடுதியிலும் 30 மாண வர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே பணிபுரிகின்றவர்கள் விளையாட்டுக் கழகத்திலே உள்ள பயிற்சியாளர்கள். குமாஸ் தாக்களே அந்த நிர்வாகத்தை கவனிக்கலாம். ஆனால் அந்த ஆஸ்டலை இப்படிப்பட்ட சிறந்த பயிற்சியாளர்களைக்கொண்டு விடுதிக்காப்பாளராக நியமித்து இருப்பதால், அவர்கள் சரியான முறையில் பயிற்சி அளிக்க முடியாத நிலையில், அவர்களுடைய திறன் பாதிக்கப்படுகிற முறையில் இருக்கிறது. ஆகவே, இப் படிப்பட்டவர்கள் விளையாட்டிலே மட்டும் கவனம் செலுத்துகிற வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை விட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் — அது அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி — எந்தப் பகுதியாக இருந்தாலும், எந்த டிவிஷனாக இருந்தாலும், கணவன் மனைவி யும் ஒரே இடத்தில் வேலை செய்ய அனுமதிக்கப்படவேண்டும் என்று போட்டு இருக்கிறார்கள். அதை ஆணித்தரமான முறை யில் கல்வி அமைச்சர் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். அரசு ஆணையில் என்ன குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் To lead a normal life and to ensure the health and education of children என்று குறிப்பிட்டுள்ளது. கணவன் மனைவி ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும் என்கிற பரந்த நோக்கத்தில் அரசு இந்த ஆணையை வெளியிட்டு இருக்கிறது. ஆனால், அரசு மட்டத்தில் இத்தகைய எண்ணங்கள் இருந்தபோதிலும், அதை ஒரு சில அதிகாரிகள் நடைமுறைப்படுத்தாத காரணத்தால், மற்ற வகைளில் இந்த அரசைப் பாராட்டிக்கொண்டு இருக்கிற மக்களிடையே ஒரு சில பிரச்னைகள் உருவாகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த அரசாணையை எல்லா வகையிலும் நல்ல முறையில் நிச்சயமாகக் கடைபிடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகையால் போராட்டங்கள் நடைபெறுகின்றபோது மாண்பு மிகு கல்வி அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர் களும் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, நல்ல தீர்வுகளைக் கண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசையும் புரட்சித் தலைவரையும் கல்வி அமைச்சரையும் நான் பாராட்டி பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

[1981 ஏப்ரல் 24

[முற்பகல் 11-20]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் ஜூன் திங்கள் முதல் அரசு ஊழியர்களாக ஆக்குவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை அவர்களை அரசு ஊழியர்களாக்க வழிமுறைகள் தோற்றுவிக்கப்படவில்லை. எனவேதான் அதற்கான வழிமுறைகளைப்பற்றி இங்கே கூறவில்லை.

இங்கே ஆசிரியர்கள் எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு கல்வி அமைச்சராக இருக்கிறவர் ஆசிரியராகப் பணியாற்றியவர். எனவே ஆசிரியர்களுடைய உள்ளம் எந்த அளவுக்கு சலனம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைக்கும்போது அவர்களை எல்லாம் சிறையிலே அடைத்து பின்னால் தான் அழைத்து பேசி முடிவு காண்பது என்பது உள்ளபடியே ஒரு ஜனநாயக அமைப்புக்கு உகந்ததாகக் கருதமுடியாது. எனவே, ஆசிரியர்களோ, ஊழியர்களோ தங்களுடைய கோரிக்கைகளை வைக்கும் போது உடனடியாக அவர்களை அழைத்துப் பேசி சுமுகமாக முடிவு காணப்படுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையிலே நடைபெற்று முடிந்த ஆசிரியர்கள் போராட்டம் காரணமாக உள்ளபடியே இந்த அரசு நிதானமான முறையிலே' நியாமான முறையிலே அணுகி இருந்தால் அவர்கள் எல்லாம் சிறைக்குப் போவதை தடுத்திருக்கலாம்.

கிராமப் புறங்களில் இருக்கிற ஆசிரியர்கள் எல்லாம் இன்றைய தினம் வீட்டுவசதி இல்லாமல் பல்வேறு சங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக வீட்டுவசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலைக் கல்விக்கு என்று தனியாக இயக்குநர் ஒருவரை நியமிக்க வேண்டும். இன்றையதினம் காளான்களைப்போல ஊர்தோறும் நர்சரிப் பள்ளிகள் தொடங்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அதை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்த அரசு முன்வரவேண்டும். முடிந்தால் இந்த பள்ளிகளில் நல்ல பள்ளிகளை எல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நர்சரிப் பள்ளிகள் நன்கொடை என்ற பெயரால் பொது மக்களிடம் பல்வேறு வகைகளில் பணம் திரட்டிக்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளை உடனடியாக தடை செய்ய வேண்டும் அல்லது ஒழுங்கற்ற முறையில் நடத்தப்படும் பள்ளிகளை மூடிவிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாம் இலவசக் கல்வி, இலவச தேர்வு கட்டணம் என்று அரசு சாதனைப் பட்டியல் என்ற முறையில் தமிழரசு பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்கள். ஆனால் இன்றுவரை அவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே உடனடியாக அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், கணவன், மனைவி இருவரும் ஆசிரியர்களாக இருந்தால் குறைந்த பட்சம் அவர்கள் ஒரே ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்ற மாற்றும் கேட்டால் அவர்களுக்கு முன்னுரிமை தந்து மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை நடத்துகின்ற தனியார் நிறுவனங்கள் கூட பல்வேறு ஒழுங்கீனங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பீகார் மாநிலத்திலே இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்டதைப்போல நம்முடைய அரசும் ஒழுங்கற்ற முறையில் நடைபெறும் தனியார் பள்ளிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இந்த அரசிடம் இருப்பது உங்களுக்குத் தெரியும். 'ஏ' விங் பள்ளி ஆசிரியர்கள் 1—4—1970-க்குப் பின்னால் நியமிக்கப்பட்டவர்கள். ஏறத்தாழ 200 பி.டி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 'பி' விங் ஆசிரியர்களுக்குச் செய்ததைப்போல அவர்களுடைய பிரேக் ஆப் சர்வீசை கண்டோன் செய்து, அவர்களுக்கு பணி வரன்முறைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளி கல்வியை பொறுத்தவரையில் இன்றைய தினம் கிராமங்களில் இருக்கிறரவர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. விதி இருக்கிறது. ஆதனால் கிராமப்புறங்களில் மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த முடியாத நிலை, அந்தப் பள்ளிக்கு சென்று படிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, கட்டணம் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையை மாற்றி, கிராமப் புறங்களில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை எல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியமைக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

(திரு. செ. இராமலிங்கம்) [1981 ஏப்ரல் 24

இவ்வாண்டு மேல்நிலைத் தேர்வுத்தாள் திருத்தும் பணியில் பல்வேறு முரண்பாடுகள் எற்பட்டிருக்கின்ன. தேர்வுத்தாள் திருத்தும் பணியில் நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்கள் நியமனத்திலே மிகப் பெரிய மோசடியான நிலைமைகள் இன்றையதினம் நடைபெற்று இருக்கின்றன. குறிப்பாகக்கணிதம் போதிக்கின்ற ஆசிரியர்கள் ஆங்கிலப்பாடத்திற்கானவிடைத்தாளை திருத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலம் போதித்த ஆசிரியர்கள் கணித விடைத்தாள் திருத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 21-ஆம் தேதிதான் அவர்கள் அந்தப் பணியில் இருக்கவேண்டும் என்றால் 21-ஆம் தேதிதான் அவர்களுக்கு உத்தரவு கிடைக்கிறது. இப்படிப்பட்ட முரன்பாடான நிலைமை இன்றையதினம் கல்வித்துறையில் இருப்பது உள்ளபடியே நல்லதல்ல. ஆகவே இவற்றைத் தீவிரமாகக் கவனித்து இந்த முரன்பாடுகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த டெக்ஸ்டு புக் சொசைட்டியிலே இன்னும் பல்வேறு பதவிகள் நிரப்பப்படாத காரணத்தால் குறிப்பிட்ட காலத்திலே மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் ஒவ்வொரு ஆண்டும் கிடைப்பதில்லை. இந்தக் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக உடனடியாக நிரப்பப்படாமல் இருக்கிற பதவிகளை நிரப்பி காலத்தே மாணவர்களுக்கு பாடப்புத்தகம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)

அடுத்த அரசுத் தேர்வுத் துறையில் அக்டோபர், 80-ல் நடந்த தொழில் கல்விக்கான தேர்வுகளுக்கான சர்டிபிகேட்டுகள், சுமார் 60,000 சர்டிபிகேட்டுகள் தவறாக அச்சடிக்கப்பட்டு பிறகு அவற்றை எல்லாம் கேன்சல் செய்துவிட்டு மறுபடியும் அச்சடித்திருக்கிறார்கள். இந்த சர்டிபிகேட்டுகள் கல்கத்தாவிலே இருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இலட்சக் கணக்கான ரூபாய் அரசினுடைய பணம், மக்களின் வரிப்பணம் பாழடிக்கப்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் உடனடியாகக் களைய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். தொழிற் கல்வி சர்டிபிகேட்டுகள் சீரியல் நம்பர் பி. ஓ. 24565 முதல் 25731 வரை ஏழத்தாழ 60,000 சர்டிபிகேட்டுகள் இப்படி ஒரு முறை அச்சடிக்கப்பட்டு மீண்டும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து சென்ற ஜூலை 81-ல் கவர்னரின் உரையில் அண்ணாமலைப் பல்கலைக் கழக 1928-ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்துவதாகவும் அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே உறுதி தெரிவித்திருந்தார்கள். ஆனால் இதுவரையில் அந்த உறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அதற்குத் தேவையான சட்டத்

திருத்தத்தை குறைந்தபட்சம் இந்தக் கூட்டத்தொடரிலேயாவது கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அண்ணாமலைப் பல்கலைக் கழக பிரச்சினையை பொறுத்தவரையில் ஒரு பக்கம் ஆசிரியர்களுக்குச் சார்பாக இருப்பது போன்றும் இன்னொரு பக்கத்திலே நிர்வாகத்தினருக்குச் சாதகமாக இருப்பது போன்றும் இந்த அரசு இரட்டை நிலையில் இருந்துவருவது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது. எனவே அந்தப் பல்கலைக் கழகம் ஒழுங்காக நடைபெற்று ஒழுங்காக கல்வி போதிக்கப்படவேண்டும் என்றால் அந்த வகையிலே அந்தப் பல்கலைக் கழகம் முழுமையாக நடைபெறவேண்டும் என்றால் உடனடியாக அதற்குத் தேவையான சட்டத்திருத்தத்தை கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத்தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழே ஆசிரியர்கள் பணி புரிந்து வருகிறார்கள். சில பிரச்சினைகளிலே அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு ஏற்பட்டு அது குறித்து பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும் உள்ள பிரச்சினைகள் பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்காகவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அரசு பொதுவான நிலையிலே இருந்து கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டு வருகின்றது. ஆகவே நாம் ஒரு கட்டத்திலே ஆசிரியர்களுக்குச் சார்பாகவும், இன்னொரு கட்டத்திலே நிர்வாகத்தினருக்குச் சார்பாகவும் செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நல்லபடியாக நடைபெறுவதற்குத் தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் சென்றமுறை இதே மன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் என்று உறுதியாகச் சொன்னார்கள்.....................

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத்தலைவர் அவர்களே, இப்போதும் அதைத்தான் சொல்கிறேன் :—தேவையான நடவடிக்கைகள் கொண்டு வருவோம் என்றுதான் சொல்கிறேன். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்திலே ஏதோ ஒரு சண்டை நடப்பது போன்றும் அந்தச் சண்டையில் ஒரு சமயத்திலே ஆசிரியர்கள் பக்கமும் இன்னொரு சமயத்திலே நிர்வாகத்தினர் பக்கமும் இந்த அரசு இருந்தது போன்றதுமான நிலைமைகள் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்குள்ள குறைகள் களையப்படவேண்டும் என்பதிலேயும், அண்ணாமலை

பல்கலைக் கழகம் சீராக நடைபெறவேண்டும் என்பதிலேயும் அரசுக்கு அக்கறை இருக்கின்றது. அதற்குத் தேவையான நடவடிக்கைககளை நாம் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சரிசன்விளக்கத்திற்கு நன்றி. ஆனால் விரைவில் என்பதற்கு என்ன கால நிர்ணயம் என்பது தெரியவில்லை. இந்த ஆண்டு அந்த சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட இருக்கின்றதா? அதனை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வருவதற்குரிய நடவடிக்கை எடுத்து அவ்வாறு கொண்டுவரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

[முற்பகல் 11-30]

இன்னொன்று, குடந்தைக் கல்லூரி ஏறத்தாழ 125 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரிக்கு சவுத் இந்தியன் கேம்பிரிட்ஜ் என்று கூட பெயர் உண்டு. அப்படி சிறப்பாக 125 ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒரு கல்லூரி. ஆகவே அந்தக் கல்லூரியை ஒரு அட்டானமஸ் கல்லூரியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் கல்லூரியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, எம்.எஸ்.ஸி. கெமிஸ்டரி, எம்.எஸ்.ஸி. ஜூவாலஜி, எம்.எஸ்சி.பாட்டனி, எம்.எஸ்.ஸி.பிசிக்ஸ்,எம்காம்போன்றவகுப்புகளுக்காக தனியாக கட்டிடங்கள் கட்டப்பட்டன. இதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு 7 லட்சம் ரூபாயை செலவு செய்தது. ஆனால் அந்த வகுப்புகள் இன்று அங்கே துவங்கப்படாமல், அந்தக் கட்டிடங்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாகபூட்டி வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, உடனடியாக அந்த கட்டிடங்களைத் திறந்து, அங்கே நான் கூறிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் அனைத்தும் துவங்கப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தஞ்சை மாவட்டத்தில் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றை துவங்க இருப்பதாக கூறியிருக்கிறார்கள். தஞ்சையில் திருப்பனந்தாள் தமிழ்க்கல்லூரி, தருமபுரம் தமிழ்க் கல்லூரி ஆகியவைகள் இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளை மடாலயங்கள் நிர்வகிக்கின்றன. ஆகவே, தஞ்சையில் அமைக்கவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை திருவிடைமருதூரில் அமைத்தால், நான் கூறிய அந்தஇரண்டு கல்லூரிகளையும் நிர்வகிக்கும் மடாலயங்கள் நிலங்கள் கொடுப்பதுடன் வேண்டிய உதவிகளை செய்யத் தயாராக இருக்கின்றன. ஆகவே அவற்றையும் கருத்தில் கொண்டு அமைக்கவிருக்கும் தமிழ் பல்கலைக் கழகத்தை, திருவிடைமருதூரில் அமைக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. செ. இராமலிங்கம்]

அடுத்து உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மலர் வெளியிடப் பட்டுள்ளது. இம்மலர் வெளியீட்டிற்காக பலரிடம் பணம்வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி பணம் கொடுத்தவர் களுக்கு இதுவரை மலர் அனுப்பி வைக்கப் பெறவில்லை. குறைந்த பட்சம் வெளிநாட்டிலுள்ள தமிழர்களுக்காவது—பணம் கொடுத் தவர்களுக்கு அனுப்பிவைப்பீர்களேயானால் நமது அரசின் மதிப்பு ஓரளவிற்காவது வெளிநாடுகளில் செம்மைப்படுத்தப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இன்னும் ஒரே ஒரு நிமிடம். தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தை பற்றி அங்கே இருக்கிற ஒரு சில குறைபாடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த நூலகத்தில் அரசு துறை யில் பணியாற்றி ஓய்வு பெற்ற 4 நபர்களுக்கு பதவிகள் கொடுக் கப்பட்டு வேலை ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அரசு விதி களுக்கு மாறாக பென்ஷனும் கொடுக்கப்படுகிறது, நூலகத்தில் வேலை செய்வதற்கான முழுச்சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இந்த இரட்டை முறை சம்பளத்தால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் இந்த அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல அங்கே 20 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்த வீ. சொக்கலிங்கம் என்ற தமிழ்ப் புலவரையும், 8 ஆண்டு களாக பணியாற்றி வருகின்ற திருமதி திலகம் என்ற பெண் தமிழ் ஆசிரியையும் நூலகத்திலிருந்து பணி நீக்கம் செய்ய, 6 மாத நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி அவர்கள் பணி நீக்கம் செய்யப்பெறுவதற்கான காரணம் சரியாக கொடுக்கப் பெறவில்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் அங்கே நிலவி வருகின்றன. இதில் உடனடியாக அரசு தலையிட்டு இக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நூலகத்தின் தணிக்கை அறிக்கையில் குறிப் பிட்டுள்ள சில குறைபாடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையினை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, பொருளாதார வளர்ச் சிக்கு, தொழில் துறையில் முன்னேற்றத்திற்கு, விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு, பல்மான பாதுகாப்பிற்கு, ஒரு நாட்டின் ஒற் றுமைக்கு, கல்வியும் அதன் தரமும், அதில் அமைக்கப்பட்டுள்ள

[திரு. கோவைத்தம்பி] [1981 ஏப்ரல் 24

பாடத் திட்டங்களும் மிக முக்கியமானது என்ற அடிப்படையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிப்பதற்கு முன்பாக, இந்த மாமன் றத்திற்கு ஒன்றை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல 100 ஆண்டுகளுக்கு முன்பு பல்லவ சாம்ராஜ்ய சக்ர வர்த்தி நரசிம்மவர்ம பல்லவன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சி செய்த நேரத்தில்—தமிழை வளர்த்து வந்த நேரத்தில், நாளந்தா பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தினார். அப்போது சீன தேசத்திலிருந்து இந்தியாவிற்கும், தமிழகத்திற் கும் வருகை தந்திருந்த யுவான் சுவாங் என்ற சீன தூதர், நாளந்தா பல்கலைக் கழகத்தைப் பார்த்து இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படு கிறது என்பதை எடுத்துச் சொன்னார்களோ, அந்த அளவு முக்கியத்துவம் அளித்து அந்த நாளந்தா பல்கலைக் கழ கத்தை நினைவு படுத்தும் வகையில், அந்த சீன தூதர் யுவான் சுவாங்கை நினைவு படுத்தும் வகையில், அந்த காஞ்சித் தலை வனை நினைவு படுத்தும் வகையில், மாண்புமிகு கல்வியமைச் சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையைக் கொண்டு வந் திருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

தமிழ் வளர்ச்சியில் மிக முக்கியமானதொரு கட்டத்தை, ஒரு பொற்காலத்தை இன்று நாம் எட்டிக்கொண்டிருக்கிறோம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக வேண்டுமானால்; கல்வித் துறைமீது ஒரு சில குறைகள் சொல்லலாமே தவிர தமிழ்பண்பாடு, நாகரீகம், கலாசாரம் இவைகளையெல்லாம் காப்பாற்றக் கூடிய ஒரு நிலையில் இன்று கல்வித்துறை செயல்பட்டுக்கொண்டிருக் கிறது. ஆகவே இவைகளுக்கெல்லாம் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறை எப்படி மேலோங்கி இருக்கிறது, 1961-ம் ஆண்டில், கல்வித் துறை எப்படி இருந்தது, 1981-ல் கல்வித் துறை எப்படி இருக்கிறது, படித்து முன்னேறியவர்கள் விழுக் காடு எவ்வளவு, ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் எப்படி, பாட திட்டங்கள் மாற்றங்கள் எப்படி என்பதையெல்லாம் கொள்கைக் குறிப்பில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிலைநிறுத்தி யிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வது என்பது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தைக் குறைக்கிற தருவாயாக இருக்கிற காரணத்தால் அந்தக் கொள்கைக் குறிப் பையெல்லாம் இந்த மாமன்றத்தில் இருக்கிற மாண்புமிகு

உறுப்பினர்கள் படித்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இந்த மானியக் கோரிக்கைமீது கல்வித்துறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நாட்டுக்கு ஆற்றுகிற பணியினைப் பாராட்டி செய்யவேண்டிய ஒருசில காரியங்களை கோரிக்கைகளாக அல்ல வேண்டுகோளாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நான் வைக்க விழைகிறேன் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒருபுறம் நீங்கள் தீவிரமாக தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்றும், தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்றும், தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்தவேண்டுமென்றும், தமிழ் படித்தவர்கள் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறீர்கள். இந்த நாட்டில் முதல் அமைச்சர் அவர்கள் நாட்டு மக்களின் வாக்குகளை பெற்ற பிறகுகூட நாட்டின் முதல் அமைச்சராக மீண்டும் மாறிய பிறகு கோப்புகளில் கையெழுத்து போடும்போது முந்திய முதல் அமைச்சர் பதவி வகிக்கும்போதோ அல்லது இப்போதைய முதல் அமைச்சர் அவர்கள் பதவி வகிக்கும்போதோ தமிழில் கையெழுத்து போடுவது தமிழை உயர்த்துவதற்கு வழிவகையாக அமைந்திருக்கிறது என்பதற்காக இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்த நாட்டில் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி தமிழை வளர்க்கவில்லை, பண்பாட்டை வளர்க்கவில்லை, கலாச்சாரத்தை வளர்க்கவில்லை என்ற உணர்வுகளில் சிலசமயங்களில் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்தக் கட்சியின் மீது இருக்கிற கோபம் காரணமாக வழக்கறிஞர்களை வைத்துப் பேசுகிறார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கோவை வந்து வழக்கறிஞர்களை வைத்து கூடிப் பேசிய அதில் மொழி முக்கியம் அல்ல நீதி முக்கியம் என்று பேசுகிறார்கள். மொழி முக்கியம் அல்ல நீதி முக்கியம் என்ற கருத்தை முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுகிறார்கள் என்று சொன்னால் இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் கோப்புகளில் நான் தமிழில் கையெழுத்து போடுகிறேன், தமிழ் தெரிந்த ஒருவர் நீதிமன்றத்தில், உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருப்பார்களேயானால் தமிழ் தெரிந்த ஒருவன் குற்றம் செய்தால் வாதாடுவதைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிற காரணத்திற்காக தமிழ் தெரிந்தவர் வேண்டுமென்று தமிழ்நாட்டில் ஆளுகிற இந்த ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வாதாடும்போது எனக்கு மொழி முக்கியம் அல்ல நீதி முக்கியம் என்று ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார் என்று சொன்னால் தமிழைக் காப்பாற்றக்கூடிய நிலையில் ஆளுகிற ஒரு பொறுப்பு இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழை முறையாகக் கையாள

வில்லை என்ற குற்றச்சாட்டை எந்தவிதத்தில் சொல்கிறார் என்று தெரியவில்லை. ஒரு நாட்டின் முதல்வர் அவர்கள் இப்படிப்பட்டதொருநிலையை எடுத்துக்கொள்ளும்போது எதிர் கட்சித் தலைவர் இந்த நிலையை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் மும்மொழிக் கொள்கை என்ற அடிப்படையில் தமிழ் நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்ற கேள்வி நேற்று முன்தினம் பராளுமன்றத்தில் எழுப் பப்பட்டபோது சென்று வந்த கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்டபோது மும்மொழிக் கொள்கை திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளப்போகிறீர்களா என்ற கேள்வி டெல்லி யில் நாடாளுமன்றத்தில் கிளம்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதைத்தான் இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமும் ஆளும் கட்சிப்பொறுப்பில் இருக்கிற அனைத்து உறுப்பினர்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதைவிட மும்மொழிக் கொள்கை திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அண்ணாவின் ஆட்சியால் அமைக்கப்பட்ட இந்த அரசு மையக் கருத்தாகக் கொண்டிருக்கிறது என்பதையும் மும்மொழிக் கொள்கைத் திட்டம் தேவை இல்லை என்றும் சொல்லும்போது டெல்லியில் இருக்கிற டெல்லி அரசு அல்லது மத்திய அரசு உலக வல்லரசுகள் மத்தியில் மற்றைய மாநிலங்களில் இந்தியை எப்படிப் பரப்புகிறார்கள். இந்தி பேசுகிறவர்கள் என்பதைப் பார்ப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையாளர் களாக செல்கிற அளவிற்கு இது எப்படி பைந்தமிழைக் காப் பாற்றுவதற்கு நிலையாக இருக்கும் என்பதை இந்த மன்றத் தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாடு என்பதே கல்வி வளர்ச்சியில் உச்ச கட்டத்தை நாம் அடைந்துவிட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேட்டார்கள், உலகத் தமிழ் மாநாடா நடந் தது, அது கக்கூஸ் மாநாடு அல்லவா என்று ஒரு வாதத்தைக் கிளப்பினார்கள், எதிர்க்கட்சிக்காரர்கள்.

[முற்பகல் 11-40].

அதைப் பற்றிக் கவலையில்லை. எவ்வளவு அச்சுறுத்தினா லும், அவமானப் படுத்தினாலும், எள்ளி நகையாடினாலும், ஏளனப்படுத்தினாலும், அவதூறை அள்ளி வீசினாலும், நாம் நமது தமிழுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து கொண்டு இருக்கிறோம். தமிழ்த்தென்றல் திரு. வி. க., செக்கிழுத்த வ. உ. சி., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தலைவர் ஜீவா

இப்படி யார் யார் தமிழ்நாட்டிலிருந்து தமிழை வளர்த்தார்களோ, யார் யார் தமிழ்மீது பற்றுக் கொண்டார்களோ, அப்பேர்ப்பட்டவர்களுக்கு எல்லாம் செம்மையான முறையில், போற்றத்தக்க வகையில் நாம் உலகத் தமிழ் மாநாட்டினைக் கொண்டாடினோம். உலகத் தமிழ்நாடு இந்த 20 ஆம் நூற்றாண்டில் கடைசிப் பகுதியாக, இந்தக் கலியுகத்தில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்த மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்திய நேரத்தில், இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நடத்துவதற்குரிய காரண—காரியங்களை விளக்கி, ஏதாவது குற்றச்சாட்டோ, அவமதிப்போ சொல்ல முடிந்ததா என்றால் இல்லை. ஏதோ ஒரு சில குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கம் சொன்னார்கள். மலர் கிடைக்கவில்லை, அந்த மலரைக் கொடுக்கச் சொல்லுங்கள் என்று இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைத் தான் சுமத்த முடிந்ததே ஒழிய, நடத்திய இந்த உலகத் தமிழ் மாநாட்டினால், உலகத்திலுள்ள தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, 2, 3, நாட்களுக்கு முன்பு டெல்லியிலே இருக்கின்ற மத்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே இருக்கின்ற 22 மாநிலங்களில் கல்வியைக் கற்பிப்பதில் உச்சக்கட்டத்தில் இருக்கிறது என்பதை மிக அழகாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பிலே, 1978 ஆம் ஆண்டு கணக்குப்படி, தமிழகத்தில் 12 சதவீத பள்ளிக் கூடங்கள் அதிகரித்திருக்கின்றன. 300 பேர்கள் கொண்ட ஒவ்வொரு ஊர்களிலும் ஒன்றிரண்டு பள்ளிகளும், இன்னும் அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற கிராமங்களில் 95 சதவீதத்துக்கு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றும், கேரளம், கர்நாடகம், யு. பி., மற்ற மாநிலங்களைவிட அதிகமாக இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தின் கல்வித் தரத்தை மத்திய அரசே பாராட்டியிருக்கும்போது, தமிழகத்தின் கல்வித் தரத்தை இந்தியாவிலே இருக்கின்ற ஆராய்ச்சி நிறுவனமே பாராட்டியிருக்கும்போது, இந்தக் கல்வித் தரம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை ; அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சார்ந்த நாங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அரசே ஒரு புள்ளி விவரம் கொடுத்திருக்கிறது. தொடக்கப் பள்ளிப் பயிற்சிக்கு செல்லாத பள்ளிச் சிறுவர்கள், சின்னஞ் சிறு சிறார்கள் விழுக்காடு கடந்த காலத்தில் அதிகமாக இருந்தது. 1968-ல் 53 சதவீதம், 1970-ல் 48 சதவீதம், 1977-ல் 42 சதவீதம், 1978-ல் 40 சதவீதம், 1980-ல் 33 சதவீதமாக மாறி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. இன்று அமெரிக்க அதிபர் ரீகனைத் தேர்ந்தெடுத்தவர்கள் படித்தவர்கள்தான். பெருமதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைத் தேர்ந்தெடுத்தவர்கள் இந்த நாட்டின் ஜனநாயகத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்; ஆனால், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரைத் தேர்ந்தெடுத்தவர்கள் தமிழகத்தினைப் பொறுத்த அளவில் அன்-ஆர்கனைஸ்ட் என்று சொல்வார்களே, உழைக்கின்ற சக்தியிருந்தும் கூட, உழைப்பிற்கு உரிமை பெற முடியாதவர்கள் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அத்தனை பேர்களும் தேர்ந்தெடுத்தார்கள்.

ஆசிரியர்கள் ஒரு சில கோரிக்கைகளை என்னிடம் கொடுத்து, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கல்வி அமைச்சரிடம் சிபார்சு செய்யுங்கள்; பகுதி நேர ஊழியர்களாக வைத்திருக்கின்றார்களே, அவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆசிரியர்களை எல்லாம் சிறைக்குள் தள்ளி, சித்திரவதைக்கு ஆளாக்குகிறீர்களே, இது தர்மமா என்று கேட்டார்கள். ஆசிரியர்களைப் பற்றி யார் மறந்தாலும், அண்ணா தி.மு.க. ஆட்சி மறப்பதற்கு நியாயமில்லை, மறக்காது என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சிக் கலைக்கப்பட்டது, 1980 பிப்ரவரி 17-ம் தேதி. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, சென்னையிலே இருக்கின்ற வள்ளுவர் கோட்டத்தில் ஆசிரியர் பெருமக்கள் ஒரு மாநாட்டை கூட்டினர். அன்றைய முன்னாள் கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களும், அன்றைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் மாநாட்டிற்குச் சென்றார்கள். அந்தப் பசுமையான நினைவுகள் என் நெஞ்சத்திலே அலையோடிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியப் பெருமக்களின் குறைகளைப் பற்றி ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் பேசினார்கள். இந்த மன்றத்திலே, ஆசிரியப் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம், உங்களுடைய பழைய வாசகங்கள், அந்த பழைய சொற்கள், அந்த வார்த்தைகள் இன்னும் நெஞ்சத்திலே பசுமையாக அலையோடிக் கொண்டு இருக்கிறது.

எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு வள்ளுவர் கோட்டத்திற்கு வராதவர்களை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள்ளே நுழைய விட மாட்டோம் என்று சபதத்தை அன்று ஆசிரியப் பெருமக்கள் ஏற்றார்கள். எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றிருக்கிறார்கள். அந்த கோரிக்கைகளை ஏற்றிருக்கிற மாண்புமிகு கல்வி அமைச்

சரை மீண்டும் தமிழ் நாட்டினுடைய கல்வி அமைச்சராக ஆக்குவோம், எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்களைப் இந்த கோட்டத்திற்குள் நுழையாதவர்களை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் நுழைய விடமாட்டோம் என்று அன்று ஆசிரியப் பெருமக்கள் சபதம் ஏற்றார்கள். அப்படி சங்கல்பம் ஏற்ற அந்த ஆசிரியப்பெருமக்கள் வாழ்க்கையிலே என்னென்ன மாற்றங்களை செய்ய முடியுமோ அதை இந்த அரசு செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்து, இறுதியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடை பெற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணா அவர்களின் சட்டமன்றப் பேச்சுக்களை புத்தகமாக்கி ஒவ்வொரு நூலக குழுவிலும் வைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு வயதிலிருந்து, பத்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உடல் பயிற்சி தருகிறவிதத்தில் தமிழ்நாட்டில் ''வால்டிஸ்னி'' விளையாட்டு அரங்கங்களை, பாதுகாக்கப்பட்ட இடங்களில் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும், அது சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும், நிறுவ வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா என்ற பெயரிலே இந்தியாவில் இருக்கிற 14 மொழிகளில் முக்கியமான மொழி என்று மத்திய அரசு கருதப்படக் கூடிய இந்தி மொழியை கர்நாடகத்தில், ஆந்திராவில், கேரளாவில், தமிழ்நாட்டில், குஜராத்தில், மேற்கு வங்காளத்தில் மத்திய சர்க்கார் பரப்புகிறது. அதை பரப்புவதை நான் எதிர்க்கவில்லை. இந்தியை பரப்புகிற முறையை நீடிக்க, கோடிக்கணக்கான ரூபாயை செலவு செய்வதை இந்த நாட்டு குடிமகன் என்ற முறையில் அவர்களுக்கு உரிமை இருக்கிறது, என்ற காரணத்தால் நான் எதிர்க்கவில்லை. இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்களின் முன்னோர்கள் செய்த தியாகத்தை போல நம்முடைய முன்னோர்கள், நம்முடைய தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களும் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலே இருக்கிற 14 முக்கிய மொழிகளில் இந்தியை மாத்திரம் தமிழ் நாட்டிலே, கர்நாடகத்திலே, கேரளத்திலே, ஆந்திராவிலே பரப்புவதற்கு பணம் கொடுக்கிறது மத்திய சர்க்கார், அதை கொடுக்காதே என்று நான் சொல்லவில்லை அதேபோல் நாம் பேசுகிற தமிழ் மொழியை கர்நாடகத்தில், கேரளத்தில்வளர்ப்பதற்கு, உத்திரப்பரதேசத்தில் வளர்ப்பதற்கு, மேற்கு வங்காளத்தில் வளர்ப்பதற்கு மத்திய சர்க்கார் பணம் கொடுத்து உதவ வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்

ஆசிரியர்-பெற்றோர் சங்கங்களைப் பலப்படுத்தி, இன்று சமுதாய விரோதிகள் கல்லூரி மாணவர்களை சுயநலத்திற்காகப் பயன்படுத்தி, ஆசிரிய பெருமக்களை சுயநலத்திற்காகப் பயன் படுத்தி ஆசிரியர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும், உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் இருக்கிற ஒற்றுமையை அறுத் தெரிகிற நிலையில், இந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கு எவ்வளவு பெரிய முயற்சிகள் செய்து குழப்பம் ஏற்படுத்திக்கொண்டிருக்கி றார்கள். அதைக் கண்டிப்பதற்கு அரசு நிச்சயமாக ஆசிரியர்-பெற்றோர் சங்கங்களை அமைக்கக்கூடிய தன்மையில் புதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள் கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று முடித்துக் கொள் கிறேன். நன்றி.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82 கல்வி மானியக் கோரிக்கை மீது காங்கிரஸ் (இ) சார்பில் சில விளக்கங்களை கூறுவதற்கு முன் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 247 கோடி ரூபாய்க்கு மானியக் கோரிக்கை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கேட்டிருக்கிற விழுக்காடு ஏறத்தாழ 23 விழுக் காடு ஆகும். இந்த ஆண்டு கேட்டிருப்பது 22 விழுக்காடு ஆகும். ஆக வர வர இந்த விழுக்காடு குறைவதன் காரணமாக இந்தி யாவிலே கல்வியின் தரம், முன்னேற்றம் ஆகியவற்றில் இரண்டா வது இடத்தில் இருந்த தமிழ்நாடு இப்போது மூன்றாவது இடத் திற்கு வந்து விட்டது என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்றைய தினம் நம்முடைய மாநிலத்தில் 16 சி.இ.ஓ. அலுவலகங்களும், ஏறத்தாழ 57 டி.இ.ஓ. அலுவலகங்களும் இருப்பதாக கல்விக் குறிப்பிலே கூறப் பட்டிருக்கிறது. இந்த அலுவலகங்கள் அத்தனையும் நிர்வாக சீர்திருத்தம் செய்து, பழைய முறைகளை அகற்றி, ஆயிரக் கணக்கான ஆரம்பப் பள்ளிகளும், ஆயிரக்கணக்கான இடை நிலைப் பள்ளிகளும் இருக்கிற காலத்தில் எல்லோருக்கும் எல்லா ஏற்பாடுகளையும் செய்வதற்கு, அந்த திட்டம் கீழே இருக்கிற மக்களுக்கு போய் சேருவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ''கல்வி மேம்பாட்டு வாரியம்'' என்ற ஒன்றை தனியாக அமைத்து இந்தத் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்காக காரியங்களைச் செய்து இந்தியாவிலே தமிழ் நாடு மீண்டும் இரண்டாவது இடத்தைப் பிடிப்பதற்கான அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தில் குறிப்பாக இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பிறகு ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு இலவசமாக உடை கொடுக்க வேண்டும் என்றும்,

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 24] [திரு. ந. சிவஞானம்]

அவர்களுக்கு எல்லா வாய்ப்புகளும் கொடுக்க வேண்டுமென்று தமிழகத்தில் மறைந்த மாபெரும் தலைவர் காமராஜர் அவர்கள் கல்வித்துறையிலே புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வந்தார்.

[முற்பகல் 11-50].

அந்த மாற்றத்தின் காரணமாக கேரளாவுக்கு அடுத்த படியாக தமிழ்நாடு பெற்றிருந்தது. மதிய உணவு, பொருளாதாரத்திலே நலிந்தவர்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு எல்லா கல்வி வசதிகளையும் அளிக்க வேண்டுமென்ற முறையிலே அந்தத் திட்டம் கொண்டு வரப்பெற்றது. அதிலே அரசாங்கம் 10 காசுகளும் உள்ளாட்சி மன்றம் 5 காசுகளும் கொடுக்கின்றன. 15 காசுகளை வைத்துக் கொண்டு எப்படி ஒரு மாணவனுக்கு சாப்பாடு போட முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலைவாசிகள் ஏறியிருக்கின்ற இந்த நேரத்திலே 15 காசுகளை வைத்துக் கொண்டு கொடுக்க முடியாது. ஆகவே அரசாங்கம் கொடுக்கக்கூடியதை 20 காசுகளாகக் கொடுத்து உள்ளாட்சி மன்றம் 5 காசுகளைக் கொடுத்து ஆக மொத்தம் 25 காசுகளிலே நல்ல தரமான உணவை மாணவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக தொடக்கப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் மாணவர்கள் விதாசாரம் 1 : 30 என்று இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களும், உடல் பயிற்சி ஆசிரியர் 150 பேர்களும், தமிழாசிரியர்கள் 500 பேர்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொடக்கப்பள்ளியிலேயும் உள்ள வகுப்பிலே 50, 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறைதான் இருக்கிறது, ஆகவே 1 : 30 என்ற முறையிலே எல்லாப் பள்ளிகளிலும் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொடக்கப் பள்ளிகளுக்காக, தன்னிறைவுத் திட்டத்திலே தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்திலே பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அதைப் போன்று விஞ்ஞான கருவிகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1—6—1981 முதல் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்குவதாக அரசு அறிவித்திருக்கிறது. அந்த அறிவிப்பை உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் அரசே எடுத்துக் கொண்டு நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலே ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். சென்ற

காலத்திலே ஆய்வு செய்யப்பட்டது. அவர்களுடைய கோரிக்கைகள் அத்தனையையும் அரசு பரிவோடு கவனித்து நன்மைகள் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவுக்கு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகள் 3,250 இருக்கின்றன. 1,250 மேல்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன, எல்லாப் பள்ளிகளுக்கும் இட வசதி கிடையாது. சாதாரணமாக கிராமப்புறங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே அதைவிட மோசமான நிலைமைதான் இருக்கிறது. குடி நீருக்கு, போக்குவரத்து வசதிக்கு தொடக்கப்பள்ளிகளுக்குச் செய்யப் படுவதைப்போல் தன்னிறைவுத் திட்டத்திலேயே உயர் நிலைப் பள்ளிகளுக்கு இட வசதிகளையும் கட்டட வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே உயர் நிலைப் பள்ளிக்கு இடவசதி செய்து கொடுக்கப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது, ஆகவே அதிகமாக ஒதுக்கி இடவசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கிராமப்புறங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு விஞ்ஞானக் கூடங்கள் கிடையாது. அதை கவனத்தில் கொண்டு விஞ்ஞானக் கூடங்களை ஏற்படுத்தி உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்கள் திறன்பெற அவர்கள் ஆய்வு செய்வதற்கு உதவியாக விஞ்ஞானக் கருவிகளை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளை ஆய்வு செய்வதற்காக திறன்படைத்த நிபுணர்களை நியமிக்கவேண்டும். இப்போது சி. இ. ஓ., டி. இ. ஓ., சாதாரணமாகப் போய் பார்த்துவிட்டு வருகிறார்களே தவிர அவைகளை திறன்மிக்கவைகளாக ஆக்குகின்ற முறையிலே நிபுணர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென்நாட்டிலே சென்னையிலே தான் கல்வி இயக்குநர் இருக்கிறார். அவர்தான் காலியிடங்களை நிரப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் ரீஜினல் டைரக்டர் அல்லது டெபுடி டைரக்டர் என்ற பதவிகளை ஏற்படுத்தி உடனடியாக அங்கேயுள்ள மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில் காலியாக இருக்கும் இடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் அந்தப் பள்ளிகள் ஆரம்பித்துப் பாதி மாதங்கள் ஆகியும்கூட

1981 ஏப்ரல் 24] [திரு. ந. சிவஞானம்]

காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதால் ஏழை எளிய மாணவர்கள் பெற வேண்டிய கல்வி நல்லமுறையில் கிடைக்கவில்லை. எனவே, இதை நல்லமுறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைக்கல்லூரிகளைப் பொறுத்தவரையில் எல்லாயிடங்களிலும் பி.காம். போன்ற நல்ல திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ண்டி புஷ்பம் கல்லூரியைத் தன்னுரிமைக் கல்லூரியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிட்ட தட்ட கிராமப்புறத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்கள் அந்த இடத்திலே இருப்பதால் அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981-ஆம் ஆண்டு சென்ஸஸ்படி எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விழுக்காடு 36·17. 1981-ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கில் தமிழகத்தை பொறுத்தவரையில் 45·78 விழுக்காடு என்று இருப்பதைப்பார்த்து, நான் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முறைசாராக் கல்விக்கு மைய அரசின் உதவி அதிகமாக இருப்பதால் அதை 50 விழுக்காட்டிற்கும் மேலாக அமல்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

உடல் பயிற்சி, விளையாட்டு மிகவும் குறைவாக இருக்கிறது. இப்பொழுது அதற்குத் தனியாக இயக்குநர் போடப்பட்டிருக்கிறார். தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் விளையாட்டுத் துறைக்கென்று தனி ஒதுக்கீடு செய்து, உடல்பயிற்சி, விளையாட்டுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாவட்ட நூலகங்கள் நல்ல முறையில் செயல்படவில்லை. அங்கே பணிபுரிகின்ற பணியாளர்களுக்குக் காலா காலத்தில் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. இப்பொழுதுள்ள செயல் முறைத் திட்டத்தை, விதிமுறைகளை மாற்றியமைத்து எல்லா மக்களுக்கும் நல்ல முறையிலே நூலகம் பயன்படும் விதத்திலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு உரிய காலத்திலே சம்பளம் போன்றவைகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்கும் இடங்களில், நூலகம் ஏற்படுத்த வேண்டுமென்று விதியிருந்தாலும் கூட நிதிநிலைமை மிகக் குறைவாக இருப்பதால் பல இடங்களில் அவ்வாறு செய்யவில்லை. இனியாவது 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்கும் எல்லாயிடங்களிலும் நூலகம் ஏற்படுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாத் துறைகளிலும், ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்ற கொள்கையை நிச்சயமாகப் பின்பற்ற வேண்டும். எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் தமிழ் தமிழ் என்று பேசினார்கள். ஆனால் மாவட்டங்களில் உள்ள பெரிய அதிகாரிகளானாலும் சரி, தமிழ்நாட்டிலுள்ள பெரிய அதிகாரிகளானாலும் சரி, எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்தவில்லை. அங்கெல்லாம் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதற்குத் தஞ்சை அரண்மனையில் நல்ல இடமிருக்கிறது. எனவே, அந்த அரண்மனையில் அதை ஆரம்பிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியான திருவோணத்தில், வல்லம், ஈச்சங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள உயர் நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு இரா. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கல்விதான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையானது. ஆகவே, கல்வி சரியாக அமையவில்லை என்று சொன்னால் அந்த நாட்டில் இயங்குகின்ற மற்ற அமைப்புகளெல்லாம் சரிவர இயங்க முடியாது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அதன் அடிப்படையில்தான் நமது தமிழகத்தினுடைய கல்வி மானியத்தில் 1981-82 ஆம் ஆண்டுக்கான மொத்தச் செலவில் ஏறக்குறைய 249 கோடி ரூபாயை ஒதுக்கி, மொத்தச் செலவில் 22 விழுக்காடு கல்விக்காகச் செலவு செய்கிறோம் என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படிக் கல்வித் துறைக்காக அதிகமாகச் செலவு செய்து மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறது என்று பாராட்டும் அளவிற்கு இருக்கிறது.

1981 ஏப்ரல் 24] [திரு இரா. சண்முகம்]

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு கோவைத்தம்பி அவர்கள் சொன்னதைப் போன்று மத்திய தேசீய கல்வி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம்—நேற்றைய தினம் செய்தித்தாளில் அறிவித்திருப்பதைப்போல, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை எல்லா மாநிலங்களிலும் உள்ள கல்வியின் முன்னேற்றத்தைப்பற்றி ஒரு குழுவை வைத்து ஆராய்ச்சி செய்து, அந்தக் கல்வி வளர்ச்சியைபற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

அந்த அறிக்கையின்படி 1978 ஆம் ஆண்டு நம்முடைய தமிழ்நாடுதான் முன்னணியிலே இருக்கிறது என்பதைப் பாராட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மாணவர்களைச் சேர்ப்பதில் அகில இந்திய ரீதியில் பார்ப்போமேயானால் 82 விழுக்காடு சேர்த்திருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தில், மாணவர்களைச் சேர்க்கின்ற எண்ணிக்கை 110 சதவீதமாக இருப்பதை அதிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பெண்கள் கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட முயற்சி, ஆரம்பப் பள்ளிகளில் 45 சதவிகிதம் பேர் படிக்கிறார்கள். இங்கே அகில இந்திய ரீதியில் 38.6 விழுக்காடு தான் படிப்பதாக அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

ஓராசிரியர் பள்ளிகள் மற்ற மாநிலத்தைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 9 சதவீதம், ஆந்திராவில் 54 சதவீதம், கர்நாடகத்தில் 72.4 சதவீதம் ஓராசிரியர் பள்ளிகள் இருப்பதாக அந்த அறிக்கையிலே குறிப்பிடுகிறார்கள். நாம் எடுத்துக் கொண்ட அக்கறையின் காரணமாக, தமிழ் நாட்டில் 9 விழுக்காடுகள்தான் ஓராசிரியர் பள்ளிகளை நடத்துகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மற்றொன்று குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது அரசாங்கம் ஓராசிரியர் பள்ளிகளே இல்லாமலிருக்க முயற்சிக்க வேண்டும். அப்படி ஓராசிரியர் பள்ளிகளை நாம் வைத்திருக்கிற காரணத்தால், அவர்கள் விடுப்பிலே செல்லும்போது, அந்தப் பள்ளியை மூடிவிட்டுச் செல்கிறார்கள். அங்கே, ஒரு துணை ஆசிரியர் இருப்பாரேயானால், படிக்கின்ற மாணவர்களுக்கு அது இடையூறில்லாமல் இருக்கும். 1 முதல் 5 வரை படிக்கின்ற மாணவர்கள் இடையிலே விட்டுவிடுகிறார்கள் என்றுசொல்கிறோமே அதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. ஆகவே, ஓராசிரியர் பள்ளிகளே இல்லாமல், 30 மாணவர்கள் இருந்தாலும்கூட, அவர்களுக்கு இரண்டாசிரியர்கள் நியமனம் செய்யும் வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

[திரு இரா. சண்முகம்] [1981 ஏப்ரல் 24

மேலும் இப்படி பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தாலும்கூட, கல்வியிலே சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது எடுத்துக் கொள்கின்ற முயற்சியைக் காட்டிலும் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஓராசிரியர்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கிராமத்திலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல், அவர்கள் குடியிருக்க இருப்பிடமில்லாமல் வாடகை இல்லங்களிலே இருக்கிறார்கள். ஆகவே, எப்படி ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே ஆர். ஐ. குவார்ட்டர்ஸ் கட்டிக் கெடுக்கிறார்களோ, அது போல இவர்களுக்கும் குடியிருப்புக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் அப்படியில்லை என்றால் வீட்டு வாடகைப் படி தமிழகத்திலேயிருக்கிற எல்லா பகுதிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் காரணமாக, அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்கள் மேலும் ஊக்கமாகப் பணியாற்ற வாய்ப்பிருக்கும்.

மேலும், ஆசிரியர்கள் மரணம் அடைந்தால் ரூ. 10,000 அளிக்கிறார்களே, அதைப் போல், ஓய்வு பெற்றுச் செல்பவர்களுக்கு ரூ. 10,000 அளிக்க வேண்டுமென்று கோரிக்கை நீண்ட நாட்களாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் மாதம் ரூ. 10 கட்டுவதற்குத் தயாராக இருக்கும் நிலையில், மாதம் ரூ. 10 பெற்றுக் கொண்டு, அவர்கள் இறக்கும் போது, ரூ. 10,000 கொடுப்பதுபோல், ஓய்வு பெறும் போதும் ரூ. 10,000 அளித்தால், அவர்கள் கல்விக்காக மேலும் அரும்பாடு படுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கல்வி, பாடசாலையிலே சிறப்பாக அமைய வேண்டுமென்றால், பள்ளி இறுதித் தேர்வுக்கு முன்னதாக இரண்டு பொதுத் தேர்வுகளை வைக்க வேண்டும். ஆரம்பக் கல்வியிலே 5-ஆம் வகுப்பிலும், பிறகு 8-வது வகுப்பிலும் ஒவ்வொரு பொதுத் தேர்வை வைப்போமானால், நிச்சயமாக அங்கே படிக்கின்ற மாணவர்களுக்குச் சரியான கல்வி கற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கும். ஆசிரியர்களும், ஊக்கமாகப் பாடங்களைக் கற்பிப்பதற்கான வாய்ப்புகளைப் பெறுவார்களென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அப்படி நடத்துவதற்கு முன்னால், ஒவ்வொரு வகுப்பிலும் 40 முதல் 50 வரை மாணவர்களை வைத்துக் கொண்டு, ஒரு ஆசிரியர் பணியாற்றுவதென்றால், அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. எல்லா மாணவர்களையும் நேரடியாகக் கண்

காணித்து, தாம் சொல்லிக் கொடுக்கின்ற பாடங்களைக் கேட்கிறார்களா? எழுதுகிறார்களா? திரும்பவும் கேட்டு பதில் பெற முடிகின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே 20 முதல் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரைப் போடுவோமானால் நல்லது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகமாக வேலையில்லாமலிருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த வாய்ப்பைக் கொடுத்தது போலவும் இருக்கும், நாம் கல்வியைச் சிறந்தமுறையில் மாணவர்களுக்குக் கற்பித்துத் தருவதற்கான வாய்ப்புகளைத் தந்தவர்களாகவும் ஆவோம்.

ஆகவே, இந்த நிலையில் 20, 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் சொந்த முயற்சியினால் பட்டப்படிப்புப் படித்து, பி. எட். படிப்பைப் படித்துவிட்டு அவர்கள் மேல் நிலை ஆசிரியர்களாக வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அவர்கள் சீனியாரிடியைப் பார்க்காமல், தலைமை ஆசிரியர்களாகப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பட்டப் படிப்புப் படிப்பதற்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து படித்த அவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களை நடு நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக அமர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு இன்னும் 2, 3 ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டத்தின் காரணமாக எல்லா பள்ளிகளுக்கும் நிச்சயமாக கட்டிடம் கட்டித் தந்துவிட முடியும் என்று நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் அங்கே உள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சரியான நாற்காலி, மேஜை, பலகை இல்லாமல் இருக்கின்றது. அதே போன்று உயர் நிலைப் பள்ளிகளுக்கு நாம் கட்டிட வசதி செய்து தந்தாலும், இன்னும் பல உயர் நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றது. அந்தக் கட்டடங்களைக் கட்டி அங்கே பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் தகுந்த நாற்காலி மேஜை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் உயர் நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளியாக மாற்றி விட்டிருக்கிறோம். அங்கே வளர்ந்த பையன்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் கீழே தரையில் உட்காரும் நிலை இருக்கின்றது. இப்போது எப்படி கட்டிடம் கட்டத் தனியாக ரூபாய்களை ஒதுக்குகிறோமோ அதே போல அங்கே மாணவர்கள் அமர்வதற்கும் ஆசிரியர்கள் அமர்வதற்கும் வாய்ப்பினை நிச்சயமாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள 3 உயர் நிலைப் பள்ளிகளும் ஆரம்பித்து ஏறத்தாழ 10, 15 ஆண்டுகள் இருக்கும் என்று கருதுகிறேன். அங்கே இட வசதி இல்லாமல் இருக்கின்றது. துணைக் கட்டிடமும் இல்லாமல், ஆரம்பிக்கும்போது எப்படி இருந்ததோ அந்த நிலையில் இருந்து கொஞ்சமும் மாறாமல் இருக்கின்றன. மணவாள நகரில் ஒருமேல்நிலைப் பள்ளியைத் திறந்திருக்கிறோம். திருத்தணியில் ஒரு ஆண்கள் உயர் நிலைப் பள்ளி 1,800 மாணவர்கள் படிக்கின்ற பள்ளி இருக்கின்றது, அங்கே இட வசதி இல்லாமல் ஷிப்டு முறை வைத்து நடத்துகிற காரணத்தால், மாணவர்கள் படிக்க வசதி இல்லாமல் இருக்கிறது. அங்கே 2, 3 தியேட்டர்கள் இருக்கின்ற காரணத்தால் மாணவர்கள் மேட்னிஷோவுக்கும் போகும் நிலை இருக்கின்றது. ஆகவே அங்கே ஒரு துணைக் கட்டடத்தைக் கட்டினால் நலமாக இருக்கும். ஆற்காடுகுப்பத்தில் உள்ள பள்ளியைக் கட்டி ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகியதாகும், என்று நினைக்கிறேன். அதுவும் எப்படி துவக்கத்தில் இருந்ததோ அதிலிருந்து சிறிது கூட மாறாமல், அந்தப் பள்ளியில் நான் பணியாற்றும்போது இருந்த போது இருந்த அதே கூரை வேய்ந்த கட்டடம் இன்னும் இருக்கின்றது. ஆகவே இந்த 3 இடங்களுக்கும் துணைக் கட்டங்களை நிச்சயமாக கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குழந்தைகள் காப்பகம் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே பணிபுரிகின்றவர்களுக்கு மாதம் 100 ரூபாய் அளவுக்குத்தான் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. கிண்டர் கார்டன் முறையில் நர்சரி பள்ளிகளுக்கு அனுப்புவதைப்போல, குழந்தை காப்பகம் வைத்து அவர்கள் வேலைக்குச் சென்று வருகிற பெற்றோர்கள் வரும் வரையில் குழந்தைகளைப் பத்திரமாக வைத்திருந்து மாலையில் அனுப்புவதாக இருந்தால் கூட அவர்கள் ஒரு முழு நேர ஊழியரைப் போல்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தது 200 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மேல் நிலைப் பள்ளிகளில் பிளஸ் 2 துவங்கி இருக்கிறோம். அதில் தொழில் கல்வியைத் துவங்கி இருக்கிறோம். அந்தத் தொழில் கல்வி கற்றுத் தருவதற்கு முழு நேர ஆசிரியர்களைப் போடவேண்டும். பட்டப்படிப்பை படித்துவிட்டு நிறைய பேர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே பிளஸ் 2விலே நாம் தொழில் கல்வியை ஆரம்பித்து அதை ஊக்குவிப்போமேயானால் நிச்சயமாக அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு 2 ஆண்டுகள் அவர்கள் அந்தத் தொழிற் கல்வி பயின்று தேர்ச்சி பெற்று, வெளியே வரும்போது குறைந்தது ஒரு நாளைக்கு 3, 4 ரூபாய் சம்பாதிக்கின்ற அளவுக்கு மாணவர்களைத் தயார் செய்வோமானால் அவர்கள் படித்துவிட்டு வந்த உடனே பெற்றோர்களுக்கு சுமையாக இல்லாமல் தானாகவே சென்று வேலை செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும் அரசு கடனாகக் கொடுக்கின்ற தொகையைப் பெற்று தனியாக வேலை வாய்ப்பு

1981 ஏப்ரல் 24] [திரு. இரா. சண்முகம்]

ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். தொழிற் கல்விக்கு அதிக அக்கறை செலுத்தி, அங்கே பகுதி நேர ஆசிரியர்களை முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இடை நிலை ஆசிரியர்கள் 2 நாட்களாக வேலை—நிறுத்தம் உண்ணாவிரதம் இருப்பதாக செய்தித்தாள்களிலே படித்தேன். அவர்கள் இடை நிலை ஆசிரியர்கள் பி. டி. படித்துவிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னதைப்போல, வெளியே படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற பட்டதாரிகளுக்கு 90 சதவீதமும் இவர்களுக்கு 10 சதவீதமும் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொடுப்பதன் காரணமாக அவர்கள் தாங்கள் பெற்ற சம்பளத்தில் இருந்து அதிகப்படியான ரூபாய்களை செலவு செய்து விட்டு, பட்டத்தையும் பெற்று, தங்களுக்கு உரிய இடம் கொடுக்கவில்லை என்ற ஏக்கம் தெளிவுபெறும். இந்த நிலையிலும் கூட அவர்களுக்கு அறிவிப்போமானால் நிச்சயமாக அவர்கள் பலனடைவார்கள்.

[பிற்பகல் 12—10]

நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பல உத்தரவுகளை அரசு ஆணையிடுகிறது. அப்படி போடுகின்ற அரசு ஆணைகள்—உத்தரவுகள்—ஆங்கிலத்தில் வருவதால், யாருக்கு எந்த உத்தரவு பொருந்துமோ அந்த அடிப்படையில், அதற்கு ஏற்ப மொழிபெயர்ப்பு செய்து, அதற்குப் பின்னாலே, பலர் கோர்ட்டுக்குச் சென்றுஎங்களுக்கும் அது பொருந்தும் என்று ஒரு 10 பேர் சேர்ந்து ரூ. 100 போட்டுகோர்ட்டில் வழக்காடும் நிலை இருக்கிறது. ஆகவே, அரசு ஆணைகள் தமிழிலேயே போடப்பட்டு, அனைவருக்கும் புரிகிற வகையில் தெளிவாக இருக்கின்ற முறையில் வெளியிடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி அரசு ஆணைகள், தவறாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்ட காரணத்தால், இது நாள், வரையில் நடு நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் கொடுத்தும், செலக்ஷன் கிரேடு கிடைக்கவில்லை. இதிலே பல தவறுகள் இருந்து கொண்டு இருக்கின்றன. அதனால் அவர்கள் தங்களுடைய உரிய சம்பளத்தைப் பெறமுடியாமல் வழக்கு மன்றத்திற்குச் சென்று நீதியைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதன் காரணமாக அவர்களுக்கும், உரிய செலக்ஷன்கிரேடு பெற்றவர்களுக்கும், செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலங்களில் கிடைக்க வேண்டிய பணத்தை வழங்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு ஆசிரியர்களின் வேலை வாய்ப்புக்காக பல்வேறு வகையில் முயற்சிகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டில் புதிதாக 1,600 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதிலே 1,000 இடை நிலை ஆசிரியர் பதவிகளும், 250 உடற் பயிற்சி ஆசிரியர் பதவியும் நடு நிலைப் பள்ளிகளுக்கு 500 தமிழ் ஆசிரியர் பதவிகளும்,—200 பி. எட். தர ஆசிரியர்களும், 250 பகுதி நேர கைத் தொழில் ஆசிரியர்களை 250 முழு நேர கைத் தொழில் ஆசிரியர்களாக மாற்றும் முயற்சி ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன. இதை நான் உண்மையிலேயே பாராட்டி வரவேற்கிறேன்.

உயர் நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைகளை இன்னும் ஊக்குவிக்க வேண்டும் என்கிற அடிப்படையில், கணக்கு, ஆங்கிலம், அறிவியல் போன்ற இந்த 3 பாடங்களையும் $1\frac{1}{2}$ மணி நேரம் அந்தப் பள்ளி நேரம் முடிந்த பிறகு, அங்கே அதிலே தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு தனியாகப் பயிற்சி கொடுப்பதற்காக இந்த அரசு தனியாக நிதி ஒதுக்கம் இந்த ஆண்டு செய்து இருப்பதை வரவேற்கிறேன். அதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் யாருடைய கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும் என்கிற போராட்டம் தற்போது இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியங்களின் கன்ட்ரோலில் வந்தால் தான் நல்லது என்று கருதப்படுவதால், அந்த ஆசிரியர்கள் ஒன்றியங்களின் கண்காணிப்பில் இயங்கும் வகையில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலவசமாகக் கொடுக்கப்படும் புத்தகங்கள், நோட்டுகள் ஜூன், ஜூலை மாதங்களிலேயே கொடுக்கப்படுகின்ற முறையில் வழி வகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவிற்கு இந்தக் கல்வி மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி இந்த கல்வி மானியத்தை வரவேற்று, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கு. ரமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் ஏற்கனவே சில முக்கியமான கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள். நானும் சில விஷயங்களை இந்த அவை முன் வைக்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த ஆண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் ரூ. 249 கோடி என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். சென்ற ஆண்டு (1980—81) ஒதுக்கப்பட்ட பணத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது—விழுக்காடு கணக்கில் பார்த்தால் இந்த ஆண்டு 22 சதவீதம் தான் இருக்கிறது—சென்ற ஆண்டு 23 சதவீதம இருந்தது. எவ்வளவு கோடிப் பணம் விழுக்காடு விகிதத்தில் ஒதுக்கப்படுகிறது என்கிற அடிப்படையில் பார்த்து நான் கருத்து கூற விரும்பவில்லை, இருப்பினும் சில விவரங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். கல்விக்குத் தேவையான செலவுக்கு இது போதாது. அது தான் இன்றைக்கு நான் கூற வேண்டிய நிலையில் இருக்கிறேன். அரசாங்கத்திற்கு வரும் வருவாயிலும்—செலவிலும் இது கிட்டத்தட்ட 4-ல் ஒரு பங்கு என்கிற அடிய படையில் இருக்கிறது. தமிழக மக்களுக்கு கல்விப் பணி ஒரு முக்கியமான பணி—ஒரு சிறந்த சேவை என்கிற அடிப்படையில் இது ஒதுக்கப்பட்டு இருப்பதால், இது மிகவும் வரவேற்கத்தக்கது என்பதைத் தெருவித்துக் கொள்கிறேன். இந்த நிலையில் நமது கல்வியினுடைய பல அம்சங்களை, பல்வேறு விஷயங்களை பெரிய அளவில் விவரமாக கல்வி அமைச்சர் தன்னுடைய குறிப்பிலே தந்திருக்கிறார். இருந்தாலும் சில விஷயங்களைத்தான் நாம் இங்கே விவாதிக்க முடியும்.

தொடக்கக் கல்வி சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் அதிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் 1 முதல் 5-வது வகுப்பு வரையிலும், 5 முதல் 8-வது வகுப்பு வரையிலும் படிக்கின்ற மாணவர்களின் கணக்கை எடுத்துக் கொண்டால் அது ஒரு பெரும் தொகை. கிட்டத்தட்ட 70 இலட்சம் என்ற அளவுக்கு வந்துசேரும். இப்படிப்பட்ட மாணவர்கள் மத்தியில் நின்றுவிடுகிறார்கள், டிராப் அவுட் ஆகிறது. கிட்டத்தட்ட 1/3 பகுதி மாணவர்கள் இடையிலே நின்றுவிடுகிறார்கள். இதைப்பற்றி ஒவ்வொரு வருஷமும் கூறுகிறோம்.

ஏற்கனவே 51 சதவீதமாக இது இருந்தது. இப்போது 33 சதவீதமாக குறைந்திருக்கிறது 1979—80-ல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 1980–81-ல் மேலும் அது குறைந்து இருக்கிறதா அல்லது அதிகமாகி இருக்கிறதா என்ற விஷயம் இந்தக் குறிப்பில் இல்லை. ஆனாலும் 51 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக குறைந்திருப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் இது ஒரு பெரிய தொகை. இலட்சக்கணக்கில் மாணவர்கள் இடையிலே நின்றுவிடுகிறார்கள் என்பதை நாம் கவலையோடு கவனிக்க வேண்டும். அதற்கு பிரதான காரணம் என்னவென்றால், என்னைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மக்கள் மத்தியிலே இருக்கிற பயங்கரமான ஏழ்மை, வாழ்க்கை நடத்த முடியாத ஏழ்மை நிலைதான் என்று சொல்வேன்

TRUTH ALONE TRIUMPHS

தங்களுடைய குழந்தைகளை படிக்க வைக்க வேண்டுமென்று ஆசை இருந்தாலும் ஏழ்மையின் காரணமாக பள்ளிக்கு அனுப்பி வைக்க முடியவில்லை. ஆகையால் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்து, அவர்களை பள்ளியிலே தங்க வைக்க வேண்டும். இப்போது அப்படிச் செய்து வருகிறோம். அதற்காக பல கோடிக் கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. அந்தக் கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தால், ஒரு மாணவனுக்கு செலவிடுகிற பணம் எவ்வளவு என்றுபார்த்தால் தலைக்கு 10 காசு செலவழிக்கப்படுகிறது. அரசாங்கம் கொடுப்பது தலைக்கு 10 காசு, உள்ளாட்சி மன்றங்கள் கொடுப்பது 5 காசு என்று அமைச்சர் குறிப்பில் இருக்கிறது. இந்த 15 காசு நிர்ணயிக்கப்பட்டு பல காலம் ஆகிவிட்டது. இந்த காசுக்கு கொடுக்கிற உணவு எப்படி இருக்கிறது என்று பார்த்தால், அதை மனிதன் சாப்பிட முடியாத அளவுக்கு இருக்கிறது. பல இடங்களிலே நாம் அந்த நிலையைப் பார்க்கிறோம். அது பற்றி புகார் எல்லாம் வருகிறது. விவாதமும் நடக்கிறது.

கோவை நகராட்சியில் சமைத்த உணவு எப்படி இருக்கிறது என்பதை மற்றவர்களுக்கு கொண்டுபோய் காட்டினோம்; அதன் தரத்தைப் பார்த்தோம்; மனிதன் சாப்பிட முடியாது; அதை மற்றவர்களுக்கும் காட்டினோம். மனிதன் கன்சியூம் பண்ணக் கூடிய அளவுக்காவது இருக்க வேண்டுமென்றால் அதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக செலவிட வேண்டும்.

''கேர்'' நிறுவனம் 20,000 டன் உணவுப் பொருட்களையும் மற்றும் தேவையான எண்ணெயும் சப்ளை செய்கிறது. அதற்கு மேல் நாம் இந்த 15 காசு கொடுக்கிறோம் என்று குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் தருகின்ற பொருட்களோடு, குறைந்தபட்சம் 25 காசாவது நாம் கொடுக்க வேண்டும். ருசியான பதார்த்தம் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. போடுகின்ற உணவை மாணவர்கள் கன்சியூம் பண்ணக்கூடிய வகையில் போட வேண்டும் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

அது மட்டுமல்ல. அப்படி நாம் கொடுக்கிற பணத்திலே கூட கடுமையான அளவுக்கு பல இடங்களிலே கையாடல் நடக்கிறது, ஊழல் நடக்கிறது. நல்ல முறையில் சமைத்து வழங்க மைய கிச்சன் வைத்திருக்கிறோம். சுலபமாகவும் சுத்தமாகவும் எடுத்துச் சென்று கொடுக்க மோட்டார் வண்டிகள் எல்லாம் வைத்திருக்கிறோம். இருந்தாலும் பல இடங்களிலே தவறு நடக்கிறது. குறிப்பாக நகராட்சிகளில் இது சம்பந்தமான ஊழல் அதிகமாக நடக்கிறது. கோவை நகரில் மத்திய கிச்சனில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் ஊழல் நடைபெற்றது. ஊழல் நடைபெற்று 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் குற்றவாளி யார் என்று தெரியாமல் இருக்கிறது. அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் என்று

1981 ஏப்ரல் 24] [திரு. கு. ரமணி]

சொல்லி, கொஞ்ச காலத்திற்கு சஸ்பென்ஷனில் இருந்தவர்கள் இன்றைக்கு மீண்டும் வேலைக்கு வந்து விட்டார்கள். இப்படிப் பட்ட ஊழல்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏழை மாணவர் களுக்கு குறைந்த பட்ச உணவு அளிப்பதிலே கூட இப்படிப்பட்ட ஊழல் நடைபெறுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரியாக நகரங்களில் பார்த்தால் ஏராளமான பாலர் பள்ளிகள் ஏற்படுகின்றன. நர்சரிப் பள்ளி என்று சொல்லி இப்படிப்பட்ட பள்ளிகளை தனியார்கள் ஏராளமாக திறக்கிறார் கள். அந்தப் பள்ளிகளிலே காசு, பணம் அளவுக்கு மிஞ்சி கறக்கப்படுகிறது. ஏதோ வசதி உள்ளவர்கள்தான் அங்கே போகிறார்கள் என்று நினைக்கிறோம். அப்படி நினைப்பது தவறு. தொழிலாளர்களுடைய குழந்தைகள், சாதாரணமான வர்களுடைய குழந்தைகளும் வீட்டுக்குப் பக்கத்திலே இருந்தால் அங்கே போகிறார்கள். ஆகவே, அவர்கள் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் ஏராளமான பணத்தைக் கறக்கும் நிலையை தடுக்க வேண்டும். இப்படிப்பட்ட பள்ளிகளை நகராட்சிகள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் ஸ்தல ஸ்தாபன பள்ளிகளாக நடத்த வேண்டுமென்பது ஒரு முக்கியமான கருத்தாகும்.

[பிற்பகல் 12-20).

இதைச் செய்தால் இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும். போன வருஷத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து உள்ள அறிக்கையிலேயும் இந்த வருஷக் குறிப்பிலேயும் குறிப் பிட்டிருக்கின்றார்கள். சென்ற வருஷக் குறிப்பிலே 685-வது பக்கத்திலே அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கெல் லாம் ஆங்கிலமே கற்றுக் கொடுப்பதால் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வருகின்றபோது ஆங்கிலப் பாடம் தான் வேண்டும் என்று கேட்கும்படியான சூழ்நிலை ஏற்படுகின்றது, அதாவது அவர்கள் தங்களுக்கு ஆங்கில மீடியம்தான் வேண்டும் என்று கேட்கின்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இதைப் போக்க வேண்டும் என்றால் அரசாங்கம் நர்சரிப் பள்ளிகளை ஒழுங்கு படுத்துவதோடு அரசாங்கப் பள்ளிகளிலும், அரசாங் கத்தினுடைய மானியம் பெறும் பள்ளிகளிலேயும் நர்சரி பள்ளி களைத் துவக்குகின்ற ஒரு முயற்சியை மேற்கொண்டாகவேண் டும் என்று அவர் தங்களுடைய கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு முக்கியமான நல்ல கருத்து. ஆனால் அதற்கான நட வடிக்கைகளை எடுத்து முன்னேற வேண்டும். ஆனால் இன்று வரை அவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட பள்ளிகள் ஏராளமாக நடந்து கொண்டு இருக் கின்றன. காளான்கள் போன்று அவை ஏற்பட்டு எக்கச்சக்கமான பணத்தைக் கறந்து கொண்டு வருகிறார்கள். கல்வியை வியாபார

மாக ஆக்குகின்ற இந்த நிலையை மாற்ற வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களே இப்படிப்பட்ட பள்ளிகளை நடத்த வேண்டும். அதற்காக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து தனியார் பள்ளிகளைப் பற்றித் தொடர்ந்து விவாதம் செய்து கொண்டு வருகிறோம். தனியார் பள்ளிகள் ஒரு வியாபாரமாகத்தான் நடைபெற்று வருகின்றன. ஏராளமான பணத்தைச் சம்பாதிப்பதற்காகவும், ஆசிரியர்களைச் சுரண்டுவதற்காகவும் தான் இந்த ஸ்தாபனங்கள் நடந்து வருகின்றன. ஆகவே இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்றால் கல்வியை இப்படி வியாபாரமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அதை மனித சமுதாயத்தின் பிரதான தேவையாகக் கருதி அவற்றை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு நடத்த வேண்டும். இப்படி இந்தத் தனியார் பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்ற நிலை வந்தால் மைனாரிட்டி என்ற பிரச்சினைகள் வரும். அப்படி வந்தால் உண்மையிலேயே மைனாரிட்டி சமுதாயத்தின் பள்ளிகள் எவை என்று பார்த்து மைனாரிட்டி மொழி பேசுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளிகளையும் சர்க்காரே தகுந்த முறையிலே நடத்தினால்தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இதனைக் கவனத்திலே கொள்ளவேண்டும். ஆகவே தனியார் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது ஆசிரியர்களுடைய பிரச்சினை. கல்வி வளர்ச்சியிலே ஆசிரியர்களும், மாணவர்களும் இரண்டு முக்கியமான பகுதியினராக இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக மாணவர்கள் ஆசிரியர்கள் என்ற விகிதாச்சாரத்தைப் பொறுத்த வரையில் 35-க்கு ஒன்று என்ற வகையிலேயாவது ஏற்பாடு செய்ய வேண்டும். 20 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று கூட வேண்டாம். 35 பேர்களுக்காவது ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தினை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் 75 மாணவர்களுக்கு, இன்னும் சொல்லப் போனால் 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கின்றது. வகுப்பறைகளை எல்லாம் பெரிய ஹால் மாதிரிக் கட்டி வைத்து அதன் குறுக்கே மூங்கில் பாய் போன்றவற்றினால் ஆன தட்டிகளை வைத்து இந்தப் பக்கத்திலே போடுகின்ற சத்தம் அந்தப் பக்கத்திலே கேட்கின்ற நிலைமையிலே ஆசிரியர்கள் வகுப்புக்களை நடத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே ஒரு ஆசிரியரின் கீழே 35 மாணவர்களுக்கு மேலே போகாமலாவது ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. கு. ரமணி]

இந்த மாமன்றத்திலே ஒரு கேள்வி ஆசிரியர்கள் மாணவர்கள் ரேஷியோ பற்றி வந்தபோது பத்து ஆசிரியர்கள் இருக்கின்ற இடத்திலே அதிகமாக ஒரு ஆசிரியரையாவது நியமிக்க வேண்டும், அது ஏற்கனவே அரசினுடைய திட்டம் என்று அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால், அதிலே சில நடைமுறைச் சிக்கல் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பத்து ஆசிரியர்கள் இருக்கின்ற இடத்திலே மேலும் ஒரு ஆசிரியரைப் போட்டால் ஆசிரியர்கள் தங்களது பணியினைச் சரியாகச் செய்ய முடியும். ஆகவே அந்த முறையிலேயாவது அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து இதை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

அடுத்து ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரை யிலே அவர்கள் சங்கம் எது என்பது பிரச்சினை இல்லை. அந்த ஆசிரியர்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்ன என்பதுதான் பிரச்சினை. மேலும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்காக அரசாங்கம் ஓரளவுக்கு நடவடிக்கைகளை எடுக்கத்தான் செய்கின்றது. பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் களைப் பொறுத்த வரையில் அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றுவது என்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இருந்தாலும் இந்த ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு பல் வேறு பிரச்சினைகள் இருக்கின்றது. அந்தப் பிரச்சினைகளை முன் வைத்து அவர்கள் ஸ்தாபன ரீதியாக ஜனநாயக முறை களிலே கிளர்ச்சிகளை நடத்துகிறார்கள் என்றால் அவர்களுடைய பிரச்சினைகளை முழுவதுமாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். அன்றைக்குக் கூட அமைச்சர் அவர் கள் ஒரு அறிக்கை வெளியிட்டு அதன் மூலமாக ஆசிரியர்கள் போராட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்றும் அவர்களு டைய பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் என்றும் சொன்னார் கள். அவர்களும் தங்களது போராட்டத்தை வாபஸ் வாங்கி இருக்கிறார்கள். பேச்சு வார்த்தையில் ஒரு சுமுகமான சூழ் நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட்டால் அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்காமல் இருப்பதும் அவர்களைச் சிறை யிலிருந்து விடாமல் இருப்பதும் போன்ற காரியங்கள் இருக்கக் கூடாது. அது மேலும் எரிச்சலையும் மனவேதனையும் தொடரச் செய்யும். ஆகவே அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை காமராஜ் யூனிவர்சிட்டியிலே போராடியவர்கள சம் பந்தமாக ஒப்பந்தமே அமைச்சர் முன்னால் ஏற்பட்டது. முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் அவர்கள் மேல் வழக்கு

பிரச்சினைகள் பாக்கியிருக்கின்றன என்று கூறுகிறார்கள். அது கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

அதே மாதிரி அண்ணாமலை யூனிவர்சிட்டியிலே இருக்கிற ஆசிரியர்கள், சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பதற்காகப் போராடினார்கள். சட்டம் திருத்தம் கொண்டு வருவதற்காக ஒரு போராட்டமா? என்று நிலைமைகள் எல்லாம் எழுப்பப்பட்டு, பின்னர் அது ஒரு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. அதனால் அந்தச் சட்டத் திருத்தங்களை அதற்குரிய அனைத்து முக்கியத்துவத்தோடு காலம் நீட்டாமல் அரசு கொண்டு வர வேண்டும். ஒரு போராட்டம் நடந்தால் மறுபடியும் சுமூகமான நிலைமையை கொண்டு வருவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். சிறைப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். வழக்குகள் போடப்பட்டிருந்தால் அவைகள் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், அங்கே வேலை செய்கிற பல ஆசிரியர்கள், அவர்கள் வேலை செய்கிற காலத்திலேயே, தனியாக வீட்டில் படித்து பட்டதாரிகளானவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, அந்த இடங்களிலேயே ஏற்படுகிற காலி ஸ்தானங்களை நிரப்புவதில் முன் உரிமை கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த முன்உரிமையை கொடுக்காமல், பல இடங்களில் தவறுகள் நடக்கின்றன. வெளியிடங்களில் இருந்து ஆசிரியர்களைக் கொண்டு வந்து, அவர்கள் செல்வாக்கிலும் சிபாரிசுகளிலும் வேலை செய்யக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆங்காங்கே அப்படிப்பட்ட விஷயங்களை எடுத்து ரிப்போர்ட் பண்ணுகிறார்கள். நாங்கள் அதை இங்கே அலுவலகங்களில் ரிப்போர்ட் பண்ணுகிறோம். ஆனால் அந்த ரிப்போர்ட்டுகளுக்கு பதில் வருவதில்லை. வராது என்றும் தெரியும். இங்கே கேள்வியாகக் கேட்டாலும் அதை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் கேள்வி ஒத்துக் கொள்ளப்பட்டதா இல்லையா என்பதே தெரியாது. அந்த நிலைமை கூடாது. அப்படிப்பட்டவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கொள்கையிலேயே இருக்கிறது. அதை அவர்களுக்கு கொடுக்காவிட்டால், அவர்கள் எங்கே போவார்கள்? ஆகவே அதற்காக வேறு ஆட்களை வெளியிலிருந்து கொண்டு வரக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகராட்சியிலே கூட இன்டக்டட் டீச்சர்ஸ் இருக்கிறார்கள். அவர்களிடையேயும் இப்படிப்பட்ட பிரச்சனை ஒன்று வந்தது. கடைசியிலே அங்கே இருக்கக் கூடிய நகராட்சி கமிஷனர் அவர்களும், நகராட்சி கல்வி அதிகாரி அவர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களைப் போட்டார்கள் என்ற ரிப்போர்ட் இருக்கிறது. அதைப் பற்றி கல்வி இயக்குநரிடத்திலே கூட எடுத்துச் சொன்னேன். அவர்கள் சொன்னார்கள், அரசு சம்பந்தப்

பட்ட வரையிலும் ஆசிரியர்களுக்கு மாறாக வரக்கூடாது என்ற கொள்கை இருக்கிறது. ஆனால் சில அதிகாரிகள் தான் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட குறைகளை மாற்றவேண்டும். அதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பள்ளிகளிலே இருக்கிற காலி ஸ்தானங்கள் முழுவதையும் ஜூன் மாதம்முடிவதற்குள் நிரப்பப்பட்டாக வேண்டும். பள்ளிகளிலிருந்தும் நகராட்சிகளிலிருந்தும் ரிப்போர்ட் வரவில்லை என்று கல்வி அதிகாரிகள் கூறுவார்கள். ரிப்போர்ட்டு கொடுப்பதாக நகராட்சி அதிகாரிகள் சொல்கிறார்கள். நாங்கள் ரிப்போர்ட் கொடுத்தோம் என்று கல்வி இயக்குநர் அலுவலகத்தில் சொல்கிறார்கள். இந்த இரண்டு டிபார்ட்மெண்டுகளுக்கிடையே போராட்டம் இந்த விஷயத்தில் கடுமையாக இருக்கிறது. ஆகவே, ஜூன்மாதம் முடிவதற்குள் எல்லா பள்ளிக்கூடங்களிலும் உள்ள காலியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி தேவையான ஸ்டாஃப்புகள் கொடுக்க வேண்டும். ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கிறது என்று சொன்னால், ஒரு பியூன் தேவை, ஒரு கணக்கர் தேவை, தோட்டிகள் தேவை. ஆகவே அங்கே என்ன ஸ்டிரெங்த் இருக்கிறதோ அதற்குத் தகுந்தவாறு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொடுக்காமல், அந்தப் போஸ்ட்கள் சேங்ஷன் ஆகவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அதையும் போக்கி தேவையான ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் பாடங்களுக்கேற்ற ஆசிரியர்களை உடனுக்குடன் நியமிக்க வேண்டும். மூன்று வருஷம் தான் ஆகிறது. இதிலே பல கஷ்டங்கள் இருக்கிறது என்பதும் உண்மை. ஆனாலும் ஆரம்பத்திலே பலரைப் பகுதிநேர ஊழியர்களாக 150 ரூபாய் சம்பளத்தில் நியமித்து விடுகிறார்கள். அவர்கள் எம்.ஏ., பி.ஏ. படித்தவர்கள். கல்யாணம் செய்து, குழந்தை குட்டிகளோடு இருப்பவர்கள். அவர்கள் இப்படி 150 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்தால் அவர்கள் நிலை என்னவாகும்? அவர்கள் உண்மையிலேயே பகுதிநேர ஊழியர்களாக இல்லை, முழுநேர ஊழியர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் மாதா மாதம் பரீட்சை நடத்துகிறார்கள். விடைத்தாள்களை திருத்துகிறார்கள். செயல்முறை பதிவேடுகளை ஏற்படுத்தி அதை பராமரித்து வருகிறார்கள். வெளியூர்களுக்கு கூட அவர்களை அனுப்பி பரீட்சைகளை மேற்பார்வையிடச் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் பட்டம் பெற்றவர்கள், உயர் படிப்புப் படித்தவர்கள். சிலர் ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர்கள். அவர்களுக்கெல்லாம் வேலை உத்தரவாதம் கிடையாது.

இன்றைக்கு அவர்களுடைய நிலை என்னவென்றால், பயந்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது வேலையிலிருந்து வெளியே தள்ளப்படுவோமோ என்று பயந்துக் கொண்டிருக்றார்கள். கல்வியை கற்றுக் கொடுக்கும் அரிய வேலை செய்பவர்கள் இப்படி பயந்துக் கொண்டே இருந்தால், அவர்களால் எப்படி சரியாக வேலை செய்ய முடியும்? அவர்களுககுப் பணி பாதுகாப்புத் தேவை. அவர்கள் யாரையும் வெளியேற்றாமல் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்களுக்கு ஊதிய உயர்வைக் கொடுக்கவேண்டும். ஒரு எம்.ஏ.,பி.ஏ. படித்த குவாலிபைடாக இருப்பவர்களுக்கு 500 ரூபாயாவது சம்பளம் குறைந்தபட்சம் இருக்கவில்லை என்று சொன்னால் எப்படி வாழ முடியும் என்று யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12:30)

அதேபோல் பல இடங்களில் கடுமையான முறையில் ஊழல்கள் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதுவும தனியார் பள்ளிகளில் இது ஜாஸ்தி. இது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதைப் பற்றி இங்கே ஏற்கனவே பலமுறை எடுத்துச் சொல்லியாகிவிட்டது. ஆனால் இன்றும் அவை தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து திருச்சி ரீஜனல் எஞ்ஜினியரிங் காலேஜ். இந்தக் காலேஜில் பல்லாண்டுகளாக பழி வாங்குதல் நடந்து வருகிறது. ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்ஸிலில் வைத்து சில கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்கள். அந்த ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்ஸிலில் செயலாளர் டாக்டர் சி ஆர். கந்தசாமி அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு ஒரு தந்தி அனுப்பினார்கள். எங்கள் கோரிக்கைகள் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த சமயத்தில் புது நியமனம் அல்லது மேல் பதவி கொடுப்பது என்பது ஒழுங்காக இருக்காது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நீ எப்படி தந்தி கொடுக்கலாம், உனக்கு என்ன 'லோக்கஸ் ஸ்டாண்டி' இருக்கிறது, உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி டாக்டர் கந்தசாமி அவர்களை கேட்டிருக்கிறார் அந்த ப்ரின்ஸ்பால். அமைச்சர் அவர்கள் முன்னால் பேச்சுவார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தை நடந்தபோது அமைச்சர் இருந்திருக்கிறார். அந்த பிரின்ஸிபாலும் இருந்திருக்கிறார். இவரும் இருந்திருக்கிறார். ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்ஸில் செயலாளர் உடன் இருந்து பேச்சுவார்த்தை நடந்து (மினிட்ஸும்) அனுப்பியிருக்கிறார்கள். அதில் அவர் பெயரைக் குறிப்பிட்டு ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்ஸில் செயலாளர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு செய்த பிறகும் காரணம் கேட்டு நோட்டீஸ் கொடுக்கிறார். அங்குள்ள அந்த ப்ரின்சிபால், திரு. மணி சுந்தரம். அந்த பிரின்ஸ்பால் பெயரில் ஆண்டுகளாக ஊழல் பிரச்சினைகள் கிளப்பப்பட்டிருக்கிறது

இந்த மன்றத்தில் தோழர் உமாநாத் எம்.எல்.ஏ., அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். பல புகார்கள் வந்துள்ளன என்று. இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் அவர்மீது எடுக்கப்படவில்லை. பெரிய மனிதர் என்றால் அரசின்மீதே செல்வாக்கு செலுத்துவதா? இதற்கெல்லாம் நாம் ஒரு முற்றுபுள்ளி வைக்கவேண்டும். இப்படிப்பட்ட ஊழல்களுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. [மணியடிக்கப்பெற்றது] அரசு இவ்வளவு பணம் செலவு செய்யும்போது செய்கிற நடவடிக்கைகள் பயன் உள்ளவையாக நல்லவையாக இருக்கவேண்டும் என்ற முறையில் சொல்கிறேன், ஊழல்களை ஒழிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று.

எனது தொகுதி பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன். எனது தொகுதியில், சித்தாபுதூர் ஆரம்ப பள்ளிக்கு மேலும் எட்டு வகுப்பறைகள் கட்ட அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி மூன்று ஆண்டுகளாகியும், எட்டு வகுப்புகள் கொண்ட அந்தப் பள்ளிக் கட்டிடம் கட்டப்படவில்லை. காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது பொதுப் பணித்துறையிடம் கொடுத்திருப்பதாக சொல்கிறார்கள்—இன்னும் அந்தப் பள்ளிக்கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை. 2,300 குழந்தைகள் படிக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டும் வருட கணக்கில் இழுத்துக் கொண்டிருக்கிறது. ரப்பர் இழுக்கிறது மாதிரி இழுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்கள் உயர்நிலைப பள்ளி வந்துள்ளது. அந்தப் பள்ளிக்கு கட்டடம் இல்லை. அதற்கு இடம் கேட்டோம். அங்குள்ள மத்திய சிறைச்சாலையை சுற்றி ஏராளமான காலி இடம் இருக்கின்றன. மற்ற துறைகளுக்கு கட்டடம் கட்ட கொடுக்கிறார்கள், கல்வி இலாகாவிற்கு கொடுக்கக்கூடாதா? இது பற்றி எழுதியிருக்கிறோம். ஆகவே அந்தப் பள்ளிக்கு வேண்டிய இடத்தை கட்டடத்திற்காக ஒதுக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

காந்திபுரம் 1 முதல் 8 வார்ட்ஸ் முடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் குடியிருக்கிற இடத்தில் நகராட்சி ஆரம்பப் பள்ளி ஒன்று கூட கிடையாது. அதனால் மற்றப் பள்ளிகளில் அதிகமான நெருக்கடி ஏற்படுகிறது. ஏராளமான குழந்தைகள் படிக்கும் அந்த இடத்தில் ஒரு ஆரம்பப் பள்ளி அமைத்துத் தரவேண்டும்.

பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிக் கட்டடம் கூரை பிரிந்துபோய் விட்டது. அங்கு ஆறு வகுப்புகள் உள்ளன. இரண்டு ஆண்டுகளாகியும் கூரை போடப்படவில்லை. வேறு கட்டடம் கட்டப்படவும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

நகராட்சி கல்விப் பிரிவில் ஊழல்கள் உள்ளன. ஆசிரியர்கள் விடுப்பு எடுத்தால் அல்லது வேறுவிதமான வகையில் பதவி உயர்வு கிடைத்தால், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய மிச்சப் பணத்தை அவர்களுக்குக் கொடுக்க கைக்கூலி கொடுத்து வாங்கவேண்டிய நிலைதான் இருக்கிறது. இந்நிலையும் மாற்றப்படவேண்டும்.

சட்டக் கல்லூரி. இதற்காக ஐந்து லட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ஐந்து இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறவது. 240 சீட்கள் இருக்கின்றன. அதை அதிகப்படுத்தவேண்டும். அவர்களுக்கு விடுதி கட்டவேண்டும். அதற்காக தொகை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அது போதாது, அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். 500 மாணவர்களாவது அந்தச் சட்டக் கல்லூரியில் சேரவேண்டிய நிலை இருக்கிறது. இல்லாவிட்டால் அங்கிருந்து சென்னைக்கு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குமரி மாவட்டத்தில், அரசு பள்ளிகளில் பகுதிநேர ஊழியர்கள் என்று வைத்துக்கொண்டு, அவர்களிடம் முழுநேரம் வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்கு மாதம் 50, 60 ரூபாய் தான் சம்பளமாகத் தருகிறார்கள். இதன்பேரில் எல்லாம் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் எல்லாம் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. இந்த ஊழல்களை எல்லாம் களையவேண்டும், தடுக்க வேண்டும் என்னுடைய கோரிக்கையிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ரமணி அவர்கள், திருச்சி, திருவெறும்பூரில் இருக்கின்ற மண்டலப் பொறியியல் கல்லூரி நிர்வாகத்தைப் பற்றி 17 ஆண்டு காலமாக ஊழல் நடந்ததாகவும் குறிப்பிட்டார்கள். இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அது என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகிறேன். 17 ஆண்டு காலத்தில், அ. தி. மு. க. ஆட்சி, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகுதான், அதுவும் கல்வி, அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்த மண்டலப் பொறியியல் நிர்வாகத்தை எந்த அளவிற்குச் சீர்படுத்த வேண்டுமோ, அந்த அளவிற்குச் சீர்படுத்தி, அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், மற்றும் ஏனைய....

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வரது மேலும் நான் அனுமதிக்க மாட்டேன். சங்கரன்கோவில் திரு. துரைராஜ்.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம் மாமன்றத்தின் முன் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வைத்துள்ள கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக் களைக் கூற விழைகிறேன். தமிழக அரசின் இந்த ஆண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,138 கோடியில், கல்வி வளர்ச்சிக்காக ஏறத்தாழ 240 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள நிலையைப் பார்க்கும்போது, இந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு எந்த அளவுக்கு கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு 1,000 இடைநிலை ஆசிரியர்கள் பதவி களும், 250 உடற் பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளும், 500 தமிழ் ஆசிரியர்கள் பதவிகளும், 200 பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகளும் புதிதாக ஏற்படுத்த வழிவகை செய்திருப்பதை வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். சிலகாலமாக பள்ளி களில், சில ஸ்தானங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணம், உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்பட்ட காலியான எழுத்தர், அட்டெண்டர், காவல்காரர் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கவேண்டும் என்று ஒரு தடையை கல்வி இலாகா போட்டிருப்பதாக நான் அறிகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் அந்த ஸ்தானங்கள் காலியாக இருப்பதால், அப்பள்ளிகளின் நிர்வாகம் சரியான முறையில் நடக்க முடியாதப நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்தத் தடையை அமைச்சர் அவர்கள் நீக்கி இந்தப் பதவி களுக்குப் புதிதாக ஆட்களை நியமிக்க உத்தரவிட வேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பக் கல்விக் கட்டத்தில் முன்பு ஏற்பட்ட தேக்க நிலை தற்சமயம் 55 லிருந்து 33 விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். 1—10—1979 முதல் உள்ளாட்சி மன்றங்கள், பிற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் மதிய உணவு உதவிக்காக தலா 5 காசு கொடுக்க வேண்டும் என்ற உத்தரவை வழங்கிய இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கருவி மானியமாக சுமார் 7.50 லட்சம் ரூபாய் வழங்கியிருப்பதைக் கண்டு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். 1—6—1981 முதல் உள்ளாட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர் களாக மாற்றி, உத்தரவிட்ட இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1981 ஏப்ரல் 24

தமிழ் அறிஞர்களுக்கு மாதம் 250 ரூபாய் ஒய்வூதியம் தரப்படுவதைப் பராட்டுகிறேன். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல், தஞ்சை மாவட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்கயிருப்பதை எண்ணி எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

இறுதியாக, என்னுடைய ஒருசில கோரிக்கைகளை வைக்க ஆசைப்படுகிறேன். ஆரம்பப் பள்ளிக்கென, ஒரு தனி இயக்குநர் ஒருவரை நியமித்து ஆரம்பக் கல்வி மேலும் சிறந்திட வழி வகை,செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன். இப்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையெல்லாம் எடுத்திருக்கிறோம். ஆகவே இந்த ஆரம்பப் பள்ளிகளுக்கு என்று ஒரு தனி இயக்குநரை நியமித்து, அவைகளை நடத்துதவற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். மேலும், ஆரம்பப் பள்ளிகளுடைய தரத்தை உயர்த்துவதற்கு, இந்தக் கல்விக்காக ஒரு தனி வாரியம் ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

நெல்லை மாவட்டத்திலுள்ள வன்னிக்கோனேந்தல், சேர்ந்த மங்கலம் கிராமங்களிலுள்ள புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் நடப்பாண்டில் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்டம் வீரசிகாமணி கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றைப் புதிதாகத் திறப்பதற்கு உத்தரவு வழங்கவேண்டுமென்று சென்ற ஆண்டில் கேட்டபோது. காலம் தாழ்ந்து விட்டது, அடுத்த ஆண்டில் கவனிக்கலாம் என்று சொல்லப்பட்டது. அங்கே இந்த ஆண்டில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிக் கல்விவரை இலவசமாய்ப் படிப்பதற்குச் சலுகை செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தமிழறிஞர் தேவநேயப் பாவாணர் விருது ஒன்றை நிறுவி தாழ்த்தப்பட்ட மக்களின் சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதி உதவி செய்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டு கொள்கிறேன்.

ஆசிரியர்கள் ஒய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் பணம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் வயது வந்தோர் கல்விப் பயிற்சி அளிக்கும் ஆசியர்களுக்கு. அளிக்கப்படும் ஊதியம் மிக குறைவாக ரூபாய் ஐம்பது என்று கொடுக்கப்படுகிறது. மூன்று மணி நேரத்துக்கு மேல் அவர்கள்

பணிபுரிகிறார்கள் என்பதால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகையை ரூபாய் நூறு என்ற அளவிற்கு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப்பள்ளிகளில் 25 ஆண்டுகள் அரசுப் பணிபுரிந்து இசைவு ஓய்வு, 'வாலன்டரி ரிடையர்மென்ட்' என்ற அடிப்படையில் செல்பவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் கொடுத்தாலும், அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுப்பது போன்றவற்றை இந்த அரசு செய்வதின் மூலம் இசைவு ஓய்வை ஊக்கப்படுத்தலாம். வேலையில்லாமல் இருக் கிறவர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் ஐந்து வருடம் சர்வீஸ் போட்டிருந் தால்தான் தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டு மென்று இன்று அரசு உத்தரவு இருக்கிறது. ஐந்து வருடம் பணிபுரிந்த ஆசிரியர்கள் இன்றைக்குக் கிடைப்பது சிரமமாக இருப்பதால் புதிதாக தலைமையாசிரியர்கள் நியமிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. இந்த நிலையை எடுத்துச் சொன்ன பிறகும் அப்படித்தான் இருக்க வேண்டு மென்று கட்டாயப்படுத்துவது அந்தப் பள்ளிகளிலே தலைமை யாசிரியர்களை நியமித்து பணிகளை செய்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே ஆரம்பப் பள்ளிகளில் ஐந்து வருட சர்வீஸ் உள்ளவர்தான் தலைமையாசிரியராக நியமிக்க வேண்டு மென்ற அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரம்பப் பள்ளிகளில் அப்பீல்கள், பல ஆண்டு களாக பைசல் செய்யாமல் பள்ளி ஆசிரியர்கள் பல இடங் களில் சம்பளம் பெற முடியாத நிலையிருக்கிறது. அத்தகைய நிலையினை மாற்றி உடனுக்குடன் மேல்முறையீடுகளை பைசல் செய்வதற்கு உத்தரவு செய்து, இந்த பள்ளி ஆசிரியர் களுக்கு சம்பளம் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தில் ரெட்டியார்பட்டி மலையடிப்பட்டி. குமாரகிரி, குமரகிரிபட்டி ஆரம்பப்பள்ளிகளில் சுமார் இரண்டு ஆண்டுகளாக இப்படிப்பட்ட மேல்முறையீடுகள் பைசல் செய்யப்படாமல் இருப்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கல்லூரிகளில் எம். ஏ. போன்ற பட்ட மேல்படிப்பு படித்து முடித்தவர்கள் கல்லூரிகளில் நியமனம் பெறுவதற்கு வாய்ப் பில்லாமல் இருக்கிறது. ஆசிரியர்களை நியமனம் செய்யும்

போது பட்ட மேல்படிப்பு படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே பதவியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கும்போது 50 சதவீதமாக கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக சட்டக்கல்லூரியில் பல மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் போன சூழ்நிலையைக் கண்டு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் எம். ஏ., பட்டபடிப்பிலே முதல் வகுப்பிலே தேர்ச்சி பெற்றவர், அவர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தும் கூட அவருக்கு இடம் கிடைக்கவில்லை. வரும் ஆண்டிலாவது இதுபோன்று ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப் பகுதியிலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு சொந்தமாக வீடுகள் கட்ட இயலாத காரணத்தினால் அவர்களுக்கு அரசாங்கமே அதிக அளவில் கடனுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக உயர்நிலைப்பள்ளிகளில் ஒட்டுமொத்தமாக 1.38 என்ற விகிதத்தில் ஆசிரியர் மாணவர் விகிதம் இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதை 1.35 என்று மாற்றி அமைச்சர் அவர்கள் புதிதாக பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தமிழ்நாடு கல்வித் துறை சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் நமக்கு இருக்கக்கூடிய வருமானத்திலே 22 சதவீதம் கல்விக்காக ஒதுக்கியிருந்தாலும்கூட பல கிராமங்களிலே பல பள்ளிக்கூடங்களைத் திறந்திருந்தாலும்கூட ஆசிரியர்களை அதிகரித்திருந்தாலும் கூட ஒட்டுமொத்தமாக கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்றுதான் நாங்கள் சொல்லுவோம். அதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? கல்வியின் தரம் கீழே போவதற்கு என்ன காரணங்கள் என்பதைபற்றி அது ஆசிரியர்களாக இருக்கலாம், மாணவர்களாக இருக்கலாம், அல்லது வேறு வகையிலே சொல்லாம், நான் அதற்கு யார் காரணம் என்று சொல்வதைவிட அந்தக் காரணங்களைக் கண்டறிவதற்காக கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஒரு ஆய்வுக் குழுவை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள சில தனியார் பள்ளிகளிலே ஆர். எஸ். எஸ். போன்ற மதசார்புள்ள நிறுவனங்களைப் பயன் படுத்திக்கொண்டு பயிற்சிகளைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கோவையிலே உள்ள ஒரு தனியார் பள்ளி, சென்னையிலே உள்ள ஒரு தனியார் பள்ளி இவைகளை எல்லாம் ஆர். எஸ். எஸ். போன்ற நிறுவனங்களைப் பயன் படுத்தி அதற்கு தலைமையாசிரியர்களே தலைமை ஏற்று பயிற்சிகொடுத்து தமிழர்களுக்கு எதிராக, இந்த நாட்டிலே மதசார்பை உருவாக்ககூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே அரசு உடனடியாகக் அப்படிப்பட்ட பயிற்சிகளை தடைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே தொழில் கல்வியை ஊக்குவிப்பதற் காக அரசு அதிகமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண் டிருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகளை நாங்கள் மனதாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். தமிழகத்திலே மாணவர்களுக்கு ஸ்காலர் ஷிப் வருகையை முன்னிட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. குறைந்த வருகை இருக்கின்ற காரணத்தினால் கொடுக்கக் கூடிய ஸ்காலர்ஷிப் அந்த அடிப்படையிலே குறைக்கப் படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு வருகையை அடிப்படையாகக் கொள்ளாமல் அவர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையை கணக்கிலேகொண்டு அவர்கள் பள்ளிக்கு வரக்கூடிய சூழ்நிலையினைக் கணக்கிலே கொண்டு அதற்கேற்ப கொடுக்கின்ற முறையிலே மாற்றிய மைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் ஆய்வுக்கூடங்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்திக்கொடுக்க அரசு நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றுகிறபோது சர்க்கார் பள்ளிகளாக இருந்தால் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் மேல்நிலைப்பள்ளியாக மாற்றியமைக்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகளில் வேண்டுமானால் நீங்கள் 25 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் அரசுப் பள்ளிகளிலே கேட்டால் பல கிராமங்களிலே உள்ள மக்கள் கூலி விவசாயிகளாக இருக்கிறார்கள், அவர்களால் அந்த ரூபாயைக் கொடுக்க முடியாது. ஆகவே, அரசுப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாவதற்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ப தைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறபோது அந் தப் பணத்தை தனியார் பள்ளிகள், கல்லூரிகள் வங்கியிலே போட்டுவிடுகின்றன. அப்படிப் போட்டுக்கொண்டு ஆண்டு

இறுதியில்தான் அந்தப் பணத்தை மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள், வட்டிப் பணத்தை அந்த அந்த நிர்வாகத்தினரே எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் ஆண்டு ஆரம்பத்திலேயே அதைக் கொடுக்கச் செய்ய வேண்டும். அப்படிக் கொடுக்காத அந்தப் பள்ளி அல்லது கல்லூரி ஆசிரியர்கள் அல்லது தலைமையாசிரியர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுக் கல்லூரிகளைக் காட்டிலும் தனியார் கல்லூரிகளிலே ஸ்பெஷல் பீஸ் அதிகமாக வாங்குகிறார்கள்.

[பிற்பகல் 12-50]

ஸ்பெஷல்ஃபீஸ் என்று வாங்குவதோடு மட்டுமல்லாமல் வேறுவிதமாகப் பல வகைகளிலேயும் அவர்கள் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கோவை கொங்குநாடு அறிவியல் கல்லூரியில் ஒரு மாணவன் சேர வேண்டுமென்றால் முதலில் 500 ரூபாயோ அல்லது 1,000 ரூபாயோ கொடுத்தால்தான் அவனுக்கு அட்மிஷன் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருக்கிறது. கோவையிலே உள்ள பல கல்லூரிகள் டிரஸ்ட் என்ற பெயரில் ஜி.ஆர்.ஜி., ஜி.கே.டி., என்று பெரிய பெரிய பஞ்சாலைகளை வைத்து நடத்துகின்றவர்கள் அவைகளில் வரும் இலாபத்தைக் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவைகளில் போட்டு அவற்றை நடத்தும் முறையிலே, அந்த நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில் அதிகப்படியான பணத்தை வசூலிக்கின்ற சூழ்நிலையிருக்கிறது. டிரஸ்ட் என்ற பெயரால் இப்படிக் கொள்ளையடிக்கும் நிறுவனங்களின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். டிரஸ்ட் என்ற பெயரால் தனியார் நடத்தும் கல்லூரிகள், பள்ளிகளை ஒட்டுமொத்தமாக அரசே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மைனாரிட்டி என்ற பெயரால் கல்லூரிகளையும் பள்ளிகளையும் நடத்துகிறார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே அவர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்தால் அவர்களுக்கு வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்காட முடியாத அவல நிலைமை இருக்கிறது. உதாரணமாக, ஈரோட்டில் விஞ்சுநாயக்கர் என்ற கல்விக் கூடத்தில் பணியாற்றிய தமிழாசிரியர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். அவர் வழக்கு மன்றத்திற்கும் செல்ல முடியாமல், வேறு நடவடிக்கைகளையும் எடுக்க முடியாமல் சூழ்நிலையிருக்கிறது. இப்படி மைனாரிட்டி என்ற பெயரால் ஆசிரியர் சமுதாயம் கொடுமைப்படுத்தப்படுகிறது.

1981 ஏப்ரல் 24] [திரு. எம். ஆறுமுகம்]

பெரியநாயக்கன் பாளையத்தில் 12 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில்லை. வவுச்சரிலே 750 ரூபாய் பெற்றுக்கொண்டதாகக் கையெழுத்து வாங்கிக்கொள்கிறார்கள்; ஆனால் அவர்களிடத்திலே 300 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். அந்த 300 ரூபாயை அவர்கள் வாங்க மறுத்தால் உடனடியாக பள்ளியிலிருந்தோ அல்லது கல்லூரியிலிருந்தோ வேலைநீக்கம் செய்யப்படும் சூழ்நிலை இருக்கிறது. தமிழகம் முழுவதும் உள்ள தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் இப்படிப்பட்ட நிலைமைகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் தடுத்துநிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல முனிசிபாலிட்டிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் அரசுப் பணியாளர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவைகளில் பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அப்படி நடைபெற்ற போராட்டங்களில் தமிழக கல்வியமைச்சரவர்கள் முன்னின்று, தலையிட்டு, சுமுகமான முறையிலே பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் மூலம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வைஸ்-சான்சலர் அவர்கள் அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்தவில்லை. அந்த ஒப்பந்தத்தை அமல் நடத்த வேண்டுமென்று ஆசிரியர்கள் கேட்கின்ற நேரத்தில், அவர்களைப் பார்த்து அந்த வைஸ்-சான்சலர் கேட்கிறார், இது என்ன ஈரான்-இராக் ஒப்பந்தமா, இதை அமல் நடத்த என்று கேட்கின்ற அவல நிலைமை இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு, முடித்து வைக்கப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்திற்கு என்னதான் மரியாதை இருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் பள்ளிக் கட்டிடங்கள் மோசமான நிலையில் உள்ளன. ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற பல பள்ளிக்கூடங்களில் சரியான வகையில் கழிவிடங்கள் இல்லை. அந்த மாணவர்களும், மாணவிகளும் கழிவிடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் காடுகளை நோக்கித்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் உயர்நிலைப்பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் குறைந்த பட்சம் கழிப்பிடங்களை அமைத்துத் தர வேண்டும்; அத்துடன் விளையாட்டு மைதானங்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி அளிப்பதைப்போன்று ஆசிரியர்களுக்கும் வைத்திய வசதிபோன்றவைகளை அளிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி கொடுப்பதைப்போன்று, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் போன்றவைகளில் அரசாங்கமே வைத்திய வசதி செய்யும் முறையிலே ஆசிரியர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க, ஈ.எஸ்.ஐ. போன்றவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் வைத்திருக்கும் நீண்ட நாள் கோரிக்கை என்ன வென்றால், இறந்தால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டு மென்பது. அந்தப் பணத்தை நீங்களாகக் கொடுக்க வேண்டாம்; ஆசிரியர்கள் பெறும் சம்பளத்திலிருந்து மாதத்திற்கு 5 ரூபாய் வீதம் பிடித்தம் செய்தால், தமிழகம் முழுவதும் இருக்கின்ற என்.ஜி.ஓ.-க்கள் ஏழரை இலட்சம் பேர் இருக்கிறார்கள்; அவர்களுடைய சம்பளத்திலிருந்து மாதம் 5 ரூபாய் பிடித்தம் செய்தால் உங்களுக்கு அந்தப் பணம் நஷ்டமாகாது; பிடித்தம் செய்த பணத்தை வைத்துக்கொண்டு வேலையிலிருந்து ஓய்வு பெறுகின்ற அல்லது இறந்து விடுகின்ற நேரத்தில் 10,000 ரூபாய் கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஐ.டி.ஐ. படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்குப் போதுமான கருவிகளும், இயந்திரங்களும் இல்லை. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஸ்காலர்ஷிப், ஸ்டைஃபண்ட் போதாமல் இருக்கிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளிகளிலே பகுதிநேர ஆசிரியர்களாகப் பணிபுரியக் கூடியவர்களுக்கு கன்சாலிடேட்டட் பே என்று ரூ. 150 மட்டுமே கொடுக்கிறார்கள். திருமணமாகி குடும்பம் நடத்துகிறவர்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, ரூ. 150 போதுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, பகுதிநேர ஊழியர்களை, முழு நேர ஊழியர்களாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல், சம்பளத்தையும் அதிகமாக்கித் தரவேண்டும்.

அடுத்து, தொல்பொருள் ஆராய்ச்சித் துறை என்ற ஒரு துறை இருக்கிறது. தமிழக வரலாற்றை அறிந்துகொள்ள சான்றுகளாக இருப்பவை கல்வெட்டுகளே. அதைத் தமிழக அரசு வெளியிடவில்லை. மத்திய அரசுடைய தொல்பொருள் துறை கல்வெட்டுகளைப் படி எடுத்து வைத்துள்ளது. மத்திய அரசிடமிருந்து கேட்டு அதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகத் துறையைப் பொறுத்தமட்டிலும் அரசு அதிகாரிகள் உத்தரவு போட்டு, புதிதாக வெளிவரக்கூடிய நூல்களை நூலகத்திலே வாங்கி வைப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. 1968 ஆம் ஆண்டிலே புதிதாக வெளியீடு வந்தால், 1970 ஆம் ஆண்டு தான் உத்தரவு போடுகிறார்கள். அதற்குள்ளாக, நல்ல வெளியீடுகள் வந்து முடிந்து விடுகின்றன. ஆகவே, அந்த நிலையைப் போக்கி, வெளிவரக்கூடிய அருமையான [redacted]ல்களையெல்லாம் உடனுக்குடன் உத்தரவு போட்டு வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவையிலே, கல்விப் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், கல்வித் துறையிலே பல மாறுதல் களைச் செய்துள்ளார்கள். அந்தப் புரட்சிகரமான மாறுதல்களை இன்று கல்லூரி பேராசிரியர்களும், கல்லூரி விரிவுரையாளர்களும், கற்றுத் தேர்ந்த ஆசிரியப் பெருமக்களும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

1981—82 -வது ஆண்டிலே, ரூ. 249 கோடி கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலே, பள்ளிக் கல்விக்காக ரூ. 207 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதை நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

1981—82 ஆம் ஆண்டிலே, 1,000 இடைநிலை ஆசிரியர் களை நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் நியமிக்க உள்ளார்கள். 250 பி.எட். படித்தவர்களும் 250 உடற் பயிற்சி ஆசிரியர்களும், 250 பகுதி நேர ஆசிரியர்கள், நெசவு ஆசிரியர்கள் பதவிகள் உயர்த்தப்பட அரசு ஆணை பிறப்பித்துள் ளது. அதை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்தபடியாக ஆரம்பக் கல்வி. ஆரம்பக் கல்வியின் தரம் உயர வேண்டுமானால், ஹையர் கிரேட், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அடிக்கடி பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். அந்தப் பயிற்சிகள் அளிக்கப்படும்போது, அரசு ஊழியர்களுக்குள்ள விதிகள் புறக்கணிக்கப்பட்டு, அவர்களுக்கு அலவன்சுகள் சரியாக தரப்படவில்லை. அதனால், அவர்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டு, அந்தக் கல்வியில் அவர்களுக்கு நாட்டமில்லாமல் போய்விடுகிறது. அரசு உடனே அதில் தனிக் கவனம் செலுத்தி, அலவன்சஸ் நல்லமுறையில் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக, கிராமப்புறத்திலே ஆரம்பக் கல்வியின் தரம் உயர வேண்டுமானால், கிராமப்புற ஆசிரியர்களுக்குக் கவர்ச்சிகரமான சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். கிராம ஈட்டுப்படி, நகர ஈட்டுப்படிக்குச் சமமாக வழங்கப்பட வேண்டும். இலவசக் குடியிருப்புகள் கிராமத்திலே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும்போது, வாடகை வீடுகள் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த வாடகை வீடுகளுக்கான தொகையைச் சம்பளத்திலே பிடித்துக் கொண்டு, அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக மேல்நிலைப்பள்ளி. மேல்நிலைப் பள்ளி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு இருந்தாக வேண்டும். மேல்நிலைப் பள்ளியிலே புதிதாக தொழில் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொழில் பிரிவை எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு என்ன வேலைக்குச் செல்வது என்று தெரியவில்லை. ஆகவே, எந்தத் தொழில் பிரிவு, எந்த வேலைக்குத் தகுதியானது என்பதை அரசு ஆணைகள் மூலம் தெளிவுபடுத்த வேண்டும். தற்போது, தொழில் கல்வி பயின்ற மாணவர்கள் இந்த வேலைக்குத்தான் தகுதிதானா என்று தெரியாமல் அவதிப்படுகிறார்கள்.

தமிழகத்தில், பிளஸ் 2 வகுப்புகளில், பெண்களுக்கு தமிழ் மீடியத்தில் வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இராஜபாளையத்தில் அந்த வகுப்புகள் இல்லாமையால் அருகிலே உள்ள ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை அந்தப் பெண்களுக்கு இருக்கிறது. எனவே, இராஜபாளையத்தில் தனியாக, பெண்கள் படிக்க, தமிழ் மீடியத்தில் வகுப்புகள் ஏற்படுத்தி வாய்ப்புஅளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக 500 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதே போன்று ஒவ்வொரு சப்ஜக்ட்வாரியாக ஆங்கிலம், அறிவியல், வரலாறு, கணிதம் போன்றவைகளுக்கும் தனியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியிலே பணிகள் அதிகமாக உள்ளன. அங்கே பணிபுரிகிற தலைமைஆசிரியர்களும் உதவி ஆசிரியர்களும் அந்தப் பணியினை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந் நிலையில் அவர்கள் நல்லமுறையில் கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1-00]

அதற்கு உடனடியாக கிளார்க்குகளை, எழுத்தர்களை நியமிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கல்லூரிக் கல்வி. கல்லூரியிலே 75 சத விகிதம் மதிப்பெண் பெற்ற மாணவர்களைச் சேர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிற்கல்வி. தொழிற்கல்வி சம்பந்தமாக மருத்துவம், விவசாயம், பொறியியல் பாடங்களை பெண் களுக்கும் சரிசமமாக ஒதுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிதாக அரசு அனுமதிக்கும் பணியிடங்கள் ஜுன் மாதமே ஆரம்பிக்கப்பட்டு, ஜுலை மாதம் முதல்வாரத்திற்குள் நிரப்ப உடனடி ஆணைகள் பிறப்பிக்கப்படவேண்டும். திரு ரமணி அவர்களும் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போதும் இது பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசுத் துறையிலே நியமிக்கப் படுவதற்காக வேண்டிய ஆணைகள் இடப்பட்டும், ஊராட்சி ஒன்றியங்கள் காலதாமதம் செய்கின்ற காரணத்தினாலே அந்தப் பணி இடங்கள் 6 மாத காலம் நிரப்பப்படாமல், மீண்டும் அரசுத் துறைக்குச் சரண்டர் பண்ணும் முறை இருக் கின்றது. அந்த முறை தவிர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் ஜில்லா போர்டுகளை ஒழித்து மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகளை அரசு உயர்நிலைப்பள்ளிகள் என்று அறிவித்து விட்டு, 18 ஆண்டுகளுக்கு பின்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எவ்வளவோ இன்னல்களை எதிர்த்து தற்சமயம், அரசு பள்ளி ஆசிரியர்களுக்குஉள்ள சலுகைகளை மாவட்டக் கழகஆசிரியர்களுக்கும் வழங்க உத்திரவிட்டிருக்கிறார் கள் அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கறேன்.

இந்தப் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு அலுவலர் களாக நியமிக்கப்பட்டிருக்கிற நிலையில் அவர்களுக்கும் இந்த நிலை ஏற்படாமல் தவிர்க்க, ஆரம்பித்திலேயே மிகத் தெளிவாக வரையறுத்து எல்லாச் சலுகைகளும் பதவி உயர்வுகளும் கிடைக் கத் தக்க வகையில் ஆணைகளைப் பிறப்பிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியின் தரம் உயர. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 ஆவது வகுப்புப் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றுவது என்று முடிவு செய்கின்ற திட்டத்தைப் பெரிதும் வரவேற்கிறேன். அதை உடனடியாக அமல் நடத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சில தனியார் பள்ளி நிர்வாகங்கள் ஆசிரியர்கள் பிரச்சினைகளில் ஜாதி அடிப்படையில் மைனாரிட்டி என்று நீதி மன்றங்களில் தடை உத்தரவுகள் பெற்றுள்ளன. மத அடிப்படையில்தான், மைனாரிட்டி பாதுகாப்பு அரசியல் சட்டத்தில் உள்ளதே தவிர, ஜாதி அடிப்படையில் இல்லை. இதனால் ஏழை ஆசிரியப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். அதைப்போக்க தனியார் பள்ளிகளுக்கு 5 கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகளாவன, பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளை பொதுமக்களிடம் நன்கொடைகள் மூலம் அதிகரிக்க; மாணவர்களின் சேர்க்கை அதிகரிக்க; கல்வியின் அவசியத்தைப் பொது மக்களிடையே பரப்ப; ஆசிரியர்களுக்கு வேண்டிய தார்மீக வசதிகள் செய்து கொடுக்க; ஏழை மாணவர்களுக்கு உதவ; இப்படிப்பட்ட அதிகாரங்கள் உடனடியாக நீக்கப்பட்டு கல்வித் துறையின் நேரடிப் பார்வையில் நடைபெற வேண்டும். தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களின் நியமனம் கல்வித் துறையால் பூர்த்தி செய்யப்படவேண்டும். தனியார் பள்ளிகளில் சம்பளம் ஆசிரியர்களுக்கு கல்வித் துறையினரால் நேரடியாக வழங்கப்படவேண்டும். பதவி உயர்வு, பதவி நீக்கம் பதவிக் குறைப்பு போன்ற ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளை கல்வித் துறையினர்தான் செய்ய வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளை அமுல்நடத்த உடனடியாக உத்தரவிட்டால் கல்வித் தரம் உயர், கல்வியில் உண்மையான ஆர்வம் கொண்டு உழைத்திட கல்வி முன்னேற்றமே எங்கள் பணி என்று சொல்லிக் கொண்டிருக்கும் தனியார் பள்ளி நிறுவனங்கள் எப்படி பணத்திற்கும், பதவிக்கும் மட்டுமே உள்ள நிறுவனங்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே ஒரு சில மேல் நிலைப் பள்ளிகளில்—குறிப்பாக தென்னாங்குளம் என்று இடத்திலே உள்ள பள்ளியில் பழைய மாணவர்கள் முயற்சியினால் ஒரு கட்டம் கட்டப்பட்டது. அது மிகவும் பழுதுபட்டுவிட்ட காரணத்தினால் உடனடியாக அதனை செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தை துவக்கி இருக்கிறார்கள். நான்பார்மல் எஜூகேஷன் என்று, அதாவது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகையால் புதிதாக ஒரு திட்டத்தை உருவாக்கி உள்ளார்கள். 5 வயதிலிருந்து 11 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு அந்தப் பகுதி நேரங்களிலே ஒருமணி அளவில் புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்குக் கல்வி கற்பிக்க இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளதை இந்நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

அடுத்தபடியாக சிவகாசியிலே ஒரு தனியார் துறையின் மூலம் பாலிடெக்னிக் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. அதற்கு அரசு அங்கீகாரம் அளித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்புப் தந்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் சார்ந்து இருக்கின்ற ஜனதா கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். முதன் முதலாக இங்கே நான் சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்கள் இன்றைக்குஇருக்கின்றநிலைமை குறித்துநான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகம் முழுவதும் இருக்கின்ற தொடக்கப்பள்ளி, அதிலும் குறிப்பாக அரசுத் தொடக்கப்பள்ளி, நடு நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு ஒழுங்கான கட்டிடங்கள் இருக்கின்றனவா என்றால் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னால் அரசு பள்ளிகூடங்களுக்கு எல்லாம் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒரு கழகம் அமைத்து, அந்தக் கழகத்தின் மூலமாகக் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த முயற்சிகள் எந்த நிலையில் இப்போது இருக்கின்றன என்பதை தயவு செய்து அரசாங்கத்தின் சார்பில் இங்கே விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு எத்தனையோ வசதிகளை நாம் செய்து கொண்டு போனாலும், வருஷா வருஷம் கல்விக்காக பணத்தை அதிகமான அளவில் ஒதுக்கிக் கொண்டு போனாலும், அந்தப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாத காரணத்தால், அந்த மாணவர்கள் சீரான முறையில் கல்வியைப் பயிலுவதற்கு இயலாமல் இருக்கின்றனர். ஆகவே, கட்டிடங்கள் கட்டாமல் இருக்கிற காலம் வரையில் கல்விப் பயிற்சி சிறந்த முறையில் பயிற்றுவிப்பதாக ஆகாது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரம் குறித்து பல நேரங்களில் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் அது ஒழுங்காகச செயல்படுத்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது புதிதாக ஒரு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அரசு தேர்வுத் துறை என்று ஒரு துறை தொடங்கப்பட்டு, அது இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. அந்தத் துறையின் சார்பில் ஏறத்தாழ 40-க்கு மேற்பட்ட தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்றைக்கு அதை மண்டலங்களாகப் பிரித்து மதுரை மண்டலம், கோவை மண்டலம் என்று ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக்

கொள்கை விளக்கக் குறிப்பில் கூட அது குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டு மதுரையிலும், கோவையிலும், ரீஜினல் ஆபீஸ் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த அக்டோபர் மாதமே அதற்கான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, உத்தரவுகள் வெளியிடப்பட்டு, அக்டோபர் மாதமே அதற்கான பணியாளர்கள் போடவேண்டிய நிலை இருந்தும், இதுவரையிலும் போடப்படாதது மட்டுமல்ல, இப்போது ஆத்திர கோலத்தில், அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தாற்போல், அதற்காகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் உடனே போக வேண்டும் என்று சொல்லி, அவர்களை ரிலீவ் செய்கிறபோது—ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுகிற 7 நாள் ஜாயினிங் டைம் கொடுக்கப்படாமல் டிராவலிங் அலவன்சு அட்வான்ஸ் கொடுக்கப்படாமல் அவர்கள் அனுப்பப்பட்டு இருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலை ஏற்பட்ட பின்பும் அந்த மண்டலங்களாகப் பிரிக்கப்பட்ட பின்பு, அந்த மண்டலங்களில் என்ன வேலை நடைபெறவேண்டும் என்பது குறித்து அங்கேயுள்ள உயர்மட்ட அதிகாரிகளுக்கு இன்னும் சரியாகப் புரியாத நிலைமை இருக்கிறது. உண்மையிலேயே இந்த மண்டலங்கள் தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த மண்டலங்கள் ஆரம்பிக்கப்படுகிற செயற்குறிப்பு ஆய்வு செய்கிறபோது இதையெல்லாம் கருதிப் பார்த்து இருக்கவேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் டைரக்டர் ஆப் டெக்னிகல் எடுகேஷன் ஆகிய துறைகள் கூட பெரிய அளவில் இப்படிப்பட்ட தேர்வுகளை நடத்துகிறார்கள். அங்கேயெல்லாம் இதேபோன்ற மண்டலங்கள் துவங்கலாமா என்ற பிரச்னை ஆய்வு செய்யப்பட்டபோது, அது நடைமுறைக்குச் சாத்தியப்பட்டு வராத ஒன்று என்று அரசுத் தரப்பில் இருந்து சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்தத் துறையில் அதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். என்னைப்பொறுத்தவரையில், நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மண்டலங்கள் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால், குழப்பம் அரசுக்கு அதிக செலவு ஏற்படுமே தவிர, நாம் என்ன பலன் இதனால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோமோ அது நிச்சியமாக வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, நான் இங்கே கேட்க விரும்புவது அந்த மண்டலங்கள் செய்யப்போகின்ற பணிகள் என்ன? அவற்றைத் தீவிரமாக தீர்க்கமாக ஆலோசனை செய்யாமல், அவசரக் கோலத்தில் அதை மண்டலங்களாகப் பிரித்து இருப்பதால், ஏற்கனவே அந்தத் துறையில் ஏற்பட்டு இருக்கும் பல கோளாறுகள், குளறுபடிகள் மேலும் பரவலாக ஆவதற்கு வழி வகுக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதைத் தடுப்பதற்கான முழு முயற்சியும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. பொ. விஜயராகவன்]

கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகத்தின் கல்வித் தரம் தாழ்ந்து கொண்டு போகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்குப் பல்வேறு சான்றுகளை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் அதை விளக்கிக்கொண்டு போகமுடியாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தைப் பற்றி, பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பற்றிஏராளமான புகார்கள் வந்து இருக்கின்றன. நேற்றைக்கு முந்தினம் கூட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் சென்னை பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டு இருக்கும் குறைபாடுகள் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். துணை வேந்தர் அவர்கள் எந்த அளவிற்கு ஒரு வேந்தராக மாறி, யதேச்சாதிகாரமான முறையில் நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்று பல சம்பவங்களை எடுத்துச்சொல்லி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஏராளமான புகார்கள் துணை வேந்தர் மீது கொடுக்கப்பட்டு இருந்தாலும், அதை அரசாங்கம் கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன் சென்னைப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே முதன்முதலாக முன்னோடியாகத் துவங்கப்பட்ட பல்கலைக்கழகம். அதனுடைய நிலைமை தாழ்ந்து கொண்டு போகிறது. ஆகவே, அதைப் பற்றித் தீவிரமாக விசாரித்து அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசுத் துறையில் ஒரு விசாரணை நடத்துவதற்கு அரசு தயாராக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். சென்னை, புதுக் கல்லூரியில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு, இன்றைக்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. பிரச்சினைகள் தீர்ந்துவிட்ட பின்னாலும் புகைமண்டலம் அங்கே மண்டிக்கிடக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையில், சென்னை, புதுக்கல்லூரியின் நிர்வாகம் அதற்கு ஒதுக்கப்பட்டப் பணத்தை ஒழுங்காகச் செலவிட முன்வராததால் ஆசிரியர்கள் எல்லாம் பெரும் அவதிக்குள்ளாகிற சூழ்நிலை இருக்கிறது. அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் இலட்சுமிபுரம் கலை, மற்றும் விஞ்ஞானக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அது ஒரு தனியார் கல்லூரி. இன்றைக்கு தற்காலிகமாக அரசு அந்தக் கல்லூரியை ஏற்று நடத்துகிறது. அதனுடைய நிர்வாகத்திலே இரண்டு வகுப்பினர் இருக்கிறார்கள். இந்த இருவரிலும் பெரும்பாலானவர்கள் 100-க்கு 95-க்கு மேற்பட்டவர்கள் அரசாங்கமே அந்தக் கல்லூரியை ஏற்று நடத்த வேண்டுமென்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தக் கல்லூரியை நிரந்தரமாக ஏற்று, அரசு கல்லூரியே இல்லாத எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் அதை ஒரு அரசுத்துறை கல்லூரியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கூட அந்தக் கல்லூரியை நடத்துகின்ற முறையில் ஏராளமான குளறுபடிகள் இருக்கின்றன. அங்கே அதிகாரத்தில் இருக்கிற அதிகாரிகள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலியில் இருக்கிற டெபுடி டைரக்டரின் தான் தோன்றித்தனத்தினால் இந்த குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபற்றி இந்த அரசு நல்ல முறையில் விசாரித்து, சுமுகமான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சில பிரச்சினைகளை எடுத்து வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை கல்வி மாவட்டத்தில் இருக்கிற நட்டாலம் அரசு உயர்நிலைப் பள்ளியையும், மத்தியோடு அரசு உயர்நிலைப் பள்ளியையும் அரசு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல குழித்துறை கல்வி மாவட்டத்தில் காஞ்சிரகோடு அரசு நடுநிலைப் பள்ளி, அனந்தமங்கலம் அரசு நடுநிலைப் பள்ளி, நல்லூர் அரசு நடுநிலைப் பள்ளி, உதயமார்த்தாண்டம் அரசு நடுநிலைப்பள்ளி ஆகிய அரசு நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர் நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

'திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலே மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இந்த நிதி ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அதன்மீது, அதை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இன்றையதினம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறத்தாழ 249 கோடியில் பள்ளிக் கல்விக்காக 207 கோடி ரூபாயும் மீதமுள்ள தொகை கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்விக்கும் ஒதுக்கியிருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன்.

இன்றையதினம் இந்த மாமன்றத்திலே பல கருத்துக்களை பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னாலும், நான் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று இருந்தாலும் நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினால் ஒருசில யோசனைகளை மட்டும், என் மனதிலே பட்டதை எடுத்துச் சொல்வதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

இந்தியா சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்திய மக்கள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாழ வேண்டுமென்றால் இந்திய மக்கள் அனைவருக்கும் சம கல்வி வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் சுதந்திரம் கேட்டோம். அதனால் தான், மகாகவி பாரதியார்கூட

''வீதிதோறும் இரண்டொரு பள்ளி நாடு முற்றிலும் உள்ளன.
ஊர்கள் நகர்கள் எங்கும் பல பல பள்ளி''

என்று சுதந்திரத்திற்கு முன்னால் கல்விச் சாலைகள் வைப்போம் எனப் பாடினார். ஆனால், சுதந்திரம் வந்த பிறகு எவ்வளவு கல்விச் சாலைகள் ஏற்பட்டன என்பதை எண்ணிப் பார்த்தால் இங்கே குறைவாகத்தான் இருக்கின்றன என்பதை எல்லோரும் அறிவோம்.

இன்றையதினம் புரட்சித் தலைவர் ஆட்சியில் தெருவெங்கும் பள்ளிகள் என்பதைச் செய்வோமோ இல்லையோ, ஆனால் இருந்த பள்ளிகளை எல்லாம் புதுப்பித்து, அவைகளுக்கு நிரந்தரமான நல்ல கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறோம்; மேலும் கட்டித் தந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைய தினம் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும் இதர திட்டங்கள் மூலமும் கல்விக் கூடங்களைக் கட்டுவதிலே முன்னுரிமை கொடுத்து கட்டி வருகிறோம். அதிலும், குறிப்பாக நிரந்தரக் கட்டிடம் வேண்டுமென்ற முறையிலே இன்றையதினம் கல்விக்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பது அனைவருக்கும் தெரியும். இந்த ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சில திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சில அரசு ஆணைகளை இங்கே கொடுத்தார்கள். அதாவது, தனியார் பள்ளிகளில் எல்லாம் நியமிக்கின்ற பணியாளர்களைப் பொறுத்த வரையில் வேலைவாய்ப்பலுவலகங்களின் மூலமாகத் தேர்ந்து எடுத்துதான் நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்படி நியமனம் செய்கின்றபோது 18 விழுக்காடு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், 50 விழுக்காட்டினை பிற்பட்டவர்களுக்கும் ஒதுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவரின் அரசால் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆனால், இன்றைய தினம் அந்த ஆணையினைத் தனியார் கல்வி நிலையங்கள் பின்பற்றுகின்றதா என்றால் இல்லை. அதற்குக் காரணம் மக்களின் நன்மைக்காகவும், கல்வியினைப்

போதிக்க வேண்டும் என்ற சேவை மனப்பான்மையுடன் ஏற்படுத்தப்பட்ட கல்வி நிலையங்கள் எல்லாம் இன்றைய தினம் வியாபார நோக்கத்திலே சென்று கொண்டிருப்பதுதான் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த ஆணையைப் பூர்த்தி செய்வதைப் பொறுத்த வரையில் சில தனியார் பள்ளிகள் சில யோசனைகளைக் கையாளு கிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளியிலே நிரந்தரமாக ஒரு ஆசிரியர் பதவி இருக்கின்றது என்றால் இந்த ஆணையின் பிரகாரம் அதைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கோ அல்லது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கோ கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அவ்வாறு கொடுப்பதற்குப் பதிலாக அங்கே பணியாற்றுகின்ற ஒரு ஆசிரியரை மூன்று மாதத்திற்கு விடுப்பிலே செல்லச் சொல்லிவிட்டு அந்தப் பதவியிலே தற்காலிகமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரையோ அல்லது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரையோ நியமித்து விடுகிறார்கள். நிரந்தரமான இடத்தை பிறகு இவர்களுக்கு வேண்டியவர்களுக்கு, அவர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வரவழைத்து கொடுத்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் இந்த அரசின் ஆணை மறைமுகமாக மீறப்படுகின்றது. ஆகவே, இந்த அரசின் ஆணையை முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையில் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்றால் அரசின் ஆணையை மீறுகின்ற கல்வி நிலையங்களை சரியான சட்டத்தின் மூலம் இந்த அரசு கண்காணிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தாலும் கடைசியாக தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக நமது தமிழக அரசு தஞ்சையிலே அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆரம்ப விழாவை நடத்த இருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன். அந்த விழாவினைத் திறம்பட நல்ல முறையிலே நடத்தி தஞ்சைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை நிரந்தரக் கல்விக் கூடமாக தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியா பூராவுக்குமே ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981—82ஆம் ஆண்டு கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். பொதுவாக தமிழ்நாடு கல்வி வளர்ச்சியிலே முன்னேறி இருக்கின்றது என்றால் இது தலைவர் காமராஜரின் முன்னோடித் திட்டத்தின்

காரணமாகத்தான். தற்போது எல்லோரும் படிக்கக்கூடியவாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். இருந்தாலும், எழுதப் படிக்கத் தெரியாத தொகை கணிசமாகக் குறையவில்லை. இது குறைய வேண்டுமானால் கல்வி இலாக்காவின் தீவிர கண்காணிப்பும் நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு ரூபாய் 118 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் நிரந்தரமான பள்ளிக் கட்டிடங்கள் கட்டியிருந்தும் மாணவர்கள் அதிகமாக வருவதில்லை. ஒவ்வொரு பள்ளியிலும் 50 சதவிகித பிள்ளைகள் கூட வந்து படிப்பதில்லை. கட்டாயக்கல்வி முறை அமுலில் இருந்தும் அது செயல்படவில்லை. இதற்குக் காரணம் ஆசிரியர்கள் கிராமங்களில் தங்கி பணியாற்றுவதில்லை. அவர்கள் தங்குவதற்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டப்பட வேண்டும். இதற்கான ஒரு நிரந்தரத் திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும். பள்ளி சேர்க்கைப் பதிவேட்டின்படி மாணவர்களின் வருகை இருப்பதில்லை. கிராமங்களில் மாணவர்கள்-ஆசிரியர்கள் விகிதாச்சாரப்படி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தும், இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் போதுமான அளவிலே மாணவர்களின் எண்ணிக்கை இருப்பது இல்லை. நகர்புறங்களில் மட்டும்தான் மாணவர்கள் தொகை அதிகமாக இருக்கின்றது. ஆகவே, கிராமப்புறங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கேற்ப மணவர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்ற வகையிலே கல்வி இலாக்கா கண்காணித்து கட்டாயக் கல்வி முறையை திறமையாகச் செயல்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிய உணவிற்காக கேர் நிறுவனம் 50 சதவீதம் உதவித் தொகை தருகின்றது. இந்த உதவியை நிரந்தரமாக எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஒவ்வொரு கிராமத்திலும் அந்தப் பள்ளியின் மதிய உணவிற்காக கிராமங்களிலுள்ள உபரி நிலங்களை பள்ளிக்கு உடமையாக்க வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி போதுமானதாக இல்லை. தற்போது மானியத்தில் ஒதுக்கி இருக்கும் பராமரிப்புத் தொகை பள்ளிக் கட்டிடங்களை வெள்ளை அடிப்பதற்குக் கூட போதுமானதாக இல்லை. எல்லாப் பள்ளிகளையும் பராமரிப்பதற்குக் குறைந்தது 7 கோடி ரூபாயாவது வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைப் பொறுத்த வரையில் 70 இலட்சம் ரூபாய் என்று சாங்ஷன் செய்து பிறகு 90 இலட்சம் என்ற அளவிற்கு உயர்த்தி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–20)

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பழுதடைந்து விழுந்து விடக்கூடிய நிலையில் உள்ளது. உதாரணமாக எனது பகுதியிலுள்ள திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியின் கட்டிடங்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. ஒன்பது வகுப்பறைகள் கொண்ட ஓடு போட்ட கட்டிடத்தை ரிப்பேர் செய்ய ரூபாய் 29,000சாங்ஷன் செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டு வேலைகள் தொடங்கியவுடன் திடீரென்று வேலைகள் நிறுத்தப்பட்டு விட்டன. காரணம் என்னவென்று கேட்டபோது, பழுது பார்க்கப்படுவதற்காக ஒதுக்கப் பெற்ற தொகை, இந்தப் பள்ளிக்கு இல்லையென்றும், அது பள்ளிக்கொண்டா உயர்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால் வேலையினை உடனடியாக நிறுத்தச் சொல்லிவிட்டார்கள் என்றும் சொல்கிறார்கள். ஏன் இந்த முரணான செயல் என்று தெரியவில்லை.

தற்போது இந்த பள்ளியில் சுமார் 1,400 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த எண்ணிக்கை இவ்வாண்டு நிச்சயமாகக் கூடுதலாகும். இந்தப் பள்ளியில் சுமார் 700 மாணவர்களுக்கு இடவசதி இருக்கிறது. எப்படி இந்தப் பள்ளியில் 1,400 மாணவர்கள் படிப்பது? ஆகவே கல்வி இலாகாவினர் இந்தப் பள்ளிக்கு கூடுதலாக 700 மாணவர்கள் படிப்பதற்கு, நிரந்தர கட்டிட வசதிகள் செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல எனது தொகுதியிலுள்ள பெண்கள் மேல் உயர்நிலைப் பள்ளியில் நான்கு வகுப்புகள் கொண்ட புதிய வகுப்பறை பழுதடைந்த காரணத்தால் மூடிக் கிடக்கிறது. இப்பள்ளியில் தற்போது சுமார் 800 மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களுக்கான தனி விளையாட்டு திடல்களோ, கழுவிடம் போன்ற வசதிகளோ கிடையாது. இந்த அடிப்படை அத்தியாவசியத் தேவைகளைக் கூட அரசு செய்து தரவில்லை என்றால், மற்ற எந்த வசதி செய்து தந்தாலும் அவைகள் பயன்படாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் ஒவ்வொரு பள்ளியிலும் 3, 4 உடற்பயிற்சி, ஆசிரியர்கள் அல்லது ஆசிரியைகள் நியமிக்கப்பட்டிருந்தும் விளையாட்டுத் திடல்கள் இல்லையென்றால் உடற்பயிற்சி ஆசிரியர்கள் எதற்காக நியமிப்பது என்று புரியவில்லை. ஆசிரியர்களை மூன்று ஆண்டுகளுக்குமேல் ஒரே பள்ளியில் பணி புரிய அனுமதிக்கக் கூடாது. அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றினாலன்றி பள்ளிகளின் படிப்புத் திறன் அதிகரிக்காது. ஆசிரியர்களில் ஏ. விங், பி. விங் என்று இருப்பது போல, மினிஸ்டீரியல் ஸ்டாப்புகளிலும் இந்த பாகுபாடு சில பள்ளிகளில் இருக்கிறது. இதனை நீக்கி சீனியாரிட்டி அடிப்படையில் பாகுபாடு செய்து நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் கல்வி திட்டப்படி 6 ஆவது வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற் கல்வி முறையை போதிக்க வேண்டும். எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ் போன்ற நவீன

தொழிற் கல்விகளை பள்ளிகளில் போதிக்கும் வகையில் அமுலாக்க வேண்டும். தற்போது எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தும், அது பழுது ஏற்பட்டால் பார்ப்பதற்கு ஆள் இல்லாமல் இருக்கிறது. நான் குறிப்பிட்டவாறு எலக்ட்ரிகல் தொழிற்கல்வியை பள்ளிகளில் போதிப்பதால் இந்தக் குறையை நிவர்த்தி செய்யலாம்.

புதியதாக ஆரம்பிக்கப்படும் மேல் நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 25,000 பொது மக்களின் நன்கொடையாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. இதுவரையில் எந்தப் பெரும் பான்மையான பள்ளியும் இந்த நன்கொடையை வசூலித்து முழு மையாக கட்டியதாகத் தகவல் இல்லை. ஆகவே இந்த நிபந்தனை களைக் கைவிட்டு, அரசே மேல்நிலைப் பள்ளிகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கலைக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரிகளிலும் வெவ்வேறான பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டும். ஒரு தாலுக்காவிற்கு ஒரு கல்லூரி ஆரம்பிக்கும் வகையில் அரசு முயற்சி எடுக்க வேண்டும். எனது தொகுதியைச் சுற்றியுள்ள ஐந்து தாலுக்காவில், அதாவது உளுந்தூர்பேட்டை கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், சங்கராபுரம், செஞ்சி ஆகிய இடங்களில் எந்தக் கல்லூரியும் கிடையாது. ஆகவே, இந்த ஐந்து இடங்களுக்கும் பொதுவாக உள்ள திருக்கோவிலூர் அருகிலுள்ள அரியலூரில் ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்குத் தேவையான சுமார் 35 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கூட கல்வி இலாகாவின் பொறுப் பிலேயே உள்ளது.

அடுத்ததாக, இந்த மாவட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருந்தும், சட்டக் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ இல்லை. டாக்டர்கள் சேவை அதிகமாகத் தேவைப்படும் இந் நாளில், உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரியை எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து எலக்ட்ரானிக்ஸ் போன்ற தொழிற் கல்வி பயிற்சி களில் பெண்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பெண்கள் பள்ளிகளிலும் வொகேஷனல் கோர்ஸ்ஸாக இதை சொல்லித் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, பொதுவாக நகரத்தில் வீதிக்கொரு நர்சரிப் பள்ளிக் கூடம் வியாபார நோக்கத்தில், லாப அடிப்படையில் ஆரம்பிக்கப் படுகிறது. இதனை உடனடியாக அரசு தவிர்த்து, எல்லா வசதி களையும் கொண்ட நர்சரி பள்ளிகளுக்கு மாத்திரம் அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நம்முடைய தமிழகத்தில், ஒவ்வொரு பெரிய சிறிய நகரத்திலும், ஊர்களிலும் டியூட்டோரியல் இன்ஸ் டிடியூட் என்று லாப நோக்கத்துடன் சில நிறுவனங்கள் செயல் படுகின்றன. இது முதல் இல்லாத நல்ல வியாபாரமாக அவர் களுக்கு இருக்கிறது. வெளி மாநிலங்களிலுள்ள ஏதாவது ஒரு சர்வ கலாசாலையின் அனுமதி பெற்று பி.ஏ., எம்.ஏ., எம். காம். போன்ற பட்டப் படிப்புகளுக்கு பாடம் நடத்துவதாக போலி விளம்பரங்களைச் செய்கிறார்கள். ஆனால் உண்மையில் இவை களைச் சொல்லிக் கொடுப்பதற்கு வேண்டிய தரமான ஆசிரியர் கள் கிடையாது. இதைவிட அதிசயமான விஷயம் என்னவென் றால் பி.ஏ., எம்.ஏ., பி.காம், எம்.காம்., போன்ற வெளி மாநில பட்டதாரிகளின் படிப்புகளின் இறுதித் தேர்வுகளை இந்த நிறுவனங்களே நடத்தி, பட்டமும் வாங்கித் தருகிறார்கள். இவைகளில் பல ஒழுங்கீனங்கள், பல முறைகேடுகள் நடைபெறு வதாகத் தெரிகிறது.

இதைத் தவிர்க்க, இவைபோன்ற டியூட்டோரியல் நிறுவனங் களைக் கண்காணித்து எந்த பட்டப்படிப்புமே அரசு கண் காணிப்பின் கீழ் அரசு நியமிக்கும் தேர்வு மையங்களில்தான், மாணவர்கள் தேர்வு எழுதி, பட்டம் பெற வேண்டுமென ஆணை யிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது அரசுப் பள்ளிகளில் படிக்கும் பிற்பட்டோர், அரிசன மாணவர்களுக்கு அரசு விடுதிகளில் ஒரு மாணவனுக்கு மாதம் ரூபாய் 60 உணவிற்காக மானியம் தருகிறீர்கள். அதே போல் அரசு உதவி பெறும் விடுதிகளில் ஒரு மாணவனுக்கு ரூபாய் 35 என்று உணவிற்காக மானியம் தருகிறீர்கள். ஏன் இந்த பாகுபாடு? 'அதே அரிசன, பிற்பட்ட மாணவர்கள் தானே இங்கும் தங்குகிறார்கள். இந்த குறைந்த மானியத்தைக் கொண்டு விடுதி பராமரிப்பு, வார்டன் சம்பளம், சமையற்காரர் சம்பளம் போன்றவற்றைக் கொடுத்து நடத்த முடிவதில்லை. ஆகவே அரசு உதவி பெறும் விடுதிக்கும் ஒரு மாணவனுக்கு மாதம் ரூபாய் 60 கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோவிலூர் பெண்கள் பள்ளிக்கு ஜிம்னேஷயத்திற்காக, ரூபாய் 20,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு ப்ளேக் ரவுண்ட் இல்லை. பாய்ஸ் ஸ்கூலில்தான் ப்ளே க்ரவுண்ட் இருக் கிறது. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் சேர்ந்து ஆண்கள், பெண்கள் பள்ளிகளுக்கு சேர்ந்து ஒரு ஜிம்னேஷியம் கட்டுவதாக இருக்கிறார்கள். ஆகவே இந்த 20,000 ரூபாயை எப்படி செலவு செய்ய முடியும் என்று தெரியவில்லை. எனவே, ஆண்கள் பள் ளிக்கு ஒன்றும் பெண்கள் பள்ளிக்கு ஒன்றுமாக விளையாட்டுத் திடல் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24]

திரு. ச. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தளவில் கல்வித் துறை எந்தத் துறைக்கும் சளைக்காத அளவில் நல்ல முறையில் இன்று நடைபெற்று வருகிறது. அதில் என்னுடைய வேண்டுகோளாக சிலவற்றைச் சமர்ப்பிக்கலாம் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டிலே படித்துக் கொண்டிருக்கிற மாணவர்களைப் பொறுத்தளவில் அரசாங்கம் மருத்துவ வசதியைக் கண்டிப்பாக ஆண்டுக்கு இரண்டு முறை மாணவர்களைப் பரிசோதித்து—அவர்களுடைய ப்ளட்டை டெஸ்ட் செய்தும்—அவர்களுக்கு ஒரு மெடிக்கல் கார்ட் தமிழகத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் பயில்கிற மாணவர்களுக்கு அளித்தால் மாணவர்களுக்கு நிச்சயமாக அவர்களுடைய எதிர்காலத்திற்கு மிகவும் நல்ல முறையில் உதவியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தளவில் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் செயல்படுகின்றன. சிலயிடங்களில் பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் பிரிக்கிற நன்கொடைகளை முறையாக வரவு வைத்து வரவு செலவுக் கணக்கு சரியாக இல்லாத அளவில் சிலயிடங்களில் இருந்து புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி அந்த பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் சேகரிக்கிற நன்கொடைகளைப் பொறுத்தவரையில் அதை ஆடிட் செய்ய வேண்டும்,

அடுத்து, விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில், கல்வித்துறையைப் பொறுத்தளவில் கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் விளையாட்டுகள் சொல்லிக்கொடுக்க விளையாட்டுத் துறை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் காலத்திற்கேற்றவாறு நவீன முறையில் காலத்திற்கேற்றவாறு கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை கிராமங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் சொல்லித் தருகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே அந்த விளையாட்டுத் துறையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சியளித்து அவர்கள் மாணவர்களை நல்லமுறையில் பயிற்றுவிப்பதற்காக அவர்களுக்கு அதற்கேற்ப வேண்டிய ஏற்பாடுகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதல் ஆண்டு மாணவர்கள் இரண்டாவது ஆண்டு படிக்கச் செல்லுகிறபோது சில பள்ளிகளைப் பொறுத்தவரையில் அவர்களை திருப்பியனுப்பிவிட்டு, டி.சி. கூட கொடுக்கப்பட்டு திருப்பி மறுமுறை முதல் ஆண்டு எடுத்துக்கொள்கிற மாணவராக சேர்க்கிற பழக்கம் சில பள்ளிகளில் இருக்கின்றன.

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 ஏப்ரல் 24

உதாரணத்திற்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டாரம் மேல்நிலைப் பள்ளியில் 27 மாணவர்கள் பிரித்துவிடப்பட்டு மறுமுறையும் அவர்கள் புதிய மாணவர்களாக எடுக்கப் பட்டிருக்கிறார்கள். எந்தப் பள்ளியிலும் இல்லாத அளவிற்கு இதுபோன்ற செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே கல்வித்துறை இந்தக் குறைகளைக் களைந்து நல்லமுறையில் நடைபெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஐ.டி பயிற்சி பெற, ஆண்டுதோறும் 272 மாணவர்கள் மட்டும் கைவினைஞர்கள் பயிற்சி பெற வசதியுள்ளது.

(பிற்பகல் 1—30)

இந்த ஆறு பயிற்சிகளைப் பெறுவதற்கு மட்டுமே அங்கே வசதி உள்ளது. அந்த வசதிகளை நிச்சயமாக கூடுதலாக ஆக்கித் தரவேண்டும். தற்போது அங்கே 272 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். மேலும் அங்கே கூடுதலாக மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு, அதிகமான மாணவர் களைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தன்பேச்சை பிற்பகல் தொடர்வார். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7 வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு— தொடர்ச்சி
கோரிக்கை எண் 17 கல்வி

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பாலிடெக்னிக் பள்ளி என்பது ஒரே ஒரு பிரிவுதான் இருக்கிறது. அந்த பாலிடெக்னிக்கில் 80 சதவீதத்திற்குக் குறைவான மார்க் விகிதத்தைப் பெற்ற மாணவர்களுக்கு

சேர்ந்து படிக்கிற வாய்ப்பு அங்கே கிடைப்பதில்லை. அந்த வகையிலே கல்லூரியிலே சேருவதற்கு புதிய பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு நிதி வசதிவாய்ப்புகள் இல்லாமல் இருந்தாலும்கூட கன்னியாகுமரி மாவட்டத்திலே ஷிப்டு முறையை அமல்படுத்தி, பாலிடெக்னிக் பள்ளிகளிலே கூடுதலாக மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே குமரி மாவட்டத்திலே ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி ஆகிய இடங்களிலே பெண்களுக்காக தனியாக உயர்நிலைப் பள்ளிகளை அமைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே கன்னியாகுமரி மாவட்டத்திலே தாழங்குடி, இலந்தட்டிவிளை, தோப்பூர் ஆகிய இடங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்றே கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள நடுநிலைப் பள்ளிகளை, குறிப்பாக குலசேகரபுரம், சென்பகராமன்புதூர், மசாதானபுரம், வெள்ளமடம் ஆகிய இடங்களிலே உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைக் பள்ளிகளாக உயர்த்தி அமைத்துத் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதேப்போலவே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் எத்தனையோ கல்லூரிகள் இருந்தாலும்கூட அந்தப் பகுதியிலே இதுவரையிலே அரசினர் கலைக் கல்லூரிகளே அமைக்கப்படவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சென்னைக்கு அடுத்தப்படியாக படித்தவர்கள் நிறைந்த பகுதியாக இருப்பது கன்னியாகுமரி மாவட்டம்தான். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரி ஒன்றை அமையக்கூடிய முறையிலே வருகிறகாலத்திலே நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, புரட்சித் தலைவருடைய அரசு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அமரர் ஜீவா அவர்களுக்கு அவர்களை கௌரவிக்கக் கூடிய வகையிலே நாகர்கோவிலிலே சிலை வைப்பதாக அறிவித்திருக்கிறது. அதற்காக நான் அரசை கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாக வரவேற்று ஆதரித்துப் பாராட்டுகிறேன். அவர்களுடைய குடும்பத்திற்கு பென்ஷன் 500 ரூபாய் மாதம் ஒன்றுக்கு வழங்குகின்ற முறையிலே அரசு உத்திரவு இட்டுள்ளதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் புதுக்கோட்டை மாவட்டத்திலேயும்—இந்த இரண்டு மாவட்டங்களிலேதான் நூலக ஆணைக்குழு ஏற்படுத்தப்படாமல் இருந்தது. இந்த ஆண்டிலே புதுக்கோட்டை மாவட்டத்திலே ஏற்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் நூலக ஆணைக் குழுவை ஏற்படுத்தித் தருமாறு நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறபோது ஆண்டுக்கு 200 நாட்களுக்குத்தான் மதிய உணவு அப்படி வழங்கப்படுகிற நிலைமை இருக்கிறது. இந்த 200 நாட்களை 250 நாட்களாக உயர்த்தித் தருமாறு 250 நாட்களுக்கு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குகின்ற முறையிலே உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அருங்காட்சியகம் ஒன்றை குமரி மாவட்டத்திலே அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே எத்தனையோ அரசுப் பள்ளிகள் இருந்தாலும்கூட கலைக் கல்லூரியோ, இசைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. தென்னகத்திலே உள்ள நெல்லையிலும் கன்னியாகுமரியிலும் உள்ள மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில் இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு பொறியியல் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அரசைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக ஆக்கிக் உத்திரவிட்டிருப்பதை நான் மனதார வரவேற்று இந்த கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பின்னாலே மீண்டும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊர்தோறும் ஆடிட்டோரியம் கட்டப்படுகிற நிலையை மாற்றி ஊர்தோறும் பள்ளிகள் கட்டப்பட்டுக்கொண்டிருப்பதை பாராட்டாமல் இருக்கமுடியாது. என்னுடைய தொகுதியிலே போதிய பள்ளிக் கட்டடங்கள் இல்லாத ஊரே இல்லை என்ற அளவுக்குச் சிறப்பான முறையிலே கட்டடங்கள் கட்டப்படுகின்றன, வரவேற்கிறேன்.

(மாலை 4—10)

அதை நாங்கள் வரவேற்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசுக் கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால் எங்கள் பகுதியிலே கூட பல வகுப்புகள் கல்விச்சாலைகள் இல்லாமல் வெளியே நடத்தப்படுகிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு உதவியோடு பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்டுகின்ற திட்டத்தை அமைத்து பள்ளிக் கட்டிடங்களைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1981 ஏப்ரல் 24 [திரு. ப. தீர்த்தராமன்]

என்னுடைய மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அங்கு படிக்கின்ற மாணவர்கள் வசதியில்லாத காரணத்தினால் பாதியிலேயே கல்வியை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, அந்த மாவட்டத்திற்கு மட்டும் மாணவர்கள் விடுதியை மேம்படுத்தி, பெரும்பாலும் எல்லாப் பள்ளி களுக்கும் பின்தங்கிய மாணவர்கள் விடுதியை அமைத்துத் தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அங்கேயுள்ள கல்விக்கூடங்களில் குடிநீர் வசதியில்லாமல் மாணவர்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். 300, 400 மாணவர்கள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள் ஊருக்கு அப்பால் இருப்பதால் மாணவச் செல்வங்கள் குடிதண்ணீர் வசதியில்லாமல் இன்னலுக்கு உள்ளாகிறார்கள். அந்த நிலையை மாற்றியமைத்து குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருவது நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

எங்கள் மாவட்டக் கல்வியைப் பொறுத்த மட்டில் முன்பொருநாள்கூட தினமலர் பத்திரிகையிலே, தர்மபுரி தள்ளாடுகிறது என்று எழுதியிருந்தார்கள். மற்ற மாவட்டங் களில் உள்ள படித்தவர்களின் எண்ணிக்கையைவிட இங்கு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அந்தச் சூழ்நிலைக்குத் தர்மபுரி மாவட்டம் தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மருத் துவக் கல்லூரிக்கு தர்மபுரி மாவட்டத்தில் மூன்று இடங்கள் தான் கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். இதை நினைக்கும்பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது. ஏறத்தாழ 1,050 பேர் எடுக்கப்பட்ட அந்த எண்ணிக்கையில் 3 இடங்கள் மட்டும்தான் ஒரு மாவட்டத்திற்குக் கிடைத் திருக்கிறது என்றால் அது வேதனைக்குரிய விஷயமாகத்தான் இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால், பின் தங்கியவர்களுக்கு, ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்க்கு என்று ஒதுக்கீடுகள் இருப்பதைபோல, தர்மபுரி மாவட்டத்தைப் பின் தங்கிய மாவட்டம் என்று அறிவித்து, அந்தப் பின் தங்கிய மாவட்டத்திற்கு இந்த பர்சென்டேஜ் என்று ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியிலே உள்ள கலைக் கல்லூரியில் மேல்பட்டப் படிப்புக்கு வசதியில்லாமல் இருக்கிறது. அங்கே பட்ட மேல்படிப்பு ஏற்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டிலேயே பட்ட மேல்படிப்பு வகுப்புகளை அவசியம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே பெண்கள் கல்லூரி கிடையாது இதனால் அங்கேயுள்ள பெண்கள் படிக்கின்ற வாய்ப்பை இழக்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, தர்மபுரி மாவட்-த்தில் பெண்கள் கல்லூரி ஒன்றை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஹொகேனக்கல் சிறந்த பகுதியாக இருக்கிறது. சித்த வைத்திய மருத்துவமனையை அந்த இடத்தில் அமைத்தால் சிறப்பாக இருக்கும். அங்கே காடுகள் நிறைந்த பகுதிகள் இருப்பதால் மூலிகை வசதி இருக்கிறது. ஆகவே, அங்கே சித்த வைத்திய மருத்துவமனை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொருத்தவரையில் அவர்கள் நீண்ட நாட்களாக ஒரே பள்ளிக்கூடத்தில் இருப்பதால் கல்வியின் தரம் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. உதாரணத்திற் எடுத்துக் கொண்டால் என்னுடைய தொகுதியிலே என்னுடைய ஊருக்கு அருகிலே உள்ள பாப்பாரப்பட்டி என்ற இடத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடம் 95 சதவீதம் எடுக்கின்ற அளவிற்குச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது; ஆனால் இந்த ஆண்டு அது 22 சதவீதத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் ஒரே பள்ளியில் அதே பகுதியில் ஆசிரியர்கள் பணியாற்றுகின்ற காரணத்தினால் அவர்கள் ஆசிரியர் வேலையைத் தவிர வேறு பல துறைகளிலேயும் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்ற காரணத்தினால் கல்வி கற்றுத் தருவதை விட மற்ற வேலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால், மூன்றாண்டு நான்காண்டுகளுக்கு மேல் ஆசிரியர்கள் ஒரேயிடத்தில் இல்லாமல் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டால் அந்தப் பள்ளிகளின் மாணவர்களின் படிப்புத் தரம் உயர்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்கல்வியைப் பொறுத்தவரையில் என்னுடைய மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அங்கு தொழிற் கல்விக்கு இன்னும் அதிக வாய்ப்பளிக்க வேண்டும். எங்கள் பகுதியில் ஒரேயொரு பாலிடெக்னிக், ஒரேயொரு ஐ. டி. ஐ. தான் இருக்கிறது. எனவே, எங்கள் மாவட்டத்திற்குத் தனிச் சிறப்பளித்து கூடுதலாக எங்கள் மாவட்ட மாணவர்களுக்கு இடம் அளிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹோசூரில் உள்ள ஐ.டி.ஐ.-யில் வெல்டர் போன்ற தேவையில்லாத பகுதிகள்தான் அதிகமாக இருக்கிறது. பிட்டர், டர்னர் போன்ற தேவையான பகுதிகளை அங்கே அதிகமாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற முறையில் இடங்களை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்துகொண்டு பேசிடக் கிடைத்த நல்ல வாய்ப்பிற்காக நான் உங்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். கல்வித் துறைக்காக மாநில அரசு கோரி இருக்கிற தொகையும், கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிற அத்தனை ஆக்கபூர்வமான பணிகளையும் உள்ளபடியே படித்துப் பார்ப்பவர்கள் எத்தனை பெரிய மறுமலர்ச்சியை இந்தக் கல்வித் துறை இன்றைக்குப் பெற்றிருக்கிறது என்பதை உணர முடிகிறது. ஒருவேளை, மாற்றங்கள் பிறந்திருக்கிறதா, மறுமலர்ச்சி ஏற்படுகிறதா, வியத்தகு முன்னேற்றத்தை இந்தத் துறை காண முடிந்திருக்கிறதா என்ற கேள்விகளையெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து வைத்தார்கள்.

மெக்காலே காலத்து கல்வி முறையிலே மாற்றம் வேண்டும் அறைத்த மாவையே அறைக்கின்ற நிலைமை வேண்டாம், வகுப்பறைக்குள்ளே சொல்லித் தருகின்ற பாடங்களைப் படிக்கின்ற மாணவர்கள்—அதிலே யாருடைய நினைவாற்றல் அதிகமாக இருக்கிறதோ, யாருடைய ஞாபக சக்தி நீண்டு நிலைக்குமோ, அவனுக்கு அதிக மதிப்பெண், அவனே முதல் தர மாணவன் என்று பயிற்றுவிக்கின்ற அந்தப் பயிற்சி முறையிலே மாறுதல்கள் வேண்டாமா என்பன போன்ற பல்வேறு கேள்விகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்தார்கள். அப்படிப்பட்ட விஞ்ஞான கண்ணோட்டத்தோடு கூடிய ஒரு அணுகுமுறையை, பொறுப்பேற்றிருக்கிற புதிய அரசும் இந்தத் துறையும் கடந்த ஆண்டுகளிலே நிலையாகச் செய்து வைந்திருப்பதையும் குறிப்பாக இந்த மானியக் கோரிக்கையிலே கூட இப்படிப்பட்ட புரட்சி கரமான திட்டங்களை இந்த அரசு தீட்டியிருப்பதைத் தெளிவாக உணர முடிகிறது.

பார்க்கும் இடமெல்லாம் பள்ளிக்கூடங்கள், நடக்கின்ற இடமெல்லாம் நடமாடும் பல்கலைக் கழகங்களை நாங்கள் ஆக்கிவிடுவோம், அதுவும் ஒரே இரவு நேரத்திலே படித்தவர்களை முழுமையாக இந்தத் தமிழகம் பெற்றிட உழைப்போம் என்று சொல்கின்ற மந்திர, மாய வார்த்தைகள் இங்கே இல்லை. அப்படி ஒருவேளை யாரேனும் சொல்வார்களானால் அப்படிப்பட்ட

நிலைமையிலே கூட எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. பறந்து போய் மலை உச்சியை அடைந்து விடுவேன் பாருங்கள் என்று யாரேனும் சொன்னால், அப்படிப்பட்டவர்களைப் பார்த்து நாங்கள் நம்பத் தயாராக இல்லை. படிப்படியாக ஏறி, மிகப் பெரிய கல்வி மறுமலர்ச்சி உச்சியை அடைவோம், வாருங்கள் என்று அறைகூவி அழைக்கின்ற விதத்திலே இந்த மானியக் கோரிக்கை இன்றைக்கு அமைந்திருக்கின்றது.

இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் விஞ்ஞானக் கண்ணோட்டம் இல்லாத கல்வி முறையாக இது இருக்கிறதே என்ற ஏக்கத்தை வெளியிட்டார்கள். அவர் காண்கின்ற முழுமையான விஞ்ஞானக் கண்ணோட்டம் இல்லாவிட்டாலுங்கூட ஓரளவிற்கு தெளிவுபெற்ற, தொலை நோக்குப் பார்வை கூடிய ஒரு கல்வி முறையை இந்தச் சமுதாயம் இன்றைக்கு படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கை தெளிவாகக் காட்டுகிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நர்சரி பள்ளிகளிலே நடக்கின்ற சங்கதிகளைப்பற்றி விரிவாக எடுத்து வைத்தார்கள். அழகான ஆங்கிலத்திலே தங்களுடைய பிள்ளைகள் பேச வேண்டும், 3 வயது நிரம்புகிறதோ இல்லையோ, பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற ஆர்வம் தொழிலாளர் பெருமக்கள், நடுத்தர வர்க்கத்தினர், மத்தியிலே இருந்து, அப்படி அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்ற அந்தப் பள்ளிக்கூடங்கள் தரமானதாக இருக்கின்றனவா என்று எடை பார்க்கின்ற வழியில்லை. அங்கே படிக்கின்ற அந்தப் பிள்ளைகள் 5-ஆம் வகுப்பு முடித்துவிட்டு, 6 ஆம் வகுப்பிலே சேர வேண்டுமென்றால், உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கில மீடியம் வகுப்புகள் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே 100-க்கு மேற்பட்ட நர்சரி பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், 6 ஆம் வகுப்பிலே சேர்ப்பதற்கு ஆங்கில மீடிய வகுப்புகள் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் 3 ; அதிலே இருக்கின்ற இடங்கள் ஏறத்தாழ 240. 5 ஆம் வகுப்பிலே ஆண்டுதோறும் நர்சரி பள்ளி களிலே படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 2,500. ஆக, மீதி மாணவர்கள் கொள்ளை, கொள்ளையாக ஆங்கில மொழியிலே பிள்ளை பேச வேண்டுமென்பதற்காக, 5 ஆண்டுகள் ஆங்கில வகுப்பிலே படித்துவிட்டு, 6 ஆம் வகுப்பை ஆங்கிலத்திலே தொடர முடியாத காரணத்தாலே, அங்கே பெற்ற அறிவு ஒரு வேளை, சூனியமாகப் போய்விடுகிற நிலைமையெல்லாம் இருக்கக்கூடாது என்ற கவலையிலே அந்த நர்சரி பள்ளிகளை உடனடியாக கவனத்திற்கு எடுத்து, அவற்றை முறைப்படுத்த வேண்டும்.

அப்படி ஒருவேளை, ஆங்கில முறையிலே கல்வி அங்கே நீடிக்கப் பட வேண்டுமானால், உயர்நிலைப் பள்ளிக்கூடம் வரைக்கும் அப்படிப்பட்ட வாய்ப்புகள் தொடர வேண்டும். நாம் இப் படி ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

இங்கே பேசிய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் அங்கத்தினர் தங்கவேல் ராஜ் அவர்கள், இந்தி மொழியை ஏன் பாடத்திலே புகுத்தக் கூடாது என்று கேட்டார்கள். ஒருவேளை, அது அவ ரது விருப்பமாக இருக்கலாம். ஆனால், இந்தி எந்த ரூபத்திலே வந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்திற்கு நாம் தயாராக இல்லையென்பதை நான் தெளிவுப்படுத்த விரும்பு கிறேன்.

(மாலை 4-20)

ஒருவேளை இந்தியைப் படிக்க வேண்டும், இங்கே இருப்ப வர்கள் இந்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் இருக்குமானால் மத்தியிலே கூட இந்தி மொழி வளர்ச் சிக்காக அங்கே நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரை உள்ளடக்கிய ஒரு குழுவை வைத்துக்கொண்டு வட மாநிலங்களில் எப்படி இந்தி வளர்கிறது என்று பார்த்துக் கொள்ளட்டும். இங்கே உண்மையை சொல்லியாக வேண்டும். ஏறத்தாழ 10 ஆண்டு காலத்திற்கு முன்பு தங்கள் மாநிலங்களில் இருக்கின்ற ஒரு மொழியை வடமாநிலங்களை ஆளுகின்ற அரசுகள் மரபின் அடிப்படையிலே அதை பயிற்றுவிக்க வேண்டும் என்று சொல்லி ஏற்படுத்தினர் மத்திய ஆட்சிப்பொறுப்பிலே இருந்த வர்கள். இன்றைக்கு வடமாநிலங்களில் இருக்கின்ற எத்தனை அரசுகள் தங்கள் மாநிலத்திலே இருக்கின்ற மொழிகளை கற் கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி நிலைமை இல்லாதபோது, ஆங்கிலத்தை நீட்டிக்க வேண்டுமா என்கிற, கேள்வியை கேட்கின்ற அந்த அருமை நண்பர்களுக்கு சொல்வேன், ஆங்கில மொழி இந்தியை வரவிடாது தவிர்க் கின்ற தடுத்து நிறுத்துகின்ற கவசமாக இருக்கின்ற காரணத் தாலே ஆங்கில மொழி அந்நிய மொழியாக இருந்தாலும் கூட, அது ஒரு ஆதிக்க மொழியாக வளர்ந்து விடாதபடி அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய பக்குவத்திலே இருக்கிற காரணத்தினாலே, இந்தியை பாட மொழியாக அல்ல, வேறு எந்த ரூபத்திலே வந்தாலும் இந்தத் தமிழ் மண் ஏற்றுக் கொள்ளாது. என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி மானியத்திலே ஒதுக்கப்பட்ட ஏறத்தாழ 249 கோடி ரூபாயிலே பள்ளிக் கல்விக்காக ஏழத்தாழ 207 கோடி ரூபாய் இந்த அரசு கோரி இருக்கிறது. அதுவும் குறிப்பாக இன்றைக்கு பள்ளியிலே ;6 வயது முதல் 11 வயது நிரம்பி இருக்கிற

அந்தப் பிள்ளைகள், பள்ளிக்குப் போகாமல் நின்று விடுகின்ற அந்த நிலைமைகள் 1973—74-லே 51 விழுக்காடாக இருந்தது, இன்றைக்கு 33 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. அப்படிப் பட்ட விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு நடைமுறையில், அந்த அணுகுமுறையை வகுத்திருக்கிற காரணத்தால் இந்த மாற்றத்தை நாம் ஏற்படுத்த முடிந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலுகின்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களை ஊக்குவிப்பதற்காக சிறப்பான திட்டத்திற்கு 12 இலட்சம் ரூபாய்கள் இன்றைக்குக் கோரி இருக்கிறார்கள். மிகப்பெரிய திட்டமாக, ஆதிதிராவிட பழங்குடி மக்களை உயரிய முறையிலே தேர்ச்சி பெறுவதற்காக அவர்களுக்குத் தகுந்த திட்டமாக பெறுகிற முறையிலே இது வரவேற்கத் தகுந்த திட்டமாகும். முதியோர் கல்வி முறைசாராக் கல்வி;, கிராம செயல் முறைத் திட்டம் என்று சொல்லி, கிராமப்புறத்திலே இருக்கிற பெரியவர்களுடைய அறிவுக் கண்களைத் திறப்பதற்காக போட்டிருக்கின்ற திட்டங்களை நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல இன்றைக்குப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற புதிய அரசு, விளையாடு, இளைஞர் நலத் துறைக்காக ஏறத்தாழ 324 இலட்சம் ரூபாயினை நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஒதுக்கியதோடு மட்டுமல்ல. விளையாட்டுத் துறையில் நம்மவர்கள் பெறவேண்டிய வெற்றிகளைப் பெறமுடியவில்லை என்பதற்காக சர்வ தேச, தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்ற போது பத்திரிகையிலே பார்த்து, வானொலியிலே கேட்டு நம்மவர் வெற்றி பெற முடியவில்லையே என்ற ஏக்க உணர்வினை அன்றோடு நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து அந்தப் பணி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கப்பட்ட பணி தொடர வேண்டும் என்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை. அதுமட்டு மல்ல, இந்தியத் திருநாட்டிலே சர்வ தேச விளையாட்டு போட்டிகளிலே தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுகின்றவர்களை கௌரவிக்கின்ற நல்ல அரசாக சர்வதேச, ஒலிம்பிக் போன்ற போட்டிகளிலே வெற்றி பெறுகின்ற அந்த வீரர்களுக்கு உற்சாகப்படுத்துகின்ற வகையிலே ஒரு இலட்சம் ரூபாயிலே வீடு ஒன்றை வழங்கி இருக்கிற அரசு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை மறந்து விடக்கூடாது. இந்தியத் துணைக்கண்ட முழுவதற்குமே இது ஒரு எடுத்துக் காட்டான ஒரு திட்டம் ஒரு விடிவெள்ளியாக நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இருந்திருக்கிறார் என்பதை இங்கே நான் சொல்லி ஆகவேண்டும். இந்த விளையாட்டுத் துறை பற்றிச் சொல்லுகிறபோது எனது தொகுதியைச் சேர்ந்த அம்பத்தூரில் ஏறத்தாழ 1½ லட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். அங்கே அவர்கள் விளையாடுவதற்கு மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்

1981 ஏப்ரல் 24] [திரு. ஜே, சி. டி. பிரபாகரன்]

கொள்கிறேன். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, இப்போது கூட சென்னை நகரத்திலே நடக்கின்ற பெடரேஷன் கப்புட்பால் டோர்னமெண்ட் நடந்துகொண்டிருக்கின்றது. அப்படி விளையாட்டுப் போட்டிகள், தேசிய அளவிலே நடக்கின்றபோது கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள, கன்னியாகுமரியிலே இருக்கின்றவர்கள், திருச்சியிலே உள்ளவர்கள், கோவையிலே உள்ள பள்ளிக்கூட மாணவர்களை இந்த விளையாட்டுத் துறையிலே ஆர்வம் உடையவர்களை சென்னையிலே நடைபெறுகின்ற போட்டிகளைக் காண்பதற்காக அரசின் செலவிலே அழைத்து வந்து, விளையாட்டு வீரர்கள் தங்களுடைய திறமையைக் காட்டுகின்றபோது, அப்படிப்பட்ட நிலைமைக்கு தங்களை தகுதி உடையவர்களாக ஆக்கிக்கொள்வதற்கு உற்சாகத்தை அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை அரசு ஏற்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி விளையாட்டுத் துறைக்கு அரசு ஆர்வம் காட்டி வருகிறபோது, வானொலியும், டெலிவிஷனும் அதற்குத் தருகிற ஊக்கம், உற்சாகம் குறைவாக இருக்கிறது. வானொலியும், டெலிவிஷனும் இன்னும் அதிகமாக விளையாட்டு துறைக்கு நேரம் அதிகம் ஒதுக்கி, அந்த விளையாட்டிலே ஆர்வம் இருக்கின்றவர்கள் அதைப் பார்த்து அறிந்து, தெரிந்து கொள்கிற வகையில் செய்வதற்கு முன்வரவேண்டும். அதற்கு ஏற்ற வகையில் நம்முடைய மாநில அரசு இந்த வகையில் அவையில் நேரம் அதிகம் ஒதுக்கவேண்டும் என்கிற கோரிக்கையை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம் ஆகிய இந்த 3 பகுதிகளிலும் ஒரு கிளை நூலகம் துவக்கவேண்டும் என்று தொகுதி மக்கள் ஒரு வேண்டுகோள் வைத்து இருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி அளவிலேயே யோகாசனம் கட்டாயக் கல்விப் பாடமாக ஆக்குகிறவகையில் திட்டம் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இசை, நடனம் ஆகியவை ஆரம்பக் பள்ளியிலேயே விருப்பப் பாடமாகக் கொண்டு வருவதன் முலம் பழங்காலக் கலைகளை நாம் வளர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை ஒரு குற்றமாக இங்கே சொல்லவில்லை. அரசு வெளியிட்டுள்ள 4 ஆம் வகுப்பு புவியியல் பாடப் புத்தகத்தில், மதுரைக்கு அருகில் சமயநல்லூர் என்கிற இடத்தில் ஒரு அனல் மின் நிலையம் இயங்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1973-ம ஆண்டிலேயே அந்த அனல் மின் நிலையம் என்ன கதிக்கு ஆளானது என்பது நமக்குத் தெரியும். அது விற்கப்பட்டதா, அல்லது அது மூடப்பட்டதா என்பதைப் பற்றி

நமக்குக் கவலை இல்லை. ஆனால் அரசு வெளியிட்டுள்ள புவியியல் பாடப் புத்தகத்தில் அந்த அனல் மின் நிலையம் அங்கே இயங்கி வருகிறது என்று உண்மைக்கு மாறான தகவலைத் தந்து இருப்பது வருந்தத்தக்கது. அதற்குப் பதிலாக அதிலேயே சமயநல்லூர் மின் நிலையம் இயங்கி வந்தது, விற்கப்பட்டு விட்டது என்கிற உண்மையையும் சொல்லி, ஏன் அந்தக் கதிக்கு அது ஆளானது என்கிற சரித்திரத்தையும் தெளிவாக எழுதி இருந்தால் பொருத்தமாக இருந்து இருக்கும். ஆகவே, இந்தத் தவறை அந்தப் பாடப் புத்தகத்தில் திருத்த வேண்டும் என்று நான் அரசிடம் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆசிரியராக இருந்த ஒருவர் இந்தக் கல்வி இலாகாவிற்கு அமைச்சராக இருந்து, அந்த ஆசிரியப் பெருங்குடி மக்களை வாழவைக்கும் வழிகாட்டியாக இருந்து கொண்டு இருக்கிறார். குற்றச்சாட்டுக்கு அப்பாற்பட்டு செயல்படுகிற துறையாக இந்தக் கல்வி துறை இயங்கி வருகிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும். இத்தனை டிக்கெட்டுகளை விற்றால் தான் சம்பளம் என்று ஆசிரியர்களுக்கு முன்பு இருந்த நிலை தற்போது இல்லை. அரசின் சார்பாக அல்லது கட்சி வளர்ச்சிக்காக பள்ளிக்கூட ஆசிரியர்கள் பயன்படுத்தப்படும் அவல நிலை தமிழகத்தில் இப்போது இல்லை. 1973–74, 1974–75 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள், தமிழகம் எங்கும் ஆசிரியர்கள் பேரணி நடத்தி கோரிக்கைகளை அரசுக்கு வைத்தனர். அத்தகைய கோரிக்கைகள் இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே படிப்படியாக நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இத்தகைய நல்ல பணிகளைச் செய்து வருகின்ற இந்த அரசு கல்விக்காகக் கோரியிருக்கும் இந்த மானியம் முழுமையான அளவிற்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறி, அதற்கு என்னுடைய நல்லாதரவைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 1981–82 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு பெற்றமைக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்விக்காக 249 கோடி ரூபாய் நேர்முகமாக ஒதுக்கப்படுகிற நிலையில், மொத்த வரவுசெலவுத் திட்டத்தில் இது 22 சதவிகிதம் என்பதைக் குறிப்பிட்டு, ஒரு வகையிலே கடந்த ஆண்டை விட ஒரு விழுக்காடு இது குறைவு என்று குறிப்பிட நேரிடுமானாலும், அந்தக் கருத்தைப் பற்றி நாம் கவலைப்

படாமல், கல்வி விரிந்து வருகின்ற வகைகளை நோக்குகின்ற போது அந்த அளவிற்குத் தேவையான நிதியை ஒதுக்குகின்ற நிலைமையில் நம் இல்லை என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். போதுமான நிதியை ஒதுக்க முடிய வில்லை என்பதை நாம் முதலில் குறிப்பிடுகிறபோது, நிதி ஒதுக்காத காரணத்தாலே கல்வியின் பயன் நமக்குக் கிடைப்பது குறைந்து விடும் என்பதைவிட, ஒதுக்கப்பட்ட நிதி செம்மை யாகச் செலவிடுவதற்கு உரிய வகையில், அதன் மூலம் முழுப் பலன் கிடைக்கிற வழிமுறைகளில் அரசு செயலாற்றுகிறதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'எண்ணை செலவானது தான் மிச்சம், பிள்ளை பிழைக்க வில்லை' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஒரு குழந்தை வியாதியால் பிடிக்கப்பட்டபோது எண்ணை கொடுத்தோம், ஆனால், பிள்ளை பிழைக்கவில்லை என்று பொருள் சொல்வது உண்டு. ஆனால், அதற்கு உண்மையான பொருள் நாம் கொள்ளவேண்டுமானால், 'விளக்கில் இருந்த எண்ணை எரிந்து செலவானதுதான் மிச்சம், பிள்ளை படிக்காமல், பாழாய் போனான்' என்று தான் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, எண்ணை செலவானது பிள்ளை பிழைக்கவில்லை என்பதைப் போல, கல்வித் துறையிலே 249 கோடி ரூபாய் செலவிடுகிறோம் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள அரசு விரும்பினாலும் கூட, அதற்கு உரிய முழுப்பலனும் கிடைக்கக்கூடிய நிலையில் கல்வித் துறை பல்வேறு சூழ்நிலை காரணமாக சரியாக இயங்க வில்லை, செயல்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

[மாலை 4-30]

தேவைகள் எவ்வளவு மிகுதியாக வளருகிறதோ அதற்கேற்ப அந்தத் தேவைகளை ஈடுசெய்ய முடியாத நிலையில் புள்ளி விவரங்கள் தருகின்ற முறையில் மாணவர்கள் எவ்வளவு பேர் படிக்கிறார்கள் என்பதைத் பெருமையாகச் சொல்லுகின்ற போது அந்த எண்ணிக்கை வளர்ந்து வருகிறது என்பதை எடுத் துக்காட்ட முன்னைவிட அதிகமானவர்கள் கல்வி பெற்றிருக்கி கிறார்கள் அல்லது கற்பித்திருக்கிறோம் என்ற கருத்து வருகிறது. அதுவும் என். சி. ஆர். இ. டி. ஒரு கருத்தை தருகிறது. மறு படியும் மாநில அரசு தெரிவித்த கருத்து காரணமாக அது மாற்றப்பட்டு, அது இப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன் படி,

At primary level Tamil Nadu leads the rest of the States with 110% enrolment as against 53·5 in Rajasthan, 61 in Madhya Pradesh, 76% in Andhra Pradesh etc.

என்று சொல்லியிருக்கிறார்கள், 110 விழுக்காடு, 6 முதல் 11 வயது உள்ள பிள்ளைகள் கல்வி நிலையத்தில் இடம்பெறச் செய்துவிட்டோம் என்று ஒரு அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். மொத்தமுள்ள மாணவர்கள் எவ்வளவு என்று அறிவிக்கிறார்கள். அதன்படி அதைவிட அதிகமானவர்களைச் சேர்த்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். மொத்தம் 66.64 இலட்சம்பேர் படிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 63.46 இலட்சம்தான். இந்த ஆண்டு 1981—82-ல் அது ஒரு வேளை 70 இலட்சமாகக் கூட இருக்கலாம். ஆனால் அது சேர்க்கப்படவேண்டியவர்களைவிடக் குறைவாகத்தான் 5 விழுக்காட்டிற்காவது குறைவாகத்தான் இருக்க முடியும்.

ஒரு கணக்கைச் சொல்லுகின்றபோது 6 முதல் 11 வகுப்பு வரையில் உள்ள பிள்ளைகள் படிப்பதைப்பற்றிச் சொல்லும்போது அதற்கு மேற்பட்ட வயதினரும் சேர்ந்திருக்கலாம். 12 வயது, 13 வயது உடைய பிள்ளைகள் படித்தாலும் கூட அவர்களையும் சேர்த்துக் கொடுக்கிற கணக்குத்தான் இந்த 103 விழுக்காடு அல்லது 105 விழுக்காடு அல்லது இப்போது தரப்பட்டிருப்பதைப்போன்று 110 என்ற விழுக்காடு அளவுக்கு வரும். ஆனால் ஒரு விகிதாச்சாரம் என்று சொல்லும்போது மொத்தம் படிக்கவேண்டியவர்களாக உள்ள சிறுவர்கள் இருப்பதை விடக் குறைவாகத்தான் இருக்குமே தவிர கூடுதலாக இருக்க முடியாது. நூற்றுக்கு இத்தனைபேர் என்று வந்தால் தான் அது சரியான விகிதாச்சாரமாக இருக்க முடியுமே தவிர 100-க்கு 110 என்று சொன்னால் அது ஏற்கக்கூடிய ஒரு விகிதாச்சாரமாக இருக்க முடியாது. அதிகமானவர்கள் படிக்கிறார்கள் என்பதை மிகைப்படுத்திச் சொல்வதற்காக அப்படிக் குறிப்பிட்டிருந்தால் அது வேறு. ஒருவேளை அகில இந்திய அடிப்படையில் பார்த்தால். அதைவிடக் கூடுதலாக இருக்கிறது என்பதைந் காட்டுவதற்காக 101 விழுக்காடு, 102 விழுக்காடு என்று சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நமக்குத் தந்திருக்கின்ற அறிக்கையில் 110 விழுக்காடு என்று அமைச்சர் சொல்லியிருப்பதால் அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 6 முதல் 11 வரையில் உள்ள பிள்ளைகளில் சென்னை மாநகரில் மட்டும் 5,000 பேர் இருக்கிறார்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகாதவர்கள். இதைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலும் நாளையதினம் நீங்கள் புள்ளி விவரம் எடுக்கத் தயார் என்றால் மாவட்டத்திற்கு 2,000 பேர்கள் இந்த வயது தொகுதியினர் பள்ளிக்குப் போகாமல் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளலாம். ஆக குறைந்தது 35,000 பேர் அல்லது 40,000 பேர் பள்ளிக்குப் போகாதவர்கள் இருக்கிறார்கள்.

வெறும் புள்ளிவிவரத்தை வைத்துப் பார்த்தால், உண்மை விளங்காது புள்ளிவிவரம் எதற்கும் உதவாது என்று ஒரு பழமொழி சொல்வார்கள். புள்ளிவிவரங்கள் அர்த்தமற்ற புள்ளிவிவரங்களாக இருந்தால் அதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது? மாணவர்களையும் மாணவிகளையும் சேர்த்துக் கணக்கிடும்போது இந்த 95 விழுக்காடு என்பது ஒருவேளை பொருத்தமாக இருக்கலாம். அது 97 விழுக்காடாகக் கூட இருக்கட்டும். அதிலே எனக்குக் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் 105 விழுக்காடு 110 விழுக்காடு என்று சொல்கின்ற தவறான கணக்குத் தேவையில்லை, அது அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த 6 முதல் 11 வயதுக்கு உட்பட்டவர்கள் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்குச் செல்லும்போது 11 முதல் 14 வரையுள்ள வயதினர் பள்ளிக்குச் செல்லும்போது வெகுவாக அவர்களுடைய எண்ணிக்கை குறைகிறது. அந்த 95 விழுக்காடு என்பது 61 விழுக்காடாக மாறுகிறது. அதாவது 1/3 பகுதி குறைகிறது. மேலும் 16–17 வயது படிப்பைப் பார்த்தால் அதில் பாதிதான் இடம் பெறுகிறார்கள். அதன் முடிவு 2/3 பகுதியினர் 6, 7, 8-வது வகுப்புக்குப் போகிறார்கள், 1/3 பகுதியினர்தான் 9, 10-வது வகுப்புக்குப் போகிறார்கள், 3 பேர் முதல் நிலைப் பள்ளிக்கூடத்திற்குப் போனால் அது 6, 7, 8-வது வகுப்பில் 2 பேராகி, 9, 10-வது வகுப்பில் ஒருவராக மாறிவிடுகிறது, இதற்கு அடிப்படையான காரணம் என்ன என்று இந்தக் கல்வித் துறையில் பரிசீலிக்கப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

அவர்களுடைய சமூக நிலைமைகளை வைத்துப் பார்க்கிறபோது அவரவர்கள் படிக்கிற வட்டாரத்திலே இருந்து 2 கிலோ மீட்டர் 4 கிலோ மீட்டர் தூரம் போய் மேற்படிப்பு படிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் இடம் கிடைக்க வேண்டும். ஆகையால் மேல் வகுப்பு படிக்க அவர்கள் வாய்ப்புப் பெறுவதில்லை.

அந்த வாய்ப்பு இன்றையதினம் இல்லை. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பள்ளிக்கூடங்களில் மேல் வகுப்புக்காக ஒரு பள்ளிக்கூடத்திலே இருந்து இன்னொரு உயர்தரப் பள்ளிக்கூடத்திலே போய்ச் சேருவதற்குப் போகிறபோது அது நடுநிலைப்பள்ளியோ அல்லது உயர்நிலைப்பள்ளியோ அங்கு இடம் இல்லாத காரணத்தால் திரும்பி வருகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 100-க்கு 15 பேர்கள் இருக்கிறார்கள். அதை இல்லை என்று அமைச்சர் அவர்களால் சொல்ல முடியாது. இந்த விகிதம் சென்னை நகரிலே இன்னும் அதிகம். பல பள்ளிக்கூடத்திலே விண்ணப்பம் போட்டு இடம் கிடைக்கவில்லை

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 24

என்றால் 3 மாத காலம் அலைந்து கொண்டிருப்பார்கள். அப்படி இடம் கிடைக்காவிட்டால் வெளியூரிலே உள்ள பள்ளி இடங்களுக்கு முயற்சிக்க மாட்டார்கள். நம்மால் முடியாது என்று விட்டுவிடுவார்கள். அப்படி இடம் கிடைக்காத காரணத்தால் விட்டுவிடுகிறவர்களும் சேர்ந்துதான் இந்த விகிதாச்சாரம். துவக்கப்பள்ளியில் உள்ள 3 பேருக்கு உயர்நிலைப்பள்ளியிலே ஒருவராக ஆகக் கூடிய அளவுக்கு அந்த எண்ணிக்கை இன்னும் குறைகிற அளவுக்கு மிகவும் முக்கியமான காரணமாக ஆகின்றது.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் தொடக்க நிலைக் கல்வியை மாணவர்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்வதற்கு ஊக்கம் அளிப்பதற்காகத்தான் மதிய நேர உணவுத் திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டு அது தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்திற்காக ஏறத்தாழ ஆகிற செலவிலே மூன்றில் ஒரு பங்கோ அல்லது பாதியோ கேர் நிறுவனத்திலே இருந்து உணவுப்பொருளாகவும், எண்ணெயாகவும் கிடைக்கின்றது. மீதம் நாம் செலவிடுவது அதாவது, ஏறத்தாழ 200 நாட்களுக்குச்செலவிடுகிறோம். ஒரு மாணவன் ஒருவனுக்கு 15 பைசா வீதம்தான் இன்றைக்குச் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படிச் செலவிடுகின்றக் குறைந்த தொகையால் அந்த உணவின் தரம் எவ்வளவு குறைந்து கொண்டு வருகின்றது என்பதையும் அது உண்ண முடியாததாக இருக்கின்றது என்பதையும் இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த உணவு சற்று தரம் உடையதாக இருக்க வேண்டும் என்றால், பகல் நேரத்திலே தரப்படுகின்ற அந்த உணவுக்காக அரசு செலவிடுகின்ற தொகையான 15 பைசா என்பதை அதாவது 10 பைசாவை அரசும் 5 பைசாவை உள்ளாட்சித்துறையும் செலவிடுகின்ற அந்தத் தொகையினை குறைந்தது 30 பைசா என்ற அளவுக்காவது உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டும் அரசின் சார்பாக 20 பைசாவும் உள்ளாட்சி மன்றத்தின்சார்பாக. 10 பைசாவும் கேர் நிறுவனம் ஏறத்தாழ 10 பைசா அளவுக்குத் தருகின்ற அந்தப் பொருட்களையும் சேர்த்து ஒரு 40 பைசா அளவுக்கு அந்த ஏழைக் குழந்தைகளுக்கு உணவு கொடுத்தால் தான் ஓரளவுக்கு அது சத்துணவாக இருக்கும். அந்த உணவைக் கொண்டு அந்தப் பிள்ளைகள்படிப்பிலே அக்கறை செலுத்தக்கூடிய ஒரு நிலையும் பிறக்கும். வறுமையிலே வாடுகின்ற சூழ்நிலையிலே உள்ள மக்களுக்கு இந்த உணவு கூட கல்வியிலே ஒரு ஊக்கம் தருவதற்குக் காரணமாக இருக்கும். ஒரு 20 ஆண்டுக்கு முன்னாலே அல்லது 10 ஆண்டுக்கு முன்னாலே இந்த பத்து பைசா என்ற அளவுக்கு இருந்தால்கூட அதுபோதுமானதாக இருந்து இருக்கக்கூடும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் இந்த நிதி போதாது என்ற காரணத்தால் அதை உயர்த்துவதற்கு நாம் முன்வர வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. க. அன்பழகன்]

அடுத்து, நான் குறிப்பிட விரும்புகிறேன், தொடக்கப்பள்ளியிலே எவ்வளவுதான் ஆசிரியர்கள் இருந்தாலும் கூட ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் வீதம் சராசரியாகப் பயில நேரிடுகின்றது. நடுநிலைப்பள்ளியிலே ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் பயில நேரிடுகிறது, உயர்நிலைப்பள்ளியிலே 23 பேர் பயில நேரிடுகிறது. இப்படி இந்த விகிதாச்சாரம் இருக்கின்றது. மேல்நிலைப் பள்ளியிலே ஒரு ஆசிரியருக்கு 27 பேர் என்று ஆகின்றது. இன்னும் சொல்லப் போனால் வகுப்பு அடிப்படையிலே பார்க்கின்றபோது அந்த விகிதாச்சாரத்தில் மாற்றங்கள் வருகின்றன. அப்படி வருகின்ற போது கல்லூரியிலே ஒரு ஆசிரியருக்கு 13 மாணவர்கள் என்ற நிலை வருகின்றது, அதிலேயும் குறிப்பாக புகுமுகவகுப்பை நாம் எடுத்துவிட்டதற்கு பின்னால் ஏற்பட்ட வளர்ச்சியினுடைய அடையாளமாக ஏறத்தாழ ஆசிரியர் ஒருவருக்கு 13 மாணவர்கள்தான் பயிற்றுவிக்கப்படுகின்ற அளவுக்குத்தான் ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாச்சாரம் கல்லூரியிலே வருகின்றது. இது ஏறத்தாழ கல்வி வளர்ச்சியிலே ஒரு தலைகீழ் வளர்ச்சி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். கண்டிப்பதற்காகக்கூட நான் சொல்லவில்லை. இதை மாற்றியமைப்பதற்கான வழிவகையினை நாம் கண்டாக வேண்டும். கல்லூரியிலே ஆசிரியர்களுக்கு தகுந்த ஊதியம் தரப்பட வேண்டும், தகுந்த மதிப்பு தரப்படவேண்டும் என்பதிலே எனக்கு உடன்பாடுதான். ஆனால், தொடக்கப் பள்ளியிலே 40 பிள்ளைகள் சராசரி என்று சொல்கிறபோது சில ஆசிரியர்கள் 55 பிள்ளைகளைக் கூட வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பாடம் நடத்துகின்ற நிலைமை இருக்கின்றன.

அடுத்து, நடுநிலைப் பள்ளிகளில் 36 பிள்ளைகள் என்று சொல்கிறபோது சில ஆசிரியர்கள் 50 பிள்ளைகள் வரை வைத்துக்கொண்டு பாடம் நடத்துகின்ற நிலைமை இருக்கின்றது. விகிதாச்சாரத்திலே கணக்குப் போட்டு பார்க்கிற போது 40, 36 என்று வருகின்றது. ஆகவே, ஒரு இரண்டாண்டுக் காலத்திலே அதாவது இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு, அதற்கடுத்த ஆண்டுக்குள்ளாகவே இந்த விகிதாச்சாரத்தை மாற்றித் துவக்கப்பள்ளியில் ஆசிரியர் ஒருவருக்கு 30 பிள்ளைகள்தான் என்ற விகிதாச்சாரத்தை உருவாக்குகின்ற அளவுக்கு ஒரு திட்டத்தைத் தீட்டியாக வேண்டும். உயர்நிலைப் பள்ளியைவிட தொடக்கப்பள்ளியிலே உள்ள மாணவர்கள்- ஆசிரியர் விகிதாச்சாரத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால்பிள்ளைகளுக்கு தொடக்ககாலத்திலே தரவேண்டிய பயிற்சியைத் தகுந்த பயிற்சிஆசிரியர்களால் தர முடியாது. கல்லூரியிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் நடத்துவதற்காக எடுத்துக்கொள்கின்ற முயற்சி என்பது, ஆசிரியர் விளங்கிக் கொண்டதை மாணவர்கட்குச் சொல்வது, ஆனால், தொடக்க நிலைப் பள்ளியிலே மாணவருக்கு ஆசிரியர் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சி என்பது அந்தப் பிள்ளைக்கு விளங்கத்தக்க அளவுக்கு விரித்து விரித்து விளக்கித் தருவது அல்லது புரிய வைப்பது அல்லது உணர

வைப்பது, இப்படி உள்ள கடமை காரணமாக ஒரு ஆசிரியருக்கு 3. மாணவர்களுக்கு மேல் தொடக்கநிலைப்பள்ளியிலே இருப்பதன் காரணமாக இன்றையதினம் கல்வித்தரம் உயர முடியவில்லை. வளர்வதற்கான வாய்ப்பு இல்லை. அந்த வாய்ப்பை அடி மட்டத்திலே உருவாக்க வேண்டும். நாற்று பயிரிடுகிற இடத்திலே எரு போடாமல் நாற்றங்காலில் அதைப் பெரிதாக வளர விட்டு விட்டு, அதற்குப் பின்னாலே வளர்த்த பயிருக்கு எரு கொண்டு போய் போட்டால் எப்படி இருக்கும் அந்தப் பயிர் வளமாக, இருக்காது. அந்த நிலைமை இங்கே இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாலை 4-40)

அதேபோல இன்றைய தினம் இந்த அறிக்கையிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு, மொத்தமாக நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள், விளக்கம் இல்லை என்று சொன்னேன். இந்த ஆண்டு விளக்கம் தந்திருக்கிறீர்கள். அந்த விளக்கத்திலே 1980 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 615 மாநாடுகள் என்றும் அதிலே கடந்த ஆண்டு வரை 578 மாநாடுகள் நடந்திருக்கின்றன என்றும் இருக்கிறது. இப்பொழுது இந்த ஓராண்டுக் காலத்திலே டிசம்பர் மாதம் முடிய நடைபெற்றிருக்கக் கூடிய மாநாடுகள் 37, அதிலே வசூல் ஆனதாகச் சொல்லப்படுகிற பொருள்களின் மதிப்பு 3.7 கோடி ரூபாய் அதாவது 370 இலட்சம் ரூபாய் அளவிற்கு வசூல் ஆகியிருக்கிறது. பொருள் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் அமைச்சரிடத்திலே கேட்க விரும்புகிறேன். ஒரு மாநாட்டுக்கு 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு பொருள்கள் வசூலாகி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் நடைபெற்ற மொத்த மாநாட்டினுடைய கணக்கின்படி சராசரி $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் என்று வருகிறது. அதற்குரிய வசூலைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, இந்த 37 மாநாட்டில் ஒரு நாட்டிற்கு 10 இலட்சம் ரூபாய்க்கு பொருள் கிடைத்து, மொத்தம் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவிற்கு, அல்லது அதற்கு ஈடான அளவிற்கு பொருள் கிடைத்திருக்கிறது என்று கூறப்படுமேயானால், இதற்காக எப்படி எப்படிப் பொருள்களின் மதிப்பு போடப்பட்டது? அந்தப் பொருள்கள் என்னென்ன என்பது பற்றிய அந்தப் பட்டியல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப் பரிசீலிக்க முடியுமா? பரிசீலித்து அதன் மூலமாக அந்த 3.7 கோடி என்பது எந்த அளவுக்கு பொருள்கள் வந்திருக்கிறது என்பதை அவரால் உறுதி செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்? நான் உள்ளபடியே, அந்த அளவுக்கு, அந்தப் பொருள்கள் வந்திருக்கும் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவனாகத்தான் இருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொதுவாக பெர்ஃபாமென்ஸ் பட்ஜெட என்பது அரசாங்கத்தின் சார்பாக தரப்படுகிற அறிக்கைகளிலே வருகிற கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குப் பயன்படக்கூடிய ஒன்றாக ஆண்டுதோறும் தரப்படுகிற ஒன்று. அந்த பெர்ஃபாமென்ஸ் பட்ஜெட் தரப்பட்டிருக்கிறதே தவிர, அந்த பட்ஜெட்டிலே சில பகுதிகள் கைவிடப்பட்டிருக்கின்றன. அப்படி கைவிடப்பட்டிருப்பதிலே 1981-82 ஆம் ஆண்டிலே பைனான்சியல் ரெக்குயர்மெண்ட் என்பதிலே பொதுவாக பல்வேறு காலங்கள் தரப்பட்டு, அதிலே டைரக்ஷன் அண்டு அட்மினிஸ்டிரேஷன் என்று தொடங்கி 14 விவரங்கள் தரப்பட்டிருக்கிறது.

அதிலே, சயன்ஸ் எஜுகேஷன் விடப்பட்டிருக்கிறது. தொகை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினாலோ, அல்லது மற்ற பாடத் திட்டங்களிலே சயன்சும் சேர்க்கப்பட்டு விட்ட காரணத்தினாலோ, ஒரு வேளை கைவிடப்பட்டிருக்கக் கூடும். அதுபோல ஆர்ட் அண்டு கல்சர் என்பதும் விடப்பட்டிருக்கிறது. ஒரு வேளை வேறு தொகுப்பிலே அல்லது தலைப்பிலே கொண்டு போய்ச் சேர்த்திருக்கக்கூடும்.

அடுத்து பிசிகல் எஜுகேஷன் என்பது கல்வித் துறையிலே எவ்வளவு முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அந்த பிசிகல் எஜுகேஷன் கடந்த ஆண்டு வரை பெர்ஃபாமென்ஸ் பட்ஜெட்டிலே தனி இடம் பெற்று வந்தது. இந்த ஆண்டு அது எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த பிசிகல் எஜுகேஷன் சிறுவர்களுடைய விளையாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்திலே மட்டும் நடைபெறுவது இல்லை, அது பள்ளிக் கூடங்கள் தோறும், கல்லூரிகள் தோறும் நடைபெறுகின்ற ஒன்று. அந்தத் துறைக்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றிருந்தால் அது ஏன் இடம் பெறவில்லை ? அப்படி இடம் பெறாத அளவுக்கு அது பொதுக்கருத்திலே இடம் பெற்று விட்டதா? அல்லது அதன் முக்கியத்துவம் குறைந்து போய் விட்டதா? குறைந்துபோய் விடலாமா என்று கேட்க விரும்புகிறேன் ? அப்படி ஆண்டுதோறும் வருகிற ஒரு பெர்ஃபாமென்ஸ் பட்ஜெட்டிலே அது விடப்படுமானால், அது எவ்வளவு பெரிய குறை? அப்படி ஏன் விடப்பட வேண்டும் என்பதற்கான தகுந்த காரணம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

அதை போல இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே போர்டிங் ஹோம்ஸ் அண்டு ஆர்பனேஜ் என்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டபோது கடந்த ஆண்டு வரையிலே அல்லது அதற்கு முந்தைய ஆண்டு வரையிலே அதைப்பற்றி தெரிவிக்கிற போது, அவர்கள் ஒவ்வொருவருக்கும்,

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 24

Subject to a maximum of Rs. 14 in Madras and in other areas Rs. 13 and hill areas Rs. 18 for every orphen or three-fourth of the boarding charges whichever is less

என்று கூறும் கருத்தெல்லாம் சேர்ந்து இருந்தது. இப்பொழுது என்ன காரணத்தினாலோ அது இடம் பெறவில்லை. என்ன காரணத்தினால் எடுத்து விட்டீர்கள்? அந்தத் தொகை ஏற்கெனவே மிகமிகக் குறைவு. ஆர்பனேஜிலே பிள்ளைகளைச் சேர்த்துவிட்டதற்கு பின்னாலே ஒரு பையனுக்கு மாதம் 13 ரூபாய், 14 ரூபாய் என்ற அளவிற்கு அவர்கள் வளர்வதற்கு தருகிறோம் என்று சொன்னால், அந்தத் தொகை மிக மிகக் குறைவு என்று நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆனால், அந்தத் தொகையிலே எந்த வித மாற்றமும் செய்யப்பெறவில்லை.

1979–80 ஆம் ஆண்டிலேயும் மொத்தத் தொகை 62 இலட்சம், 1980–81-ஆம் ஆண்டிலேயும், அந்தத் தொகை 62 இலட்சம்என்று இருக்கிறது. 1981–82 ஆம் ஆண்டிலேயும் அந்தத் தொகை 62 இலட்சம் என்றே இருக்கிறது. இதைப்பற்றி நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அந்தத் தொகை மிக மிகக் குறைவு என்று சொல்லியிருக்கிறேன். அது பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டேன். ஆனால், அதற்காக, எந்த அடிப்படையிலே அந்தத் தொகை தரப்படுகிறது என்ற குறிப்பினையே கைவிடுவதிலேதான் அதைக் காட்டியிருக்கிறார்களே தவிர, தொகையை உயர்த்துவதற்காக எந்த வழியும் செய்யவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காலேஜியேட் எஜுகேஷன் என்ற தலைப்பில் பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட் 1981–82-ன்படி ஒவ்வொரு ஆண்டும் பல ஆண்டுகளாக தொடர்ந்து அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் தரப்படுவது மரபு. அப்படி கடந்த ஆண்டு வரை தரப்பட்டது. இப்போதும் தரப்பட்டிருக்கிறது. அதில் 1970–71 ஆம் ஆண்டுக்கு, கடந்த ஆண்டு பெர்ஃபார்மன்ஸ் பட்ஜட்டிலும் அதற்கு முதல் ஆண்டு பார்ஃபார்மன்ஸ் பட்ஜட்டிலும் 1970–71-க்கு செலவான தொகை என்னும் கணக்காக வந்தது 443 இலட்சம் என்றுபழைய பெர்ஃபார்மன்ஸ் பட்ஜட்டில் இருக்கிறது. இந்த முறை அது மாற்றப்பட்டு 736 இலட்சம் என்றிருக்கிறது. 1971 ஆம் ஆண்டு வரவு–செலவு கணக்கு 1973-ஆம் ஆண்டில் அக்கவுண்ட் என்பதாக வந்து அதற்குப் பின்னால் 1980 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அந்தக் கணக்கு எழுதப்பட்டு 1980 ஆம் ஆண்டு வரை பர்ஃபார்மன்ஸ் பட்ஜட்டில் மாற்றப்படாமல் 1981ஆம் ஆண்டில் இப்போது மாற்றப்பட்டு இதில் 736 இலட்சம் என்று தரப்பட்டிருக்கிறது. இதுவரையில் தரப்பட்டது 443 இலட்சம். இப்போது இவ்வளவு பெரிய மாற்றம் எப்படி இடம் பெறலாம்? அதேபோல் தொடர்ந்த ஆண்டுகளிலும் சில

1981 ஏப்ரல் 24] [திரு. க. அன்பழகன்]

மாற்றங்கள் இருக்கும் என்று சந்தேகிக்கிறேன். 1971–72 ஆம் ஆண்டிலிருந்து 1972–73, 1973–74, 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான விவரங்கள் கடந்த ஆண்டு பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில் இடம் பெற்றது இந்த ஆண்டு இடம் பெறாமல் நீக்கப்பட்டுவிட்டது. அப்படி நீக்கப்பட்டதால் அதிலே கூட, Disparity or change in figures இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கிறேன்.

1976–77 ஆம் ஆண்டில் இது மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், கடந்த ஆண்டு வரை தரப்பட்ட தொகை 1,307 இலட்சம். இப்போது தரப்பட்டிருப்பது 1,355 இலட்சம். கடந்த ஆண்டு வரை தரப்பட்ட அக்கவுண்ட்ஸ் 1,307 இலட்சம், இப்போது அக்கவுண்ட்ஸ் 1,355 இலட்சம். அந்த அக்கவுண்ட் ஏற்கனவே வந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. அது இப்போது மாற்றப் பட்டிருக்கிறது. 1977–78 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டு வரை தரப்பட்ட தொகை 1,772 இலட்சம், இப்போது 1,866 இலட்சம். இந்த மாற்றங்கள் எப்படி இடம் பெறலாம்? இடம் பெற என்ன நியாயம்? இது கல்வித் துறை தருகிற புள்ளி விவரமா அல்லது நிதித் துறை தருகிற புள்ளி விவரமா? நிதித் துறை தந்த புள்ளி விவரம் என்றால், நிதித் துறை தந்தால் அதை கல்வித் துறை அப்படியே அந்த இடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய கடமை மட்டுந்தானா? இப்படி மாற்றம் ஏற்படக் காரணம் என்ன என்று சொல்லத் தேவையில்லையா? 1978–79 ஆம் ஆண்டில் வருகிற வேற்றுமை சிறிய வேற்றுமை, ஆகவே அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஏற்கனவே கணக்கு முடிந்து அக்கவுண்ட் வந்த அந்தத் தொகை மாற்றப்பட்டிருக்கிறது. அது சரியல்ல என்று சொல்வது என் கடமை என்று கருதுகிறேன்.

இன்றைக்கு இந்த அரசு கல்வித் துறையில் செய்திருக்கிற மிகப் பெரிய மாற்றம் அல்லது வளர்ச்சி என்று சொல்லி வாதாடி வருவது புதிய மேல் நிலைக் கல்வி. அதாவது ஹையர் செகண்டரி. மேல்நிலைக் கல்வியை இந்த அரசு கொண்டு வந்திருப்பது கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்காக என்று சொன்னதற்குப் பின்னால், இந்த மேல்நிலைக் கல்வி கொண்டு வரப்பட்டுள்ள முறையில் 'ஹாப்ஹேஸர்ட்' என்ற வகையில் ஒருதெளிவற்ற குழப்பமான நிலைதான் ஏற்பட்டது. இதை நிறைவேற்றுவதில் இடையூறுகள் ஏற்படும் என்றும் அந்த இடையூறுகளை எல்லாம் கடப்பதற்கு நல்ல பொருளாதார வல்லமை வேண்டும் அல்லது இதை முறையாக முன்னாலேயே ஒழுங்கு படுத்த வேண்டும் என்று நான் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த மேல்நிலைக் கல்வி பற்றி ஒரு தனி அறிக்கையை, விரிவான அறிக்கையை ஆண்டுதோறும் வைத்திருக்க வேண்டும். அதைக் கொண்டுவந்தபோது மேல்நிலைக் கல்வி பற்றி ஒரு அறிக்கை தரப்பட்டது. இப்போது மேல்நிலைக் கல்வி பற்றி பல்வேறு குறைகள் பேசப்படுகின்றன. அமைச்சர் அவர்கள், அதற்கான

ஆசிரியர்கள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பள்ளிகள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன, ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. அதில் 500-க்கு மேல் அரசுப் பள்ளிகள் என்றும் 500-க்கு மேல் தனியார் பள்ளிகள் என்றும், அதில் இவ்வளவு பேர்கள் படிக்கிறார்கள் என்றும் அதைத்தான், சொல்ல முடியுமே தவிர மேல்நிலைக் கல்வி என்று கொண்டு வந்தபோது சொல்லப்பட்ட நோக்கமே, மேல்நிலைக் கல்வி படித்து முடிக்கிறபோது பெரும்பாலான மாணவர்கள் கல்லூரிகளில் வந்து சேர வேண்டும் என்ற ஆர்வத்திற்கு அவசியத்திற்கு இடம் இல்லாமல், அக்கல்வியில் அவர்களுக்குக் கிடைக்கிற பயிற்சியை வைத்துக் கொண்டு அவர்களாகவே ஒரு தொழிலை மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு அந்தப் பயிற்சி அவர்களுக்கு கிடைக்கும் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு ஏறக்குறைய 25,000 பேர்கள் படிக்கிறார்கள். இது அகில இந்திய ரீதியில், வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எண்ணிக்கை சற்று அதிகம் என்று சொன்னாலும், தமிழ்நாட்டில் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம், தமிழ்நாட்டில் படித்தவர்களுக்கு இருக்கிற ஏமாற்றம் இவற்றை வைத்துக் கொண்டு பார்க்கும்போது மொத்தம் படிக்கும் மாணவர்கள் 25,000 பேர்களில் அந்த 25,000 பேர்களும் ஏதாவது ஒரு தொழில் பயில்கிறார்கள் என்று சொல்லலாம். அதில் 16,000 பேர்கள் கமர்ஷியல் கோர்ஸ், டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் போன்றவைகள் படிக்கிறார்கள். ஏறக்குறைய 2,000 அல்லது 3,000 பேர்கள் வேளாண்மைப் படிப்பை ஒட்டியவர்கள்.

(மாலை 4—50)

எனவே புதிய தொழில் வளர்ச்சிக்கான கல்வி அதிலே என்னென்ன இருக்கிறது, என்ன பயிற்சி தரப்படுகிறது என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டுமானால், மேல்நிலைக் கல்வியிலே தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறது. அதிலே ஏறத்தாழ ஒன்றேமுக்கால் இலட்சம், இரண்டு இலட்சம் பேர்கள் பயில்வார்களானால், அந்தப் பயிற்சியை பெற்றதற்குப் பின்னாலே, எவ்வளவு பேர் கல்லூரிக்கு வர விரும்பாமல், நாங்களே தொழில் செய்து வாழ்கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கொண்டுதான் அதற்கு மதிப்பீடு செய்ய வேண்டும். அப்படி மதிப்பீடு செய்யக்கூடிய முறையில் மேல்நிலைக் கல்வியைப் பற்றி சரியான விளக்கங்கள் தரப்படவும் இல்லை. மேல்நிலைக் கல்வியில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஏதாவது ஒரு தொழில் சொல்லித் தரப்படுகின்றது என்று சொல்லி விடுகிறோமே தவிர ஒரு மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் குறைந்தது 3 தொழில்களையாவது பயிற்றுவிக்க வேண்டும்: அப்படியிருந்தால் தான் அந்தப் பிள்ளைகள் அந்தத் தொழில்களில் ஈடுபடுவார்களே தவிர, ஒரே ஒரு தொழில் இருக்கிறபோது, அது ஒரு கட்டாயமான

தேவையாக எடுத்துக் கொள்வார்களே தவிர 'அவுட் ஆப் நேசுரல் கம்பல்ஷன்' படிப்பின் தேவையாக எடுத்துக் கொள்வார்களே தவிர, அதிலே ஆர்வம் கொள்ள வாய்ப்பில்லை உள்ளபடியே ஒரு தொழில் பயிலுகின்ற சூழ்நிலை உணர்வு, அந்தப் பிள்ளைகளுக்கு ஏற்பட முடியாது. எனவே, மேல்நிலை கல்வியிலே, தொழிற் கல்வி கொடுப்பதிலே தகுந்த அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான ஆர்வம் காட்டப்படவில்லை; அதற்கான நிதி ஒதுக்கப்பட வில்லை. இன்னும் சொல்லப்போனால், மேல்நிலைக் கல்விக் கூடங்களிலே, விஞ்ஞானத்திற்கான கட்டிடங்கள் கட்டப்பட வில்லை. பல கட்டிடங்கள் இன்னும் வரவில்லை. அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த மேல்நிலைக் கல்வியிலே சேர்ந்த மாணவர்கள் பெற வேண்டிய சில பயிற்சிகளுக்காக கல்லூரிகளிலே உள்ள விஞ்ஞானக் கூடங் களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இணையங்கள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. ஒருவிதமான தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எத்தனை இடங்களிலே இத்தகைய இணையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரம் இல்லை. எத்தனை மாவட்டங்களிலே, எந்தெந்தக் கல்லூரியோடு, எந்தெந்தப் பள்ளிக்கூடங்களுக்கு இணையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்ற பட்டியல் போட்டுத் தந்திருக் கலாம். அந்தப் பட்டியல் இல்லை. அப்படியிருப்பதை நான் குறையாகக் குறிப்பிடவில்லை. ஆனால், அப்படி விவரம் தரு கின்ற அக்கறை இல்லாத காரணத்தால், தரப்படவில்லை. இவ்வளவு இணையங்கள் என்பது தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே புதுமுக வகுப்பு பி.யூ.சி. எஜுகேஷன் கைவிடப்பட்டது. புதுமுக வகுப்பு போய் 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இப்போதும் நம்முடைய, பட்ஜெட்டிலே பி.யூ.சி. எஜுகேஷன் என்ற தலைப்பிலேதான், ஹையர் செகண்டரி எஜுகேஷன் வருகிறதே தவிர, அந்த பி.யூ.சி. என்ற தலைப்பு நீக்கப்படவில்லை. இன்னும் கூட நிதி நிலைத் துறையிலே, இந்தத் துறையின் மூலமாக எடுத்துச் சொல்லப் பட்டு, அந்தத் தலைப்பு மாற்றப்படவில்லை. அந்தத் தலைப் பிலேதான் வந்திருக்கிறது. கல்லூரியில் பி.யூ.சி. போய்விட்டது; ஆனால், அது பட்ஜெட்டிலே இன்னும் போகவில்லை.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு செலவிட்ட தொகைகளுக்குத் தகுந்த பலன் கிடைத்ததா என் பதிலே அக்கறை காட்டப்படவில்லை. சில பள்ளிக்கூடங்களிலே கட்டடங்கள் எப்படியோ கட்டப்படாமல் இடையிலே நின்று போய் விட்டது. தொடர்ச்சியாக அந்தக் கட்டிடங்கள் கட்டி

முடிக்கப்படவில்லை என்று வெட்டுத் தீர்மானத்திலே தரப்பட்டிருக்கிறது. இங்கே என்னிடத்திலும் புகார்கள் வந்திருக்கின்றன. சில இடங்களிலே கட்டடங்கள் பாதியிலே நின்று, தொடர்ச்சியாக கட்டப்படாமல், இன்னும் சில இடங்களில் அந்த வட்டத்திலே செல்வாக்கு மிக்கவர்கள்—எந்தக் கட்சி என்பது எனக்கு முக்கியமல்ல.—அவர்கள் குழாய் போட்டுத் தண்ணீர் இறைப்பதற்காக அந்தப் பள்ளிக்கூட கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதிக்காமல், அதற்கு இடையூறாக கடைசி வரையிலும் தகராறு செய்து கொண்டு வருகிறார்கள். அதிகாரிகளுக்கும், அவர்களுக்கும் இடையிலே மாறுபாடு இருந்து, அதனால் காரியம் நடக்கவில்லை. அப்படிப்பட்ட குறைகள் இருப்பதற்குக் காரணம் பள்ளிக்கூட கட்டிடங்கள் எந்தெந்தத் தேதியிலே கட்டவேண்டுமென்று ஆணையிடப்பட்டாலும், எவ்வளவு காலத்தில் முடிக்கப்பட வேண்டும், அதற்கு இடையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதற்கான ரிப்போர்ட்டை கல்வித் துறைக்கும், கல்வி அமைச்சருக்கும் 3 மாதங்களுக்கு ஒரு முறை தர வேண்டும். இல்லையானால், பொதுப் பணித் துறையோ அல்லது வேறு துறையோ அதிலே அளவு கடந்த தாமதம், தேவையற்ற தாமதத்தை ஏற்படுத்தலாம். இடையூறுகள் ஏற்படலாம். அப்படி இடையூறு ஏற்படுமானால், அவைகளை எல்லாம் களைவதற்கு அரசு அக்கறை எடுத்துக் கொண்டாலொழிய, முன்னாலே செலவழிக்கப்பட்ட தொகைக்கும், பின்னாலே செலவழிக்கப்பட்ட தொகைக்கும் தொடர்பு இல்லாமல் பயனில்லாத ஒரு நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது இது. பல்கலைக் கழகங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது. உயர்தர கல்விக்கு, ஆராய்ச்சிக்கு மானியம் வழங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி வழங்கும்போது, பல்கலைக் கழகம் தரமாக இயங்குகிறதா என்ற வகையில் கண்காணித்திட ஒரு வகையில் அதுபற்றி ஆராய வேண்டிய கடமை இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு புகழ்பெற்ற பல்கலைக் கழகம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒருவேளை இரண்டு ஆண்டு காலமாகத்தான் அப்படி சொல்ல முடியாத நிலைமை இருக்கிறதோ என்னவோ? ஏறத்தாழ 124 ஆண்டுக் காலம் ஆகிற சென்னை பல்கலைக் கழகத்தில் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அந்தப் பல்கலைக் கழகத்திலே மிக முக்கியமான பொறுப்புகளில் பதவிகளில் நியமிக்கப்படுகிறவர்கள் முறையான குழுவாலே பரிசீலிக்கப்பட்டு, நேர்முகத் தேர்விற்குப் பின்னாலே தேர்ந்தெடுக்கப்படுகிற முறைகள் புறக்கணிக்கப்பட்டு, சிலபேர் சில முக்கியமான பொறுப்புகளுக்கு துணை வேந்தரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அப்படி நியமிக்கப்படுவது துணை வேந்தர்

எவ்வளவு தான் மிகச் சிறந்த தகுதி வாய்ந்தவர் என்று சொல்ல இடமிருந்தாலும், யாராக இருந்தாலும், எந்த ஒரு பொறுப்புக்கும் உரிய தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அதற்கான குழு மூலமாக முறைப்படுத்துகின்ற அந்த முறையை மீறுவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இன்னும் ஒன்று துணை வேந்தர் அவர்கள் ஒரு வகையிலே மிகச் சிறந்த பொறியியலாளராக, பொறியியல் துறையிலே அவர் வல்லுநராக இருக்கலாம். ஆனால் அவர் துணை வேந்தர் என்ற முறையில் பல்கலைக் கழக விதிமுறைகளை எல்லாம் தூக்கி ஒதுக்கி வைத்து விடுகிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். கோயம்புத்தூரிலே திரு. ஜி. குப்புசாமி நாயுடு என்பவர் பெயரால் 'குப்புசாமி நாயுடு மெமோரியல் ஆஸ்பிட்டல்' என்பது இருக்கிறது. அது ஒரு நல்ல மருத்துவமனை. அந்த மருத்துவ மனையில் ஒருவர் 'பையோ-கெமிஸ்ட்ரி' பிரிவிலே பணியாற்றுகின்றார். டாக்டர் பார்த்தசாரதி என்பவர். அப்படி பணி புரிகின்றவர் டாக்டரேட் ஆராய்ச்சி செய்வதற்கோ, அல்லது டாக்டரேட் பெறுகின்ற மாணவர்களை பயிற்றுவிப்பதற்கோ ஒரு தனி உரிமை கேட்கிறார். தனி உரிமை வழங்குவதற்கு பல்கலைக் கழக விதிமுறைகளிலே இடமில்லை அல்லது யூ.ஜி.சி. யும் அனுமதிக்காது. 'டீச்சிங் இன்ஸ்டிடியூட்டாக' இருந்தால்தான் அந்த இடத்திலே டாக்டரேட் பயிற்சியை, டாக்டரேட் ஆராய்ச்சிசெய்வதற்கோ உரிமை கொடுக்க முடியும். ஆனால் அந்த டாக்டர் பார்த்தசாரதி அவர்களுக்கு, அவர் பி.எச்.டி. பட்டம் பெறுவதற்கான ஆய்வு நடத்துவதற்கு அந்த உரிமையை வழங்கலாம் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் வழங்கியிருப்பதாகத் திட்டவட்டமாக தெரிவிக்கிறார்கள். பல்கலைக்கழக விதிமுறைகளை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும் அதன் விளைவாக அந்த பல்கலைக் கழகத்தில் பணி புரிகின்றவர்கள் ஒவ்வொருவரும் யாராக இருந்தாலும் ஏதாவது ஒரு வகையிலே தவறு செய்வதற்கான ஊக்கத்தைப் பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள். அப்படிப்பட்ட தவறுகள் அண்மை காலத்திலே அங்கே ஏற்பட்டிருக்கின்ற நியமனங்களிலும் காணப்படுகிறது. கரெஸ்பாண்டன்ஸ் கோர்சிற்காக செய்யப்பட்டிருக்கிற நியமனங்கள் முறை தவறாக நடந்திருக்கிறது. அதே போல் சில பேர் தனிப்பட்ட நிறுவனங்களிலே இருப்பவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்கு பல்கலைக் கழக் துணை வேந்தர் அவர்கள் முன் வருகின்ற இந்த முறைகள் சரிதானா, முறைதானா என்பதைக் கல்வித் துறை பரிசீலிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மற்றொன்று பல்கலைக் கழகக் கல்வியின் தரம் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே ஏற்கனவே பெற்றிருந்த முன்னணி நிலையைப் பெற முடியவில்லை என்ற குறை இருந்தது. அந்தக் குறையை மாற்றுவதற்காக ஏற்கனவே இருந்த துணை வேந்தர் பல்கலைக் கழகத்திலே உள்ள பாடத் திட்டங்களை எல்லாம் உலகத்திலே வேறு எந்த நாடுகளிலும் சென்று ஒரு வேலையிலே, பிழைப்பிலே ஈடுபடுவதாக இருந்தாலும் கூட,

காட்டக்கூடிய திறமையை மேலும் உயர்த்துவதற்கு, பாடத் திட்டங்களின் தகுதியை உயர்த்துவதற்குப் பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டார். வேறு சில வகைகளிலே அப்போது சில குறைபாடுகள் இருந்தன என்று சொன்னாலும் கூட அவருடைய காலத்திலே பாடத் திட்டங்களுடைய தகுதியை, அதனாலே மாணவர்கள் பெறத்தக்க அறிவுக் கூர்மையை செயலாற்றலை வளர்ப்பதற்காக, பாடத் திட்டங்களை உயர்த்துகிற ஒரு முறை, அதிலேயும் குறிப்பாக விஞ்ஞான பாடத் திட்டங்களை உயர்த்துகிற ஒரு முறையை அவர் மேற் கொண்டார். அப்படி மேற்கொண்ட அந்த முறை அண்மை யிலே கடந்த சில ஆண்டுகளாக பின்பற்றப்படாமல் அலட்சிய மாக ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டன. இப்போது வேறுவித மான பாடத் திட்ட முறைகள், இது தான் நம்மால் முடியும் என்ற அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன என்று, நான் கேள்விப்படுகிறேன். அப்படி இருக்குமானால் அது சரியானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். ஏனென்றால் பாடத்திட்டங்களைப் பல்கலைக்கழக அளவிலே உயர்த்தவேண்டியது அவசியம் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். பத்தாவது வரை யிலே உள்ள பாடத்திட்டத்தை உயர்த்தி, பத்தாவதற்குப் பின்னால் ஹையர்செகண்டரி படிக்கின்ற இரண்டு ஆண்டு காலத்திலே பி.ஏ. முதல் வகுப்பிலே படிக்கக்கூடிய பாடங்களைப் படிக்கின்ற அளவிற்கான திறமை பிள்ளைகளிடத்திலே வளர வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதற்குப் பின்னர் பி.ஏ.யிலே படிக்கின்ற மாணவர்கள், பி.எஸ்ஸி. யிலே படிக்கின்ற மாண வர்கள் அதற்கு மேற்பட்ட வகுப்பிலே படிக்கக்கூடிய அள விற்கான தகுதியுள்ள, அறிவு நுட்பம் உள்ள அந்த பாடங்களைப் படிப்பதற்கான வழிமுறையைச் செய்தால் தான் நாம் ஏற்படுத்துகிற மாற்றங்கள் கடைசிவரையில் பயனுள்ளதாக இருக்குமென்ற காரணத்தால் பாடத்திட்டங்களைத் திருத்து வதற்காக, உயர்த்துவதற்காகச் செய்யப்பட்ட நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்குமானால், அந்த கைவிடப்பட்டவற்றை மறு படியும் மேற்கொள்வதற்கு வழி காணவேண்டும். முன்னர் மேற் கொண்ட அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று நான் சொல்ல மாட்டேன். கல்வி நிபுணர்களைக் கொண்டு அளவு அறிந்து, தேவையறிந்து பயன்படுத்தக்கூடிய முறை களிலே தகுதி உயர்வை ஏற்படுத்தக்கூடியவற்றைப் பயன் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் விரும்பு கிறேன். அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கிற நூல் நிலையம் தகுதி வாய்ந்த நூல் நிலையம். அந்த நூல் நிலையம் சிறப்பானதுதான். அந்த நூல் நிலையத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிற அதனுடைய லைப்ரேரியன் முதலான வர்கள் பெறவேண்டிய தகுதியைப் பெற்றவர்கள் அல்ல. அவர்கள் மீது பல புகார்கள் பேசப்பட்டிருக்கிறது. இது பல்கலைக் கழகப் பிரச்சினை என்றாலும் கூடப் பல்கலைக் கழகத்தின் தகுதி பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுவதை

அரசு, அதுவும் சென்னைப் பல்கலைக் கழகம் என்பதால் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5.00]

அண்மையில், டிசம்பர் திங்களிலே நடைபெற்ற தேர்வுகளின் முடிவுகள் இன்னும் சென்னைப் பல்கலைக் கழகத்தாலே வெளியிடப்படவில்லை. செமஸ்டர் தேர்வுகளின் முடிவுகள் பெப்ரவரி திங்களுக்குள்ளாகவே வெளியிடப் பெற்று, வருகிற மே திங்கள் 8, 10 தேதிக்குள்ளாக அந்த மாணவர்கள் அடுத்த செமஸ்டர் தேர்வை எழுதுகின்ற வாய்ப்பு அளிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும். இன்றைய தினம் தேர்வு முடிவுகளை அறிவிக்க கம்பியூட்டரைசேஷன் முறை கையாளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டும் இந்த முறை கையாளப்பட்டு இருக்கிறது. கம்பியூட்டரைசேஷன் முறை என்று சொன்னால் குறிப்பாக நான் இரண்டு கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தேர்வு முடிவுகளில் காணப்படுகிற தவறுகள் 100-க்கு 5 விழுக்காடு என்ற அளவிலேதான் தவறுகள் இருக்கக்கூடும், என்று கம்பியூட்டரைசேஷன் முறையிலே நல்ல அனுபவம் பெற்றவர்கள் அத்தனை பேர்களுமே ஒப்புக்கொள்கிறார்கள். ஏனென்றால் கம்பியூட்டரைசேஷன் முறை எவ்வளவு ஒழுங்காகச் செயல்பட்டாலும் கூட 100-க்கு 5 விழுக்காடுகள் வரை தவறுகள் இருக்கக் கூடும் என்று தான் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த முறை கம்பியூட்டரைசேஷன் முறை கையாளப்பட்ட காரணத்தால் 100-க்கு 30, 40 விழுக்காடுகள் அளவுக்குத் தவறான முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. அந்த அளவுக்குத் தவறுகள் கம்பியூட்டரைசேஷன் முறை மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு வரையிலே கம்பியூட்டரைசேஷன் செய்கின்ற பொறுப்பை யாரிடத்திலே ஒப்படைத்தார்களோ இந்த ஆண்டு அதை மாற்றுவது நல்லது என்று கருத்து ஏற்பட்டதன் காரணமாக அதை வேறு இடத்திலே டாடா தொடாபுடைய நிறுவனத்திடத்திலே கம்பியூட்டரைசேஷன் செய்கின்ற பணியைத் தரவேண்டுமென்று தரப்பட்டு இருக்கிறது. தரப்பட்ட விவரங்களிலே குறைபாடுகள் இருந்தாலோ அல்லது விவரங்களைக் கொடுப்பதற்கானமுறையிலே கொடுக்காமல் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாகவோ அல்லது கிரேபிடிங் ஷீட்ஸ் கொடுப்பதிலே ஏற்பட்ட தவறுகள் காரணமாகவோ இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்ற நிலைமை என்னவென்றால் ஒரு கல்லூரியிலே 30 மாணவர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்றால் அவர்களிலே ஏறத்தாழ 20 பேர்கள் தேறக்கூடிய நிலைமை இருந்து, 8 பேர்கள்தான் தேறியிருக்கிறார்கள் என்றும் 20

பேர்களுக்கு மேலே தேர்ச்சிபெறவில்லை என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. மேலும் இன்னும் சொல்லப் போனால் பல மாணவர்கள் தேர்ச்சி பெறவில்லை என்பதுகூட அல்ல. தேர்ச்சி பெறாத சில மாணவர்கள் அவர்கள் வாங்கிய மார்க் குறைவாக இருந்து தேர்ச்சி பெறவில்லை என்றால்கூட ஏற்கலாம். ஆனால் மால்பிராக்டிஸ் என்று குறிப்பிடப்பட்டு வருந்திருக் கிறது. அவர்கள் தவறே செய்யவில்லை. தோற்றுப் போவ தைப் பற்றியோ அல்லது பெயிலானது பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. கம்பியூட்டரைசேஷன்லே கொடுத்திருக் கின்ற முறையிலே ஏற்பட்ட குறை காரணமாக ஒவ்வொரு கல்லூரி யிலும் பலர் மாஸ்பிராக்டிஸ் செய்தார்கள் என்ற முறையிலே முடிவு வந்திருக்கிறது. இது கம்பியூட்டரைசேஷன் முறையிலே இருந்து வந்திருக்கின்ற முடிவு. இன்னும் சொல்லப்போனால் மாணவர்களிலே பலர் குறைந்த மார்க் வாங்கி கிரேஸ் மார்க் மூலமாக வெற்றிபெறுகிற மாணவர்கள் இருப்பார்களேயானால் பல்கலைக் கழகத்திலே அதற்கான போர்டிலே வைத்து அதன் மூலமாக 5 மார்க், 3 மார்க் என்று அதிகப்படுத்துவது பல்கலைப் கழகத்தினுடைய உரிமை. அப்படி 5 மார்க், 3 மார்க் என்று அதிகப்படுத்துகிறபோது இந்த கம்ப்யூட் டரைசேஷன் முறை கையாளப்படுகிறபோது ஏதோ ஒரு முறையிலே 5 மார்க், 3 மார்க் என்பதற்குப் பதிலாக 10 மார்க் அதிகம் என்று கொடுக்கப் போய், கம்பியூட்டரைசேஷன் முறையில் ஏற்பட்ட குறை காரணமாக எல்லாருக்குமே 10 மார்க் அதிகப்படுத்தப்பட்டு, 100-க்கு 95 க்கு மேல் வாங்கியவர் 100-க்கு 115 மார்க் வாங்குகிறார்கள், ஒரு மாணவன் 120 மார்க் வாங்கியிருக்கிறான். எப்படி ஆரம்பப் பள்ளிகளிலே நாட்டிலுள்ள மொத்த மாணவர்கள் 100 என்றால் 110 விழுக்காடு சேர்ந்திருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் கிடைக்கிறதோ அதுபோல கம்பியூட்டரை சேஷன்முறையில் ஏற்பட்ட விளைவு 100க்கு 120 மார்க் வாங்கிய மாணவர்கள் மட்டும் பல பேர்கள் இருக்கிறார்கள். இன்னும் ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன், அமைச்சர் அவர் கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக. ஒரு குறிப் பிட்ட பாடத் தேர்வே எழுதாத மாணவி அதில் வெற்றி பெற்றதாக வந்திருக்கிறது. நான் தேர்வே எழுதவில்லை என்று சொன்னால் கூட, முடிவு கம்பியூட்டரில் வந்துவிட்ட காரணத்தால் நீ தேர்வு எழுதியிருக்கத்தான் வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட வேடிக்கைகளுக்கு எல்லாம் காரணம், கம்பியூட்டரை சேஷன் முறையிலே அனுபவத்தோடு முறையோடு அந்த மார்க் ஷீட்கள் எப்படி தயாரிக்கப்படுகின்றன என்ற முழு விவரத்தையும் தெரிந்துகொண்டு செயல்படுகின்ற தேர்ச்சியும் இல்லாமல் கம்பியூட்டரைசேஷன் முறையை நம்புவது நல்லதல்ல. அமைச்சர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன் படுத்த முடியுமானால் பல்கலைக் கழகம் கம்பியூட்டரை சேஷன் முறையின் மூலமாக கிடைத்த விடைகள் அத்தனை

...

யையும் தூக்கியெறிந்துவிட்டு It is totally cancelled என்று அறிவித்துவிட்டு 1 மாதத்திலோ அல்லது 15 நாட்களிலோ ஹியூமன் எபர்ட் மூலமாக முந்தைய வழக்கம் போல் எழுத்தாளர்களைக் கொண்டு முடிவுகள் காணப்பட வேண்டும். இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் உட்கார்ந்துகொண்டு கிளார்க்குகளும் சூப்பிரண்டென்டென்ட்களும் உட்கார்ந்துகொண்டு மார்க் விவரம் எடுத்தெழுதி 7, 8 பேர்கள் மூலம் சூப்பிரன்டென்டென் அளவுக்கு செக் செய்து முடிவு காணவேண்டும். இந்த முறையில் 1,000க்கு இரண்டு தவறுகள் தான் வரும். ஆனால் இன்றைக்கு 1000க்கு 300 தவறுகள் வருகின்றன. கம்பியூட்டரைசேஷன் என்பதிலே கூட நான் என்னுடைய அழுத்தமான உணர்வில் அதற்கு உடன்பாடு தெரிவிக்கக்கூடியனவாக இல்லை. ஏதோ ஒரு மாற்றத்தினைச் செய்வதாக விரும்பி அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற நிலைமைதான். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், வேலைவாய்ப்புக் கிடைக்காத இளைஞர்கள் ஏராளமாக இருக்கின்ற ஒரு நாட்டில் மேல் நாட்டிலே பயன்படுத்துகின்ற கம்பியூட்டரைசேஷன் முறை தேவை இல்லை என்றார். கம்பியூட்டரைசேஷன் முறையை நம் நாட்டிலே புகுத்துவதை எதிர்த்து நம்முடைய மக்கள் நிலையையும் தேவைகளையும் கணக்கிலே கொண்டு பார்க்கிற போது இந்த முறை தேவையில்லை என்று சொன்னார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏறத்தாழ 2 ஆயிரம் பேர்கள் எழுத்தர்களாக தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த இரண்டாயிரம் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குத் தனிப்பணி கொடுத்தாலாவது இந்தக் குறைகளை நீக்குவதற்கான வழி உண்டு. அவைகளைப்பற்றி விவரங்களெல்லாம் எனக்கு ஓரளவிற்குத் தெரிந்திருக்கிறது என்பதைவிட, பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற தலைப்புக்களைச் சொல்கிறேன்.

Computers vagaries delay examination results

என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது.

Computers muddle on examinatian results

என்றும் வந்திருக்கிறது. அதைப்போல

University Syndicate's soar with Vice-Chancellor

என்றும் வந்திருக்கிறது. இப்படிப் பல்வேறு தலைப்புக்களிலே வந்திருக்கின்றன. இவ்வாறு பல்வேறு விதமான

சூழ்நிலைகள், குறைபாடுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்தத் தக்க அளவிற்கு இருக்கின்றன. இவைகளை நோக்கும்போது, தொழிற்சாலையை நல்லமுறையில் நிர்வாகம் செய்ய வேண்டிய ஒருவர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருக்கிறார் என்று வருத்தப் படக் கூடிய அளவிற்கு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அவருடைய திறமை, அறிவு ஆகியவை வேறு வகையிலே பயன்படுவதற்கு எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடாத காரணத்தினால் ஏற்பட்ட விளைவு இது. அதனால்தான் இன்றைய தினம் சென்னை பல்கலைக் கழகம் இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறேன். தனிப்பட்ட முறையில் அந்தத் துணை வேந்தரிடம் எனக்கொன்றும் மாறுபாடு இல்லை ; ஆனால் பல்கலைக் கழகத்தைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் கடமைப் பட்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கடமைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்தில் பணிபுரிகின்ற விரிவுரையாளர்கள்—லெக்சரர்ஸ்—அவர்களுக்கு 1971-ஆம் ஆண்டு கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் விரிவுரையாளர்கள் ஆகியவர்களுக்குச் சமநிலையில் சம ஊதியம் வழங்கப்பட்டது. யூ. ஜி. சி. மூலம் கல்லூரிப் பேராசிரியர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் ஆகியவர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நிலை வந்தபொழுது யூ. ஜி. சி.-யில் கூட, 900 ரூபாயில் தொடங்க வேண்டுமென்ற கருத்து இருந்ததாக நான் கருதுகிறேன். அந்தக் கருத்து தவறாக இருந்தாலும்கூட, இருக்கலாம். ஆனால் இப்பொழுது 1,100 ரூபாயில் தொடங்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டு கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் உயர்த்தி வழங்கப்பட்டு விட்டது. அண்ணா பொறியியல் பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்ப விரிவுரையாளர்களுக்கு லெக்சரர்களுக்கு—கல்லூரிகளில் பேராசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியம் தரப்படுவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்ட பிறகும்கூட, இதுவரையில் பல்கலைக்கழக லெக்சரர்ஸ் என்ற அந்தத் தகுதியிலே அந்தப் பெயரிலே இருப்பவர்களுக்கு அந்த ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. ஏன் அவ்வாறு வழங்கப்பட வில்லை என்று தெரியவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவைகளின் ஆட்சிக் குழுக்கள் அதற்காகத் தீர்மானம் நிறைவேற்றி இங்கேயுள்ள லெக்சரர்களுக்கும் ஏற்கெனவே உள்ள ஒப்பு முறைப்படி நிர்ணயிக்கப்பட வேண்டும், சமநிலை தரப்பட வேண்டும்; 1,100 ரூபாய் தரப்பட வேண்டும், 700-இல் தொடங்குவது முறையல்ல என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அதை உடனடியாகக் கல்வியமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நாம் தாமதித்துப் பல காரியங்களைச் செய்கின்ற பொழுது யார் யாருக்கெல்லாமோ கசப்பு ஏற்படுகிறது; யார் யாரெல்லாமோ குரல் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அந்த அவசியம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் ஏற்கெனவே அமைச்சரவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கின்றார்கள் இவர்களையும் சமநிலைப் படுத்துவதற்கான முறைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள் பாலிடெக்னிக்கிற்குத் தரப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் இங்கே தரப்படவில்லை. பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் என்ற பெயரிலே உள்ளவர்களுக்கும் கல்லூரி பேராசிரியர்களுக்குச் சமமான ஊதியம் பெறத்தக்க அளவிற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்கள் கடந்த ஓராண்டுக்கு முன்பு ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி ஓரளவுக்கு அவர்கள் பக்கம் இருக்கின்ற நியாயத்தை ஏற்று, பல்கலைக் கழகத் துணைவேந்தரையும் அழைத்துப்பேசி பல குறைபாடுகளைப் போக்குவதற்கு ஒப்புக்கொண்டு, போராட்டமும் நிறுத்தப்பட்டது. அப்பொழுது தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்து என்னவென்றால், நீங்கள் போராட்டத்தை நிறுத்துங்கள் உங்கள் மீது உள்ள வழக்குகள் கைவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஏனென்றால், அப்பொழுது பலபேர் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மீதுள்ள வழக்குகளும் கைவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவதற்கு இவ்வளவு நாட்களா என்று கேட்க விரும்புகிறேன். எட்டு மாதங்களுக்கு மேலாகியும்கூட, அவர்களைத் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வேண்டுமானால் இழுத்தடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. போராட்டம் கைவிடப்பட்டு விட்டபிறகு அவ்வாறு தீர்மானித்து விட்ட பிறகு அந்த வழக்குகள் கைவிடப்பட்டுவிட்டதாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே, காவல்துறையினர் அப்படி வழக்கு இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள்.

அப்பொழுது நம்முடைய கல்வியமைச்சரவர்கள் துணைவேந்தரோடு கலந்து பேசி, பல்கலைக் கழக ஆசிரியர்களின் பிரதிநிதிகளோடு சேர்ந்து விவாதம் நடத்தியபொழுது தெரிவித்த ஒரு கருத்து, பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதற்கு துணை வேந்தர்கள் ஏற்படுத்துகின்ற குழு தனியாகக் கூடி மூன்று நான்கு திங்களுக்குள் இந்தப் பிரச்னையில் முடிவு காண

லாம், அப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் நடக்கு என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் அந்தக் குழுவின் கூட்டம் ஒருமுறைதான் நடந்தது. அவர்களால் நியமிக்கப்பட்ட சப் கமிட்டி கூடவில்லை. மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் குறைகளைப் போக்குவதற்காக மேற்கொள்வதாகச் சொன்ன குழுக் கூட்டங்கள் நடைபெறவே இல்லை: அதனால் எங்கள் குறைகள் போக்கப்படவில்லை என்று திரும்பத் திரும்ப அவர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே, அந்தக் குழு கூட வேண்டியதற் கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(மணி 5-0)

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பல்கலைக் கழகம் ஆற்றுகின்ற பணிகளிலே ஒன்று, மாணவர்களுடைய தராதரத்தை அவர்கள் பயில்கின்ற கல்லூரிகளை அவ்வப்போது தகுந்த முறையிலே பார்வையிடுவதும் அந்தக் கல்லூரிகளிலே தகுந்த முறையிலே பாடம் நடைபெறுகிறதா என்பதைத் கவனிப்பதும் ஒரு முறை யாக வைத்திருக்கிறார்கள்—இன்ஸ்பெக்ஷன்—அதற்காக, ஒரு குழுவெல்லாம் வைத்திருக்கிறார்கள். அது இன்னும் சற்று விரி வடைய வேண்டுமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல்கலைக் கழகத்திலேயோ, அல்லது கல்லூரிகளிலேயோ உயர்நிலைப் பள்ளிகளிலேயோ கூட நாம் கல்வியினுடைய நோக்கத்தை வலியுறுத்துகிறபொழுது நாம் எல்லோரும் ஓர் குலம் என்று வலியுறுத்தினாலும்கூட, அவர்கள் விண்ணப்பம் போடு கிறபொழுது அப்படி ஜாதியைக் குறிப்பிட வேண்டிய அவசியம் வருவதும் சில உரிமைகளைப் பெறுவதற்கு ஜாதியைக் குறிப்பிடு கின்ற சில நிலைமைகள் வருவதன் காரணமாக, அதுவும் ஒரு தவிர்க்க முடியாத ஒன்று என்ற நிலையில் இடம் பெற்றாலுங் கூட, ஜாதிகளுக்கிடையே கசப்புணர்ச்சி ஏற்படுத்துவது, வகுப்புகளுக்கிடையே வேற்றுமையை அதிகமாக வளர்ப்பது அதன் காரணமாக சில நேரங்களிலே, நல்ல அறிவோடு, தெளி வோடு, வாதிக்க முடியாத கூட்டம் வருகிற பொழுது, அவைகளை எந்த முறைகொண்டு வாதிக்கலாமோ அப்படி வாதிக்க ஆரம்பித்து, அதனுடைய விளைவாக, அடிதடி, கலவரம், குத்து, வெட்டு, கொலை, இப்படி பல வருந்தத்தக்க, விரும்பத் தகாத, தவிர்க்க வேண்டிய சம்பவங்கள் நடைபெற்று விடு கின்றன. ஆகவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், எந்த ஒரு கல்லூரியாக இருந்தாலும் அங்கேயிருக்கிற ஆசிரியர்கள், மாணவர்கள் சேர்ந்த ஒரு குழு—பீஸ் கமிட்டி—என்பதைப்போல அந்தக் கல்லூரிகளிலே, மாணவர்களுக்கிடையிலோ அல்லது மற்றவர்களுக்கிடையிலோ எந்தவிதத்திலேயும் பேதங்கள், மாறு பாடுகள் வருகிறபொழுது உடனே விசாரிப்பதற்கோ அல்லது அப்படி விசாரித்துப் பார்த்து அதிலே ஏதேனும் ஒரு கசப்புணர் வுக்குக் காரணமான சூழ்நிலை இருக்குமானால், அதற்குமேல் ஒரு டிரிபியூனல் இருந்து, அந்த டிரிபியூனலுக்கு நீங்கள் எப்படி

தனியார் நிர்வாகத்திலேயுள்ள கல்லூரிகளுக்கெல்லாம் ஆசிரியர்கள் குறைகளைத் தெரிவிப்பார்களேயானால், டிரிபியூனலுக்கு வரலாம் என்று தெரிவித்திருக்கிறீர்களோ அதைப் போல, பல்கலைக் கழகத்தாலே நியமிக்கப்பட்டு ஒரு டிரிபியூனல் அமைதுந் அதிலே, தெரிவிக்கப்பட்டு, அவர்கள் விசாரணை நடத்தி, ஜாதி மத வேற்றுமைகளைத் தூண்டுகிறவர்களோ, வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்துகிறவர்களோ, அல்லது ஏதாவது ஒரு காரணத்தாலே, கல்லூரி மாணவர்களுக்கிடையிலே, மிகக் கடுமையான ஒரு போராட்ட நிலைமையை உருவாக்கிவிடக் கூடியவர்களாகவோ யாராவது இருந்தால், அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றுகிற ஒரு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதனை அரசாங்கம் நேரடியாக மேற்கொள்வதை நான் விரும்பவில்லை. அரசியல் நோக்கம் அதிலே வரத் தேவையில்லை. ஆனால், அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டு, பொது நல நோக்கத்திற்காக ஒவ்வொரு கல்லூரியிலும், ஒவ்வொரு உயர் நிலைப்பள்ளியிலும் அமைதியைக் காப்பாற்றுவதற்கான ஒரு வழி முறையை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சில கடமைகளைச் செய்யலாம் என்று சொன்னாலுங்கூட, பல்கலைக் கழக வளாகங்கள், கல்லூரி வளாகங்கள் ஆகியவற்றில் அந்த நல்லெண்ணத்தை உருவாக்குவதற்கு முன்னால் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த அவசியம் இருக்கிற அதே நேரத்தில், சட்டக் கல்லூரி மாணவர்கள், ஏதோ சில கலவரத்திலே ஈடுபட்டதற்காக, அப்படிப்பட்ட வழக்குகள் எல்லாம் தொங்கிக் கொண்டிருக்கின்றபொழுது, அந்த வழக்கு அப்படியே கைவிடப்படாமலிருக்கும்போது, மாணவர்கள் இடையிலே திரும்பத்திரும்ப அந்த வேற்றுமை உணர்வுகள் வளர்வதற்கு அது வாய்ப்பளிக்கிறது. அரசாங்கம் அமைதியைக் காப்பாற்றுவதற்காக வழக்குப்போட வேண்டிய அவசியம் வருகின்றபொழுது போடத்தான் வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட வழக்குகள் இனி தொடர்வது பயனல்ல என்று தெரிகிறபொழுது உடனடியாகக் கைவிடவேண்டும். சட்டக் கல்லூரி மாணவர்கள், அல்லது வேறு கல்லூரியிலே படித்துவிட்டு சட்டக் கல்லூரிக்கு வந்த மாணவர்கள், இப்படி பல பேர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், 3 மாதங்களுக்குப் பின்னால், 6 மாதங்களுக்குப் பின்னால், அதைத் தொடர வேண்டிய அவசியம் இல்லையென்றால், அந்த வழக்குகள் எல்லாம் கைவிடப்படவேண்டும். சொந்த ஊருக்குச் சென்ற மாணவர்கள் திரும்ப இந்த வழக்குக்காக வரவேண்டிய அவசியமும் இருக்காது. Group conscience ஏற்படும் வகையில் தாங்கள் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகத் தங்களை ஆக்கிக்கொள்கிற மனப்பான்மையிலேயிருந்து அவர்களைத் விடுவிப்பதற்காக நீங்கள்

அந்த வழக்குகளைக் கைவிட வேண்டும். அப்படி கைவிடுவதை அறிவிப்பது ஒரு வகையிலே நல்லெண்ணத்தை உருவாக்குவதாகும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து சென்னைப் பல்கலைக் கழக நிருவாகத்தில் உள்ள சென்ட்டனரி ஹால்; ஒரு பெரிய மண்டபம், அந்த மண்டபத்தை அரசியல் கட்சிகளுக்கோ, மற்றவற்றிற்கோ தருவதில்லை. கல்ச்சுரல் பங்க்ஷன்ஸ் என்று சொல்லப்படுகிற, கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு மட்டும்தான் அந்த மண்டபம் பல்கலைக் கழகத்தாலே வாடகைக்கு வழங்கப்படும் என்று ஒரு முறையிருக்கிறது. ஆனால், அந்த முறைக்கு மாறாக, கடந்த மார்ச் 1 ஆம் தேதி ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சிலபேர்கள் ஒரு கலை நிகழ்ச்சி என்ற பெயராலே, பல்கலைக் கழகத்திற்கு எழுதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிதி சேர்ப்பதற்காக Musicatl fele ஏற்படுத்துகிற முறையிலே, மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களை, தலைமை தாங்க அந்த விழா கொண்டாட ரூ. 500, ரூ. 250, ரூ. 100 என்று டிக்கெட்டுகள்போட்டு விற்று நடத்தியிருக்கின்றனர். ஆனால் அங்கே பேசப்பட்ட கருத்தின்படி ரூ. 2, ரூ. 3 டிக்கட்டுதான் வாங்கிக் கொண்டு வந்திருந்தார்கள் என்பதால் ரூ. 200 என்றால், ரூ. 2 என்று அர்த்தம் போலிருக்கிறது. அது தெரியாது எனக்கு. ரூ. 100 என்றால் ரூ. 1 என்று அர்த்தம் போலிருக்கிறது. மரியாதையாக, இரண்டு 'சீரோ' வைப் போட்டு அந்த ஏழைகளுக்கு, ரூ. 1 டிக்கட்டைக் கொடுத்து, அப்படி ரூ. 4 இலட்சம், ரூ. 5 இலட்சம் சேர்த்திடுவதற்கு பல்கலைக் கழக மண்டபத்தில் நிகழ்ச்சி நடத்தியிருக்கிறார்கள். பல்கலைக் கழக மண்டபத்தை ஒரு ஆளுங்கட்சி பயன்படுத்தித்தான் தீர வேண்டுமென்ற நிலை ஆளுங்கட்சிக்கு வரக் கூடாது. அவ்வளவு பெரிய பலகீனம் ஆளுங்கட்சிக்கு இருக்கக் கூடாது. ஏனென்றால், ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் தாங்கள் வழிகாட்டுவதன் மூலமாக, மற்றவர்கள் செய்யக்கூடிய தவறுகளைத் தடுக்க வழி காண வேண்டும்.

ஆனால் அதற்கு மாறாக அந்தப் பல்கலைக் கழக மண்டபம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த மண்டபம் இந்த காரியத்திற்காக பயன்படுத்தப்படுகிறது என்று 4 நாட்களுக்கு முன்னதாகவே துணைவேந்தருக்கும், அங்கே உள்ள பதிவாளர் அவர்களுக்கும் எழுதியும் அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. காரணம் ஆளுங்கட்சி, முதலமைச்சர் வருகிறார், அந்த அச்சத்திலே அவர்களால் தடுக்க முடியவில்லை. தடுக்கின்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடவில்லை. ஆனால் அப்படிப்பட்ட முறைகள் பல்கலைக் கழகத்திலே கையாளப்படுவது கைவிடப்படவேண்டும். இனி அந்த முறைகள் ஏற்படுவதற்கு ஆளுங் கட்சி காரணமாக இருக்க கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 24] [திரு. க. அன்பழகன்]

அடுத்து நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்று கடந்த 3, 4, ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசாலே ஏற்படுத்தப்பட்டது. அப்படி ஏற்பட்ட அந்த மையத்துக்கு 1979-80-லே 14 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது. 1980-81-லே ஏறத்தாழ 3 லட்சத்து 47 ஆயிரம் செலவாகி இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்திலே வெறும் 3 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவரையிலும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது பண்பாட்டு மையமாக இல்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னர் இங்கே பேசுகிறபோது எடுத்து சொன்ன கருத்துக்கள் விளக்கும். அந்த பண்பாட்டு மையத்துக்கு நிருவாகியாக இருந்த ஒருவர் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புகார் சொன்ன பின்னர், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏறத்தாழ லட்சம் ரூபாய் அளவுக்கு அதற்கு மேலும் கூடச் சரியான முறையில் வவுச்சர் இல்லை. பணம் வெவ்வேறு மாதிரியாகச் செலவாகி இருக்கிறது என்று சொன்னதற்குப் பின்னர்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சரியான நடவடிக்கை இல்லாமல் அந்தப் பண்பாட்டு மையத்தினுடைய நிர்வாகி, இயக்குநர் அல்லது டைரக்டர் என்றுகூட அவருக்கு அலுவல்முறை பெயர்போல் இருக்கிறது. அவர் விடுமுறையில் இருக்கிறார். He is on leave என்று சொல்லப்படுகிறது. நடவடிக்கை எடுக்கமாட்டீர்கள், அவர் விடுமுறையில் இருப்பார் என்றால் என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை. விடுமுறையில் இருந்தால் சம்பளம் வாங்கமுடியாது என்று கருதுகிறீர்களா? தற்காலிக வேலை என்ற காரணத்தினாலே அப்படிக் கருதுகிறீர்களா? அல்லது மறுபடியும் அவர் வேறு இலாகாவுக்குப் போவாரா? அவரைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. அதுவல்ல என்னுடைய நோக்கம். அரசாங்கம் உருவாக்குகிற ஒரு பண்பாட்டு மையம் இவ்வளவு பண்பாட்டிலே தரம் கெட்டுப் போன பின்னர் அதைப்பற்றி வெளிப்படையாக இன்னின்ன தவறு நடைபெற்றது. ஆகவே இந்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவிக்காமல் இருப்பது ஒரு பக்கம். மற்றொன்று, இந்த இயக்குநர் 6—4—1981 அன்றையதினம் கையெழுத்திட்டு—அவர் விடுமுறையில் சென்றுள்ளதாக நான் கேள்விப்படுகிறேன்.— ஆனால் ஒருவர் இந்தப் பண்பாட்டு மையத்திலே வேலை பார்த்ததற்கு இயக்குநர் என்ற முறையிலே சான்றிதழ் தருகிறார். அவர் விடுமுறையில் இருக்கிறார். குற்றச்சாட்டு இருக்கிறது அவர் பேரில். அவர் 6—4—1981-ம் தேதி—டைப் செய்தது 6—4—1981 ஆம் தேதி யன்று. ஆனால் அவர் கையெழுத்துப் போட்டது 6—4—1971 என்று இருக்கின்றது. 10 வருடம் தான் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் அவர் செய்த இந்தத் தேதி பற்றிய தவறு, மேலே 6—4—1981 என்று இருப்பதனாலே தானாக மறைந்து போய் விடுகிறது. திரு. ப. நரசிங்கப் பெருமாள் 21—11—1979 முற்பகல் தமிழ்ப்பண்பாட்டு மையத்திலே அடிப்படை ஊழியராக

பணியில் சேர்ந்திருக்கிறார். 31—3—1981 பிற்பகல் வரை இந்த மையத்தில் பணியாற்றி உள்ளார். அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டார். இது ஒரு சர்டிபிகேட், Cert ficate issued by the Director என்ற முறையிலே தரப்பட்டிருக்கிறது.

அவர் விடுமுறையிலே இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி இருந்தால் அவர் இப்படிச் சான்றிதழ் வழங்கலாமா? அல்லது நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காத காரணத்தால், ஒருவேளை உங்களுக்குக்கூடச் சான்றிதழ் வழங்கினாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே பண்பாட்டு மையம் இப்போது கரைந்துபோய்விட்டது. அவரும் விடுமுறையிலே இருக்கிறார். அதற்கு ஒதுக்கி இருக்கிற பணம் 14 லட்சம், 3 லட்சம் என்றிருந்து இப்போது 3 ஆயிரம் ஆகியிருக்கிறது. அதை நீங்கள் செம்மைப்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்குமானால், முறையிருக்குமானால் அதைச் செய்ய நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏற்கனவே 1924-ல் தொடங்கி 1939 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 15 ஆண்டு காலம், அன்றைய நிலையில் ஒரு தமிழ்ப் பேரகராதி தமிழ் லெக்சிகன் என்று ஆங்கிலத்தாலேதான் பெயர் சூட்டியிருக்கிறார்கள். அந்த லெக்சிகன் வெளியிடப்பட்டது 1939-லே. இன்றைக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் அதை மறுபடியும் போட்டோ ஆப்செட் முறையிலே அப்படியேகொண்டு வரப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எதையாவது செய்கிறபோது, கிணற்றிலே விழுவதாக இருந்தாலும் கூட. கண்ணைத் திறந்து கொண்டு விழுவார்களேயானால் அவர்களை நான பாராட்டுவேன். கண்ணை மூடிக்கொண்டு முள் இருந்தாலும், மூங்கில் இருக்குமானாலும் அதிலே விழுந்தால் உயிருக்கு ஆபத்தாகும். அதைப் போலவே இந்த ஆப்செட் முறையில் மறுபதிப்பு என்று சொல்வது அப்படிப்பட்ட குறையே ஆகும். அந்தத் தமிழ் லெக்சிகன் உருவான காலத்திலே இருந்து அந்த லெக்சிகனுக்குக் கண்டனங்கள் தமிழ்நாட்டிலே ஏராளமாக இருந்துவருகிறது. சில கூட்டங்களிலே நானும் குறைகூறி இருக்கிறேன். பச்சையப்பன் கல்லூரியில் நான் ஆசிரியராக இருந்த பொழு நமது மாண்புமிகு நாவலர் அவர்கள் தமிழைப் பற்றிய உரைகளிலே இந்தலெசிக்கனைப்பற்றி சொல்லும்போது தமிழ்ப் பகைவர்கள் உருவாக்கிய லெக்சிகன் இது என்று பேசியிருக்கிறார்கள். அப்போது நாங்கள் எல்லாம் ஒன்றாகத்தான் எண்ணிப் பேசியிருக்கிறோம்.

1981 ஏப்ரல் 24] [திரு. க. அன்பழகன்]

(மாலை 5–20)

இன்னும் சொல்லப்போனால், ஒரு 'கலைக் களஞ்சியம்' உருவாக்குவதற்கான முயற்சியில் அப்போது இருந்த அமைச்சர் திரு அவினாசிலிங்கம் அவர்கள் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்திய நேரத்தில் அந்தக் கூட்டத்தில் நான் ஒரு ஆசிரியன் என்ற முறையில் இடம் பெற்று இருந்த காரணத்தால், வர இருக்கின்ற கலைக்களஞ்சியம் தமிழ்நாட்டின் பெருமையைப் பாழ்படுத்துவதாக இருக்கக்கூடாது என்று சொன்னேன. திரு அவினாசிலிங்கம் அவர்கள் மிகப் பெரிய பொறுப்பில் இருந்தவர். அவர் முன்னிலையில் அந்தக் கருத்தைக் கூறிய காரணத்தால் அதற்கான காரணத்தைக் கேட்டார்கள். காரணத்தைச் சொன்னேன். பின்னர் அவர்கள் அதை ஒப்புக்கொண்டார்கள். தான் கொண்டுவர விரும்புகிற கலைக் களஞ்சியம் அப்படி இருக்காது என்றும் சொன்னார்கள்.

பழைய லெக்சிகன் எந்த அளவிற்குத் தமிழர்களின் உணர்வுகளைப் பாழ்படுத்துகிறது என்பதற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த லெக்சிகனில் 'தமிழன்' என்ற ஒரு சொல்லுக்கு அதற்குப் பொருள் எழுதுகிறபோது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன் என்று சரியாகத்தான் எழுதி இருக்கிறார்கள். Tamilian as distinct from an Aryan ஆரியன் அல்லாத தென் இந்தியன் என்றும் எழுதி 'தமிழன்' என்ற சொல்லுக்குப் பொருள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், 'தமிழர்' என்ற சொல்வருகிறபோது அதற்கு பொருள் சொல்கிற போது, விளிம்பு இல்லாத தண்ணீர் குடிக்கும் ஒரு பாத்திரம் என்று எழுதி இருக்கிறார்கள். 'விளிம்பு இல்லாத பாத்திரம்' என்று எடுத்து காட்டியிருப்பதன் மூலம் தமிழர் என்ற சொல்லுக்குத் தரவேண்டிய மரியாதை தராமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், அது அப்படி இழிவு படுத்தப்படுகிறது என்பதை உணராமல் அப்படி எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு யார் காரணமாக இருந்தாலும் கூட அந்த அகராதியில் அது இடம் பெற்று இருக்கலாகாது. அந்த அகராதியை அப்படியே போட்டோஸ்டேட் எடுத்து மறுபதிப்பு தயாரிப்பது என்று சொன்னால், அதிலுள்ள தவறான எண்ண ஓட்டம், பிழையான கருத்தோட்டம் அப்படியே வந்துவிடும் என்பதை உணராது பல்கலைக்கழகம் அறியாமை காரணமாக அவ்வாறு திட்டமிட்டிருக்கக் கூடும். அதைக் கூர்ந்து கவனித்து இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். காரணம், அந்தப் புத்தகம் இப்போது பலரிடத்தில் இருக்காது. ஏறத்தாழ ஒரு 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே அது விற்பனையாகிவிட்டது. அநத லெக்சிகன்னில் 100-க்கு 25 சொற்கள் வடமொழிச் சொற்கள். வடமொழிச் சொற்களாக இருந்தாலும், அவை தமிழில் வழக்கில் இருக்கிற சொற்களாக இருந்தால் தமிழ் அகராதியில் இடம் பெற்று இருப்பதில் தவறில்லை. ஆனால் தமிழ் மொழியில் வழக்கில் இல்லாத வடமொழிச் சொற்கள் அதிலே இடம் பெற்று இருக்கின்றன.

உதாரணங்களாக பலவற்றைக் காட்டலாம். லெக்சிகனில் பக்கம் 1087-ல் 'தமிழர்' என்ற வார்த்தை எழுதப் பெற்று, அதற்கு ஆங்கிலத்தில் 'டம்பளர்' என்று எழுதி, அதற்குப் பொருள் 'டிரிங்கிங் கப்' என்று ஆங்கிலத்தில் உரை எழுதி , தமிழில் அதற்குப் பொருள் 'விளிம்பு இல்லாத தீர்த்தப் பாத்திரம்' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தீர்த்தப் பாத்திரம் விளிம்பு இல்லாமல் தான் இருக்கும். தீர்த்தப் பாத்திரம் விளிம்பு இல்லாமல் இருக்கும் என்பதற்குத் 'தமிழர்' என்ற சொல் பயன்பட்டிருக்கிற காரணத்தால், இந்தச் சொல்லுக்கு மேல்நாட்டார் பொருள் அறிய இதனைப் பார்க்கிறபோது-இந்த லெக்சிகன் மேல்நாட்டாருக்குப் பயன்படுத்த வாய்ப்பளிக்கின்ற வகையிலும், ஆங்கிலத்தில் இன்டர்பிரெடெக்ஷன் கொடுக்கப்பட்டு அமைக்கப்பட்டு இருப்பதால்-அந்த வார்த்தையை அவர்கள் பயன்படுத்த எண்ணுகிற போது அது எந்த அளவிற்குத் தவறான எண்ண ஓட்டத்தை அவர்கள் மனத்தில் உண்டாக்கும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அந்த லெக்சிகன் ஒரு 7 பகுதியாக வெளியிடப்பட்டு இருக்கிறது. இந்த ஒரு பகுதியில் மட்டும்—இது 7ஆம் பகுதி—100-க்கு 25 சொற்கள் வடமொழி சொற்கள். 100-க்கு 10 உருது சொற்கள். 100-க்கு 5 மற்ற மொழி சொற்கள். இப்படி 100-க்கு 35, 40 சொற்கள் பிறமொழிச் சொற்கள் அதிலே இடம்பெற்று இருக்கின்றன. பௌதீகம், ரசாயனம் போன்ற சொற்கள் மட்டுமேயல்ல பிறமொழிச் சொற்கள் ஏராளமாக இடம்பெற்று இருக்கின்றன. ஒரு இந்திப் பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரியில் பேச வந்தபோது சொன்னார்—தமிழ் மொழி, வடமொழிக்குக் கடமைப்பட்ட மொழி என்று குறிப்பிட்டார். தமிழ் மொழி ஏராளமான வடமொழிச் சொற்களை கடன் வாங்கியிருக்கிறது. வடமொழிச் சொல் இல்லாமல் தமிழ் மொழி இயங்க முடியாது என்று சொன்னார். நான் உடனே அதை மறுத்தேன். அவர் உடனடியாக லெக்சிகனை எடுத்துக் காட்டினார். நான் குறிப்பிட்டேன்—அந்த லெக்சிகன் தமிழ் மக்களால், தமிழ் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படாத, ஒதுக்கிவைக்கப்பட்ட ஒன்று என்று சொல்லி வாதிட்டேன். The Lexigan is not approved by the Tamil Scholars of this Country என்று அவரிடம் தெரிவித்தேன்.

அப்போது நான் பச்சையப்பன் கல்?லூரியில் ஆசிரியர் என்ற முறையில் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பின்னால் அந்தக் கூட்டத்தில் அவர் தனது கருத்தை வலியுறுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆயினும், இப்போதும் நான் அந்த 'லெக்சிகன்' ஆற்றிய அடிப்படைப் பணியை மறுத்துச் சொல்ல விரும்பவில்லை. அதிலே சில பணிகள் பலன் உள்ளதாக இருக்கின்றன. ஆகவே, அந்தப் பணியை மறு

படியும் சென்னைப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள இருக்குமானால், அதற்கான ஒரு அறிஞர் குழுவை அமைத்து, தமிழ்ப் புலமையுடன் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றவர்களை அதிலே சேர்த்து, அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழில் வழங்குகின்ற சொற்கள் பல அதிலே இடம் பெறவில்லை வழங்காத சொற்கள் பல இடம் பெற்று இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கவனித்து, புதிதாக அதைப் பதிப்பிக்கும் முயற்சியில் சென்னைப் பல்கலைக் கழகம் ஈடுபடவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். நமது கல்வித் துறை இதனை ஆராய்ந்து தகுந்த முறையில் லெக்சிகன் திருத்திய பதிப்பு வெளி வர வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பேரகராதியைப் போன்று செய்யப்பட்ட ஒரு நல்ல பணி 'கலைக் களஞ்சியம்' கொண்டு வர எடுக்கப்பட்ட முயற்சியாகும். தமிழ் நாட்டில் 'கலைக் களஞ்சியம்' கொண்டு வர எடுக்கப்பட்ட முதல் முயற்சி இது. அதிலேயும் சில குறைகள் இருந்தாலும், அது முதல் முயற்சி என்ற காரணத்தாலே அதிலே பணியாற்றியவர்கள் அதைக் கவனிக்காமல் விட்டிருக்கக் கூடும். (It is not Complete. It is yet incomplete) என்று கூறும் நிலை உள்ளது.

இப்போது அந்தக் கலைக்களஞ்சியத்தைப் பாடநூல் நிறுவனம் மூலம் வெளியிடுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள விருப்பதாக அறிகிறேன். பாடநூல் நிறுவனம் அப்படி அதைக் கொண்டு வருகிறபோது, பழையபடியே கொண்டு வந்துவிடுவது—சிறந்த பயன் நல்காது. It s not upto date என்ற நிலையில் அப்படியே கொண்டு வந்தால், அது இந்தக் காலத்திற்கு ஏற்றதாக, முழு அளவிற்கு நிறைவுடையதாக இருக்காது. தமிழ் அறிஞர்களின் பெயர்கள் அதிலே சில விடப்பட்டு இருக்கின்றன. தமிழ்ச் சொற்கள் பல விடப்பட்டு இருக்கின்றன. கலைக்களஞ்சியத்தில் வரவேண்டிய உலகச் செய்திகள் விடப்பட்டு இருக்கின்றன. விஞ்ஞானத்தில் தற்போது இருக்கின்ற முன்னேற்றங்கள், வளர்ச்சிகள் அதிலே காண முடியாது. இருப்பினும், அப்போது எடுக்கப்பட்ட முயற்சி நல்ல முயற்சியே. இந்த முயற்சி தொடர்வதற்கு —அந்தக் களைக்களஞ்சியப் பணி தொடர்வதற்கு ஊக்கம் அளிக்கத் தவறி விட்டார்கள். ஆனாலும், ஏற்கெனவே வெளி வந்த கலைக்களஞ்சியத்தில் சில குறைபாடுகள் ஏற்பட்டு விட்டன என்றாலும், அதனை மறுபடியும் நிறைவுடையதாகச் செய்யும் ஒரு முயற்சியை மேற்கொண்டு கலைக் களஞ்சியத்தை புதுப்பித்துக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு எடிட்டோரியல் போர்டு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் ஏறத்தாழ 3 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். இன்றுள்ள கலைக்களஞ்சியம் 75 விழுக்காடு ஆக இருப்பதாகக் கருதி, 100 விழுக்காடு என்ற அளவுக்கு ஆக்க, நிறைவுடையதாக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழக வரலாற்றை விரிவாக வெளியிட ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அந்த வரலாற்றில் தொல் பழங்காலப் பகுதி மட்டும் 1975-ல் வெளிவந்திருக்கிறது. அதன் பிறகு சங்ககாலப் பகுதி இரண்டு பகுதிகளாக வெளிவரும் என்று சொல்லி, இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. 1979-லே சொன்னர்கள், 1980-ல் சொன்னார்கள், 1981-லேயும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்னும் வெளிவந்தபாடில்லை. மதுரை மாநகரின் தெருவிலே தமிழை வளரவிட்டால் போதுமா? தமிழை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. அந்த ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். குழந்தைக்குக்கூட ஆர்வம் இருக்கிறது. ஆனால் அந்த ஆர்வம் நிறைவேற வேண்டாமா? அதற்கு என்ன செய்கின்றீர்கள். தமிழ் மாநாடு நடத்திவிட்டால் தமிழ் வளர்ந்து விட்டது என்று பொருளா? அங்கே என்னென்ன குறைகள் ஏற்பட்டன என்பது எனக்குத் தெரியாதா? நான் அதையெல்லாம் சொல்ல முடியாதா? மாநாடு நடத்தினார்கள். சரி. ஆனால் 14 கோடி ரூபாய் செலவிட்டு தமிழ்மாநாடு நடத்தினோம் என்று சொன்னீர்கள். இந்த 14 கோடி ரூபாயில் அக்கடமிக் பகுதிக்காக செலவிட்டது 72 இலட்சம் தான் என்று நீங்களே விவரம் தந்திருக்கிறீர்கள். மற்ற காரியங்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவிட்டிருந்தால் போதாதா? 13 கோடி ரூபாயை அனாவசியமாக நீங்கள் செலவிட்டிருக்கிறீர்கள் என்று கருத இடமில்லையா?

இப்படி இந்த அரசு செய்த குறைகளை எடுத்துக்காட்டும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி எல்லாம் விளம்பரம் செய்தீர்கள் என்று சொல்கிறார்கள். விளம்பரம் செய்தோம். ஆனால் நீங்கள் செய்கிற விளம்பரத்தைப் பார்த்தால் அந்த அளவுக்கு அப்போது எங்களுக்கு போர்டுகூட கிடைக்கவில்லையே என்று தான் தோன்றுகிறது. நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. மற்றவர்களைக் குற்றம் சொல்லும்போது நாம் என்ன செய்கிறோம் என்பதை எண்ணி பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆளுங்கட்சியிலே ஒருவர் பேசும்போது பாராளுமன்றத்தின் சார்பாக மத்திய அரசு அமைத்த 'அபிஷியல் லாங்வேஜ் கமிட்டி'யில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இடம்பெற்றிருந்தார்; அவர் இந்தியை எதிர்க்காமல் இருந்தால் இந்தி ஆதிக்கத்திற்கு உதவினார் என்று சொல்வார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் இருந்தார் என்பது உண்மை. அதில் இருந்தவர் திரு வெங்கா என்பவர்.

அவர் இங்குள்ள ஆளுங்கட்சியிலே இருந்தபோது அந்தக் கமிட்டியில் நியமிக்கப்பட்டார். கமிட்டியில் இடம்பெற்ற பிறகு, ஆளுங்கட்சியுடன் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகளின் காரணமாக அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து விட்டார். அதை நான் பெரிய பிரச்னையாகக் கருதவில்லை. இங்கே இருக்கிறவர் அங்கே போகிறார், அங்கே இருக்கிறவர் இங்கே வருகிறார். அது அவரவர் மன நிலையைப் பொறுத்தது. ஆனால் இருக்கிறவர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் தெளிவாக இருக்கிறார்களா என்பதுதான் முக்கியம். ஆளும் கட்சியில் இருக்கும்போது நியமிக்கப்பட்டு, பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தாலும் அவர் இடம்பெற்றிருந்த மொழிக் குழு, அந்த லாங்வேஜ் கமிஷனைப் போட்டதே கூட வெளிநாடுகளில் உள்ள தூதராலயங்களில் ஆங்கிலமும் இந்தியும் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை கண்டறிவதற்கும் ஏற்படுகின்ற சிக்கலை தவிர்ப்பதற்கும்தான். அவர் அதிலே இடம்பெற்றிருந்தாலும் இந்தியை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிடவில்லை. இடம்பெற்றதாலேயே இந்தியை ஏற்றுக்கொண்டார் என்று அர்த்தமும் அல்ல. இன்றைக்குக் கூட ஆளும்கட்சி நண்பர்கள் அதுபற்றி தவறான எண்ணம் வைத்துக் கொண்டிருந்தால் அதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இருமொழிக் கொள்கை என்ற அடிப்படைக் கொள்கையிலிருந்து இம்மி அளவுக்குக்கூட யாருக்கும் விட்டுத் தராது. தேவை இல்லாத நேரத்தில் நாங்கள் குரல் எழுப்பிப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. உறுதிமொழி கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த உறுதிமொழி ஏற்கெனவே இருப்பது நமக்குத் தெரியும். மதுரை உலகத் தமிழ் மாநாட்டில் முதலமைச்சர் பேசும்போது பிரமர் இந்திரா காந்தி தந்த உறுதிமொழி உறுதியுடையதாக இருந்து-கேரள முதல்வருக்கும் பதில் கூறியுள்ளார். மாநாடு முடிந்து, கேரள முதலமைச்சர் திரும்பிப் போன பின்னாலே அந்த உறுதிமொழி தளர்வதுபோல் ஆளும்கட்சி நண்பர்களுக்குத் தெரியுமானால் முதலமைச்சருக்குத் தெரிந்த அந்தக்கருத்தை மற்றவர்களுக்குத் தெரியச் செய்ய வேண்டாமா? அரசியலில் நாங்கள் இப்படித்தான் பேசுவோம் என்று சொன்னால் எனக்கு அதிலே மாறுபாடு இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறை கூறுகிற அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மொழிக் கொள்கையில் என்றைக்கும் மாறாது. திராவிட முன்னேற்றக் கழகம், இருமொழிக் கொள்கை இருந்தால் இருக்கும். இருமொழிக் கொள்கை காப்பாற்றப்படவில்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்காது.

ஆனால் வேறு சில கட்சிகள் அப்படி அல்ல. பெயரையே மாற்றிக்கொள்வார்கள். நாங்கள் அரசியல் கட்சியே அல்ல என்று அறிவிக்கவும் தயங்கமாட்டார்கள். நெருக்கடி வந்தால

அப்போது தெரியும். எனவே, அதைக்கூட, 'சேலஞ்ச்' என்ற முறையில் சொல்லவில்லை. எனவே கருத்து மாற்றத்திற்கு தங்களைத் தாங்களே ஆளாக்கிக்கொள்கிறார்கள். மற்றவர்களுடைய கருத்தை அவர்கள சொல்லாத நேரம் பார்த்து நீங்கள் சொல்லவில்லை என்பதால் கைவிட்டுவிட்டதாகப் பொருள் என்று கூறுவது நாகரிகமல்ல. நாங்கள் தேவைப்பட்டால் சொல்வோம். இந்திரா காந்தி அவர்கள் ஏற்கெனவே உறுதிமொழி கொடுத்திருப்பதிலே நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். இந்திரா காந்தி அவர்கள் இருக்கும்போதுதான் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கே இருமொழிக் கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் அதைக் கண்டிக்கவில்லை.

[மாலை 5.30]

அது மாநில அரசினுடைய இயல்பான உரிமை என்று கருதித்தான் அதை ஏற்றுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே இருந்து அவர்கள் விலக மாட்டார்கள். இன்றைக்கும் கூட இந்தியைப் புகுத்த வேண்டும் என்று சொல்கிற இடத்திலே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடியவராகத்தான் அவர் இருக்கிறார். அதை எந்த இடத்திலே சொல்லவேண்டுமோ, அதாவது எந்த இடத்திலே எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமோ அந்த இடத்திலே தெரிவிக்கிறார். எந்த இடத்திலே இந்தியைப் படிக்கக்கூடியவர்கள் படியுங்கள் என்று கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறார்களோ அங்கே கேட்டுக்கொள்கிறார். அது அவருடைய உரிமை. ஆனால் மாநில அரசாங்கத்தினுடைய இரு மொழிக் கொள்கை என்ற தீர்மானத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தை அவர்கள் ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்த மாட்டார். அப்படி ஏற்படுத்தக் கூடுமானால் நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயங்க மாட்டோம்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புகிறேன், சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு ஆண்டும் நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன், சட்டக் கல்லூரியிலே மாணவர்கள் சேர்க்கப்படுவதலே எம்.எல். வகுப்பு மாணவர்கள் 1979-ஆம் ஆண்டிலே சேர்க்கப்பட்டு இன்றும் கூட அதாவது இரண்டாண்டு படிப்பு அந்த எம்.எல். படிப்பு என்பதை 3 ஆண்டாக வளர்த்து இன்னும் தேர்வு எழுதி முடிக்கவில்லை. இரண்டாண்டுப்படிப்பிலே சேர்ந்து மூன்று ஆண்டு ஆகியும் தேர்வு எழுதி முடிக்கவில்லை என்றால் அது என்ன பொருள்? அதிலே பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், தாழ்த்தப்பட்ட மாணவர்களும் ஓரளவுக்கு அந்தந்த எண்ணிக்கையிலே படிக்கக்கூடும். அப்படிப் படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டும். குறித்த காலத்திலே படிப்பு முடியாமல் இருக்கின்றது என்பது மட்டுமல்ல. இன்னும் கூட இந்த ஆண்டுக்கான அட்மிஷனுக்கு இன்டர்வியூ நடத்தவில்லை. அடுத்த

ஆண்டு இருக்கட்டும். சர்க்கார் 81 ஆம் ஆண்டு என்ற கணக்குப் போட்டு 82-லே படிக்க வேண்டியவர்கள், 81 ஏப்ரல் வரை இடம்பெறவில்லை. இந்த ஆண்டுக்கு இன்னும் கூட எம்.எல். செலக்ஷன் நடைபெறவில்லை. எம்.எல்-க்கு ஓர ண்டு காலமாக வகுப்புகள் சரியாக நடைபெறவில்லை. ஏதோ சில குறைகள் இருக்கலாம். ஆனால் அந்தக் குறைகள் காரணமாக மொத்த மாக வகுப்புகள் நடக்கவில்லை. அப்படி வகுப்புகள் நடக்காத காரணத்தால் சட்டக் கல்லூரி செம்மையாக இயங்கவில்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். தனிப்பட்ட ஒருவர் மீது குற்றமாக நான் எடுத்துக்காட்ட விரும்பவில்லை. ஆனால் இவைகளை எல்லாம் கவனிக்க, முறைப்படுத்த, ஒழுங்கு படுத்த ஆர்வத்தோடு செய்யக்கூடிய ஒரு நிலைமை இல்லாத காரணத்தால் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அடுத்து ஆரம்பக் கல்வியைப் பற்றி நான் சொன்னபோது இங்கே புள்ளி விவரத்தை எடுத்துக் காட்டி சொன்னேன். இங்கே அந்த வயது மாணவர்கள் சேர்க்கை விகிதாச்சாரத்திலே அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு ஒரு முக்கியமான காரணத்தை இப்போது நான் நினைவூட்ட விரும்புகிறேன். பள்ளி வருகை ஏடு, பல இடங்களிலே உண்மை யான ஏடாக இல்லை. பள்ளி வருகை ஏட்டிலே ஆண்டு துவக்கத் திலே பிள்ளைகள் பலபேரைச் சேர்ப்பதற்காக ஆர்வம் காட்டிப் பலபேரைப் பதிய வைத்துக் கொள்கிறோம். ஆரம்பப் பள்ளிகள் பலவற்றிலே பிள்ளைகள் வராவிட்டாலும் கூட வருகைப் பதிவு தருகிறார்கள். அந்த வருகை ஏட்டிலே பதிவு செய்யப்பட்ட பிள்ளைகள் எல்லாம் வருவதாக வைத்தால் தான் நீங்கள் சொல்கிற கணக்கிலே முக்கால் பங்காவது தேறும். ஆனால் அவர்கள் வருவதோ குறைவு. வருகை ஏடும் சரியாக இல்லை. ஆகவே அந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று பார்த்துவிட்டு மகிழ்ச்சி அடைந்துவிடாமல் அந்த நிலையினை மாற்றுவதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கலாம், எந்த முறையின் மூலமாக ஆரம்பக் கல்வியினுடைய தரத்தை உயர்த்தலாம் என்பதை ஆராயவேண்டும். இன்னும் சொல்லப்போனால் வருகைப் பதிவு ஏட்டைக் கட்டாயமாக ஆக்குவதற்கும் ஒழுங்காகப் பின்பற்றச் செய்வதற்கும் வழி வகைகளைக் காணவேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்பு கிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புகிறேன், இன்றைக்குத் தமிழ் வளர்ச்சி, தமிழ் மொழி வளர்ச்சி என்று சொல்கின்ற போது எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று கூட இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று அறிவிக்கின்ற அந்தக் கடமை யாருக்கு இருக் கின்றது ? கல்வித்துறைக்குத் தான் அந்தக் கடமை இருக்கின்றது. ஆகவே எங்கும் தமிழ், எதிலும் தமிழ், ஆனால் இங்கே மட்டும் எதிலும் தமிழ் என்று நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்.

என்று கல்வித்துறை சொல்வதாக நன்கு உணருகிறேன். ஏனென்றால் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று என்னென்ன துறைகளிலே சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் வருகிற 81—82-ஆம் ஆண்டில் பத்திரப் பதிவுத் துறை, சீர்திருத்தப் பணித்துறை, தீயணைப்புத் துறை, சிறைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் ஒழுங்காகத் தமிழ் படிக்கும். கால் நடைத்துறை, தீயணைப்புத் துறை—நெருப்பை அணைக்கின்ற போதே அவன் கொஞ்சம் தமிழைப் பயன்படுத்துவான், காவல் துறை இவைகளிலே நிர்வாகத்திற்காக தமிழ் பயன்படுத்தப் படுவது இயற்கை. இப்போதே கூட ஓரளவுக்குப் பயன்படுத்தப் படும். ஆனால் அவைகளிலே பயன்படுகிறபோது தமிழ்வளர்ச்சி என்ற அடையாளம் தெரியாது. இப்போது நீங்கள் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று ஒப்புக்கொள்வீர்களேயானால் நடைமுறையிலே கல்வித்துறையிலே தமிழ் வருவதற்கு என்ன இடர்ப்பாடு இருக்கின்றது. அந்தத் துறையிலே இருக்கின்ற இலாக்காத் தலைவர்கள் எல்லாம் ஆங்கிலோ இந்தியர்களா? அல்லது அந்த இலாக்காவை நிர்வகிக்கிறவர்கள் எல்லாம் ஆக்ஸ்போர்டிலே மட்டும் படித்துவிட்டு வந்து தமிழ் நாட்டிலே வேலை பார்ப்பவர்களா? அல்லது அவர்களுக்குத் தமிழ் தெரியாதா? அல்லது தமிழைப் படிக்கக்கூட அவர்களால் முடியாதா? அவர்களாலே தமிழ் படிக்க முடியாவிட்டால் எப்படிக் கல்வி இலாக்காவை நிர்வகிக்கப் போகிறார்கள். ஆகவே கல்வி இலாக்காவில் அனைத்துக்கும் தமிழ் என்பதை முதலிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி அதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முன்னாலே கலைக்களஞ்சியம், லெக்சிகன் என்பவற்றை பற்றிக் குறிப்பிட்டது போன்று செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி என்பது எத்திமாலாஜிகல் டிக்ஷனரி ஆஃப் தமிழ் என்பது மூல வேர்ச் சொற்களை அடிப்படையாக வைத்து ஆற்றப்பட வேண்டிய பணியாகும். மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களை, ஏறத்தாழ கடந்த 30 ஆண்டு காலமாக நான் அறிவேன்.

மொழி ஆராய்ச்சியிலே அவருடைய கொள்கை ஒரு தனி வகையான கொள்கை. ஏறத்தாழ, அவருடைய பில்லாலஜி, அல்லது எட்டிமாலஜியில் கையாளுகிற முறை என்பது யாழ்ப் பாணத்திலே விளங்கிய ஞானப்பிரகாசர் என்ற பெரியாருடைய கொள்கையைத் தழுவிய ஒன்று. அதிலே கூட சிறு சிறு வேற்றுமைகள் உண்டு. அந்த அளவுக்கு அதற்குள்ளே போவதற்கு எனக்கு ஆற்றல் இல்லை. ஆனால், அந்த வேற்றுமைகள் காரணமாக, தேவநேயப்பாவாணர் அவர்கள் தொடங்கிய அந்த பெரு முயற்சியில் ஏறத்தாழ ஒரு பகுதி அவராலேயே செய்யப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் ஒழுங்கு படுத்தி

வகை செய்ய வேண்டும். அதன் அடிப்படையிலே வருகிற கருத்தை வேறு சில மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களிடத்திலே நெருங்கிப் பழகிய புலவர் பெருஞ்சித்தனார் போன்ற தமிழ் அறிஞர்கள், அல்லது தேவநேயப் பாவணாருடைய மகன், மரு மகன் போன்றவர்களில் அந்தத் துறையிலே ஈடுபட்டவர்கள் இருப்பார்களேயானால் அவர்களைக் கொண்டு, அதை முழு அளவிற்கு உருவாக்கி வெளியே கொண்டு வருவதற்கான ஒரு தனி முயற்சியை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

தமிழ் மொழிதான் உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி என்று நிலைநாட்டுவதற்கான முறைகள், உலக மொழிகளுக்கெல்லாம் மூல மொழி தமிழ்மொழி, அது ஜப்பான் மொழியாக இருந்தாலும், சைனா மொழியாக இருந் தாலும், நார்வே மொழியாக இருந்தாலும், ஸ்வீடன் மொழி யாக இருந்தாலும், அந்த மொழிகளுக்கெல்லாம் கூட மூலக் கருவாக விளங்கும் ஆற்றல் பெற்ற மொழியாக இருந்தது தமிழ் மொழி; அப்படி ஒரு காலத்திலே உலகெல்லாம் பரவி இருந்தது என்பதற்கெல்லாம் காரணங்களோடு சொல்லக் கூடிய அறிவாற்றல் பெற்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி முறை யில் அகர முதலியை வெளியிடுவதற்காக, நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டும். அந்தப் பணிகள் எல்லாம் பாவாணர் அவர்களாலே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அகர முதலியை முழு வடிவிலே கொண்டு வரு வதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல பழைய ஓலைச் சுவடிகளை எல்லாம் சேர்த்து பாதுகாத்து வைக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. அந்தச் சுவடிகளிலே, பல சுவடிகளிலே உள்ள கருத்துக்கள் என்ன எதைப்பற்றியவை என்பது கூட வெளியே தெரியாமல் போய் விடுகிறது. எனவே, அந்தச் சுவடிகளைப் பற்றி, அந்தச் சுவடி களிலே என்னென்ன கருத்துக்கள் இருக்கிறது என்பதை, எடுத்து எழுதி சற்று விரிவான கேட்டலாக் என்று சொல்லக் கூடிய ஒன்றைப் போட வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் பட்டியலுககு கேட்டலாக் எடுக்கிறோம். நூல் நிலையங் களிலே வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களுக்கு கேட்டலாக் எடுக்கிறோம். அதேபோல இருக்கும் நூல்கள் எங்கு இருந்தாலும் பனையோலைச் சுவடிகளில் சரஸ்வதிமகால் நூல்நிலையத்திலோ,

அல்லது சென்னையிலே இருக்கக் கூடிய நூல் நிலையங்களிலோ இருந்தால் பெற்று அவைகளுக்குக் கேட்டலாக் ஒன்றைச் சிறப்பான முறையிலே அமைப்பதற்கான கடமையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தப்போவதைப் பற்றி அறிவித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று வர இருக்கிறது. இருந்தாலும், தமிழ் ஆராய்ச்சிப் பணிகளை செய்கின்றபோது இவைகளிடையிலே ஒரு கோ-ஆர்டினேஷன் ஏற்படுத்துவதற்கான வழி முறை இருக்க வேண்டும். டியூப்பிளிகேஷன் ஆப் வொர்க் என்பது இருக்கக்கூடாது. நமக்கு இருக்கிற சங்கடமான சூழ்நிலை என்னவென்றால், ஒரே விதமான வேலையை இரண்டு பல்கலைக் கழகங்களும்,—இரண்டு நிறுவனங்களும் மேற்கொண்டுவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும், எனவே, "The Space in Which every particular Tamil organaisation will work" என்பதை வரையறுத்துச் சொல்லத் தக்க வகையில் பணிகளைப் பிரித்து வழங்குவதுடன் அவரவர்களுக்கு உரிய துறையிலே, அவர்கள் பணியாற்றுவதற்குத் துணையாக ஒரு கோ-ஆர்டினேஷன் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல தமிழ் பல்கலைக் கழகத்தை தஞ்சையிலே ஏற்படுத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இராஜஇராஜ சோழனிடத்திலே கோபம் வந்தாலும் கூட, தஞ்சாவூர் மீது கோபம் இல்லை என்பதற்காக நான் பாராட்டுகின்றேன். அப்படி தஞ்சாவூரிலே வருகிற ஒரு பல்கலைக்கழகம், தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தருகிற அடிப்படையிலே, நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு, இயங்குவதற்குரிய வழி வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, ஒரு வகையிலே, தமிழுக்கு ஆக்கம் தரவேண்டும் என்று நீங்கள் முனைந்தால் கூட, தகுந்த வழிமுறைகளைக் கொண்டு, அவற்றைச் செயல்படுத்த நீங்கள் தவறிவிடுவீர்களேயானால் மற்றவர்கள் குறை சொல்வதற்கு இடமாகிவிடும் என்பதால், அதற்கு இடம் தரக்கூடாது என்று சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

(மாலை 5-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துத் தந்ததற்காகவும், பல்வேறு யோசனைகளை எடுத்துச் சொன்னதற்காகவும் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு களைவதற்கான வாய்ப்பைத் தந்ததற்காகவும் நான் முதலில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே பேசிய உறுப்பினர்களில்

பலபேர்கள் பொதுவாக, செலவு செய்யப்படுகிற தொகையில் இந்த ஆண்டு கல்வித் துறைக்காக 249 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட விழுக்காட்டைப் பார்க்கின்றபோது சென்ற ஆண்டு சுமார் 23 சதவீதம் என்று இருந்தது, இன்றைக்கு 22 சதவீதம் என்றிருக்கிறது என்ற ஒரு குறைபாட்டைச் சுட்டிக் காட்டினார்கள். இப்படி குறைத்தது சரி என்று எடுத்துச் சொல்வதற்காக நான் இங்கே முன்வரவில்லை. கல்வித் துறைக்கு நிறைய பணம் தேவை என்பதை இங்கே பேசிய பேச்சுக்களைப் பார்க்கின்றபோது இன்னும் நூறு கோடி ரூபாய் தந்தால் கூட செலவு செய்கின்ற அளவுக்கு தேவைகள் கல்வித்துறையில் இருக்கிறது என்பது தெளிவாகப் பேசப்பட்டிருக்கின்றது. ரசாங்கச் சார்பிலும் அந்தக் கருத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதுமானதல்ல என்றாலும் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கின்ற புதிய சூழ்நிலைகளை நாம் மறந்துவிட முடியாது. விவசாயிகள் பிரச்சனைக்காக பணம் ஒதுக்குகிறபோதோ அல்லது வறட்சி நிவாரணப் பணிகளுக்காக பணம் ஒதுக்குகிறபோதோ அல்லது இதுபோன்ற செலவுகள் முதன்மையாக வந்து நிற்கிற நேரத்தில் மற்றச் செலவுகளைக் குறைக்க வேண்டிய நிலைமை வரும்போது கல்வித்துறையைப் பொறுத்தவரையில் ஒரு பர்சன்டேஜ்தான் குறைந்திருக்கின்றது என்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இப்போது 22 சதவீதம் என்றிருந்தாலும்கூட, எந்த அடிப்படையில் செலவு செய்யப்படுகிறது என்றால், செலவு செய்யப்படுகின்ற பணம் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு பெருமளவு பயன் விளைவிக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

கல்வித் துறை என்று நாம் சொல்லுகிறபோது அது தொடக்கப்பள்ளி கல்விநிலை என்றாலும், உயர்நிலைப் பள்ளி கல்வி நிலை என்றாலும், மேல்நிலைப் பள்ளி கல்வி நிலை என்றாலும், கல்லூரிக் கல்வி நிலை என்றாலும், பல்கலைக் கழகம் என்றாலும் அல்லது இதோடு தொடர்புடைய விளையாட்டுத்துறை அல்லது கலை, கலாசார நடவடிக்கைகள் அல்லது ஆவணக் காப்பகமாக இருந்தாலும் சரி, தொல்பொருள் ஆய்வு செய்கிற துறையாக இருந்தாலும்சரி, அல்லது ஓவிய நுண்கலைக் குழுவாக இருந்தாலும் சரி அல்லது இயல் இசை நாடகமன்றமாக இருந்தாலும் சரி பல்வேறு துறைகளாக நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டாலும்கூட அனைத்தும் இந்த சமுதாயத்தினுடைய மேம்பாட்டிற்காகவும், மனித சக்தியை மேம்படுத்துவதற்காகவும், தகுதிப்படுத்துவதற்காகவும், உயர்வுபடுத்துவதற்காகவும் தான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கல்வித்துறை மூலம் செலவு செய்யப்படுகிற இந்தத் தொகை தமிழ் நாட்டிலிருக்கின்ற மனித சக்தியை மேம்படுத்துவதில் வெற்றி பெறுமேயானால் அந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டு பொருளாதார முன்னேற்றத்தை நாம் பார்க்க முடியும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் இன்றையத்தினம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பல்வேறு காரியங்களை செய்து வருகிறோம். தகுதியை உண்டாக்குவது மட்டுமல்ல. தகுதி பெறுகிற அதே நேரத்தில் அந்தத் தகுதி பெற்றவர்கள் தங்கள் சக்தியை சமுதாயத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். அந்த அளவிற்கு அம்மாதிரி கொள்கை அல்லது குறிக்கோளாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு விவரங்கள் மீது கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மிகச்சிறப்பாக நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். அது கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைப்பற்றிய ஒரு விவரம் சொல்ல வேண்டிய கடமை கல்வித்துறை பொறுப்பில் இருக்கிறவன் என்ற முறையில் இருக்கிறது என்ற வகையில் நான் சில விவரங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரை மாநகரில் கடந்த சனவரி 4-ஆம் நாள் முதல் 10-ஆம் நாள் வரை கோலாகலமாக நடைபெற்றது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 750 தமிழ் அறிஞர்கள் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு அரிய பல ஆய்வுரைகளை நிகழ்த்தினார்கள். மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கருத்தரங்கில் சுமார் 214 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மதுரை பந்தயத்திடலில் அமைக்கப்பட்ட மூவேந்தர் அரங்கில் பொதுமக்கள் யாவரும் பயன்பெறும் வகையில் பட்டி மண்டபமும் கவி அரங்கங்களும், வழக்காடு மன்றங்களும், கருத்தரங்குகள் ஆகிய நிகழ்ச்சிகள் கொண்ட பொதுநிலையில் கருத்தரங்குகள் சுமார் 250 அறிஞர்களைக் கொண்டு நடத்தப்பெற்றிருக்கிறது. நாள் தோறும் பேராளர்களும் பொதுமக்களும் கண்டுகளிக்க ஐந்திடங்களில் தமிழ்நாட்டின் தலைசிறந்த கலைஞர்கள் பங்கேற்று நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநாட்டு தொடக்க நாளில் மதுரை மாநகரின் பல்வேறு இடங்களில் தமிழுக்கு தொண்டாற்றிய தலைசிறந்த அறிஞர்களுக்கு திருவுருவச் சிலைகள் 13 திறக்கப்பட்டன.

மதுரை மாநகரை இணைக்கும் நெடுஞ்சாலைகளில் நுழை வாயில்களில் ஐந்து தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன. மாநாட்டை யொட்டி மிகச் சிறந்த முறையில் அரசுத் துறைகள்

பலரும் பங்கேற்று, அமைந்த பொருட்காட்சி அரங்குகள் மதுரை தமுக்கம் திடலில் பொதுமக்கள் பலரால் கண்டு களிக்கப் பட்டது. பொருட்காட்சி 26—4—1981 அன்று நிறைவு பெறும். மாநாட்டின் ஒரு அங்கமாக 'கடல் கண்ட குமரிக் கண்டம்' வரலாற்றினை விளக்கும் வெள்ளித் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்கென தனியாக அமைந்த அரங்கில் திரையிடப்பட்டது. மாநாட்டையொட்டி, மதுரை திருமலை நாயகன் மகாலில் திருமலை மன்னர் வரலாற்றை விளக்கும் ஒலி, ஒளி காட்சி அமைக்கப் பட்டு, தொடர்ந்து பொதுமக்களுக்கு சுற்றுலாப் பயணிகளுக்கு காட்டப்பட்டு வருகிறது. தமிழ் இலக்கிய கட்டுரைகள் திறனாய்வு ஓவியம் அடங்கிய மாநாட்டு மலர் ஒன்று வெளியிடப் பட்டது. இம்மலர் மாநாட்டு பேராளர்கள் அனைவருக்கும், கருத்தரங்கில் பங்குபெற்ற தமிழ் அறிஞர்கள் பலருக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பொதுமக்களுக்கு மாநாட்டுக் காலத்தில் சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டது. பின்னர் அரசு எழுதுபொருள் அச்சு விற்பனைக் கூடத்திலும், பாரி நிலையத்திலும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலும் மதுரை மீனாட்சி புத்தக நிலையத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாநாட்டையொட்டி, தமிழில் தொலை அச்சுப்பொறி (டெலிபிரிண்டர்) ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாநாட்டில் நிறைவு விழா அன்று தமிழ் பண்பாட்டுக் கலை, இலக்கிய காட்சிகளை சித்தரிக்கும் அரியதொரு அலங்கார ஊர்வலம் மதுரை மாநகர், மாசி வீதிகளில் பவனி வந்தது. பாரதப் பிரதமர் அவர்கள் இவ்வலங்கார ஊர்திகளை கண்ணுற்றார்கள். மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில் பல இலட்சம் மக்கள் பங்கேற்க, பாரதப் பிரதமர் நிறைவு விழா பேருரை ஆற்றினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழ்த்தாய் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து உரையை நிகழ்த்தினார்கள், தமிழுக்கு தொண்டாற்றிய மூதறிஞர்கள் அய்வருக்கு நிறைவு விழாவில் பாரதப் பிரதமர் 10,000 ரூபாய் பொற்கிழி வழங்கினார்கள். மேலும் அய்வருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது. மாநாடு இனிது நிறைவு பெற்றது. பங்குபெற்ற பேராளர்கள் அனைவருக்கும் அரசு ஒரு பண்பாட்டுச் சுற்றுலா ஏற்பாடு செய்தது. கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருச்சி, தஞ்சை, காஞ்சீபுரம், மாமல்லபுரம் முதலிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு பேராளர்கள் சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர். மாநாட்டு செலவுக் கணக்குகள் யாவும் திறம்பட தொகுக்கப்பட்டு தணிக்கை நடைபெற்று வருகிறது. இந்த மாநாடு நடைபெற்ற நாட்களில் பல இலட்சக்கணக்கான மக்கள் அங்கே கூடியிருந்த அந்தச் சந்தர்ப்பங்களில் விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை என்பது அந்த மாநாட்டினுடைய பெருமையை உயர்த்துவதாக இருக்கிறது என்று நான் இங்கே குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய பலரும் பள்ளிக்கூடங்களுடைய கட்டிடங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆண்டு நாம் கட்டிடங்களுக்காக குறிப்பாக—தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்கு ரூபாய் 730 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியிருக்கிறோம் என்று நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். இந்த ஆண்டு கட்டிடங்களுக்கு அதிகமான அளவிற்கு பணத்தை ஒதுக்கி, இங்கே பெரும்பாலான உறுப்பினர்கள் சொன்ன அந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இங்கே இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, 1977-லே இருந்து இதுவரைக்கும் ஏறக்குறைய 13,988 ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. புதியதாக பணிகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 2,150 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அளவிற்கு இதற்கு முன்னால் பதவிகள் ஏற்படுத்தப்படவில்லை என்பதை நான் உறுப்பினர்களுடைய கவனத்திதிற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதைப்போலவே, பதவி உயர்த்தப்பட்ட தரம் உயர்த்தப்பட்ட நிலையில் குறிப்பாக இளநிலை ஆசிரியர்கள் 60,000-க்கும் மேல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது முக்கியப் பிரச்சினை இங்கே பேசப்பட்டு வந்தது; ஆசிரியர்கள் சங்கம் பல கோரிக்கைகளை முன்வைத்து, பல ஆண்டுகாலமாக போராடிக்கொண்டு வருகிறார்கள் அவர்களுக்கு இந்த ஆண்டு முடிவில் ஏறக்குறைய 5,000 பேர்களுக்கு நாம் ஒரு தனிப் பயிற்சியை வைத்து, அவர்களுக்கு இடைநிலை பதவி கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

(மாலை 5—50)

அந்த அடிப்படையிலே வருகின்ற ஆண்டில் ஐந்தாயிரத்திற்குப் பதிலாக பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பைத்தர அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மேல் நிலைக் கல்வியைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். மேல்நிலைப் பள்ளி என்பது அனைத்திந்தியாவிலேயும் ஒரே மாதிரியான கல்வி இருக்க வேண்டுமென்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுக்களின் சிபாரிசுகளின் அடிப்படையிலே டெல்லியிலே நடைபெற்ற கல்வி அமைச்சர்களின் மாநாடு மூலமாக செய்யப்பட்ட பரிந்துரைகள் காரணமாகவந்த ஒன்றாகும். அதை மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு தான் அந்த பரிந்துரையை அப்படியே ஏற்று நடத்துகிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கிருக்கிற பல்வேறு சங்கடங்கள் அல்லது வசதி

TRUTH ALONE TRIUMPHS

குறைவு அடிப்படையில் அந்த முறையை, மேல் நிலைப்பள்ளி கல்வி முறையை, ஏற்று அதனுடைய முழுப் பயனையும் மாணவர்களுக்குத் தரமுடியாத அளவிலேதான் மற்ற மாநிலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அதனாலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு பிரச்சினைகளை அந்த மாநில அரசுகள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலே மட்டும்தான் நாம் அந்த பரிந்துரையை அப்படியே ஏற்று, நம்மாலே முடிந்த அளவு அவைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளின் மூலம் கிடைக்கிற கல்வி, இப்படி இல்லையென்றால் எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்ப்போமேயானால் அதைவிட இது மிகச் சிறந்தது என்பதை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு குறிப்பாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதம் அமெரிக்காவிலே இருந்து வந்த சில பேராசிரியர்கள் இங்கே சென்னையிலே இருக்கின்ற கல்வி நிலையைப் பார்த்துவிட்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் என்னைக்கூட சந்திக்கவில்லை. பத்திரிகையிலே அந்தக் கருத்தை நான் பார்த்தேன். அவர்கள் சொன்ன ஒரு கருத்து தமிழ்நாட்டிலே 12 ஆண்டு பள்ளி கல்வியும், மூன்று ஆண்டுகள் பட்டப்படிப்பும் வைத்திருக்கிறார்கள். ஆக இனிமேல் தமிழ்நாட்டிலே படித்து பட்டம் பெற்றவர்கள் அமெரிக்காவிற்கு வருவார்களேயானால் அங்கே அமெரிக்காவிலே படித்து பட்டம் பெற்றவர்களுக்குச் சமமாக கருதப்படுவார்கள் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொல்லி, பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதனுடைய விபரம் என்ன என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. இதுவரையில் இங்கே பி. ஏ., பி. எஸ்சி. பட்டம் பெற்றிருந்தாலும் கூட அந்தப் பட்டப் மேலை நாடுகளிலே, லண்டனிலோ, அமெரிக்காவிலோ அங்கே வாங்குகின்ற பாடதிட்டத்திற்குச் சமமாக இணையாகக் கருதப்படவில்லை என்பதை நான் குறிப்பாக சொல்ல விரும்புகிறேன். அப்படியொரு தாழ்வு நிலைமை இருக்கிறவரைக்கும் நாம் அவர்களுக்கு சமமாக முன்னேற முடியும் என்பது அது பகற்கனவாகதான் இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் நம்முடைய மாணவர்கள் மற்றைய நாட்டு மாணவர்களுடைய அறிவு, ஆற்றலுக்கு சமமானவர்கள் என்ற நிலைமையை நாம் உண்டாக்கினால் இந்த சமுதாயம் அந்த சமுதாயத்திற்கு இணையாக வளர்ச்சியை நிச்சயமாகப் பெறும். ஆகவே நான் பெருமையாக சொல்ல விரும்புவதெல்லாம் இன்றையதினம் நாம் எடுத்திருக்கிற அந்த முடிவின் காரணமாக தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றைய நாட்டு மாணவர்களுக்கு அறிவு ஆற்றலுக்கு சமமான நிலையை அடையக் கூடிய வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல்கலைக்கழக பட்டப் படிப்புகளைப் பற்றி எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் நாம் கவனித்து இன்று பல்கலைக் கழகங்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இன்றைய தினம் பன்னிரெண்டாவது என்று பலரும் நினைத்துக் கொண்டிருப்பதை போல பி.யூ.சி.க்கு சமமான வகுப்பு அல்ல. இன்றைக்கு நடந்து கொண்டிருப்பது பதினோராவது வகுப்பு பி. யூ. சி. க்கு சமமான வகுப்பாகும். பன்னிரெண்டாவது என்பது இதுவரையில் நடந்து வந்த பட்டப்படிப்பு வகுப்புகளிலே முதலாம் ஆண்டு வகுப்புக்குச் சமமான வகுப்பு ஆகும், என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் பார்க்கின்ற போது இந்த ஆண்டு முதலாண்டு பட்டப்படிப்பிலே சேர்ந்திருக்கிற மாணவர்கள் தரம் உயர்ந்த பட்டப் படிப்பை படித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு ஆண்டும் போகின்ற போது அந்த பட்டப்படிப்பினுடைய தரத்தை உயர்த்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது படிக்கின்ற அந்த மாணவர்கள் மூன்றாம் ஆண்டிற்கு வருகின்றபோது இப்போது எம். ஏ. படித்துக் கொண்டிருக்கின்ற முதலாம் ஆண்டு மாணவனுடைய படிப்பை அந்த மாணவர்கள் படிக்க வேண்டியிருக்கும். இப்படி தரம் உயர்த்துகிற ஒரு பணியை தான் இப்போது இடைக் காலத்திலே செய்துகொண்டிருக்கிறார்கள் ஆனால் நாம் விரும்புவதெல்லாம் பாடத்திட்டங்களை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும். பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் எதற்கும் பயன்படாத நிலையில் ஊரை சுற்றிக் கொண்டிருக்கிற நிலைமையிலே இருக்கக்கூடாது.

ஆகவே படிப்பு என்பது மாணவர்கள், இளைஞர்களை சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய அளவிற்குத் தயார் செய்ய வேண்டிய நிலையில் இருக்க வேண்டும். அதைத் தான் ரீஸ்ட்ரக்ச்சர் செய்வது என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிச் செய்கிற போது பட்டப் படிப்பிலே ஒரு குறிப்பிட்ட மேஜர் என்று வந்தால் படிக்கின்ற மாணவர்கள்—நான் முன்னாலேயே குறிப்பிட்டுச் சொன்னதைப் போன்று மற்ற நாட்டு மாணவர்களுக்குச் சமமான மேஜர் என்ற அளவிலே படித்துத் தீரவேண்டும். அதற்குப் பிறகு அந்த மேஜருக்குத் தொடர்ந்து ஜாப் ஒரியண்டட் கோர்ஸ் என்ற அந்த நிலையிலே அவனுக்கு ஒன்றுமே தெரியாது என்று இல்லாமல் ஏதாவது ஒன்று தெரிந்திருக்க வேண்டுமென்ற அளவுக்கு ஒரு சப்ஜெக்டை சொல்லித் தர வேண்டுமென்று கோத்தாரி கமிஷன் வலியுறுத்தி வருகிறது. நாமும் வலியுறுத்தி வருகிறோம். சில தன்னாட்சி பெற்ற கல்லூரிகளிலே அந்த முறையைப் பயன்படுத்தினார்கள். பொதுவாக அந்த முறை வரவேண்டுமென்று பல்கலைக் கழகங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த வகையில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டு வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்து பத்திரிகையிலே கூட வந்தது. எழுத்தறிவைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலே இருந்தது. அதற்குப் பிறகு அது மூன்றாவது இடத்திற்கு வந்துவிட்டது என்ற ஒரு செய்தியை பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்கு என்ன காரணம்? அதற்கு எந்த வகையிலே இந்த அரசு பொறுப்பு என்பதையும், அத்தகைய நிலைமையைத் தவிர்த்து அதிலே முன்னேற்றத்தைக் காண்பதற்காக நாங்கள் என்னென்ன முயற்சிகளை எடுத்திருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் எழுத்தறிவிலே அந்த அளவிற்குப் பின்தங்கியிருப்பதற்கு மிக முக்கியமான காரணம் நாம் முதியோர் கல்வி, வயது வந்தோர் கல்வி, என்ற அடிப்படையிலே எடுக்க வேண்டிய அக்கறையை கடந்த பல ஆண்டுகளாக நாம் எடுக்கத் தவறிவிட்டோம். இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அதிலே 1977க்குப் பிறகு நாம் தான் அதிலே அதிக அளவு அக்கறை காட்டி எழுத்தறிவு மையங்களை அதிகமாகத் திறந்து வருகிறோம். மகாராட்டிரத்தைப் பொறுத்த மட்டில் நம்மைவிட அதிகமான அளவில் மையங்களைத் திறந்து செயலாற்றி வருகிற காரணத்தினால் இன்றைக்கு நம்மையும் அவர்கள் மிஞ்சிய அளவிலே இருக்கிறார்கள். முதியோர் கல்வி மையங்களை இத்தனை ஆண்டுக்காலமாக நடத்தாததின் விளைவாகத்தான் 1971 ஆம் ஆண்டிலே நாம் முயற்சி எடுத்துக் கொள்ளாத காரணத்தால் இன்றையதினம் 3 வது இடத்திற்கு வரவேண்டிய நிலைமை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாடு செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 3600 மையங்களும் மாநிலத் திட்டத்தின் கீழ் 6100 மையங்களும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக 1989 மையங்களும் நேரு இளைஞர் மன்றங்களின் மூலமாக 280 மையங்களும் பல்கலைக் கழகத்தின் மூலம் 1280 மையங்களும் வேறு 290 மையங்களும் மொத்தம் 13545 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மகாராட்டிரத்தைப் பொறுத்த மட்டில் தொண்டு நிறுவனங்கள் 5130 என்று வருகிறபோது மையங்கள் இருக்கின்றன. ஆகவே அந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு பணம் கொடுக்கிற பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆகவே மத்திய அரசைப் பொறுத்த மட்டில் மகாராட்டிரத்திலே தொண்டு நிறுவனங்களுக்கு ஒதுக்குகிற அளவு பணத்தை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கவில்லை என்பது அதிலே காணப்படுகிற வெளிப்படையான வித்தியாசமாக இருக்கிறது. அது தவிர உதவி பெறாமல் வயதுவந்தோர் மையங்களை நடத்துகின்ற தொண்டு நிறுவனங்கள் மகாராட்டிர மாநிலத்தில் நிறைய இருக்கின்ற காரணத்தினால் இன்றைக்கு அவர்கள் நம்மைவிட எழுத்தறிவு என்ற அடிப்படையிலே முந்தி நிற்கிறார்கள். அந்தக் குறையைப் போக்குவதற்காக தமிழ்நாடு அரசு ஆர்வத்தோடு பணியாற்றி

வருகிறது. இன்னும் 2, 3 ஆண்டுக் காலத்திலே அவர்களையுப் நாம் முந்திப் போகக்கூடிய வாய்ப்பைப் பெறுவோம் என்ற உறுதியை நான் தர விரும்புகிறேன்.

இங்கே நர்சரி பள்ளிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நர்சரி பள்ளிகளைப்பற்றி ஒரு அறிக்கை நம்மிடத்திலே தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே நாம் அவைகளைக் கட்டுப்படுத்தவும் அந்த நர்சரி பள்ளிகளை சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதற்காகவும் அவைகளை ஒழுங்கு படுத்துவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையிலே அது உருவாக்கப்பட்டு இன்றையதினம் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் அந்த அடிப்படையிலே அவை ஒழுங்குபடுத்தப்படும். அதிலே நாம் காணுகிற மிக முக்கியமான குறைபாடு நர்சரி பள்ளி என்ற பெயரால் தமிழே சொல்லித்தராமல் எல். கே. ஜி. யூ. கே. ஜி என்று வைத்து அதற்குப் பிறகு 1, 2, 3 வது வகுப்புகள் என்று வைத்து அவர்கள் ஆங்கிலத்திலே படித்து, பிறகு நம்முடைய பள்ளிக்கூடத்திலே வந்து படிக்கின்றபொழுது பல்வேறு சங்கடங்களுக்கு அந்த மாணவர்கள் ஆட்படுகிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஆங்கில மோகம் என்று நாம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அந்த மோகத்தை ஓரளவிற்கு நாம் பொதுமக்களிடத்திலேயிருந்து தவிர்க்கின்ற விதத்திலே பாடு படுவோமேயானால் நிச்சயமாக இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு வசதியாக இருக்கும்.

(மாலை 6-)

அவர்கள் தமிழைச் சொல்லித்தர வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுவார்கள் அல்லது தமிழிலேயே நடத்தப்படுகின்ற நர்சரி பள்ளிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே அரசு சில நடவடிக்கைகளை எடுக்க விரும்புகிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தைப்பற்றிச் சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. 1981—82 ஆம் ஆண்டு முதல் பாட நூல்களினுடைய தரத்தை உயர்த்தி, மத்திய அரசின் பாடநூல் நிலைக்கு உயர்த்த, புதிய பாடநூல்கள் வெளியிடப்படுகின்ற நடவடிக்கையை நாம் எடுக்கவிருக்கிறோம், இதுவரை இல்லா திருந்த முதல் இரண்டாவது வகுப்புகளுக்குரிய கணக்குப் பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதுவரை ஒன்றாவது இரண்டாவது வகுப்புகளுக்குக் கணக்கு இல்லாமலே இருந்தது. இப்பொழுது நாம் அதற்குக் கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கின்றோம். நான் முன்னாலே குறிப்பிட்டபடி நர்சரி பள்ளிகளிலே இருக்கின்ற கவர்ச்சியே அவர்கள் ஆங்கிலத்திற்கு ஒரு புத்தகம், கணக்குக்கு ஒரு புத்தகம் என்று இப்படி இரண்டு

1981 ஏப்ரல் 24] [திரு. செ. அரங்கநாயகம்]

மூன்று புத்தகங்களை வைத்திருப்பதன் காரணமாக அங்கே ஏதோ ஒரு நல்ல கல்வியைத் தருவதாகப் பொதுமக்கள் கருது கிறார்கள். ஆகவே நாம் நம்முடைய பள்ளிகளிலே ஒன்றாவது வகுப்பிலேயும், இரண்டாவது வகுப்பிலேயும் கணக்கைச் சொல்லித் தருவது என்கிற முறையில் கணக்குப் புத்தகங்களைக் கவர்ச்சிகர மான முறையிலே வெளியிட்டிருக்கின்றோம்.

நோட்டுக்களை இதுவரையிலே பாடநூல் நிறுவனத்தின் மூலமாகச் செய்யப்படாதிருந்த நிலையை மாற்றி, இப்பொழுது நாம் பாட நூல் நிறுவனத்தின் மூலமாக நோட்டுப் புத்தகங்களை வெளியிடுகிற ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். நம்முடைய நோட்டுப் புத்தகங்களையெல்லாம் மாவட்டக் கூட்டுறவு அங்காடியின் மூலமாக நாம் விற்பனைக்கு ஏற்பாடு செய்து, கூடுமானவரைக்கும் அந்தக் குறிப்பிட்ட விலையிலேயே மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்கின்ற முயற்சியை அரசு எடுத்து வருகிறது.

நாம் விரும்புவதெல்லாம் குறிப்பாகக் குறைந்த அளவு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளிலேயாவது மாணவர் கூட்டுறவு அங்காடிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று, நாம் வற்புறுத்தி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அவைகளெல்லாம் ஏற்பட்டு விடுமேயானால் மாணவர்களுக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள் உரிய காலத்திலே அவர் களுடைய பள்ளிகளிலேயே கிடைக்கவும், அதற்குமாறாகத் தனியார் இந்த நோட்டுப் புத்தகங்களை வாங்கி வெளியே கொண்டுபோய் விற்கவோ அல்லது அதனாலே ஒரு குறைபாடு ஏற்படவோ உள்ள நிலைமைகள் தவிர்க்கப்பட முடியும். அதற் காக இந்தக் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்துகின்ற முயற்சிக்கு நாம் நல்ல ஆதரவைத் தந்து வருகிறோம்.

அதற்கடுத்து, தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி ஒன்றைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பாக வெளியிட்டிருக் கிறோம். அது ஏறக்குறைய தீர்ந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கின்ற காரணத்தால் அடுத்த பதிப்பை வெளியிட இருக் கின்றோம்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் பேசிக்கொண்டு வருகிறபொழுது நேரமாகிவிட்டது என்ற காரணத்தால் விட்டுவிட்ட ஒரு பிரச்னை, மிக முக்கியமான ஒன்று, அதை அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி ஏராளமாக குறைபாடுகள் உடையது என்பதைச் சுருக்கெழுத்துத் துறையிலே வல்லுநர் பல பேர் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்ச் சுருக்கெழுத் துக்காக ஒரு பாடப் புத்தகம் முன்னால் வெளி யிடப்பட்டது, 10 ரூபாய் விலையில். இது ஓரளவு செம்மையாக

இருக்கிறது. அதை வெளியிட்டவரைக் கொண்டுதான் இந்தச் சுருக்கெழுத்து அகராதி வெளியிடப்பட்டது என்று சொன்னாலும் அகராதிகளில் இருக்க வேண்டிய தகுதிக் குறைபாடு ஏராளமாக இருப்பதைச் சுட்டிக்காட்டிக் கட்டுரைகள் கூட எழுதித் தந்திருக்கிறார்கள், அவற்றை நான் இங்கே பேச நேரமில்லை. ஆகவே, மறுபடி அகராதி என்று வெளியிடுகிறபொழுது அதை ஒரு குழுவை வைத்து அந்தக் குழுவிலே தகுந்த சிறப்பு வாய்ந்த அறிஞர்கள் நான்கைந்து பேரை வைத்து, அவர்கள் மூலமாகச் சுருக்கெழுத்து அகராதி – ஏனென்றால் ஸ்டாண்டர்டைஸ் ஆகி விடும் நாளைக்கு – அப்படி ஆகக்கூடிய ஒன்றை ஒழுங்குபடுத்தி அதற்குப் பின்னர் வெளியிட அமைச்சர் முன்வருவாரா !

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத்தலைவரவர்களே, இரண்டாவது பதிப்பு தேவைப்படுகிறது என்ற அளவிலேதான் அது வெளியிடப்படும் என்று சொன்னேன். அதிலே குறைபாடுகள் இருக்குமேயானால் நிச்சயமாக அந்த ஆசிரியரைக் கலந்து தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும். அதைப்போலவே, தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் — மேன்யூல் — அதுவும் இப்பொழுது கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். அதையும் பதிப்பிப்பதற்கான முயற்சியைப் பாடநூல் நிறுவனம் எடுக்கும் என்பதை இங்கே இப்பொழுது நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முடிவுகள் வெளி வருவதிலே ஏற்பட்ட காலதாமதம், அதற்கான காரணங்களைப் பற்றியும் இங்கேயெடுத்துப் பேசப்பட்டது. எனக்குத் தரப்பட்ட விவரத்தின்படி பரீட்சைகள் நடைபெறுவதே தள்ளிப் போடப்பட்டதன் காரணமாகத் தேர்வு முடிவுகள் வெளி வருவதற்குத் தாமதம் ஆயிற்று என்ற ஒரு காரணமும், அதே போல, திருத்தியவர்கள் அந்தக் குறித்த காலத்திலே திருத்திய அந்த விடைத்தாள்களை அனுப்புவதிலே ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவும், இண்டர்னல் அசெஸ்மெண்ட் மார்க்கை கல்லூரிகள் உடனடியாக அனுப்பத் தவறியதன் காரணமாகவும் இப்படிச் சில காரணங்களை அந்தத் தாமதத்திற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், குறிப்பாக, கம்ப்யூட்டர்ரைப் பொறுத்தமட்டில் இதுவரையிலும் 'அக்கடமிக் ஒர்க்'— இதுபோன்ற வேலைகளிலே அனுபவம் உள்ளவர்களாலே செய்யப்பட்டு வந்த இந்தக் காரியம் அந்த அனுபவம் இல்லாத ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்திடம் தரப்பட்டதன் காரணமாக சில குறைபாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன, அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கான முயற்சிகளிலே பல்கலைக் கழகம் தீவிரமாக இறங்கி, தாமதத்தைத் திருத்தி, தவறுகளையும் திருத்தி, இன்றைக்கு அந்த முடிவுகளை வெளியிட்டுத் கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே எழுதித் தந்திருக்கிறார்கள்.

1981 ஏப்ரல் 24] [திரு. செ. அரங்கநாயகம்]

தமிழ் வளர்ச்சி இயக்ககம் முனைப்புத் திட்டத்தைச் செயல் படுத்தி இருக்கிறது என்ற ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே மற்ற எல்லா துறைகளிலேயும் செய்வதற்கு முன் கல்வி துறையிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்ற ஒரு கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கல்வித் துறையிலே போதுமான அளவுக்கு நாம் அக்கறை எடுத்துக் கொண்டிக்கிறோம் என்றாலும் இங்குக் குறிப்பிடப்படவில்லையென்பது ஒரு குறைபாடாகக் கருதப்படுகிற காரணத்தால், கல்வித் துறை, புள்ளிவிவரத் துறை Statistical Department இரண்டையும் சேர்த்து, குறிப்பிட்டிருக்கிற மற்றத் துறைகளிலும் இந்த ஆண்டு இங்கே அந்த முனைப்புத் திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் நடத்திய அந்தப் போராட்டத்தின்போது, அவர்கள் மீது வழக்கு போட்டதைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள், அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டு விட்டன, அதற்கு உத்தரவு 18—4—1981 அன்று போடப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழாசிரியர்கள் நலனுக்கும் இவ் வரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இவ்வகையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க. "இரண் டாம் நிலைத் தமிழாசிரியர்கள்" என்ற நிலையில் இருக்கின்ற எஞ்சியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவரும் 1—1—1981 முதல் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக உயர்த்தப் படுகிறார்கள் என்கிற ஒரு அறிவிப்பை நான் இங்கே செய்ய விரும்புகின்றேன். அது ஒரு குறைபாடு. அதை நீக்கவேண்டு மென்று ஆசிரியர்கள் சங்கத்தினர் இதுவரை முறையீடு செய்து வந்தனர். இனி இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் என்ற ஒரு பிரிவினர் இருக்க மாட்டார்கள்.

உயர்நிலைப் பள்ளிகளில் பி.எட். தரத்தில் பி.எட். சம்பளம் பெற்று வேலை செய்துவரும் தமிழாசிரியர்கள், வேளாண்மை போதகர், பொறியியல் போதகர், மற்றும் செயலக உதவியாளர் கள் ஆகியோரும் பின்வரும் தகுதிகளை அதாவது— ஏதேனும் ஒரு மொழி அல்லது பாடத்தில் பட்டம், ஆசிரியர் பயிற்சிப் பட்டம்; ஆசிரியர் பயிற்சிப் பட்டப் பெற்றபின் ஐந்தாண்டு பயிற்றுவிப்பு அனுபவம், ஆகிய தகுதிகளைப் பெற்றவர்கள் பி.டி. ஆசிரியர்களைப் போலவே பணிமூப்பு அடிப்படையில் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஆகலாமென்ற சலுகை இதுவரை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி களில் மட்டும் அமுலில் உள்ளது. இனி இச் சலுகையை அரசுப் பள்ளிகளுக்கும் விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இது பள்ளிகளில் உள்ள உடற்பயிற்சி இயக்குநர்களுக்கும் பொருந்தும்.

... ALONE TRIUMPH...

அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் ஆட்சி மொழியாகச் செயல்படுவதைக் கண்காணிக்க ஏற்கெனவே 10 மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் உள்ளார். இவ்வாண்டில் செங்கல்பட்டு, தருமபுரி, புதுக்கோட்டை, பெரியார், கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் இப்பணிக்காக நியமிக்கப்படுவார்.

ஒவ்வொரு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியிலும் அதன் தலைமையாசிரியரும் மற்றும் ஒரு இளநிலை உதவியாளரும் 'விடுமுறை அல்லாத பணி' Non-Vacation துறையைச் சார்ந்தவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு ஈட்டிய விடுப்பு சலுகை அளிக்கப்படும்.

இயற்கை உற்பாதங்களால் அரசுப் பள்ளிக் கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படும்பொழுது அவற்றை உடனடியாக காலந்தாழ்வின்றி, பொதுப் பணித்துறை மூலம் பள்ளிக் கல்வி இயக்குநரே பழுதுபார்க்க ஏற்பாடு செய்யும் வகையில் இனி ஆண்டுதோறும் ரூபாய். ஐந்து இலட்சம் தனி நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

(மாலை 6–10.)

1981—82 ஆம் அரசுக் கல்லூரிகளில் புதிய பட்ட வகுப்புகள், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள், மாலைநேர பட்ட மேற்படிப்பு வகுப்புகள், ஆகியவற்றைத் தொடங்க ரூ. 20 இலட்சம் செலவிடப்படும். அரசு கல்லூரிகளுக்குப் புதியகூடுதல் கட்டிடங்கள் கட்ட ரூ. 19 இலட்சம் அளவில் செலவிடப்படும். தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், பயிலகங்களிலும் சிறப்பாகப் பணி செய்யும் ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருது அளிக்கும் திட்டம் இவ்வாண்டு முதல் தொடங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 ஆசிரியர்களுக்கு ரூ. 1,000 ரொக்கமும் பதக்கமும் அடங்கிய விருது அளிக்கப்படும்.

தொழிற்கல்வி நிலையங்களில் மூன்று ஆண்டு பணிமுடித்த பி.இ. பட்டம் பெற்ற பொறியியல் போதகர்களும், 10 ஆண்டு பணிமுடித்த டிப்ளாமா பெற்ற பொறியியல் போதகர்களும் இணை விரிவுரையாளர்களாக பதவி உயர்த்தப்படுவார்கள்.

பதவியில் இருக்கும்பொழுது இறந்துவிட்டால் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 தருவதற்கான '' குழு ஈட்டுறுதித் திட்டத்தைத்,, தனியார் தொழில் கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்படும்.

1981 ஏப்ரல் 24] [திரு. செ. அரங்கநாயகம்]

பொறியியல் கல்லூரிகளிலும் பல்தொழில் பயிலகங்களிலும் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு உடனடியாக தக்க வேலை வாய்ப்புக் கிடைக்க உதவும் வகையில் தொழிற்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ரூ. 1,200—1,900 சம்பள விகிதத்தில் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படுவார். அவர் அரசு மற்றும் தனியார் துறைத் தொழில் நிறுவனங்களுடன் இடைவிடாது தொடர்பு வைத்துக் கொண்டு அம்மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற உதவி செய்வார்.

சென்னையில் அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்கள் படம் எடுத்து பாதுகாக்கவும், ஆராய்ச்சியாளர்களுக்குத் தந்து உதவவும் நுண் படக்கருவி ஒன்று அமைக்கப்படும்.

மதுரை, கோயம்புத்தூர், சிதம்பரம் ஆகிய இடங்களில் வட்டார ஆவணக் காப்பகங்கள் ஏற்படுத்தப்படும்.

மாவட்டந்தோறும் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டத்தின் கீழ் 1981—82-ல் திருச்சியில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

தஞ்சாவூர் அரண்மனை மற்றும் தரங்கம்பாடி கோட்டை ஆகியவற்றை மேலும் பாதுகாத்தல், தஞ்சாவூர் அரண்மனையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் கூறப்பட்டு புதியதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதை போன்றவற்றை மேலும் ஆய்வு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருச்சி மற்றும் சேலம் நூலக ஆணைக் குழுக்களின் கீழ் இயங்கி வரும் மைய நூலகங்களுக்கு பல மாடி கட்டடங்கள் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மைய நூலகத்திற்கும் ஒரு கட்டடம் விலைக்கு வாங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுகளில் ஆற்றல் பெற்ற சிறுவர், சிறுமியர்களை போட்டி பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு தீவிரமான பயிற்சி அளித்து விளையாட்டு வீரர்கள் ஆக்கும் திட்டம் விரிவு படுத்தி மேற்கொள்ளப்படும்.

1981 ஏப்ரல் முதல் தேதி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள பாக் ஜலசந்தி நீச்சல் போட்டிகள், உலகப் பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கால்வாய் நீச்சல் போட்டிகளுக்கு ஒப்பிட்டு நோக்கும் அளவில், சிறந்த முறையில், நடத்தப்பெற்றதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் இப்போட்டிகளை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இறுதியாக, பல்கலைக் கழகங்களைப் பொறுத்த மட்டில், பல்கலைக்கழகம் செம்மையாக நடைபெறுவதற்காக நாம் சட்ட திருத்தங்களைக் கொண்டு வருவோம் என்பதை கவர்னர் உரையிலே கூறியிருக்கிறோம். இதற்கிடையில் கோவை, திருச்சி பல்கலைக் கழகங்களுடைய சட்ட முன்வடிவை மத்திய அரசினுடைய அனுமதிக்காக நாம் அனுப்பி அது வந்ததற்குப் பிறகு அந்த அடிப்படையில் மேற்கொண்டு நமக்கு இருக்கின்ற அனுபவத்தை வைத்து, மற்ற பல்கலைக் கழகங்களில் சட்டங்களைத் திருத்துகின்ற பணியினை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் குறிப்பாக சொல்லவிரும்புகிறேன். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் அவை குறிப்பிட்டவர்களின் ஆதிக்கக் கோட்டைகளாக ஆகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களுடைய கல்வி வளர்ச்சிக்காகவும் அறிவுத் துறையில் ஆராய்ச்சி மேம்பாடு நடைபெறுவதற்காகவும் நல்லமுறையிலே செயல்பட வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இருக்கிறது என்பதும் நான் இப்போதும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் செம்மையாக நடைபெறுவதற்காக தேவையான நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு எடுக்கும். இருமொழிக் கொள்கைளைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், பேரறிஞர் அண்ணா அவர்களால் சொல்லப்பட்ட அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது நிச்சயமாக அதற்கு ஊறு விளைவிக்கின்ற நிலைமை ஏற்படுகிறபோது இந்த அரசு அதற்காக வளைந்து கொடுக்காமல் இந்தக் கொள்கை வெற்றிபெறச் செய்வதற்காகப் பாடுபடும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது பல்வேறு கட்சிகளால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், எனக்குக் கிடைத்திருக்கிற செய்திகளின்படி, எல்லா கட்சிகளுமே இந்த இருமொழிக் கொள்கையைத்தான் ஆதரிக்கின்ற வகையிலே அந்தத் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கிறபோது இருமொழிக் கொள்கை என்பது அண்ணாவினாலே சொல்லப்பட்ட கொள்கை. இன்று ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே ஆதரித்து சொல்லப்பட்டு வரும் கொள்கை, அதனை ஏறக்குறைய எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையிலேதான் நிலைமைகள் வளர்ந்து வருகின்றனவே தவிர, நிச்சயமாக அது தோல்வியடையாது, தோல்வியடையக் கூடிய நிலையில் இல்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூறி, அந்தக் கொள்கை வெற்றி பெறுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 24] [திரு. செ. அரங்கநாயகம்]

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்களைச் சொன்னார்கள். அவற்றிற்கு எல்லாம் நேரடியாக நான் பதில் கூறக்கூடிய அளவிற்கு நேரம் இடம் தரவில்லை என்ற காரணத்தால் அவைகளுக்கு பதில் கூறவில்லையென்றாலும், அந்தக் கருத்துக்கள் நிச்சயமாக இங்கே குறிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளின் அடிப்படையில் அரசு அதனை கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்று பொதுப்படையாக உறுதிகூறி, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 17—கல்வி

திரு. சு. பாலன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. எம். தங்கமணி பொ. உத்திராபதி ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,49,02,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25–4–1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6–16 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.—

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

263. சென்னை மாநகர திருவல்லிக்கேணி திட்டப்பகுதி 11.2 சேப்பாக்கம் பகுதிக்குரிய விரிவான வளர்ச்சித் திட்டத்தை வெளியிடுவது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17–7–1980 ஆம் தேதியிடப்பெற்ற 915 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.—

161. தீயணைப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் முதலாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (1980–81) (தமிழ்).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Penniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Goundar Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District)
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-17.

17 AUG 1982
2573

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS